


# கலைப்பூமி

## Artland





ஆசிரியர்

திரு மா.அருள்சந்திரன்.(M.A.Culture)

இணையாசிரியர்

திரு கு.அகிலன்.(M.A.Saiva siddhanta)







வெளியீடு

கலாசாரப்பேரவை வலிகாமம் வடக்கு

தெல்லிப்பளை

2010-05-16

# கலைப்பூமி

## வலிகாமம் வடக்கு பிரதேச கலைஞர்விபர நூல்


ஆசிரியர்

மா.அருள்சந்திரன் (M.A.Culture)

கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம், தெல்லிப்பளை

இணைஆசிரியர்

கு.அகிலன் (M.A.Saiva.Siddhanta)

கலாசார அபிவிருத்தி உதவியாளர், பிரதேசசெயலகம்,தெல்லிப்பளை



வெளியீடு

கலாசாரப்பேரவை,

வலிகாமம் வடக்கு, தெல்லிப்பளை.

2010.05.16

# சமர்ப்பணம்

வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்தில்
கடமையாற்றி மக்களுக்கும் பிரதேசத்திற்கும்
தமது அர்ப்பணிப்பான சேவைகளை
வழங்கி எம்மோடு உறவாடி
எம்மை விட்டு மறைந்த அலுவலர்களதும்
எமது பிரதேசத்தில் வாழ்ந்து மறைந்த கலைஞர்களதும்
நினைவுகளில் இன்நூலைக்
காணிக்கையாக்குகின்றோம்.

## நூல் விபரம்

நூலின் பெயர் : கலைப்பூமி
நூலின் வகை : வலிகாமம் வடக்கு கலைஞர் விபரம்
ஆசிரியர் : மா.அருள்சந்திரன்
இணைஆசிரியர் : கு.அகிலன்
அட்டைப்படம் : M.சந்திரன்
பதிப்பு : முதற்பதிப்பு 2010-05-16
பதிப்புரிமை : கலாசாரப்பேரவை வலிகாமம் வடக்கு
: பிரதேசசெயலகம் வலிகாமம் வடக்கு
பக்கங்கள் : 203+32
அளவு : A5
பிரதிகள் : 500
விலை : 500/=
வெளியீடு :கலாசாரப்பேரவை வலிகாமம் வடக்கு
: பிரதேசசெயலகம் வலிகாமம் வடக்கு
அச்சுப்பதிப்பு : மகிந்தன் கணனி அச்சகம் கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

## Bibliographic at Data

Title : Kalaippoomi (Artland)
Type : Valikamam North Divisation Artist Details - 2010
Editor : M.Arulchandrean
Associate Editor : K.Ahilan
Cover design : M.chandrean
Edition : First Edition May 2010
Copyright : Cultural Council Valikamam North
:Divisional Secretariat Valikamam North
Pages : 203+32
Size :A5
No of Copies : 500
Price :500/=
Published by : Cultural Council Valikamam North
: Divisional Secretariat Valikamam North
Printed at : Mahinthan Press K.K.S .Road Chunnakam.

## ஆலோசனைக்குழு

**திரு.சு முரளிதரன்**

பிரதேசசெயலாளர், வலிகாமம் வடக்கு.போசகர்

கலாசாரப்பேரவை

**திரு.மா.அருள்சந்திரன்**

கலாசாரஉத்தியோகத்தர், இணைப்பாளர்.கலாசாரப்பேரவை

**திரு.கு.அகிலன்**

கலாசார அபிவிருத்தி உதவியாளர், தகவல்தொடர்பாளர்,

கலாசாரப்பேரவை.

**திரு.வி.கே. நடராஜா**

தலைவர் கலாசாரப்பேரவை

**சிவஸ்ரீ மு.நாகேந்திரசர்மா**

உபதலைவர் கலாசாரப்பேரவை

**திரு.ப.உதயகுமார்**

செயலாளர் கலாசாரப்பேரவை

**திருமதி.வற்சலா துரைசிங்கம்**

உபசெயலாளர் கலாசாரப்பேரவை

**திரு.நா.சிவநாதன்**

பொருளாளர் கலாசாரப்பேரவை

**திரு.வே. பாலேந்திரன்**

செயற்குழு உறுப்பினர் கலாசாரப்பேரவை

**திரு.வ. சிறீதரன்**

செயற்குழு உறுப்பினர் கலாசாரப்பேரவை

**திரு.சி. செல்வரட்ணம்**

செயற்குழு உறுப்பினர் கலாசாரப்பேரவை

**திரு.ச. கிருபானந்தன்**

செயற்குழு உறுப்பினர் கலாசாரப் பேரவை

**திருமதி.ஜெயந்தா தவராஜா**

செயற்குழு உறுப்பினர் கலாசாரப்பேரவை

**திரு.மு.சிவப்பிரகாசம்**

செயற்குழு உறுப்பினர் கலாசாரப்பேரவை

# நூலின் உள்ளே!

1. யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரின்
வாழ்த்துச் செய்தி

2. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தரின்
வாழ்த்துச் செய்தி

3. வடக்கு மாகாண கல்விஅமைச்சுச் செயலாளரின்
வாழ்த்துச் செய்தி

4. கண்டாவளை உதவி அரச அதிபரின்
ஆசிச்செய்தி

5. தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி
தேவஸ்தான தலைவரின் ஆசிச்செய்தி

6. ஓய்வுபெற்ற மேலதிக அரச அதிபர் திருமதி
ப.திலகநாயகம் அவர்களின் அணிந்துரை

7. தெல்லிப்பளை பிரதேச செயலரின்
நூல் அறிமுக உரை

8. கலாசாரப்பேரவைச் செயலாளரின் நயப்புரை

9. நூன்முகம்

10. கலாசாரபேரவையின் வகிபாகம்

11. பெயர் விபரம்

12. கலைமன்றங்களின் விபரங்கள்

13. அறநெறிப்பாடசாலைகளின் விபரங்கள்

14. சுற்றுலாமையங்கள்

15. உசாத்துணை

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary

දුරකථනය / தொலைபேசி / Telephone: 021-222 2235

ෆැක්ස් / பக்ஸ் / Fax: 021-222 2355

E-mail: gajaffna@sltnet.lk

දුරකථනය පොදු / பொது தொலைபேசி / General Telephone: 021-222 / 021-222



දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
**மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.**
**District Secretariat, Jaffna.**

මගේ අංකය / எனது எண் / My No.: Message from GA

ඔබේ අංකය / உமது எண் / Your No.:

දිනය / திகதி / Date: 26.04.2010

# அரசாங்க அதிபர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

தனக்கெனத் தனித்துவமான பாரம்பரிய பண்பாடுகளைப் பேணிவரும் யாழ் மண்ணில் அமைந்துள்ள ஒவ்வொரு பிரதேசமும் தனக்கே உரித்தான மண்மணம் கமழும் சில விழுமியங்களைக் கொண்டுள்ளமையை நாமறிவோம். அவ்வழி வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் வாழ்ந்த, வாழ்கின்ற கலைஞர்கள், அறிஞர்களினால் படைக்கப்பட்ட இலக்கியங்களும், கலைகளும் அவ்வப் பிரதேசத்தின் மகத்துவங்களை வெள்ளிடை மலையாக்குகின்றன. தமது மண்ணின் மாண்பினை, தமது படைப்புக்களின் வழி வெளிக்கொணர்ந்த கலை ஞர்கள், அறிஞர்களை இனம் கண்டு, அவர்களின் படைப்புக்களையும், வரலாற்றினையும் உலகறியச் செய்யும் உன்னத நோக்கில், வலிகாமம் வடக்கு பிரதேச செயலக கலாசாரப்பேரவையினால் மேற்கொள்ளப் பட்டுள்ள "கலைப்பூமி" எனும் நூலை வெளியிடும் முயற்சி போற்றற்குரிய தாகும். காலத்தைக் காட்டும் கண்ணாடியாய் இலங்கும் கலைகளின் வழியே வரலாறு படைத்த கலைஞர்களினதும், அறிஞர்களினதும் தகவல்களின் தொகுப்பாய் அமையும் இந்நூல் படைத்த கலைஞர் களினதும், அறிஞர்களினதும் தகவல்களின் தொகுப்பாய் அமையும் இந்நூல் நாளைய சந்ததியின் தேவைக்கு நல்லதொரு ஆவணப் படுத்தலாய் அமையும் என்பதில் ஐயமில்லை. கலை மணம் கமழ, முகையவிழ்க்கும் இந்நூல் கலைத்துறைக்கு பயனுடையதாய் நிலைத் திருக்க மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

க.கணேஷ்.

அரசாங்க அதிபர் / மாவட்டச்செயலர்,
யாழ் மாவட்டம்

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA



## துணைவேந்தர்அவர்களின் வாழ்த்து

பாரம்பரிய கல்வி கலை மரபின் செழுமையும்,நவீனஅறிவியல் வளர்ச்சியின் மேன்மையும் ஒருங்கு சேர்ந்த வலிகாமம் வடக்கு பிரதேச கலைவாணர்கள், அறிஞர்களின் வாழ்வை வரலாற்றைப் பதிவாக்கும் கலைப்பூமி நூலின் வரவுகண்டு மனது மிகவாய் மகிழ்ச்சியிலே திளைக்கின்றது.

தனதன தனன தனதன தனன
தனதன தனன தனதன தனன
தனனா தனன தனனா தனன
தனனா தனன தனதனனா.........

என உயிருக்குள் நிறைந்து, எங்களூர் வீரபத்திரர் வசந்தன் தரு, கலைப்பூமியாய் நிமிர்ந்த வலிகாமம் வடக்கின் கலை வளத்திற்குச் சான்றாக கட்டியம் கூறி நிற்கின்றது.எங்கள் ஊரைப் போலவே எல்லா ஊர்களிலும் எங்கெங்கு காணிலும் கலை வண்ணங்களின் கோலங் கள். பண்பாட்டின் பெருமைக்குரிய பூமியான வலிகாமம் வடக்கின் வாழ் வியலை எழுதும் இந்நூலினை தொகுத்து வழங்கும் வலிகாமம் வடக்கு பிரதேச செயலக கலாசாரப்பேரவையின் பணி கால முக்கியத்துவம் வாய்ந்தது.

எங்கள் பிரதேசத்தின் தொலைந்து போன கலை வளங்களை வாழ்வியலை மீளக் கட்டமைக்கும் உயிர்ப்பினுக்கு கலைப்பூமி ஆதார மூச்சாகும். வலிகாமம் வடக்கின் ஆத்மாவைக் காக்கும் இந்த ஆக்க முயற்சியில் இணைந்துள்ள அனைவருக்கும் எல்லையில்லாத என் அன்பு வாழ்த்துக்கள்.

பேராசிரியர் நா.சண்முகலிங்கன்
துணைவேந்தர்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு மாகாண சபை
අධ්‍යාපන, සංස්කෘතික කටයුතු සහ ක්‍රීඩා අමාත්‍යාංශය, උතුරු පළාත් සභාව
Ministry Of Education, Cultural Affairs & Sports, Northern Provincial Council

கன்னியா வீதி, வரோதயநகர், திருக்கோணமலை
කන්නියා පාර, වරෝදයනගර්, ත්‍රිකුණාමලය.
Kanniya Road, Varothayanagar, Trincomalee

Website: www.npc.gov.lk
e-mail: inedu@sltnet.lk

எனது இல. / මගේ අංකය / My No. } 03/08/01/
உமது இல. / ඔබේ අංකය / Your No. }
திகதி / දිනය / Date } 01.08.2007



## வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு செயலாளர் திரு இ.இளங்கோவன் அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி

எமது பண்பாட்டின் பிரதிபலிப்பாய் வாழ்வியல் அடையாங்களின் பராம்பரியங்களை பாதுகாப்பதும் அவற்றை ஆவணப்படுத்துவதும் ஓர் காத்தரமான செயற்பாடாகும். அந்தவகையில் யாழ்ப்பாண மாவட்டத்தின் கலைகளின் ஊற்றுக்களாய் விளங்கும் வலிகாமம் வடக்கில் வாழ்ந்து கொண்டிருக்கும் கலைஞர்களையும் வாழ்ந்து அமரர்களாகிய கலை ஞர்களினதும் விபரங்களை கலைப்பூமி என்னும் நூல்வடிவில் தொகுத்து வெளியிடுவது பாராட்டுதலுக்குரியதாகும். இத்தகைய ஆவணப்படுத்து தல்கள் அவசியம் என்று எல்லோராலும் உணரப்பட்டுள்ளது. அந்த வகையில் வலிகாமம் வடக்கின் கலாசாரப்பேரவையும் பிரதேச செயல கமும் இணைந்து அப்பிரதேச கலைஞர்களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்களை நூலாக்கம் செய்து கலைஞர்களைப் போற்றுகின்ற பணியை மனதாரப் பாராட்டி வாழ்த்துவதுடன் எனது நல்லாசிகளையும் வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இ.இளங்கோவன்
செயலாளர்,
கல்வியமைச்சு
வடமாகாணம்.

## முன்னாள் வலிகாமம் வடக்கு பிரதேச உதவிப்பிரதேச செயலரும் கண்டாவளை உதவி அரசாங்கஅதிபருமாகிய திரு.சி.சத்தியசீலன் அவர்கள் வழங்கிய ஆசிச்செய்தி



பாரம்பரிய விளையாட்டு விழாக்களை வருடப்பிறப்பு தினத்தன்று நடத்துதல், கண்காட்சி மற்றும் போட்டிகளை நடத்துதல், பண்பாட்டுப் பெட்டகம் - 01 ஆவணத்திரட்டு வெளியிட்டமை. நிஷா புயலின் தாக்கங்கள் தொடர்பான இறுவட்டு வெளியிட்டமை போன்ற செயற்பாடுகள் யாழ் மாவட்டத்திலுள்ள கலாசாரப்பேரவைகளிற்கு தெல்லிப்பளை பிரதேச செயலக பேரவை முன்மாதிரியாக இருப்பதோடு மட்டுமல்லாது செயற்திறன் மிக்கதாகவும் உள்ளது. அந்த வகையில் வலிகாமம் வடக்கு பிரதேசத்திற்குட்பட்ட வாழ்ந்து கொண்டிருக்கும் கலை ஞர்களினதும். வாழ்ந்து வழிகாட்டி அமரத்துவமடைந்த அறிஞர் களினதும் விபரங்களை தொகுத்து கலைப்பூமி என்ற ஆவணத்தை வெளியிட்டு எமது எதிர்கால சந்தியினருக்கு வழங்குவதற்கு முன்வந் திருப்பது பாராட்டப்பட வேண்டும்.வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத் தில் உதவிப்பிரதேச செயலாளராக பணியாற்றிய குறுகிய காலத்தில் இப்பிரதேசத்தின் கலை வளங்களையும் வரலாற்றுப் புகழ் மிக்க ஆலயங் களையும் அறிந்து கொள்வதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. யாழ்ப் பாண மாவட்டத்தின் கலை வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய இப்பிரதேசம் நாட்டின் அசாதாரண சூழ்நிலையில் தன் பொலிவிழந்து நிற்கின்றமை துரதிஷ்டமானதே. இருந்த போதிலும் கலைசார வளர்ச்சியில் இன்றும் பங்காற்றி வருவது இப்பிரதேச ஆளடையாளங்களது தனிச் சிறப்பம் சமாகும். இத்தகைய நிலையிலிருந்து வெளிவருகின்ற கலைப்பூமி என்ற கலைஞர் விபரநூலினையும், அதனை வெளியிடுகின்ற பிரதேச கலாசாரப்பேரவையினரையும், பிரதேசசெயலக குடும்பத்தினரையும் மனதார வாழ்த்தி நிற்பதோடு தொடர்ந்தும் தமிழர்களின் பாரம்பரியம் கலை, கலாசாரம் என்பவற்றை பேணி பாதுகாத்து வளர்ப்பதோடு எதிர்கால தலைமுறைகளிற்கு அவற்றை தெரியப்படுத்த நடவடிக்கை எடுப்பதற்கு இறைவன் ஆசியுரிவானாக எனக்கூறி அமைகின்றேன்.

**உதவி அரசாங்க அதியர், கண்டாவளை.**

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை
Sri Durgadevi Devasthanam
Tellippalai, Sri Lanka
T.P.No - 0602-213151



திகதி..........

துர்க்காதேவி துணை

"கலைப்பூமி" மலர் எங்கள் திருப்பூமியை சிறப்பிக்க துர்க் காதேவியைப் பிரார்த்திக்கிறேன். கலை நிறைந்த வலிகாமம் வடக்குப் பிரதேசத்தின் கலை வரலாறு ஆவணப்படுத்துவது அறிந்து மிகுந்த ஆனந்தமடைகிறேன். கலையின்பமே நிலையின்பமாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் தமிழர்கள். கலையின் பெயரால் கடவுளை வழிபட்ட மரபினர். இக்கலைப் பாரம்பரியம் என்றும் பேணுவதில் எம்முன்னோர் கொண்ட அக்கறை எல்லையற்றது.

ஈழத்திருநாட்டில் கலைகளின் கருவறையாக விளங்கியது மாவிட்டபுரம். இப்புனித மண்ணிலிருந்தே பிற ஊர்களுக்கு கலைப் பண்பாடு பரவியதென்பது சில அறிஞர்களின் கருத்தாகும். புகழ்பூத்த கலைஞர்கள் கலாமேதைகள் வலிகாமம் வடக்கில் உதயமாகி எம் மண்ணுக்குப் பெருமை சேர்த்தனர். இன்றும் அப்பாரம்பரியம் தொடர் கிறது. யுத்தச் சூழலில் வலிகாமம் வடக்கு மக்கள் மிகவும் பாதிப்படைந் தனர். அவர்களின் ஊர் அரங்கங்கள் ஓய்ந்த போதிலும் கலைப்பயணம் கைவிடப்படவில்லை. இடம் பெயர்ந்து வாழும் ஊர்களிலும் தம் கலைப் பணியைக் காப்பாற்றி வருகிறார்கள். இப்பெருங் கலைஞர் சிறப்பை ஆவணப்படுத்தி "கலைப்பூமி" என்ற பெயரில் வரலாற்று மலர் வெளியிடப்படுவது போற்றுதலுக்குரிய கைங்கரியமாகும். வலிகாமம் வடக்குப் பிரதேச செயலாளர் உயர் திரு.சு. முரளிதரன் அவர்களையும் மலராக்கக் குழுவினரையும் நிறைவாக வாழ்த்தி, எல்லாம் வல்ல துர்க்காதேவியின் திருவருளால் இம்மலர் கலையுலகுக்கு உயர்ந்த ஆவணமாக என்றும் சிறக்கப் பிரார்த்தித்து அமைகிறேன்.

"யாவர்க்கும் இன்னுரைதானே"

ஆறு. திருமுருகன்

தலைவர் துர்க்காதேவி தேவஸ்தானம்

**ஓய்வு பெற்ற மேலதிக அரசாங்க அதிபரும், முன்னாள் வலிகாமம் வடக்கு பிரதேச செயலருமாகிய திருமதி பத்தியம்மா திலகநாயகம் போல் அவர்கள் வழங்கிய அணிந்துரை.**



லெமூரியாக் கண்டம் கடல்கோள் கொண்டபோது நம் பழந்தமிழ் சின்னாங்கள், கலைகள், கட்டடங்கள், நூல்கள் எல்லாம் கடல் நீரில் அள்ளுண்டு மறைந்தும், மறையாது வேறு வேறு நாடுகட்கு அள்ளிச் செல்லப்பட்டும் இன்றும் அவற்றின் எச்சங்கள், பண்பாடுகள், சமய விழுமியங்கள், ஏன் நாடுகளின் பல மொழிகளின் தோற்றத்திற்குக் காலாய் அமைந்துள்ளன என்பது உலக ஆய்வாளர் பலரின் முடிவு நமது காலத்திலேயே ஏற்பட்ட சுனாமி, நிஷா முதலிய பெரு வெள்ளம், புயல் என்பன எங்கள் உறவுகளின் மனித உயிர்களை மட்டுமன்றி, உடைமைகள், கட்டிடங்கள், கல்விச் செல்வங்கள், கலைச் செல்வங்கள் அனைத்தையும் இருந்த இடம் தெரியாமல் அடித்துச் சென்றது கண்கூடு. ஆனால் ஒருகாலத்தில் கல்வி, கலை, பண்பாடு, சிற்பம், ஓவியம், கைத் தொழில், கமத்தொழில், கதை, கவிதை, நாடகம், கூத்து, அழகியல் ஆகிய பல துறைகளிலும் பாரம்பரியப் பண்பாட்டுக் கோலங்களில் முதன்மை பெற்று விளங்கிய சிறந்த கலையாக விளங்கிய வலிகாமம் வடக்கு இடப் பெயர்வு காரணமாக அனைத்துச் செல்வங்களை, கலைஞர்களை, கவிஞர்களை, அறிஞர்களை, ஓவியரை, சிற்பிகளை, நடனவல்லுனர் களை, கூத்தில் வல்லாரை, மருத்துவரை, சோதிடரை, சமயத்தத்துவ ஞானிகளை இழந்து எங்கெங்கோவெல்லாம் சிதறுண்டு வாழ்ந்து தற்பொழுது மீளக்குடியமர்ந்துள்ள வேளையில் அவர்களின் வரலாற் றையும், ஆக்கங்களையும் ஒருங்கிணைத்து ஆவணப்படுத்த வேண் டியது காலத்தோடு செய்ய வேண்டிய கடமையாகும். ஏனெனில் இவை யெல்லாம் இன்றைய சம்பவமாயினும் நாளைய சரித்திரமாகும்.

"தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்பது ஔவையார் வாக்கு. கலைஞர்கள், அறிஞர்கள், நிபுணர்கட்கு இது பொருந்தும். இவ்வாறு செய்வதனால் கலைஞர்கள், கௌரவிக்கப் படுவது

டன் அவர்களின் வரலாறும், கலைச் செல்வங்களும் அறிவுச் செல்வங் களும் பத்திரமாகவும், பக்குவமாகவும் தொகுத்தும், வகுத்தும், பகுத்தும் பாதுகாக்கப்படும்.கலை என்பது இறைவனின் கொடை. பூர்வ ஜென்ம புண்ணியம் பிறவிக் கலைஞன் என்பது அதுவே தான் பிறந்த எல்லாரும் கலைஞனாக, கவிஞனாக, அறிஞனாக ஆக முடியாவிட்டாலும் சிலர் இடையறா முயற்சியினால் கலைஞர், கவிஞர், அறிஞராவதுண்டு. அவர் களையும் பாராட்ட வேண்டியது தான் கலைஞருட் பிரபலம் பெறுவோர் மிகச்சிலர். இலை மறை காய்போல் வாழ்பவர்களும் பலர் இருக்கிறார் கள். அவர்களும் பாதுகாக்கப்பட வேண்டியவர்களே.

"ஒல்காப்புகழ் தொல்காப்பியம்" பின்வருமாறு கூறுகிறார்

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூன்றே
நான்கறி வதுவே அவற்றொடு செவியே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனமே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே"

தொல்காப்பிய மரபில் அதாவது தொடு உணர்வு மட்டுமிருந்தால் ஓரறிவுயிர், நாவின் சுவையுணர்வுமிருந்தால் ஈரறிவுயிர், மூக்கால் முகரும் உணர்வுமிருந்தால் முன்றறிவுயிர், கண்ணால் காணும் அறிவுமிருப்பின் நான்கறிவுயிர், செவியால் கேட்கும் உணர்வுமிருந்தால் ஐந்தறிவுயிர், இவையுடன் மனமும் மனதின் உணர்வும் இணைந்தால் ஆறறிவுயிர்களைப் போறறப்படும் என்றும் உயிர்களை செறிப்படுத்திய தொல்காப்பியர் மனம் இருந்தால் தான் மனிதனாவான். பகுத்தறிவு கொண்ட பண்பட்ட முழு மனிதனாவான் என்கிறார். அத்தகைய மனித ருள் மாணிக்கங்களை மண்ணிலே மலர்ந்த கலைஞர்களை, கவிஞர் களை, அறிஞர்களை கௌரவித்து ஆவணமாக்கிச் சரித்திரமாக்க வேண்டியது எம்முன்னோர் கடன்.மேலும் தொல்காப்பியர் "மரபு நிலை திரிதல் செய்யுட் இல்லைமரபு வழிப்பட்ட சொல்லினான"(தொல்காப்பியம், மரபியல்) என்கிறார்.அதாவது முன்னோர் மொழிப் பொருளேயன்றி அவர் மொழியையும் பொன் போல் போற்றுதல் என்பது வழிவழியாக வருகின்ற

மரபு.சங்ககாலத்திற்கு முன்பிருந்தே தமிழ் நூல்கள் இயல் இசை நூல்கள் இருந்தன என்பர் ஆய்வாளர். முச்சங்க நூல்களில் கடல்கோளால் எஞ் சியவை இடைச்சங்க நூலாகிய தொல்காப்பியமும், கடைச்சங்கநூல்க ளாகிய எட்டுத்தொகை பத்துப்பாட்டுமே. கடல் கோளாலும் அழிக்க முடி யாத தொல்காப்பியம் கூறும் மரபை. காலந்தோறும் பேணவேண்டியது நம் தலையாய கடன்.

இவ்வாறு வாழ்ந்த, வாழ்கின்ற, கலைஞர், கவிஞர், அறிஞர்களின் பரிபூரணமான வரலாற்றை ஆக்கங்களை நல்ல பொக்கிச மாக, நல்ல களஞ்சியமாக, நல்ல பெட்டகமாகப் பாதுகாத்துப் பத்திரப் படுத்தும் பொழுது அந்நூல்களின் ஒரு சில பிரதிகளாவது உலகளாவிய ரீதியில் எழுபது நாடுகட்கு மேல் வாழுகின்ற நந்தமிழர் நூலகங்கட்குச் சென்றடையும். அவ்வாறு பல இடங்களில் பல நூல்கள் பரவும் பொழுது இயற்கை அனர்த்தங்கள் எது நேரினும் (பிரளயத்தைத் தவிர) சில பிரதிகளாவது நிச்சயம் பாதுகாக்கப்படும் என்பது நிஜம்.

இந்தச் செயற்பாடானது கலைஞர்கள்,அறிஞர்கட்கான கௌரவிப்பு மட்டுமல்ல தமிழ் மொழியின் கலை பண்பாட்டு விழுமியங் களைப் பாதுகாப்பதுமாகும். நிறைவாக வலிகாமம் வடக்கின் கலைகள், அறிவுச் செல்வங்கள், கலைப் பாரம்பரியம், இடப்பெயர்வுகளால் ஓரளவுக்குச் சிதைந்துவிட்ட நிலையில் கிடைக்கின்ற தரவுகளைத் தானும் ஒரு பொக்கிசமாக, பெட்டகமாக, சரித்திரமாக, கலைப்பூமியாக ஆவணப்படுத்த நன்முயற்சி எடுத்துவரும் வலிகாமம் வடக்குப் பிரதேச செயலரையும் கலாசார உத்தியோகத்தரையும், மற்றும் துணைநிற்கும் கலாமன்றத்தினரையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர்கள் செயற்றிறன் முழுமையாக வெற்றி பெற ஆண்டவனை வேண்டுகிறேன்.

பத்தினியம்மா திலகநாயகம்
அரச அதிபர்
(மேலதிக ஒய்வில்)

මගේ අංකය<br>எனது எண்<br>My No. 1631 ඔබේ අංකය<br>உமது எண்<br>Your No.



ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය
பிரதேச செயலகம்
**DIVISIONAL SECRETARIAT**

## வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளரும் காலசாரப் பேரவைத் தலைவருமாகிய திரு.சு.முரளிதரன் அவர்கள் வழங்கிய நூல் அறிமுக உரை.

வலிகாமம் வடக்கு என்னும் பூமி மிகவும் வளம் கொழிக்கும் பிரதேசமாகும். நாற்பத்தைந்து கிராம அலுவலர் பிரிவு களைக் கொண்டதும், வரலாற்று சிறப்பு மிக்க வழிபாட்டுத் தலங் களையும், இயற்கைத் துறைமுகங்களையும் உலகிற்கு வழிகாட்டக் கூடிய தொழில் வளங்களையும், கலை முன்னோடிகள், அறிஞர்கள், கல்வியலாளர்களையும் கொண்டமைந்த இப்பிரதேசம் நாட்டின் அசாதா ரண சூழ்நிலைகளால் தன் பொலிவிழந்து, மக்கள் தமது வாழ்விடங் களை, வீடுகளை விட்டு வெளியேறி, நண்பர்கள், உறவினர்கள், தற்காலிக முகாம்கள் எனப் பல்வேறு இடங்களில் தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்தி வருகின்றார்கள். யுத்தச் சூழ்நிலைகள் 45 கிராம அலுவலர் பிரிவுகளையும், 17 கிராம அலுவலர் பிரிவுகளையும் சுருங்க வைத்தது. இப்பதினேழு பிரிவுகளிலும் வாழ்கின்ற மக்கள் தமது கலைகளையும், ஆற்றல்களையும் கைவிட்டு விடாது தொடர்ந்தும் பேணி வருகின்றனர்.

உலகில் வாழுகின்ற ஒவ்வொரு இனமும் ஒவ்வொரு மனிதனும் தத்தமக்கான பண்பாட்டு அடையாளங்களை ஏதோ ஒரு வடிவத்தில் பேணிக்காப்பதற்கு முயற்சித்த வண்ணமுள்ளன. நாமும் அதற்கு விதிவிலக்கானவர்களல்லர். எம்முடைய கலைத்தாய்க்கு தொண்டாற்றி அமரத்துவம் அடைந்தவர்களையும், இன்னும் நம்மி டையே வாழ்ந்து கொண்டிருக்கும் கலைஞர்கள், அறிஞர்களின் சேவை கள் வரலாற்றாக்கப்பட வேண்டிய பாரிய பொறுப்பு எம்முன்னே நிற்கின்

றது. மாவையம்பதி தந்த யோகர்சுவாமிகள், எஸ்.கே.இராசா, பேராசிரியர் சு.எஸ்.பீ.எம்.திருநாவுக்கரசு, வித்தியானந்தன் அளவையூர், என்.கே. பத்மநாதன், வி.தட்சணாமூர்த்தி, பாவிலர் அ.துரையப்பாபிள்ளை, A.T.பொன்னுத்துரை, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, மகாகவி அ.செ.மு அ.ந.க.மௌனத்தவ முனிவர், கணேசையர் போன்ற பல மேதைகளும், ஆன்மீகவாதிகளும் வாழ்ந்த இப்பூமியின் கலை வரலாறு இன்று வரை தொகுக்கப்படவில்லை. எத்தகைய கலைத் துறையானாலும் அது வலிகாமம் வடக்கிலிருந்து தான் மேற்கிளம்பிய வரலாறு காணப்படுகின்றது. அறிவியல், இசை, நாடகம், ஆன்மீகம், சவாரி, அரசியல் என எத்துறைகளினதும் வரலாறு வலிகாமம் வடக் கிலிருந்து முகிழ்கின்றது என்பது தான் உண்மை. இத்தகைய ஒரு நிலையிலிருந்து தான் வலிகாமம் வடக்குப் பிரதேசத்திற்குட்பட்ட கலைஞர் விபரத் தொகுப்பு கலைப்பூமி என்ற பெயரில் வெளியிடப்படுவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். நீண்ட பாரம்பரியத் தொடர்ச் சியையுடைய இப்பிரதேச கலை வரலாறு தொகுக்கப்பட வேண்டுமெனப் பலரது மனங்களிலும் தவிப்பு ஒன்று இருந்தமை கண்கூடு. அத்தவிப் பினை நீக்கும் முகமாக எமது பிரதேச செயலக கலாசார உத்தியோகத் தராலும், கலாசார அபிவிருத்தி உதவியாளராலும் விபரங்கள் சேகரிக்கப் பெற்று ஆய்வுமுறைக்குட்படுத்தி இன்று நூல் வடிவமாக வெளிக் கொணர்ந்துள்ளனர். இந்நூலை வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவை வெளியிட்டு வைப்பதில் பெருமையடைவதுடன் மேலும் பல சேவைகள் புரிவதற்கு மனமார வாழ்த்தி கலைப்பூமி என்ற இந்நூலை அறிமுகம் செய்து வைக்கின்றேன்.

சு.முரளிதரன்
பிரதேசசெயலரும்,
கலாசாரப் பேரவைத் தலைவரும்,
வலிகாமம் வடக்கு, தெல்லிப்பளை.

# வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவைசார்பில் செயலாளரின் நயப்புரை



கலை வளம் நிறைந்த மண்ணில் வலிகாமம் வடக்கு தனிச் சிறப்பம்சம் மிக்க பூமியாகும். பல்துறை சார்ந்த அவற்றிலும் சிறப்பு மிக்க தேர்ச்சி பெற்ற கலைஞர்களை அதிகமாக கொண்டமைந்து ஒரு கலைக் கோயிலாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் வலிகாமம் வடக்கு பகுதியிலிருந்து கலைஞர்களின் விபர நூலாக வெளிவரும் கலைப்பூமி என்கின்ற நூலுக்கு நயப்புரை எழுதுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

வலி வடக்கின் பெரும் பகுதி இடப்பெயர்வுப் பிரதேசமாக, விடுவிக்கப்படாத பிரதேசமாக இருக்கின்ற போதிலும் சொத்துக்கள் இழந்து ஏதிலிகளாக, எண்ணற்ற துயர்களையெல்லாம் நாள் தோறும் சந்தித்த வண்ணம் வாழுகின்ற போதிலும் கலைவளம் மட்டும் குறையாத, பூமியாக இப்பிரதேசம் இன்றுமுள்ளது பெருமைக்குரியதாகும். இவ்வாறான மகிமை மிக்க மண்ணின் வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்தின் கலாசாரப்பேரவையானது பெரும்பங்களிப் புகளுடன் கலைஞர் பெருமக்களின் கௌரவத்தைக் கட்டிக்காத்து வளர்த்தெடுக்கும் ஒரு சபையாக விளங்குகின்றது.

இதன் ஒரு வடிவமாக எங்களின் கன்னி முயற்சியாகவே இந்தக் கலைப்பூமி நூல் மண்ணின் பெருமை பேசி, வாழும் கலைஞர்கள், வாழ்ந்து மறைந்த கலைஞர்களின் சேவைகளைத் தாங்கி வெளிவருகின்றது. கலைப்பூமி என்பது வெறும் நூலல்ல. இது கலைஞர்களின் சொத்தாகும்.

காலத்தின் தேவை கருதி, எவ்வளவோ சிரமங்கள், நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே கலைப்பூமி உங்கள் கரங்களில் இப்போது தவழ்ந்து கொண்டிருக்கின்றது.

இவ்வரிய நூலை புத்தகமாக கொண்டுவர எங்களின் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருவாளர் மா.அருள்சந்திரன் அவர்கள், கலாசார உதவியாளர் திரு.கு.அகிலன் ஆகியோர் செய்த சேவைகள் எழுத்திலே வடிக்க முடியாதது. அந்த அளவுக்கு அவர்களின் மனம் நிறைந்த சேவை போற்றுதற்குரியது. இதற்காக அவர்களை நன்றியுடன் பாராட்டியே ஆக வேண்டும்.

கலைஞர்களின் விபரத்தை தாங்கி வெளிவரும் வலிகாமம் வடக்கு கலாசாரப்பேரவைக் குடும்பம் சார்பில் இந்நூல் சிறக்க எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கலாசாரப்பேரவை சார்பில்

ப.உதயகுமார்

செயலாளர்,

கலாசாரப் பேரவை, தெல்லிப்பளை

## நூன் முகம்



ஈழமணித்திருநாட்டின் சிரசெனப் போற்றப்படும் வலிகாமம் வடக்குப் பிரதேசமானது ஒருங்கே கல்விப்புலமையர்களையும், கலைஞர்களையும் தன்ன கத்தே கொண்டு விளங்கும் ஒரு பிரதேசமாகும். இவ் வாறு சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்த இப்பிரதேச மானது நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இன்று தன் கலைப் பொலிவினை இழந்து நிற்கின்றது. இத்தகைய சிறப்புப் பெற்ற இப்பிரதேசத்தில் மொழிப்பற்றும், கலையுணர்வும் கொண்டு தம்மை அர்ப்பணித்து வாழ்ந்த கலைஞர்களை ஆவணமாக்கும் முயற்சியில் இதுவரையாரும் ஈடுபடவில்லை. ஆகவே இவர்களைத் தொகுத்து ஆவணப்படுத்த வேண்டிய தேவையும், அவசியத்தையும் கருத்திற் கொண்டு நாம் அதற்கான முயற்சியில் எம்மைத் தயார்படுத்தினோம்.

எமது பிரதேசமானது நீண்டதொரு இடப்பெயர்வினைச் சந்தித் தமையினால் எமது தேடலுக்கான விபரங்களை பெறச்சென்றபோது சிலவேளைகளில் அத்தகவல்களைப் பெறமுடியாத துர்ப்பாக்கிய நிலை யைக் கண்டு மனம் வருந்திய சம்பவங்களும் எமக்கு நிறைய உண்டு. ஆகவே கடின உழைப்புக்கு மத்தியில் எமது பிரதேசத்தில் வாழ்ந்து மறைந்த, வாழ்ந்து கொண்டிருக்கின்ற கல்வியியலாளர்கள், அறிஞர்கள், பொதுமக்கள், கலைஞர்களது விபரங்களைத் தொகுத்து கலைப்பூமி என்ற பெயரில் வலிகாமம் வடக்கு கலாசாரப்பேரவை வெளியிடுவது எல்லோராலும் போற்றப்பட வேண்டிய ஒரு விடயமாகும். ஆகவே இவ்வரிய பொக்கிஷமாகிய கலைப்பூமி என்ற இந்நூலினை இக்காலச் சந்ததியினர் மட்டுமன்றி எதிர்காலச் சந்ததியினரும் பயன்படுத்தி பயனடைவார்கள் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

கு.அகிலன்

கலாசாரஅபிவிருத்தி உதவியாளர்

வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை.

## கலாசார மேம்பாட்டில் வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையின் வகிபாகம்.



2001 ஆம் ஆண்டில் அப்போதைய பிரதேச செயலா ளராகக் கடமையாற்றிய திருமதி.பத்தினியம்மா திலக நாயகம் அவர்களை தலைவராகவும், கலாசார உத்தி யோகத்தரை செயலாளராகவும் கொண்டு ஆரம்பிக்கப் பட்டு வடக்கு கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கமைவாக முறையாகப் பதிவு செய்யப் பட்டு பல்வேறு செயற்பாடுகளை இன்று வரை முன்னெடுத்து வருகின் றமை குறிப்பிடத்தக்கது.

காலத்துக்குக் காலம் பல புதிய முயற்சிகளை மேற்கொண்டு இப்பிரதேசப் பண்பாட்டு வளர்ச்சிக்கு மட்டுமல்லாது மாவட்டம் - தேசிய நிலையிலான பண்பாட்டு வளர்ச்சிக்கு பங்களித்து வருவதில் வலிகாமம் வடக்கு கலாசாரப்பேரவைக்கு முக்கிய பங்குண்டு. அந்த வகையில் வருடந்தோறும் கலை விழாக்களை நடத்தி வருவதுடன், சித்திரை புதுவருட தினத்தினை முன்னிட்டு தமிழர் தம் பாரம்பரிய கலாசார நிகழ்வுகளான போர்த்தேங்காய் அடித்தல், தயிர்முட்டி உடைத்தல், கைக்கொடிச்சவாரி, கிட்டியிழுத்தல், மரதன் ஓட்டம் போன்ற போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை நடத்தப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. 2001 ஆம் ஆண்டு "வசந்தம்" எனும் கையெழுத்துச் சஞ்சிகை அப்போதைய பிரதேச செயலாளர் திருமதி.ப.திலகநாயகம் அவர்களி னால் ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து மூன்று வருடங்கள் மாதந்தோறும் வெளியிடப்பட்டு வந்தமையும் துரதிஸ்ட வசமாக அச்சஞ்சிகை நின்று விட்டமையும் மனவருத்தத்திற்குரியதே. இதேபோன்று அலுவலகத்தில் ஓர் நூல் நிலையமும், பாரம்பரியப் பொருட்கள் நிகழ்வனவற்றின் தொகுப்புக்களை ஆவணப்படுத்தும் அருங்கலைக்கூடம் ஒன்றும் ஆரம் பிக்கப்பட்டு இன்று வரை பேணி வருவதுடன், யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழ்ந்து மறைந்து கலைஞர்கள், அறிஞர்கள் 450 பேரின் புகைப் படங்கள், விபரங்கள், மற்றும் பாரம்பரிய வாழ்வியல்கள், வரலாற்று விடயங்கள், சடங்குகள், கோயில்கள், பாடசாலைகள், அரும்பொருட்கள்

போன்றவற்றின் புகைப்படங்களது உள்ளிட்ட ஆவணப்படுத்தற் கண்காட்சி ஒன்றினை நடத்தியதும், ஆவணப்படுத்தியதும் நாடறிந்த விடயமாகும். 2008 ஆம் ஆண்டு கார்த்திகையில் யாழ்ப்பாணத்தை உலுக்கிய நிஷா அழிவுகளின் தொகுப்புகளை இறுவட்டு வடிவில் ஆவணப்படுத்தியமையும், பாரம்பரிய விழிப்புணர்வு தொடர்பிலான குறும்படம், மென்பொருள் வெளியீட்டிற்கும் நடவடிக்கை மேற்கொண்டு வந்தமை வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையின் முக்கிய செயற் பாடுகளில் சிலவாகும். இந்த வரிசையில் வெளியிடப்படுவதே கலைப்பூமி என்ற வலிகாமம் வடக்கு பிரதேசத்திற்குட்பட்ட கலைஞர்களது விபரங்களடங்கிய நூலாகும். பாரிய இடப்பெயர்வின் காரணமாக சிதறிப் போய் பல இடங்களிலும் வலிகாமம் வடக்கு மக்கள் வாழ்ந்து வருவதனால் இந்நூலில் சில கலைஞர்களது விபரங்கள் மற்றும் புகைப் படங்களை எம்மால் பெற்றுக்கொள்ள முடியாமற் போய்விட்டமை ஓர் குறைபாடே !. ஆயினும் எமது பிரதேச செயலர், கிராம அலுவலர்கள், கலைஞர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகளின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல், தரவுகளின் அடிப்படையில் இந்நூலை ஓரளவிற்காயினும் முழுமையாக ஆவணப்படுத்தியிருக்கின்றோம். இந்நூலில் இடம் பெறுகின்ற கலைஞர்களின் விபரங்கள், அவர்களது முது முறையைப் பேண வேண்டும் என்ற முக்கியத்துவத்தின் காரணமாக அவர்களது பிறந்த ஆண்டினை அடிப்படையாகக் கொண்டு மறைந்த கலைஞர் களையும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடப்பட வேண்டி யது அவசியமாகும்.

குறிப்பிட்ட காலகட்டங்களில் கலைச்சேவையில் ஈடுபட்டுப் பின்னர் நாட்டுச் சூழ்நிலை, குடும்பச் சூழ்நிலை போன்ற காரணி களினால் தொடர்ந்து செயற்பட முடியாமற் போனாலும் அவர்கள் கலைக் காற்றிய சேவையைக் கவனத்திற்கொண்டு அவர்களது பதிவுகளையும் ஆவணப்படுத்தப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இந்நூலில் சில கலைஞர்களது விபரங்கள் தவறவிடப்பட்டிருக்கலாம். அவை எமக்கு உரிய நேரத்தில் கிடைக்காமல் இருந்திருக்கலாம் அல்லது வழிப்படுத்தப் படாமலிருந்திருக்கலாம். சில கலைஞர்களது விபரங்கள் பெறப்படவே

முடியாமற் போய்விட்டது. அவ்வாறு தவறவிடப்பட்ட கலைஞர்களது பதிவு களை இனிமேல் வரும் வெளியீடுகளில் இணைத்துக்கொள்ள முயற் சிகள் மேற்கொள்ளப்படும்.

இந்நூலின் சிறப்பிற்கு ஆலோசனை வழங்கிய பிரதேச செயலர் திரு.சு.முரளிதரன் அவர்களுக்கும், மற்றும் கலாசாரப்பேரவை செயற்குழு உறுப்பினர்களுக்கும், இணை ஆசிரியராக இருந்து எல்லா வழிகளிலும் உதவிய கலாசார அபிவிருத்தி உதவியாளர், திரு.கு. அகிலன் மற்றும் வாழ்த்துச் செய்திகளை வழங்கிய உதவி அரசாங்க அதிபர் திரு.க.கணேஸ், திருமதி.ப.திலகநாயகம், பிரதேச செயலர், உதவிப் பிரதேச செயலர், திரு.சி.சத்தியசீலன், துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் திரு.ஆறுதிருமுகன் ஆகியோருக்கும் நூலாக்கத்திற்கும் நிதி உதவி வழங்கிய அரச, தனியார் நிறுவனங்கள், கலைஞர்கள், தொழில் முதல்வர்கள், மற்றும் சிறந்த முறையில் அச்சேற்றித் தந்த சுன்னாகம் மகிந்தன் கணனி அச்சகத்தினருக்கும், வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மா.அருள்சந்திரன் (M.A.Culture)
நூலாசிரியரும்,
கலாசார உத்தியோகத்தரும்,
கலாசாரப் பேரவை இணைப்பாளரும்
பிரதேச செயலகம்,
வலிகாமம் வடக்கு,
தெல்லிப்பளை.

# பெயர் விபரம் (பிறந்த ஆண்டின் ஒழுங்கில்)

## ஆக்க இலக்கியப் புலமையாளர்கள்

பக்கம்

### ஆன்மீகவியலாளர்கள்


| | |
|---|---|
| 1. தவத்திரு யோகர் சுவாமிகள் | 1 |
| 2. சற்குருசிவாயஸ்ரீ சுப்பிரமுனிய சுவாமிகள் | 1 |
| 3. முதுபெரும் புலவர் வை.கந்தர் சிற்றம்பலம் | 2 |
| 4.பண்டிதர் க.நாகலிங்கம் | 3 |
| 5. பன்மொழிப்புலவர் தம்பு கனகரத்தினம் | 4 |
| 6. ஸ்ரீரங்கம் அப்புத்துரை | 5 |
| 7. கதிர் பாலசுந்தரம் | 6 |
| 8. அநு வைரமுத்து நாகராஜன் | 7 |
| 9. புலவர் மகாலிங்கசிவம் பார்வதிநாதசிவம் | 8 |
| 10. சைவப்புலவர் சுப்பிரமணியம் செல்லத்துரை | 9 |
| 11. அருட்திரு கலாநிதி நீக்கிலாப்பிள்ளை மரியசேவியர் அடிகளார் | 11 |
| 12. மயிலங்கூடலூர் பிள்ளையினார் நடராஜன் | 12 |
| 13. பேராசிரியர் நா.சுப்பிரமணிய ஐயர் | 14 |
| 14. பேராசிரியர் கலாநிதி நாகலிங்கம் சண்முகலிங்கன் | 15 |
| 15. திருமதி கோகிலாதேவி மகேந்திரராஜா | 17 |
| 16. பசுபதி உதயகுமார் | 18 |
| 17. வேலுப்பிள்ளை அம்பிகைபாகன் | 19 |


### அமரர்கள்


| | |
|---|---|
| 18. பாவலர் அருளம்பலம் துரையப்பாபிள்ளை | 20 |
| 19. வித்துவசிரோன்மணி பிரம்ம ஸ்ரீ சி.கணேசையர் | 21 |
| 20. சங்கம் வளர்த்த பிரம்ம ஸ்ரீ தியாகராசக் குருக்கள் சதாசிவஐயர் | 23 |
| 21. புலவர்மணி சுப்பிரமணியபாரதியார் நவநீதகிருஸ்ணபாரதியார் | 24 |
| 22. சி.சுவாமிநாதன் | 25 |
| 23. குருகவி ம.வே.மகாலிங்கசிவம் | 26 |
| 24. ஈழுசேகரி நா.பொன்னையா | 27 |
| 25. சிந்தனைச் செல்வர் பொ.கைலாசபதி | 28 |

26. பண்டிதர் க.சச்சிதானந்தம் 29
27. செல்லையா சிவசுப்பிரமணியம் 30
28.இலக்கணவித்தகர் இராமசாமி நமசிவாயதேசிகர் 31
29. பண்டிதர் வ.நடராஜா 32
30. கனகசபை திருச்செவ்வேள் 33
31. அருணாசலம் விஸ்வநாதன் 34
32. பேராசிரியர் அம்பலவாணர் சிவராசா 36
33. மு.க.சுப்பிரமணியம் 36
34. மாரிமுத்து மாணிக்கம் 36
35. செல்லையா கதிரேசர்பிள்ளை 37
36. அருட்கவி சீனியர் விநாசித்தம்பி 38
37. தெல்லியூர் செல்லையா நடராசன் 40
38.பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன் 41
39. தமிழருவி தம்பு சண்முகசுந்தரம் 42
40. சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி 44
41. செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி 45
42. இரத்தினசபாபதி இராஜேஸ்வரன் 46
43. ஆறுமுகம் மகாதேவன் 47


இசைக்கலைஞர்கள்


44. வயிரவப்பிள்ளை ககந்தையா நடராஜா 47
45.இசைமணி வல்லிபுரம் செல்லத்துரை 49
46. கலாபூஷணம் கந்தையா சந்திரகேது 50
47. தம்பிராசா சிவசுப்பிரமணியம் 51
48. திருமதி நேசபூபதி நாகராஜா 51
49. சிதம்பரப்பிள்ளை செல்வரட்ணம் 51
50. செல்லத்துரை இராசா 52
51. சின்னதம்பி ஈஸ்வரதாசன் 53
52. சிற்றம்பலம் சிவானந்தராசா 53
53. திருமதி சிவரூபி சொக்கலிங்கம் 54
54. திருமதி பாகீரதி கணேதுரை 54
55. சிற்றம்பலம் சிவஞானராஜா 55

56. நாகமுத்து இரகுநாதன் 56
57. திருமதி தெய்வீக சவுந்தரராணி செளந்தரராஜன் 57
58. குலசேகரம் கமலேஸ்வரன் 57
59. கந்தன் மனோகரராசா 58
60. சதாசிவம் நித்தியானந்தன் 58
61. விமலாதேவி நாகேஸ்வரன் 59
62. அன்பரசி குகதாசன் 60
63. திருமதி விஜயலட்சுமி யோகராஜசர்மா 60
64. செல்வநாயகம் ஞானசொறூபன் 61
65. செல்வி ஜெயக்குமாரி முருகையா 61
66. திருமதி கல்பனா உமாபரன் 62
67. சிவநாதன் ரஜீவன் 62
68. புஷ்பலச்சுமி உமாசங்கர் 63


அமரர்கள் இசையாளர்கள்

69. இசைஞானமணி பிரம்மஸ்ரீ இ. விஸ்வநாதையர் 63
70. சீனியர் சிதம்பரப்பிள்ளை 64
71. தாமோதரம்பிள்ளை பொன்னம்பலம் 64
72. எஸ்.கே.பரராஜசிங்கம் 65
73. இளையவர் நமசிவாயம் 65
74. கந்தையா திருநாவுக்கரசு 66
75. பொன்னம்பலம் முத்துக்குமாரன் 66
76. செல்லையா பொன்னுச்சாமி தேசிகர் 66
77. ஓதுவார்மூர்த்தி வீ.ரீ.வீ.சுப்பிரமணியம் 67
78. சுப்பிரமணியம் நமசிவாயம் 68
79. தியாகராஜ ஐயர் சுந்தரமூர்த்தி ஐயர் 68
80. செல்வி நாகம்மா கதிர்காமர் 68
81. லயன்ஸ் திலகநாயகம் போல் 69
82. இராமலிங்க ஐயர் சோமசுந்தரேஸ்வரக் குருக்கள் 71
83. திருமதி சுபத்திராதேவி விவேகானந்தன் 71
84. அப்புக்குட்டி திலகேஸ்வரன் 72


இசைநாடகம்

85. தொமிங்கு இராசதம்பி 72

86. வைரவன் தில்லையன் செல்வராஜா 72
87. இசிதேர் சூசைப்பிள்ளை 73
88. ஐயாத்துரை வசந்தா 73
89. திருமதி நவரட்ணம் லலிதா 74
90. அம்பலம் கதிரமலை 74
91. வேலுப்பிள்ளை சிதம்பரநாதன் 75
92. சின்னத்துரை புஸ்பராசா 76
93. திருமதி தவராஜா ஜெயந்தா 76
94. வைரமுத்து சாரங்கன் 77
95. திருமதி யோகநாதன் நாகேஸ்வரி 77
96. சங்கரப்பிள்ளை கிருபானந்தன் 77
97. வைத்திலிங்கம் விஜயபாஸ்கர் 78

அமரர்கள்

98. வேலு மார்க்கண்டு 78
99. அண்ணாவியார் பூ.நாகமுத்து 79
100. வெற்றிவேலு சுந்தரமூர்த்தி 79
101. நடிகமணி வி.வி.வைரமுத்து 80
102. கந்தையா உருத்திராபதி 81
103. வேலு செல்வமணி 82
104. தொமிங்கு தேவசகாயம்பிள்ளை 82

எழுத்தாளர்கள்

105. அமரசிங்கம் இராசதுரை 83
106. வேலுப்பிள்ளை அமுதலிங்கம் 83
107. இரவி அருணாசலம் 84
108. முத்துத்தம்பி வாமதேவன் 84
109. நவரத்தினம் பரமேஸ்வரன் 84
110. செல்வி ஆரபி சிவஞானராஜா 85

அமரர்கள்

111. மங்களநாயகம் தம்மையா 85
112. ச.அம்பிகைபாகன் 86
113. அ.செ.முருகானந்தன் 86

114. வேலுப்பிள்ளை நடராஜன் 88

ஓவியர்கள்

115. சரவணமுத்து சபாநாயகம் 88
116. சுபாஸ் சந்திரபோஸ் 89
117. ஆசை அடைக்கலமுத்து 90
118. சுந்தரம்பிள்ளை இரகுராகவன் 90

அமரர்கள்

119. தம்பையா சிவலிங்கம் 90
120. சிதம்பரப்பிள்ளை பொன்னம்பலம் 91
121. நடராசா தட்சனாமூர்த்தி 91

கவிஞர்கள்

122. குமாரவரோதயன் சிவகடாச்சம்பிள்ளை 92
123. முத்தையா திருநாவுக்கரசு 92
124. கவிஞர் வி.கந்தவனம் 93
125. சின்னப்பு அமிர்தநாதன் குருக்கள் 94
126. உருத்திரமூர்த்தி சேரன் 94
127. நடராஜா ஸ்ரீஸ்கந்தராசா 95
128. சுப்பிரமணியம் குகதேவன் 95
129. பார்வதி நாதசிவம் மகாலிங்கசிவம் 96
130. திருமதி மலாதேவி மதிவதனன் 96
131. தம்பித்துரை ஜங்கரன் 97

அமரர்கள்

132. ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை 97
133. மகாகவி து.உருத்திரமூர்த்தி 98
134. சிவகடாச்சம்பிள்ளை சத்தியகுமரன் 100

அமரத்துவம் அடைந்த கூட்டுறவாளர்கள்

135. வல்லிபுரம் பொன்னம்பலம் 100
136. சின்னத்தம்பி சிவமகாராசா 101

அமரத்துவம் அடைந்த மாட்டுவண்டில்ச் சவாரியாளர்கள்

137. வேலுப்பிள்ளை சின்னத்தம்பி 101
138. சுப்பிரமணியம் குணராஜசிங்கம் 101

139. இளையதம்பி வைத்திலிங்கம் 102
140. தம்பையா சுப்பிரமணியம் 102
141. நடராஜா சிதம்பரநாதன் 102
142. அந்தோனிப்பிள்ளை ஜெயரட்ணம் 102


சிற்பக் கலைஞர்கள்

143. செல்லையா சிவப்பிரகாசம் 102
144. அகஸ்ரீன் வேதானந்தம் 104
145. சரவணமுத்து ஜெயகாந்தன் ஸ்பதியார் 105
146. வேலுப்பிள்ளை பாலேந்திரன் 106
147. உருத்திரமூர்த்தி சுயானனன் 108


அமரர்கள்

148. காசிப்பிள்ளை சரவணமுத்து 108
149. கந்தையா உருத்திரமூர்த்தி 109
150. சின்னத்துரை நவரட்ணம் 109
151. கலாசேகரி ஆறுமுகம் தம்பித்துரை 110


சீனாடி சிலம்பக்கலைஞர்கள்

152. கந்தப்பிள்ளை சின்னத்தம்பி 111
153. சின்னத்தம்பி காந்தரூபன் 112
154. சின்னத்தம்பி நந்தகுமார் 113


அமரர்

155. தம்பு இரத்தினம்பிள்ளை 113


சொற்பொழிவாளர்

156. சிவத்திரு குமாரசாமிஐயர் 114
157. கந்தசத்தியநாதன் 115


சோதிடர்கள் சித்தவைத்தியர்கள்

158. சின்னத்தம்பி சுப்பையா 115


அமரர்கள்

159. வேலுப்பிள்ளை நாகமுத்து 117
160. வைத்திய கலாநிதி கோவிந்தர் சின்னத்தம்பி 117
161. வைரவநாதர் நடேசு 117

162. தங்கமுத்தம்மா நாகலிங்கம் 117
163. சங்கரப்பிள்ளை இளையதம்பி 118


தவில் கலைஞர்கள்

165. வேதையா ஸ்ரீதரன் 118
166. வடிவேலு இராமச்சந்திரன் 119
167. தெட்சனாமூர்த்தி உதயசங்கர் 119


அமரர்கள்

168. கார்த்திகேசு கணேசரத்தினம் 120
169. செல்லையா சுப்பிரமணியம் 121
170. விஸ்வலிங்கம் தெட்சணாமூர்த்தி 121
152. பக்கிரிசாமி குமாரசுந்தரம் 122
153. நாகலிங்பிள்ளை குமரகுரு 123
154. அழகர் சின்னக்கணேசன் 124
155. பாலசுப்பிரமணியம் பாஸ்கரன் 124


நாதஸ்வரக் கலைஞர்கள்

156. இராமநாதன் ஞானசுந்தரம் 125
157. பெரியசாமி பாலகிருஷ்ணன் 126
158. சுப்பிரமணியம் ஸ்ரீக்குமரன் 127
159. இராசு இந்திரகுமார் 127
160. இரத்தினவேலு கேதீஸ்வரன் 128
161. செல்லத்துரை சிதம்பரநாதன் 129
162. செல்லத்துரை சிவகுருநாதன் 130


அமரர்கள்

163. சோமசுந்தரம் பக்கிரிச்சாமி 130
164. N.S.உருத்திராபதி 130
165. சின்னத்தம்பி விஸ்வலிங்கம் 131
166. K.S.இராசா 132
167. S.P.ஆ.திருநாவுக்கரசு 133
168. வெங்கடாசலம் முருகையா 135
169. இராமநாதன் இராசு 135

170. சேதுராக்கர் சுப்பிரமணியம் 135
171. N.K பத்மநாதன் 135
172. மகாலிங்கம் இராஜதுரை 137
173. சுப்பிரமணியம் குருசாமி 138
174. M.PB.S.சுதாகர் 138
175. பத்மநாதன் முரளிதரன் 138
176. கந்தையா வடிவேலு 138
177. மகாதேவன் மாசிலாமணி 139
178. கோவிந்தசாமி கிட்டு 139

## நாடகக் கலைஞர்கள்

179. ஆறுமுகம் தில்லைநாயகம் 139
180. வல்லிபுரம் செனகரத்தினம் 140
181. பிரம்மஸ்ரீ.ச.சுப்பிரமணிய சர்மா 141
182. பிரம்மஸ்ரீ.ச. சிவசர்மா 141
183. முத்தையா குருக்கள் நாகேந்திரசர்மா 142
184. சின்னத்துரை நடராஜா 142
185. கனகசபை அமரசிங்கம் 143
186. தேவராசா 144
187. ஐ.இரேவணராத்திரி 145
188. இராசையா இராசரத்தினம் 146
189. கந்தப்பு சிவதாசன் 147
190.செ.குணபாலசிங்கம் 148
191. வல்லிபுரம் ஸ்ரீதரன் 148
192. சின்னத்துரை ஆனந்தராசா 149
193. சங்கரப்பிள்ளை சிவானந்தராசா 149
194. கனகசபை காராளசிங்கம் 150
195. சின்னப்பொடி ஐயாத்துரை 150
196. சங்கரப்பிள்ளை தயானந்தன் 151
197. திருமதி வினோதினி ஸ்ரீமேனன் 151

198. திருமதி மலர்விழி கங்காதரன் 151
199. கணபதி சந்திரகுமார் 152
200. பரம்சோதி கேதீஸ் 152
201. அன்ரனி பிரசன்னா 153
202. தசராசா அருள்குமரன் 153
203.தவராசா குமரன் 154

## அமரர்கள்

204. அண்ணாவியார் வயித்தி யாகோபு 155
205. தம்பையா செல்லையா 155
206. கலைப்பேரரசு A.T.பொன்னுத்துரை 156
207. சின்னர் செல்வராசா 158
208 கார்த்திகேசு சோமசுந்தரம் 158
209. வன்னித்தம்பி வைரப்பிள்ளை 159
210. கந்தசாமி கணபதிப்பிள்ளை 159
211. பொன் கணேசமூர்த்தி 160
212. வி.எம்.குகராஜா 161
213. K.K.V.செல்லையா 163

## நிருத்தியக் கலைஞர்கள்

214. தமிழ்ச்செல்வி விஜயகுமாரன் 164
215. வனிதா வைரமுத்து 165
216. மலர்விழி பிறேம்குமார் 165

## அமரர்கள்

217. பொன் பரமானந்தர் 165
218. கந்தையா பாலசுப்பிரமணியம் 167
219. முத்தையா ஐயாத்துரை 167
220. வெங்கடாசலம் இராஜரத்தினம் 168
221. ரேலங்கி செல்வராஜா 169
222. நளினி சிவகுமார் 169
223. ஐயாத்துரை விநாயகலிங்கம் 169

பழம் பொருள் சேகரிப்பாளர்

224. ஆவணஞானி இரா.கனகரத்தினம் 170

அமரர்கள்

225. கலைஞாணி அ.செல்வரத்தினம் 170

பொம்மலாட்டக்கலைஞர்கள்

226. சின்னத்தம்பி நாகராசா 172
227. நல்லசேரம் கஜேந்திரன் 172

போர்த்தேங்காய் உடைத்தல்

228. கந்தையா கணேசு 173

மிருதங்கக் கலைஞர்கள்

229. பண்டாரம் சின்னராசா 173
230.பிள்ளைநாயகம் திருநாவுக்கரசு 175
231. முருகன் இராசன் 176
232. சுந்தரமூர்த்தி ஐயர் வரதராஜசர்மா 176
233. கதிரன் இராஜதுரை 177
234. ஐயாத்துரை சிவபாதம் 177
235.விஷ்வநாதஐயர் ஜம்புநாதன் 178
236. மாணிக்கம் ஜெயராசா 179
237. குணபாலசிங்கம் ஞானசுதன் 179
238.சிவபாரத்தினம் சிவசிவா 179
239. திருச்செகநாதன் வரோதயன் 180
240. சிங்கராசா செந்தூரன் 180

அமரர்கள்

241. கதிரிப்பிள்ளை முருகேசு 181
242. வைரவப்பிள்ளை பிள்ளைநாயகம் 182
243.வேலப்பா காசிநாதன் 182

வசந்தன், ஒயிலாட்டக்கலைஞர்கள்

244. முருகேசு சிவப்பிரகாசம் 183
245. குருசாமி ஸ்ரீதர் 184

246. கனகசபாபதி கனகநாயகம் 184
247. குருசாமி சுகுமார் 185


அமரர்

248. வல்லிபுரம் குருசாமி 185


விளையாட்டுத்துறை

249. T. பத்மநாதன் 187
250. றொகான் இராசிங்கம் 188


வில்லுப்பாட்டு

251. நாகலிங்கம் வடிவேலு 189


மூத்த படப்பிடிப்பாளர்

252. சங்கரம்பர் கதிரவேலு


அலுவலகத்தில் கடமையாற்றிய கலைஞர்கள்

253. திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் 189
254. கார்த்திகேசு பீதாம்பரம் 192
255. மாரிமுத்து சீவரத்தினம் 192
256. இ.சி.தட்சனாமூர்த்தி 193
257. மார்க்கண்டு அருள்சந்திரன் 193
258. தேவராசா விக்னேஸ்வரன் 195
வலிகாமம் வடக்கின் கலை இலக்கிய நாடகமன்றுங்கள்
வலிகாமம்வடகிலுள்ள அறநெறிப்பாடசாலைகள்
வலிகாமம்வடகிலுள்ள பிரதான சுற்றுலாமையங்கள்
உசாத்துணை


# ஆன்மீகவியலாளர்கள்

## தவத்திரு யோகர் சுவாமிகள்



1872-05.29ஆம் நாள் மாவிட்டபுரம் என்னும் இடத்தில் பிறந்து சுவாமிகளாகி கொழும்புத்துறையில் ஆச்சிரமம் அமைத்து வாழ்ந்தவர். நல்லூர்த் தேரடியில் செல்லப்பா சுவாமிகளிடம் ஞானதீட்சை பெற்றவர். யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தினையும், சிவ தொண்டன் சஞ்சிகையினையும் ஆரம்பித்து யாழ்ப்பாண மக்களின் வாழ்வில் ஆன்மீக ஒளியேற்றியவர்.அன்புவழியில் அரவணைத்து மக்களின் துன்ப துயரங்களை நீக்கி ஆன்மீக வழிகாட்டிய இவர் 1964 ஆம் ஆண்டு இறைவனின் திருவடியில் சரணாகதியானார்.

## சற்குரு சிவாயஸ்ரீ சுப்பிரமுனிய சுவாமிகள்



அமெரிக்காவில் பிறந்த இவர் அளவெட்டியில் ஆச்சிரம் ஒன்றை அமைத்து சைவ சமய ஆன்மீகப் பணிகளுடன் கலை கலாசாரப் பணிகளிலும் ஈடுபட்டு தொண்டாற்றி யவர் மீளவும் அமெரிக்கா சென்று அங்கே இறைவனடி சேர்ந்தார். இவருடைய ஞாபகார்த்தமாக அளவெட்டி கூட்டுறவாளர் வீதியில் அமைந்திருக்கின்ற சுப்பிரமுனிய சுவாமிகள் கலாசார நிலையம் அவரது பணிகளை இன்றும் ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

## முதுபெரும் புலவர் வை.கந்தர் சிற்றம்பலம்



1914-09-16 ஆம் நாள் அளவெட்டி கிழக்கு அலுக்கை என்னும் இடத்தில் பிறந்தவர் நல்லாசிரியராய்த் திகழும் புலவரவர்கள் பல செய்யுள் நூல்களுக்கு ஆசிரியராவார். மரபுவழிப்பாடல்கள், பிரபந்தங்கள் இயற்றுவதில் புகழ் பெற்றவர் இது வரையில் முப்பதிற்கு மேற்பட்ட நூல்கள் அச்சேற்றப்பட்டுள்ளன.1992 ஆம் ஆண்டு கொழும்புத் தமிழ்ச்சங்கம் நடத்திய சுவாமி விபுலானந்தர் கவிதைப் போட்டியில் சுவாமி விபுலானந்தர் நான்மணி மாலை என்னும் இவரது பாடல் முதற்பரிசு பெற்றமை குறிப்பிடத்தக்கது. அது மட்டுமன்றி 1994இல் நல்லூர் இணை மணிமாலை என்னும் நூலும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் முதற்பரிசு பெற்றுள்ளது. இவர் ஊஞ்சல், நான்மணி மாலை, மும்மணி மாலை, ஒருபாஒருபது, திருப்பள்ளியெழுச்சி, கலம்பகம், பிள்ளைத்தமிழ் வருக்கமாலை,அட்டமங்கலம் முதலான பல்வகைப் பிரபந்தங்களைப் பாடியுள்ளமை மனங்கொள்ளத்தக்கது. மரபுவழிப் பாடல்களை எல்லோருக்கும் விளங்கக்கூடிய இலகுவான மொழி நடையில் எழுதுவது இவரது தனித்துவமான திறமையாகும். அளவை கும்பளாவளைப் பிள்ளையார் நான்மணிமாலை, இணுவில் மஞ்சத்தடி கப்பனைப்பிள்ளையார் திருவூஞ்சல், அளவை வெள்ளியம்பதி மாகாளி யம்மை திருவூஞ்சல், இணுவில் சிவகாமியம்மை திருவிரட்டை மணிமாலை மற்றும் திருப்பள்ளியெழுச்சி, தெல்லியூர் துர்க்கையம்மன் மும்மணிமாலை, உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் திருஇரட்டை மணிமாலை, திருவடிவேற்சுவாமிகள் ஒருபாஒருபது, நல்லூர்க் கலம்பகம்,நல்லூர் ஒருபாஒருபது, நல்லூர் இணைமணிமாலை, பெருவிளான் கதிரமலை கந்தசுவாமியார் திருவூஞ்சல், இணுவில் ஆனந்த நடராசர் திருவூஞ்சல், இலங்கைவளம்,மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் நான் மணிமாலை, செந்தமிழ்மாலை, அருணகிரிநாதசிவசுப்பிரமணியர் போற்றிப்பத்து, சுவாமி விபுலானந்த அடிகளார் நான்மணிமாலை, சுழிபுரம் பறளாய் சிவசுப்பிரமணியர் பிள்ளைத்தமிழ், இணுவில் சிவகாமியம்மன் இடர்களைப்பதிகம், வருக்கமாலை, நாவற்குழியூர் நடராசன்புகழ்மாலை, நல்லூர் ஆதீனம் சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள் அட்டமங்கலம், பண்டிதமணி கலாநிதி கணபதிப்பிள்ளை இருபாஇருபது, இயற்கையிலிறைவன், பண்டிதமணி நான்மணிமாலை முதலிய பதிகங்கள் இவரால் பாடப்பெற்று நூலாக்கம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பண்டிதர் க.நாகலிங்கம்



1920-03-04 ஆம் நாள் அளவெட்டியில் பிறந்து ஆரம்பக்கல்வியை அளவெட்டி வடக்கு சீனன் கலட்டி ஞானோதயா வித்தியாலயத்தில் கற்றுக் கொண்ட பண்டிதரவர்கள் பண்டிதத்திற்குரிய சாமானியத் தன்மைக்கு மேம்பட்ட விசேஷமுடையவர். இவர் தமிழாசிரியத் தகைமை பெறும் அதேவேளை தமிழ்ப்பண்டிததகைமையும் சமகால விளைவாக விளைவித்தற்கென இந்நூற்றாண்டின் முற்பகுதியில் பரமேஸ்வராக் கல்லூரியில் பிரத்தியேகமாக நடைபெற்ற பண்டித ஆசிரியப் பயிற்சிகளில் சேர்ந்து தலை சிறந்த தமிழாசிரியர்களான பண்டிதமணி, க.சு.நவநீதகிருஸ்ணபாரதியார், வித்துவான் க.கார்த்திகேசு முதலானோரிடம் தமிழ், இலக்கண, இலக்கியங்களை ஐயந்திரிபுறக்கற்று தெளிந்து பயிற்றப்பட்ட பண்டித ஆசிரியராக மலர்ந்தவர். அத்துடன் 1951-1952 இல் நடைபெற்ற இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ் டிப்ளோமாப் பரீட்சையிலும் சித்தியடைந்தவர். பாலபண்டித,பண்டித பரீட்சார்த்திகள் பலருக்கும் பரோபகார சிந்தனையுடன் கற்பித்துப்பலன் கண்டஅனுபவசாலி. எல்லாவற்றுக்கும் மேலாக சேவைக்காலம் முழுவதும் அளவெட்டி அருணோதயக்கல்லூரி தலைமைத் தமிழ்ப் பண்டிதராகவிருந்து உயர்கல்வி மாணவரின் தமிழ் இலக்கணத் தேர்ச்சிக்கு அயராது உழைத்தவர். யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா பிவிருத்திச்சங்க நிர்வாக சபையில் 1948 ஆம் ஆண்டு முதல் உறுப்பினராக இணைந்து 1952ஆம் ஆண்டு முதல் அச்சங்கத்தின் தனாதிகாரியாகப் பலவருடங்கள் கடமையாற்றியவர். அச்சங்கப் பரீட்சகராகவும் பாடவிதான அமைப்புச்சபை உறுப்பினராகவும் செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.செந்தமிழ் இலக்கணவிளக்கம் முதலாம் பாகம், இரண்டாம்பாகம், செய்யுளியலும் அணியியலும் (முதற்பகுதி), அகத்திணையியலும் புறத்திணையியலும்(இரண்டாம்பகுதி) மெய்ப்பாட்டியலும் மரபியலும் (மூன்றாம்பகுதி) போன்ற பல நூல்களை ஆக்கியவர். வலிகாமம் வடக்குப்பண்டகசாலைகளின் சமாச இயக்குனர் சபை உறுப்பினராக 1963 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டார்.1966 இல் அச்சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அளவெட்டி மல்லாகம்

பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் 1978 ஆம் ஆண்டு முதல் 1990 ஆம் ஆண்டு வரை தலைவராக இருந்து சங்கத்தை வழிநடத்தி வந்துள்ளார். இவரது ஆக்க இலக்கியப்பணிகளை கௌரவிப்பதற்காக 1986 ஆம் ஆண்டில் நாகவரதநாராயணர் தேவஸ்தானம் பண்டிதமணி என்ற பட்டத்தை வழங்கியதுடன் அதே தேவஸ்தானம் 2002 இல் இலக்கண வித்தகர் என்ற பட்டம்சூட்டிக் கௌரவித்தது. வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவை "கலைச்சுடர்" என்ற விருதினை வழங்கிப் பெருமைப் படுத்தியமையும் குறிப்பிடத்தக்கது.

## பன்மொழிப் புலவர் தம்பு கனகரத்தினம்



1927.04.09ஆம் நாள் இளவாலையில் பிறந்தவர். இடம் பெயர்ந்து 8-1/1 மெட்டுரோ தொடர்மாடி 55ஆம் வீதி வெள்ளவத்தை என்னும் முகவரியில் வாழ்ந்து வருகின்றார். தமிழ் பாடநூற் பகுதித் தலைவராகவும் பதிப்பாசிரியராகவும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத் தமிழ்ப் பாடநூல் ஆலோசகராகவும் கடமையாற்றியவர்.தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், பிராகிருதம் பாளி, சிங்களம்,ஹிந்தி, மலையாளம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி உடையவர் இலங்கைப் பாடசாலைகள் அனைத்திலும் பயன்படுத்தப்படும் தமிழ் மொழிப் பாடநூல்கள் தொடர்பாக 1967-1985 காலப்பகுதிகளில் இலக்கிய நூல்களின் வெளியீட்டாளராகக் கடமையாற்றியவர். சிங்களப் பத்திரிகைகளான எத்த, திவயின, சாகித்தியகலா, Etd-E.P.D, லங்காதீப ஆகியவற்றிலும், மஞ்சரி, சாவி ஆகிய தென்னிந்தியப் பத்திரிகைகளிலும், திருவள்ளுவரும் சாணக்கியரும், திருக்குறள் மாநாட்டுச்சிறப்பு மலர், வெசாக்மலர், போன்ற சஞ்சிகைகளிலும் எழுதியவர். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அனைத்துலக நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டில் சிங்கள.பாளி இலக்கியங்களில் தமிழின் செல்வாக்கு ,மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது தமிழாராய்ச்சி மாநாட்டில் தமிழ் சிங்கள மொழிபெயர்ப்பு இலக்கியங்கள், ஆறாவது தமிழாராய்ச்சி மாநாட்டில் தமிழ் சிங்களத்தூது இலக்கியங்கள், மொரிசியசில் நடைபெற்ற ஏழாவது தமிழாராய்ச்சி மாநாட்டில் சிலப்பதி காரமும் ஈழமும் என்பன போன்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளை சமர்ப்பித் தவர். இதனை விட இலங்கை பாசறைத்தரம் சிங்களத்தில் இருந்து தமிழுக்கு

மொழி பெயர்த்த சேதுபந்தனம் என்ற சிறுகதைத் தொகுப்பு, சிறுவர்க்கான கதைகள்,தமிழ் சிங்கள வாசக நூல்களையும், இலங்கையின் பத்திரிகை களில் கட்டுரைகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் என்பனவற்றினையும் எழுதியவர். வானொலி, தொலைக்காட்சிகளில் சமயப் பேச்சுக்களையும், உரையாடல்களையும், கவியரங்குகளையும், இலக்கியப் பேச்சுக்களை யும், இசைச் சித்திரங்களையும் நிகழ்த்திய பெருமைக்குரியவர். 1980 ஆம் ஆண்டில் இலங்கை வானொலியில் சங்கமம் என்ற தலைப்பில் இலக்கிய ஒருமைப்பாடு தொடர்பில் 29 பேச்சுக்களையும், இலங்கைப் புலவர்கள் என்னும் தனிப் பாடல்களடங்கிய கவிநயம் என்ற நிகழ் வினையும் நிகழ்த்தியவர்.சிறந்த நூலுக்கான சாகித்திய மண்டலப்பரிசும், தமிழ்மணி, போன்ற விருதுகளையும் பெற்றவர். ஓய்வு பெற்ற பின்னர் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் தமிழ்ப்பாடநூற்பகுதியின் ஆலோசகராகவும், கொழும்புப் பல்கலைக்கழகத்தில் தொழிலாளர் கல்விப் பகுதியில் பகுதிநேர விரிவுரையாளராகவும், கொழும்புப் பல்கலைக்கழக சித்தவைத்தியப் பகுதியில் உயர்தமிழ் இலக்கண விரிவுரையாளராகவும் பணியாற்றிய பெருமைக்குரியவர்.

## ஸ்ரீரங்கம் அப்புத்துரை



மயிலங்கூடல் இளவாலையில் 1928-04-22 ஆம் நாள் பிறந்தவர். தற்பொழுது 18/1 ஒன்பதாவது ஒழுங்கை வாசல வீதி,கொழும்பு- 13 என்னும் முகவரியில்வசித்து வருகின்றார். முப்பது வருடங்களுக்கு மேலாக ஆக்க இலக்கியத்துறையில் ஈடுபட்டுவரும் இவர் மல்லாகம் பண்டிதர் கழகத்தில் பயின்று பண்டிதர் பட்டம் பெற்றவர்.அத்துடன் சென்னை சைவசித்தாந்த மகாசமாசத்தின் சைவப்புலவர் பட்டமும் பெற்றவர். ஆசிரியராயிருந்து முதலாந்தர அதிபராய் பணிபுரிந்து மயிலிட்டி அமெரிக்கன்மிசன் பாடசாலையை மயிலிட்டி வடக்கு கலைமகள் மகாவித்தியாலயமாக பாரிய வளர்ச்சி காணவைத்தவர். பழந்தமிழ் நூற்பயிற்சியுடன் நவீன இலக்கிய கவிதைத்துறைகளிலும் ஈடுபாடு கொண்டவர். இலக்கண சந்திரிகை, வினைப்பகுபதவிளக்கம் முதலான இலக்கண நூல்களையும், தண்டிகைக் கனகராயன் பள்ளு,பாரதி என்ற சஞ்சிகை,மழலைச்செல்வம் முதலான பல நூல்களையும் பதிப்பா

சிரியராக இருந்து பதிப்பித்துள்ளார். பத்திற்கு மேற்பட்ட கவிதை, உரை நடை நூல்களையும் பத்திற்கும் மேற்பட்ட சிறுவர் பாடல்தொகுப்பு நூல் களையும் வெளியிட்டவர். நற்சிந்தனைகள் நாற்பது, அமுதமொழி, சைவ சமய அபரக்கிரியை விளக்கம் நகுலேஸ்வரம், அறுபத்து மூவர், சைவசமய வாழ்வியற் சிந்தனைகள், மகத்துவ விரதங்கள் போன்ற உரைநடை நூல்களையும், மழலைச்செல்வம், மழலை வித்துக்கள், மழலைப் பாமலர்கள்,மழலையர் பாஅமுதம் போன்ற சிறுவர் பாடல் தொகுப்பு நூல்களையும், ஊஞ்சற் பாக்களையும் ஆக்கியவர். வலிகாமம் வடக்கின் காங்கேசன்கல்வி மலரின் கௌரவ ஆசிரியர்களில் முதன்மை யானவர் மாவைமுருகன் மீது இதுவரை காலமும் எழுந்த இலக்கியங் களை அறிமுகம் செய்யும் வரலாற்று ஆவணமான மாவைக்கவிப்பூங் கொத்து என்னும் நூலை தனது தாயாரின் நினைவாக வெளியிட்ட பெருமைக்குரியவர். உலகளாவிய பல சஞ்சிகைகளில் சமய,தமிழ் ஆய்வுக் கட்டுரைகளை எழுதியவர். மரபுவழிச் செய்யுள் வகையில் ஒல்லுடை மும்மணிமாலை, கொட்டாஞ்சேனை வரதராச இரட்டை மணிமாலை, சதகம் முதலான கவிதை நூல்களையும் நற்சிந்தனை நாற்பது என்ற வானொலி உரை நூலையும் ஆக்கியவர். இவரது இத்தகைய செயற்பாடுகளுக்காக இலங்கை அரசின் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கலாபூஷணம் விருதும், வடக்கு கிழக்கு மாகாண சிறந்த இலக்கிய நூற்பரிசும் வழங்கப் பெற்றவர்.

## கதிர் பாலசுந்தரம்



வீமன்காமம் வடக்கு மாவை மயிலிட்டி வீதி தெல்லிப் பளையை சொந்த இடமாகவும் கனடாவை தற்காலிக முகவரியாகவும் கொண்டு வாழ்ந்து வருகின்றார். 1928.01.14 ஆம் திகதி பிறந்த இவர் சிறுகதை, நாவல், நாடகம், வரலாறு போன்ற துறைகளில் ஆக்க இலக்கியப் புலமை உடையவர். தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றியவர். இவரது குறிப்பிடத்தக்க இலக்கிய படைப்புக்களாக அந்நிய விருந்தாளி சிறுகதைத் தொகுப்பு, மறைவில் ஐந்து முகங்கள், கனடாவில் சாவித்திரி ஆகிய தமிழ் நாவல்களையும் Five Hidden Faces

என்ற ஆங்கில மொழியினாலான நாவலையும், சாம்பல்மேடு, விஞ்ஞானி என்ன கடவுளா, விழிப்பு, கண்டறியாத கல்யாணம் என்கின்ற நாடகங் களையும் யா/யூனியன் கல்லூரி பற்றிய பொற்காலம் என்னும் நூலையும் அமிர்தலிங்கம் சகாப்தம் என்ற வாழ்க்கை வரலாற்று நூலையும் எழுதிய ஆக்க இலக்கியப் புலமையாளராவார்..

**அநு.வைரமுத்து நாகராஜன்**



சங்கராபரணம் தென்மயிலை தெல்லிப்பளையில் வாழ்ந்த இவர் 1933.09.07 ஆம் நாள் உடுப்பிட்டியில் பிறந்தவர். தற்பொழுது 4/55,ஆவது ஒழுங்கை வெள்ளவத்தை கொழும்பு 6 என்னும் முகவரியில் வாழ்ந்து வருகின்றார் சமயம்,சிறுவர் இலக்கியம், கவிதை, ஆக்க இலக்கியம் ,நடிப்பு, நெறியாளுகை, தயாரிப்பு, விஞ்ஞான ஆய்வு என பலதுறைகளில் ஆக்கஇலக்கியப் புலமையுடையவர். நாடறிந்த மூத்த எழுத்தாளர். பாடசாலையில் படிக்கும் காலத்திலேயே எழுத்துத்துறையில் கால்பதித்தவர். புதுமையும் நயப்பும் மிக்க இவரது ஆக்கங்கள் இலக்கிய உலகில் பிரசித்தமானது. மரபு இலக்கியத்திலும், ஆக்க இலக்கியத்திலும் முன்னோடியாகத் தொழிற்பட்டவர். பல்வேறு சமய ஆக்க இலக்கிய நூல்களை வெளியிட்டவர். தெல்லிப்பளை கலை இலக்கியக் களத்தின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவர் பதினாறிற்கும் மேற்பட்ட ஆக்க இலக்கிய நூல்களை வெளியிட்டவர். ஆசிரியராகவும், அதிபராகவும் கல்வியியலாளராகவும் முப்பத்தேழு வருடங்களுக்கு மேல் பணியாற்றி ஓய்வு பெற்றவர். அவரது வைரமான் வெளியீடான கருத்தும் எழுத்தும் என்னும் நூல் பலரது பாராட்டையும் பெற்றது குறிப்பிடத்தக்கது. மேலும் இவரது ஒரு காலத்துச் சிறுகதைகள் என்னும் சிறுகதைத் தொகுப்பு நூலில் அபலையின்கடிதம், இளையாள், ஒருபிடிமண், வீணையடி நான்உனக்கு, சுரண்டலின் நிழல்கள், நாமும் ஈன்றிருக் கிறோம், கவசம், அதுவும் ஒருபிறவி, ஒருசாலை திரும்புகிறது, ஒரு புல்லாங்குழல் வீணையாகிவிட்டது, துரோகங்கள் எப்பொழுதும் நியாயப் படுவதில்லை ஆகிய சிறுகதைகளை உள்ளடக்கியதாக வெளியிட்டு ள்ளமை குறிப்பிடத்தக்கது. இச்சிறுகதைகள் யாவும் தினகரன், சுதந்திரன்,

வீரகேசரி, அன்னை, சிந்தாமணி போன்ற பத்திரிகைகளில் 1955ஆம் ஆண்டிலிருந்து 1985ஆம் ஆண்டு வரை வெளிவந்த சிறுகதைகளாக வுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. சமய,சிறுவர் இலக்கியங்களில் தேசிய, மாகாணவிருதுகளும், பாராட்டுக்களும் கௌரவமும் பெற்ற மூத்த எழுத்தாளர். மார்கழி மங்கையர், மாணவர் நல்லுரைக் கோவை, தாய் தரும்தாலாட்டு, தேடலும் பதித்தலும், காட்டில் ஒருவாரம், அவன் பெரியவன், பட்டரின் அபிராமி மான்மியம், சிறுவர் சிந்தனைக் கதைகள், போன்ற நூல்களின் ஆசிரியராகவும், மாத-முத்திங்கள் இதழாக அன்னை என்ற இலக்கியச் சஞ்சிகையை 1950-1963 வரையான காலப் பகுதியில் நடத்தியும் ஈழத்து இலக்கிய உலகில் வலம் வருகின்ற வலிகாமம் வடக்கின் மூத்த ஆக்க இலக்கியப்புலமையாளர்களில் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## புலவர் மகாலிங்கசிவம் பார்வதிநாதசிவம்



மயிலங்கூடல் இளவாலை வடக்கில் 1936.01.13 ஆம் நாள் பிறந்து வலிகாமம் வடக்கில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற முதுபெரும் அறிஞரும் கவிஞரும் ஆவார். இவர் பல கவியரங்குகளில் தன்குரலால் கவிபாடியது மட்டுமல்லாமல் தலைமை தாங்கி கவியரங்குகளையும் நடத்தியவர். பண்டிதமணி கணபதிப்பிள்ளை, இலக்கணவித்தகர் நமசிவாயதேசிகர் ஆகியோரிடம் பயின்றது மட்டுமல்லாமல் தன் இலக்கியக் குருவாகவும் நெஞ்சில் நிலை நிறுத்தியவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் புலவர் பட்டம் பெற்ற இவரின் இலக்கியத்திறனை நன்கு புரிந்து கொண்ட பத்திரிகைகள் தமது பணியில் அமர்த்திக் கொண்டன. புலவரவர்கள் காதலும் கருணையும், இருவேறு உலகம், இரண்டுவரம் வேண்டும், இன்னும் இருதிங்கள், பசிப்பிணி மருத்துவன், மானங்காத்த மறக்குடி வேந்தன் என்னும் கவிதை நூல்களையும், தமிழ்ச்செல்வம் என்னும் இலக்கியக் கட்டுரை நூலையும் வெளியிட்ட பெருமைக்குரியவராவார். சாதாரண துவிச்சக்கரவண்டியில் உலாவி பிறரை வருத்தாது வாழ்க்கை நடத்தும் பண்பாளன். கல்வி என்பது பெரிய அறிவு மூட்டையைச் சுமப்பது அல்ல. பண்போடு வாழ்வது தான் கல்வி

என்பதன் இலக்கணமாக வாழ்ந்து வரும் அறிஞர். புலவரவர்களை கவிஞராகவே பெரிதும் பார்த்திருந்தவர்களுக்கு அவரால் வெளியிடப் பெற்ற தமிழ்ச்செல்வம் என்ற நூலின் மூலம் அவர் ஒரு மிகச்சிறந்த கட்டுரையாளர், சிந்தனாவாதி என்பதையும் வெளிக்காட்டுவதாக அமைகி ன்றது. நாவலர்பெருமானின் தமிழ்நாட்டின் சிதம்பரசைவப் பிரகாசவித் தியாசாலையில் தலைமை ஆசிரியராகவும் பணியாற்றியவர். அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் கல்விகற்றகாலத்தில் தமிழ் நாட்டின் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுடன் நெருங்கிய நட்புப் பெற்றிருந்தவர். உரையாசியரும், ஈழமண்டலச்சதகம் என்னும் இனிய நூலைத் தந்த வருமான மட்டுவில் ம.க.வேற்பிள்ளையவர்களின் பேரனும்,ஈழத்து இலக்கியப்பரப்பில் இன்றும் பரீட்சை எடாப்பண்டிதர் என்றும் நினைவிற் கொள்ளப்படுகின்ற குருகவி மகாலிங்கசிவம் அவர்களின் புதல்வனு மாவார். ஈழத்தின் வளமானதொரு இலக்கியப் பாரம்பரியத்தின் வழித்தோன்றலான புலவரவர்கள் வித்துவசிரோன்மணி பொன்னம்பல பிள்ளையவர்களால் உரையாசிரியர் என்ற விருதும், சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் இலக்கிய மேதை என்ற விருதும், வலிகாமம் வடக்கு கலாசாரப்பேரவையினரால் கலைச்சுடர் என்ற விருதும் வழங்கப் பெற்றவர்.

### சைவப்புலவர் சுப்பிரமணியம் செல்லத்துரை



இளவாலை வடக்கைச்சேர்ந்த மூதறிஞரான இவர் 1938.03.28 ஆம் திகதி பிறந்தவர். தற்பொழுது கொழு ம்பில் வசித்து வருகின்றார்.நாடகம்,படைப்பிலக்கியம், பௌராணிகர்,சொல்லாடல்,சொற்பொழிவாளர் போன்ற பன்முகவகிபாகங்களையும், பரிமாணங்களையும் கொண்டவர். ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றியவர். சைவ சமயத்தினை உயிர்நாடியாகக் கொண்டு வாழ்ந்துவரும் இவர் பசுவதைக் கெதிராக பல கண்டனங்களையும் பிரசுரங்களையும் வெளியிட்டுப் போராடிவருபவர். தனது தாயாரின் நினைவாக கோமாதா என்ற நினைவு மலரை வெளியிட்டு பசுவின் பயன்களையும், பசுவில் உறையும் தேவர் களையும் காட்டி சுவாமி ஞானப்பிரகாசர் வழியில் பசுவதைக் கெதிரான

பயன்மிகு நூலை தன் அன்னைக்குக் காணிக்கையாகச் செலுத்தியவ ராவார். மிகச்சிறந்த நாடகக் கலைஞன். கற்பனை, தற்புதுமை, விரிந்த சிந்தனை, புதியது காணல், உள்ளுணர்வு, மேதாவிலாசம் கொண்ட ஆக்கஇலக்கியப் புலமையாளர். இவரது நாடகங்களை வரலாறு, புராணம், இதிகாசம், சமூகம், இலக்கியம், கூத்து, எனப்பலவாறு வகைப்படுத்தமுடியும் மணியோசை, பஞ்சவடி, பாசுபதம், கண்ணகி வழக்குரைத்தமை, மாயவன்செய்தமாயம், மண்ணாசை, கர்வபங்கம், இராவணன், சுப்றீம்கோர்ட்டில் திரௌபதை, வயோதிபர் விடுதியில், கண்ணீர், அர்ச்சுனன்தபசு, சொர்க்கம், சேலையும் சுங்கானும், போன்ற நாடக ஆக்கங்களும், பூம்பாவை,கண்ணப்பர், விபுலானந்த அமுத வெள்ளம், சிலம்பு, அணுவின் கதை ஆகிய வில்லுப்பாட்டுக்களையும், அரங்கப்படையல்கள் என்ற நாடகத்தொகுப்புநூலையும் வெளியிட்டவர். 1968 ஆம் ஆண்டு இளவாலை இளங்குமரன் கலாமன்றம் என்ற நாடக மன்றத்தினை உருவாக்கி அதன்வளர்ச்சிக்காக அயராது உழைத்தவர். மரபுவழிக்கவிதை எழுதுவதிலும் ஆற்றல் பெற்றவர். பல்வேறு கவி யரங்குகளில் தலைமைக் கவிஞனாயமர்ந்து வழிநடத்தியவர். பட்டி மன்றப்பேச்சாளர். இவரது மணிவிழாவை முன்னிட்டு அமரர் கலைப் பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை அவர்களால் மணிவிழா ஞாபகார்த்த மலரான அரங்கக்கலைஞர்ஐவர் என்ற நாடகஅரங்கியல் சார்ந்தநூல் ஒன்று வெளியிடப்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. சைவசித்தாந்தத் துறையில் மிகுந்த அறிவுடையவர். தெல்லிப்பளை கலை இலக்கியக் களத்தின் தலைவராகப் பணியாற்றி வருவதுடன் வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையின் உபதலைவராகவும் பணியாற்றியவர், இலங்கை வானொலி மற்றும் தொலைக்காட்சிச் சேவைகளிலும், இலங்கையின் பலபாகங்களிலும் சமய,ஆன்மீகச் சொற்பொழிவுகளையும் நிகழ்த்தி வருவதுடன் புராணபடன ஓதுவாராகவும், பயன் சொல்பவராகவும் வாழ்ந்து வருகின்றார். வலிகாமம் வடக்கின் பிரதேசமலரின் ஆசிரியர் களுள் ஒருவராகத்திகழ்ந்து மலரின் சிறப்பான வெளியீட்டிற்கு தனது அயராத உழைப்பினை வழங்கியவர். சைவபரிபாலன சபையின்

அங்கத்தவராகவும் பணிபுரிந்து வருவதுடன். சைவபரிபாலன சபையின் சைவப் புலவர் விருதும் வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையினரால் கலைச்சுடர் விருதும், கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கலாபூஷணம் விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற வலிகாமம் வடக்கின் மூத்த ஆக்க இலக்கியப் புலமையாளராவார்.

## அருட்திரு கலாநிதி நீக்கிலாப்பிள்ளைமரியசேவியர் அடிகளார்.



1939-12-03 ஆம் நாள் புனிதநீற்றம்மாள் கோயிலடி, இளவாலை வடக்கு என்னும் முகவரியில் பிறந்தவர். கத்தோலிக்க மதகுருவான இவர் கலைவழி இறைபணி என்ற மகுட வாக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு செயலாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. கலை வாழ்வில் 50 வருடங்களைப்பூர்த்தி செய்ததுடன் பதினாறு மொழிகளில் தேர்ச்சியுடையவரென்பதுடன் ஆறு மொழிகளில் கலாநிதிப்பட்டமும் பெற்றவர். அத்துடன் சைவசித்தாந்தத்தையும், கிறிஸ்தவ மறுமலர்ச்சி யையும் ஆய்வு செய்து கலாநிதிப்பட்டம் பெற்றுக் கொண்டவர். தமிழர் களின் கலாசார வரலாறு பற்றி தமிழ், ஆங்கிலம், ஜேர்மன் ஆகிய மொழி களில் ஆய்வு நூல்களை வெளியிட்டவர்.இதுவரையில் நூறுக்கு மேற்பட்ட கலை, இலக்கிய,விமர்சன,ஆய்வுகள் எனப்பட்ட நூல்களை வெளியிட்டு ள்ளார். கலைப்பணியாற்றுவதற்காக திருமறைக் கலாமன்றம் என்னும் கலை, இலக்கிய நிறுவனமொன்றை நிறுவி அதன் தலைமை இயக்கு னராகப் பொறுப்பேற்று நாற்பத்திரண்டு வருடங்களுக்கு மேலாக கலை, இலக்கிய, சமூகப்பணிகளை ஆற்றிவருகின்றார். திருமறைக்கலா மன்றத்தில் இலங்கையில் வாழ்கின்ற மூவின மக்களையும் இணைத்து இலங்கையின் பல பிராந்தியங்களிலும் கிளை நிறுவனங்களை அமைத்து செயற்பட்டு வருவதுடன் உலகின் பல்வேறு நாடுகளிலும் கிளைகளை அமைத்து கலைகளினூடாக சமாதானம் பற்றிய பரப் புரையை முன்னெடுத்து வருவது குறிப்பிடத்தக்கது. ஐக்கியநாடுகள் சபையின் சமாதான ஒன்று கூடலில் திருமறைக் கலாமன்ற உறுப்பினர் களையும்,சிறுவர்களையும் பங்குகொள்ள வைத்தமையும் குறிப்பிடத் தக்கது. ஈழத்துக் கலைஞர்களின் படைப்புக்களை ஐரோப்பிய நாடுகளில் அரங்கேற்றிவர். குறிப்பாக மன்றக்கலைஞர்களது அசோகா, கொல்ஈனும்

கொற்றம் போன்ற படைப்புக்களைக் குறிப்பிடலாம். கலை, இலக்கிய வளர்ச்சிக்காக கலைமுகம் என்ற சஞ்சிகையினையும், நாடகஅரங் கியலின் வளர்ச்சிக்காக ஆற்றுகை என்ற சஞ்சிகையினையும் பல வருடங்களாக வெளியிட்டு வருவதும் இச்சஞ்சிகைகளில் மொழி பெயர்ப்புக்கட்டுரைகளை எழுதிவருவதும் கலை,இலக்கிய ஆர்வலர் களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். மேலும் நாடக அரங்ககண்காட்சி களையும், ஆய்வரங்குகளையும் நடத்தி வருவதுடன் இக்கலையின் வளர்ச்சிக்காக நாடகப்பயிலகம் என்ற அமைப்பினையும் ஓவியக் கலையின் வளர்ச்சிக்காக ஓவிக்கலைப்பயிலகம் என்ற அமைப்பி னையும், சிறுவர்கலைக்கூடம், நடனப்பயிலகம் போன்ற பல்வேறு பிரிவுகளை திருமறைக்கலாமன்றத்தில் ஏற்படுத்தி கலைவளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றார். யேசுவின்திருப்பாடுகளை அரங்கமுறையில் பலநூறு கலைஞர்களைக் கொண்டு அரங்கேற்றி வருபவர். எமதுபாரம் பரியக்கலை வடிவங்களான நாட்டுக்கூத்து, இசைநாடகம், கிராமியக் கலை வடிவங்கள் போன்றவற்றின் பேணுகைக்கும், தொடர்ச்சிக்கும் பல்வேறு முயற்சிகளெடுத்து பாதுகாத்துவரும் மிகச்சிறந்த ஆக்க இலக்கியப்புலமையாளர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது இத்தகைய சேவைகளைப் பாராட்டுமுகமாக 1998 இல் ஜேர்மன் நாட்டில் கலைத்தூது பட்டமும், வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் விருதும், வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையினரின் கலைச்சுடர் விருதும் வழங்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## மயிலங்கூடலூர் பிள்ளையினார் நடராஜன்



1939-08-14 ஆம் நாள் மயிலங்கூடல் இளவாலையில் பிறந்தவர். தற்பொழுது 314, நாயன்மார்கட்டு, யாழ்ப் பாணத்தில் வசித்து வருகின்றார். ஆரம்பக் கல்வியை இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்திலும், உயர் கல்வியை தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி யிலும்கற்றவர். பாடசாலையில் படிக்கும் காலத்திலிருந்து இலக்கியத் துறையில் ஈடுபாடுகொண்டு கட்டுரை, நூலாய்வு, வாழ்க்கை வரலாறு, சிறுகதை, கவிதை, குழந்தைக்கவிதை போன்றவற்றை இன்றுவரை

எழுதி வருகின்றார். ஆசிரியராகவும், நல்லூர் வட்டாரக்கல்வி வள நிலையப் பொறுப்பாளராகவும் கடமையாற்றியதுடன் எழுத்திலக்கியத் துறையில் பத்திரிகைகளில் 1960 முதல்கட்டுரைகளை எழுதி வந்துள்ளார். இவரது ஆக்கங்களான சுதந்திரமாய்ப்பாடுவேன், சிந்தனைச் செல்வர் பொ.கைலாசபதி ஆளுமையும் ஆக்கமும் கட்டுரைக்கோவை, தமிழியற் கட்டுரைகள், மரணத்துள் வாழ்வோம், ஆடலிறை குழந்தைப் பாடல்கள் போன்ற நூல்களையும், 30 குழந்தைக் கவிதைகள், கைலாய மாலை, கோணேசர்கல்வெட்டு, இலங்கைவாழ் தமிழர் வரலாறு ஈழத்துத்தமிழ் இலக்கியத்தில் யாழ்ப்பாண அரசர் போன்ற நினைவு மலர் வெளியீடுகளையும் வெளியிட்டுள்ளார். ஈழத்துக் கவிதைத்துறையில் இவரது பங்களிப்பு மிகவும் மகத்தானது.ஆடலிறை என்னும் புனைபெயரில் இலக்கிய உலகில் அறிமுகமானவர். இவரது இலக்கியப் பணிகளின் களமாக ஈழத்திலிருந்து வெளிவருகின்ற பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் அமைந்திருக்கின்றன. மல்லாகம் பண்டிதர்கழகத்தினால் வெளியிடப்பட்ட பண்டிதன் சஞ்சிகையினதும், பலாலி ஆசிரியர் கலாசாலையின் ஆசிரியர் கழகத்தினால் வெளியிடப்பட்ட சுடர்சஞ்சிகையினதும் ஆசிரியராகக் கடமையாற்றியமையும் குறிப்பிடத்தக்கது. சிறுவர் இலக்கியத் துறையில் இருபத்தைந்து நூல்களுக்கு மேலான வெளியீடுகளுக்கு இவரது பங்களிப்பு மிகவும் மகத்தானது. இலங்கையின் பல பாகங்களிலும் நடைபெறுகின்ற இலக்கிய படைப்புக்கள், இலக்கியப் படைப்பாளிகள் போன்றவர்களது முக்கிய தகவல்களையும், அவர்களது நூல்களையும் சேகரித்து வைத்திருக்கும் பெட்டகமாகத் திகழ்ந்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் உலகப் பழைய மாணவர் சங்கத்தினால் வெளியிடப்பெற்ற கவிதை நூல்களின் ஆசிரியராகவும் பணியாற்றியவர். இவரது சேவை களைக் கௌரவிக்குமுகமாக வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையினர் கலைச்சுடர் என்ற விருதினை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

**பேராசிரியர் நா.சுப்பிரமணிய ஐயர்**

1942-12-25 ஆம் நாள் முள்ளியவளையில் பிறந்து திருமணத்தின் மூலம் தெல்லிப்பளையை நிரந்தர வாழ்விடமாகக் கொண்டவர். ஆரம்ப காலங்களில் புராணபடனம்,பாராயணம் என்பன இவரை ஆட்சியுடைய தாக்கின. இதனால் சைவ சித்தாந்த சாத்திரங்கள்,பகவத்கீதை திருக்குறள் முதலியவற்றில் புலமைமிக்கவராகத் திகழ்ந்ததுடன் சோதிடக்கலை யிலும் வல்லவராயிருந்தார். இதன்காரணமாக புதுமைநாட்டம், நாவல், சிறுகதை முதலானதுறைகளில் இவர் பன்முக ஆளுமை யுடையவராக விளங்கிவருகின்றார். கொழும்பு, பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பயின்று 1969ஆம் ஆண்டு தமிழில் சிறப்புக்கலை மாணிப்பட்டம் பெற்றவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றிய காலத்தில் ஈழத்து தமிழ் நாவல்கள் என்ற விடயத்திலே ஆய்வு செய்து கலை முதல்வர் பட்டம்பெற்றவர். இவ் வாய்வேடு 1979 இல் முத்தமிழ் வெளியீட்டுக் கழகத்தால் ஈழத்துத்தமிழ் நாவல் என்ற பெயரில் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. குறிஞ்சிக்குமரன் மீது ஆற்றுப் படைபாடி தங்கப்பதக்கம் பரிசில் பெற்றவர். இது கவிதைத்துறையில் அவருக்கிருக்கும் ஈடுபாட்டிற்குச் சான்று பகர்கின்றது. 1985ஆம் ஆண்டில் தமிழர் யாப்பு வளர்ச்சி என்னும் ஆய்வேட்டினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சமர்ப்பித்து கலாநிதிப்பட்டம் பெற்றவர்.1978ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் உதவிவிரிவுரையாளராக இணைந்து பேராசிரியராகவும், தமிழ்த்துறைத் தலைவராகவும் பணியாற்றியவர். பண்டைய இலக்கியம், நவீன இலக்கியம், தத்துவம், யாப்பியல், அணியியல், திறனாய்வு, ஈழத்துத் தமிழ் இலக்கியம் என்பவற்றில் ஈடுபாடு கொண்டவர்.இருபதுக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடுகள் (யாழ்ப்பாணம்-1974,மதுரை-1981) அனைத்துலக இந்துமாநாடு-கொழும்பு-1982,மொழியியல் பண்பாட்டு ஆய்வரங்கு-புதுச்சேரி-1992, ஞாலத்தமிழ் மாநாடு-மதுரைப் பல்கலைக் கழகம்-1992,பாரதி ஆய்வகக் கருத்தரங்கு-காந்திகிராம பல்கலைக்கழகம் திண்டுக்கல்-1983 முதலியன இவர் கலந்து கொண்ட உயர்நிலை மாநாடுகளாகும்.

ஈழத்திலும், தமிழகத்திலும் சிறந்த திறனாய்வாளரான பேராசிரியர் கைலாசபதியின் மாணவராக பல்கலைக் கழகத்தில் விளங்கிய இவர் கைலாசபதியின் விமர்சனப் போக்கை மதிப்பிடும் வகையில் தமிழ் ஆய்வியலில் கலாநிதி க.கைலாசபதி என்ற ஆய்வு நூலை 1999 ஆம் ஆண்டு சென்னை சவுத்விஷன் வெளியீடாக வெளியிட்டுள்ளார். நல்லையாதீனம் இவருக்கு வித்தியா பூஷணம் என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

## பேராசிரியர் கலாநிதி நாகலிங்கம் சண்முகலிங்கன்



நகுலகிரி தென்மயிலை தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தற்பொழுது அம்பலவாண பாதை பலாலி வீதி திருநெல்வேலி என்னும் முகவரியில் வசித்து வருகின்றார். பல்துறை நிபுணரான இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் பேராசிரியராகவும், சமூகவியல் அரசறிவியல் துறையின் தலைவராகவும், பண்பாட்டியல் முதுகலைமாணி கற்கை நெறியின் கலைத்திட்ட வடிவமைப்பாளராகவும், இணைப்பாளராகவும் பணியாற்றியவர். சேவையின் நிறைவால் உயர்வு பெற்று துணைவேந்தராகத் தற்பொழுது பணியாற்றி வருகின்றார். உலகப் புகழ்பெற்ற மானிடவியல் பேராசிரியர் கணநாத்ஒபயசேகர அவர்களின் வழிகாட்டலில் இவர் மேற்கொண்ட கலாநிதிப்பட்ட ஆய்வு A New Face of Durga என்னும் தலைப்பில் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவரது தந்தையின் பெயரிலமைந்த நாகலிங்கம் நூலாலயத்தினூடாக சமூகவியல் கோட்பாட்டு மூலங்கள், அமைப்பும் இயங்கிலும், என் அம்மாவின்கதை, என் அப்பாவின் கதை போன்ற நூல்கள் வெளியிடப்பட்டுள்ளமை. திரைப்படம், தொலைக்காட்சி ,படைப்பிலக்கியம், ஆக்கஇசை, கவிதை, நடிப்பு, போன்ற பலதுறைகளில் ஈடுபாடும் பெருவிருப்பும் கொண்டவர். தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் மாணவனாக இருந்த காலத்தில் இவரது கலைச் செயற்பாடுகள் ஆரம்பித்தன. கல்லூரி சார்பாக தயாரிக்கப்பட்ட குருதட் சனை, மயானகாண்டம், வன்தொண்டன் ஆகிய நாடகங்களில் நடித்துப் புகழ் பெற்றதுடன், அகில இலங்கை ரீதியில் சிறந்த நடிகருக்கான தங்கப்பதக்க விருதுகளையும் பெற்றுக் கொடுத்தன. மேலும் நாவலர்

சபை, ஈழநாடு பத்திரிகை ஆகிய நிறுவனங்கள் நடத்திய நாடளாவிய பேச்சுப் போட்டியிலும் முதற்பரிசாக தங்கப்பதக்கங்களை பெற்றுக் கொண்டவர். இலங்கை வானொலி ஒலிபரப்புக்கலையில் எஸ்.கே. பரராஜசிங்கம் அவர்களோடு இணைந்து நாட்டாரிசை, ஆக்க இசைகளில் ஈடுபட்டவர். இவரால் உருவாக்கப்பட்ட ஆக்க இசையான மானசி, ஞானக் குயில், உயிரின்குரல், கண்ணீரைத் துடைத்துக்கொள்போன்றன பல இடங்களில் மேடை நிகழ்வுகளாக அரங்கேற்றப்பட்டன. கட்டுவன் பிரதேசத்தில் வழக்கில் இருந்த வசந்தன் கூத்துப் பாடல்களை எஸ்.கே. பரராஜசிங்கம் அவர்களுடன் இணைந்து ஒலிப்பதிவு செய்து வானொலியில் ஒலிபரப்பியவர். ஈழத்து தமிழ்த்திரைப்படத்துறையில் மாமியார் வீடு திரைப்படத்தின் இணை இயக்குனராகவும், பாடலாசிரிய ராகவும், நடிகராகவும் பணியாற்றியவர். மரபுரிமைச் சொத்துக்களின் பாதுகாப்பு - முகாமைத்துவம், நலிந்த கிராமங்களின் சமூக மேம்பாடு தொடர்பான செயற்பாடுகளில் முன்னின்று உழைத்து வருபவர். பல்கலைக்கழக வெள்ளிவிழா காலவேளை மட்டக்களப்பு புன்னைச் சோலை அம்மன் சடங்கு பற்றிய காட்சிசார் மானிடவியல் விபரண படமொன்றைத் தயாரித்து வெளியிட்டவர். சந்தனமேடை, நாகரிகத்தின் நிறம் ஆகிய கவிதை நூல்களையும் தொல்சீர் சமூகவியல் சிந்தனை யாளர் பண்பாட்டின் சமூகவியல்,சமூகமாற்றத்தில் பண்பாடு போன்ற நூல்களின் ஆசிரியராகவும் இலங்கை இந்திய மானிடவியல் என்னும் நூலின் இணையாசிரியராகவும் சான்றோன் எனக்கேட்ட தாய் என்ற சிறுவர் நாவலையும் எழுதி ஆக்க இலக்கியத்தில் ஈடுபட்டவர். நாக ரிகத்தின் நிறம் என்ற நூல் வடக்குக்குகிழக்கு மாகாண சிறந்த இலக்கிய நூலுக்கான பரிசினைப் பெற்றமையும்,சமூகவியல் கோட்பாட்டு மூலங் கள் உயர்கல்விக்கான வடமாகாண சிறந்த நூற்பரிசையும், சிறுவர் நாவ லான சான்றோன்எனக்கேட்டதாய்-யுனெஸ்கோ அரசகருமமொழித் திணைக்கள விருதுகளைப் பெற்றமையும், தோதன்ன அமைப்பினரால் சிங்கள மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. தன் தாயாரின் பெயரிலமைந்த நகுலேஸ்வரி பண்பாட்டு மேம்பாட்டு நிறுவன வெளியீடாக என் அம்மா என்ற இறுவட்டினை வெளியிட்டுள்ள இவர் தனது கல்விப்பணியுடன் கலையாக்கப் பணிகளிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றமை வலிகாமம் வடக்கு பிரதேசம் பெற்றபேறாகும்.

## திருமதி கோகிலாதேவி மகேந்திரராஜா



1950-11-17 ஆம் நாள் விழிசிட்டி தெல்லிப்பளையில் பிறந்தவர். தற்பொழுது கொழும்பில் வசித்து வருகின்றார். ஆரம்பத்தில் சிறுகதை எழுத்தாளராக அறிமுகமானவர்.காலப்போக்கில் ஆக்கஇலக்கியப் புலமையாளராக முகிழ்த்தமை யாவரும் அறிந்ததே. சிறுகதை, மேடைப்பேச்சு, நாவல் விமர்சனம், நாடகம், நடிப்பு, நெறியாளுகை போன்ற பலதுறைகளில் தடம்பதித்தவர். இவர் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் மாணவியாக இருந்த காலத்தில் ஆசிரியர்செ.கதிரேசர்பிள்ளை அவர்களின் வழிகாட்டலில் பெற்ற நாடகப் பயிற்சியால் இன்று ஓர் நாடக விற்பன்னராகத் திகழ்தலும் குறிப்பிடத் தக்கது. நாடகத்துறையில் 30 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் உடைய இவர் கிரேக்கத்தின் தொல்சீர் அரங்கு என்ற நூலையும் பல்வேறு நாடகப்பிரதிகளையும் எழுதியவர். எங்கேநிம்மதி என்ற உளவியல் நூலையும், மனிதசொரூபங்கள், முரண்பாடுகளின் அறுவடைகள், பிரசவங்கள், வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம், முகங்களும் மூடிகளும், துயிலும் ஒரு நாள் கலையும், தூவானம் கவனம்,போன்ற பல சிறுகதைத் தொகுதி நூல்களையும், கோலங்கள் ஐந்து என்னும் ஐந்து நாடகங்களடங்கிய நாடகத்தொகுப்பு நூலையும், தங்கத்தலைவி என்னும் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது வரலாற்று நூலையும் வெளியிட்டவர். ஆசிரியராக, அதிபராக, உதவிக் கல்விப்பணிப்பாளராக கடமையாற்றி ஓய்வு பெற்றவர். தெல்லிப்பளை கலை இலக்கியக் கழத்தின் செயலாளராகப் பொறுப்பேற்று யாழ் பல்கலைக்கழக முதலாவது துணைவேந்தரான பேராசிரியரியர் சு.வித்தியானந்தன், சைவப்புலவர் சு.செல்லத்துரை, அநு.வை.நாகராஜன்,கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை குறமகள் என அழைக்கப்படும் இராமலிங்கம் வள்ளிநாயகி ஆகியோருடன் இணைந்து கலை இலக்கியக்களத்தினை முன்னேற்றப் பாதையில் இட்டுச்சென்ற பெருமைக்குரியவராவார். இன்னும் இக்களத்தின் பெருமைக்குரிய கலைப்பேரரசு ஏ.ரீ.பொன்னுத்துரை அவர்களின் மணிவிழா மலரான அறுபது வயது இளைஞர் ஏ.ரீ.பொ என்ற அம் மலரின் பின் அட்டையில் ஏ.ரீ.பொ. அவர்களின் மாணவி என்றே தன்னைக் குறிப்பிட்டுள்ளமையும் போற்றுதற்குரியதாகும். மேலும் போர்க்காலச் சூழலில் வாழ்ந்த மக்களிடையே ஏற்பட்ட மன அழுத்தங்களை குறைக்கும் வகையில் உளவியல் சிந்தனைகள் மூலம்

அவர்களின் மனத்தாக்கங்களை அகற்றுவதிலும், அது பற்றிய போதனைகளை அடுத்தவர்களுக்குக் கற்பிப்பதிலும் சிறந்து விளங்கிய உளவியலாளராவார். தற்பொழுது வானொலியிலும், தொலைக்காட்சியிலும் சொற்பொழிவாற்றி வருவதுடன் கொழும்புத் தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து இலக்கியப் பணியாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது. வட இலங்கை சங்கீத சபையின் நாடகமும் அரங்கியலும் ஆசிரியர் தராதரப் பரீட்சையில் சித்தி பெற்று நாடகக் கலாவித்தகர் என்ற பட்டத்தினையும், வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையினர் கலைச்சுடர் என்ற விருதுகளுடன், இலக்கியகலாவித்தகர் போன்ற பல விருதுகள் வழங்கி பெருமைப்படுத்தப்பட்டவர். சிறந்த சிறுகதை நூலுக்கான சாகித்திய மண்டலப்பரிசினையும், வடக்கு மாகாண சிறந்த இலக்கிய நூற்பரிசினையும் பெற்ற ஆக்க இலக்கியப் புலமையாளராவார்.

**பசுபதி உதயகுமார்**



1964-05-06 ஆம் நாள் அளவெட்டி என்ற இடத்தில் பிறந்தவர். சிறுகதை, நாடகம், கவிதை போன்ற துறைகளில் ஆர்வமும் தொடர் செயற்பாடும் கொண்ட இவர் அ.செ.முருகானந்தன், பேராசிரியர் கா.சிவத்தம்பி ஆகியோரிடம் இத்துறையிலான பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டதாக பெருமிதத்துடன் தனது நன்றி கலந்த உணர்வுளை பகிர்ந்து கொள்ளும் பண்புடையவர். 1980 ஆம் ஆண்டில் இருந்து கலைப் பணியாற்றி வரும் இவர் மேடை நாடகங்கள், வானொலி நாடகங்கள் பலவற்றை எழுதியுள்ளதுடன் திறமைவாய்ந்த கலைஞர்களைக் கொண்டு அரங்கேற்றியுமுள்ளார். யாழ்ப்பாணத்துப் பத்திரிகைகளில் சிறுகதை, கவிதை போன்றனவற்றையும் எழுதிவருபவர். 1999 ஆம் ஆண்டு வானொலிநாடகப் பிரதியாக்கத்திற்காகவும் சிறுகதைக்காகவும் ஜனாதிபதி விருது பெற்றவர். 2006,2007,2008,2009 ஆம் ஆண்டு கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட தேசிய கலை இலக்கியப் போட்டிகளில் தேசியமட்டப் போட்டிகளில் சிறுகதை, கவிதை ஆகியவற்றில் தேசிய விருதுகள் பெற்றவர். அரச ஊழியர் ஆக்கத்திறன் போட்டியில் சிறுகதைக்காக முதலாம் பரிசு பெற்றவர். சிறந்த வானொலி நடிகரும் 50க்கு மேற்பட்ட வானொலி நாடகங்களை எழுதி நடித்ததுடன் சிறிதுகாலம் வானொலி நாடகத் தயாரிப்பாளராகவும் பணியாற்றியவர்.

## வேலுப்பிள்ளை அம்பிகைபாகன்



1965-07-16 ஆம் நாள் மயிலிட்டி வடக்கு, காங்கேசன் துறையில் பிறந்தவர். தற்பொழுது தற்காலிகமாக தேவாலய வீதி, உடுப்பிட்டி என்ற முகவரியில் வசித்து வருகின்றார். வடமராட்சி கல்விவலய முறைசாராக் கல்வி செயற்திட்ட அலுவலராகக் கடமையாற்றி வரும் இவர். விமர்சகராக, திறனாய்வாளராக, வரலாற்றாசிரியராக, நூலாசிரியராக, பதிப்பாளராக, சிற்பியாக, நிர்மாண ஸ்தபதியாக, கட்டக்கலைஞனாக எனப்பன்முகம் கொண்ட இவர் மயிலிட்டி கதிர்காம ஆச்சாரியார், மாவிட்டபுரம் சுப்பிரமணியம் பழனர் ஆச்சாரியார், நீர்வேலி ஆறுமுகம் தில்லையம்பலம் ஆச்சாரியார் ஆகிய மூன்று குடும்பங்களின் வழித்தோன்றலாகிய அம்பிகைபாகன் இலங்கை இந்து கலை, கல்வி உலகில் இயங்கும் ஒரேயொரு சிற்பவியலாளராக பரிணமித்து வருபவர் என்ற பெருமைக்குரியவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுதத்துவ மாணி (M.Phil) பட்டம் பெற்ற இவர் யாழ்ப்பாணத்து இந்து ஆலயங்களின் தேர்ச்சிற்பங்கள் பற்றி ஆராய்ந்து பல நூல்களை வெளியிட்டுள்ளார் கலாகேசரியும் தேர்ச்சிற்பக்கலையும், செல்வச்சந்நிதி தேர்த்திறன், யாழ்ப்பாணத்து இந்து ஆலய தேர்க்கலை வளர்ச்சி, மகாஸ்தபதி கோவிந்தராஜ"வின் தேர்த்திறன் போன்ற நூல்களையும், சக்தியின் வடிவங்கள், இந்து தெய்வ வடிவங்கள், ஆகிய சமய நூல்களையும், முறைசாராக் கல்வியில் புதிய பயிற்சி நெறிகள் என்ற தொழில் சார்ந்த நூல் ஒன்றினையும் வெளியிட்டுள்ளார். தமிழகத்திலும், யாழ்ப்பாணத்திலும் பணியாற்றிய ஸ்தபதிகள் பற்றிய கள ஆய்வினை மேற்கொண்டதுடன் உலகப்புகழ்பெற்ற ஆவண நூலகமாகிய தஞ்சாவூர் சரஸ்வதி மகாலில் தேர் இலக்கண நூலாகிய மகோத்திர ரதமாலிகா என்ற சமஸ்கிருத ஏட்டுப்பிரதியை ஆய்விற்குட்படுத்தி அதனை பதிப்பிப்பதற்கான அவசியத்தினை முன்மொழிந்து அதற்கான உந்துதலை ஏற்படுத்தியமைக்காக அந்நிறுவன நிர்வாகிகளின் பாராட்டையும் அன்பையும், மதிப்பையும் பெற்றவர். இவரது பணிகளைப் பாராட்டி விஸ்வமதுரப் பிரம்மாச்சார்ய என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப் பெற்றவர்.

## பாவலர் அருளம்பலம் துரையப்பாப்பிள்ளை



1872.10.20 ஆம் நாள் தெல்லிப்பளையில் சைவ சமயியாகப் பிறந்தவர். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் பயின்றபோது கிறீஸ்தவராகிப் பின்னர் 1910 ஆம் ஆண்டு மீண்டும் சைவத்திற்கு மாறியவர். யூனியன் கல்லூரியில் ஆசிரியராகவும், அதிபராகவும் பணியாற்றிய பின்னர் 1910 ஆம் ஆண்டு மகாஜனா என்ற உயர் நிலைப்பள்ளியை நிறுவி அதன் வளர்ச்சியில் தன்னை அர்ப்பணித்தவர். இசைநாடகம், படைப்பிலக்கியம், சொல்லாடல், கவிதை ஆகிய துறைகளில் ஆற்றலுடையவர் பாவலரவர்கள் ஈழம் பெற்றெடுத்த புதுமைக் கவிஞர்களுள் ஒருவர். அவரது புகழை எமது நாடு இன்னமும் அறியவில்லை. அறியும்போது தேசியக்கவிஞர் வரிசையில் முதலிடம் பெறுவார் என்பதில் ஐயமில்லை என 1970-06-24 ஆம் ஆண்டு தினகரன் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருந்தமை மனங்கொள்ளத் தக்கது. கலாநிதி செ.வேலாயுத பிள்ளையவர்கள் தனது ஒப்பியல் ஆய்வில் பாரதி தமிழ் நாடு தந்த செல்வம். அந்தப்பாரதியைப் போலவே கவிதை உள்ளம் படைத்த ஒருவர் ஈழநாட்டிலே-யாழ்ப்பாணத்திலே ஏறத்தாழ ஒரே காலப் பகுதியில் விளங்கினார். அவர் தான் பாவலர் துரையப்பா பிள்ளை. இற்றைக்கு எழுபது ஆண்டுகளுக்கு முன்னே பிள்ளையவர் களின் பதங்களும், கீர்த்தனைகளும், கும்மிகளும், பிற பாடல்களும் யாழ்ப்பாணத்திலே பிரசித்தி பெற்றிருந்தன. அவரது கன்னிப்படைப்பான இதோபதேச கீதரச மஞ்சரி என்னும் நூல் 1901 ஆம் ஆண்டில் வெளி வந்தது. பாரதியாரின் முதற்கவிதையாகிய தனிமை இரக்கம்1903-4இல் வெளிவந்தது.இதற்கு இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே துரையப்பாபிள்ளையின் கீதரசமஞ்சரி வெளிவந்துவிட்டது. என 1972இல் மகாஜனக்கல்லூரியால் வெளியிடப்பட்ட பாவலர் துரையப்பாபிள்ளை நூற்றாண்டு விழாமலர் பக்கம் 65 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. பாவலர் சிவமணிமாலை,யாழ்ப்பாண சுதேசக்கும்மி, எங்கள்தேசநிலை என்பவற்றுடன் பல தனிப்பாடல்களையும் பாடியுள்ளார். 1960 ஆம்

ஆண்டு மேற்கூறிய அனைத்தினதும் தொகுப்பாக சிந்தனைச்சோலை என்ற பெயரில் மகாஜனக்கல்லூரியின் பொன்விழாநினைவாக வெளி யிடப்பட்ட மலரில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி நாடக ஆசிரி யராகவும் திகழ்ந்திருக்கின்றார். இவரால் எழுதப்பெற்ற சகல குண சம்பன்னன் என்ற நாடகம் குறிப்பிடத்தக்கது. இவரால் நிறுவப்பெற்ற மகாஜனக் கல்லூரி இப்பிரதேசத்திற்கு எண்ணில்லா அறிஞர்களைத்தந்து தலை நிமிர்ந்து நிற்கின்றது எனக்கூறின் அதுமிகையாகாது. இவருடைய கனவை நினைவாக்கும் வண்ணம் தந்தை மகற்காற்றும் உதவி அவயத்து முந்தியிருப்பச்செயல் என்ற குறளின் வழியாக மகாஜனக் கல்லூரியை இன்றைய நிலைக்கு உயர்த்திய பெருமை அவரது மகன் மகாஜன சிற்பி தெ.து.ஜெயரத்தினம் என்பதும் குறிப்பிடத்தக்கது. 1924-06-24 ஆம் நாள் வாழ்வுலகை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

## வித்துவசிரோன்மணி பிரம்ம ஸ்ரீ.சி.கணேசையர்



1878-04-01 ஆம் நாள் புன்னாலைக்கட்டுவனில் பிறந்து வருத்தலைவிளான் மருதடி விநாயகர் ஆலயத் தடியில் ஆச்சிரமம் அமைத்து வாழ்ந்த மகான்.இலங் கைத் தமிழ்ப்பாரம்பரியத்தின் கொடுமுடி உலகம் உவப்பத் தொல்காப்பியத்திற்குத் தெளிவுரை தந்த வருத்தலை விளானில் இருந்த தமிழ்க்கொட்டிலில் வித்துவசிரோன்மணி அவர்கள் தட்சணாமூர்த்தியாக இருந்து தமிழில் இலக்கணங்களைக் கற்பித்து வந்தவர். இலக்கிய, இலக்கணத்துறையில் மாபெரும் முனிவரா கத்திகழ்ந்து பல பேரறிஞர்களை உருவாக்கியவர். தமது பெரியதந்தை யாராகிய மறைத்திரு கதிர்காம ஐயரவர்களின் புன்னாலைக்கட்டுவன் சைவப்பள்ளிக்கூடத்தில் எட்டாம் வகுப்புவரை சிறப்பாகக்கற்று இலக் கியம், இலக்கணம், சமயம், சரித்திரம், கணிதம் ஆகிய பாடங்களிலே முதன்மை பெற்று தேர்வில் சிறப்புச்சித்தி பெற்றார். இப்பாடசாலையில் வித்துவசிரோன்மணி பொன்னம்பலபிள்ளையவர்கள் இப்பரீட்சைக்குப் பொறுப்பாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. பின்னர் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புல வரிடம் வடமொழியைப் பயிலும் வாய்ப்பும் பெற்றார். 1899ஆம் ஆண்டு வண்ணை விவேகானந்த வித்தியாசாலையில ஆசிரியப்பணியை

ஆரம்பித்தவர். பின்னர் புன்னாலைக் கட்டுவன், வசாவிளான், குரும்ப சிட்டி, தையிட்டி, நயினாதீவு, சுன்னாகம் பிராசீனப் பாடசாலையிலும் கற்பித்தவர்.1921-1932வரையில் யாழ்ப்பாணம் ஆரிய திராவிடபாஷா பிவிருத்திச் சங்கத்தில் பிரவேசபண்டித, பாலபண்டித பண்டித வகுப்பு மாணவர்களுக்கு தொல்காப்பியம், கல்வி போதிக்கும் பேராசிரியராகவும் பணியாற்றியவர்.தொல்காப்பிய ஆராய்ச்சிக் கட்டுரைகள், தமிழகச் செந்தமிழ், இரகுவம்சக்கட்டுரைகள், சிறுபாணாற்றுப்படை, சிந்தாணி கம்பராமாயண ஆராய்ச்சிக்கட்டுரைகளையும் எழுதியவர். இரகுவம்ச உரை, தொல்காப்பிய உரைவிளக்கக்குறிப்பு, மருதடிவிநாயகர் பிரபந்தம், குமாரசுவாமிப்புலவர் வரலாறு, குசேலர் சரித்திரம், மருதடி விநாயகர் இருபா இருபது, ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம், மருதடி விநாயகர் அந்தாதி, கலித்துறை ஊஞ்சல் போன்ற அரிய நூல்களை வெளியிட்டவர். ஈழகேசரி, செந்தமிழ், கலாவல்லி ஆகிய பத்திரிகைகளில் கட்டுரைகளை எழுதியவர். இவரின் கல்விப்பணியின் பெறுபேறாக நல்ல பல முத்துக்கள் நாட்டில் திகழ்ந்தாலும் இவரது அரும்பணிக்குச் சான்றாக அமைந்த பெரும் முத்தாக அமரர் இலக்கணவித்தகர், வித்துவசிரோன்மணி இ.நமசிவாயதேசிகர் அவர்களைக் குறிப்பிடலாம். இதுவும் “ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறுபதம்” என்ற வகையில் அமையும் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரது மாணவரான ஈழகேசரிப் பொன்னையா தமது திருமகள் அழுத்தகத்தில் தொல்காப்பிய உரைக்குறிப்புக்களை பதிப்பித்தவர். அந்தவகையில் 1935 இல் தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியார் உரை, 1938 இல் தொல்காப்பியம்-சொல்லதிகாரம் சேனாவரையார் உரை, 1943 இல் தொல்காப்பியம்-பொருளதிகாரம் இரண்டாம் பாகம் பின்னான் இயல்களும் பேராசிரியம்,1948இல் தொல்காப்பியம் - பொருளதிகாரம் முதலாம்பாகம் முன்னைந்து இயல்களும் நச்சினார்க்கினியம் ஆகிய நூல்களை பதிப்பித்து வெளி யிட்டவர். மேக தூதக்காரிகை, அகநாநூறு,நாணிக்கண்புதைத்தல் என்ற ஒருதுறைக் கோரிக்கைப்புத்திரை முதலியவற்றையும் எழுதியுள்ளார். அத்துடன் ஈழத்துத் தமிழ்ப்புலவர்வரலாறுகளை ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர்சரிதம் என்ற தனிப்பெரும் நூலாக வெளியிட்டுள்ளார். யாழ்ப்பாணத்தமிழரசர் காலத்தில் எழுந்த அரசகேசரியின் இரகுவம் சத்திற்கு 1915இல் மிக விரிவான உரை எழுதி வெளியிட்டவர். மாணவர்க்

கேற்ற உரைநடை நூலாக குசேலர்சரிதம் என்ற நூலையும் 1966இல் குமாரசுவாமிப்புலவர் சரித்திரம் என்ற நூலையும் எழுதியவர். இவரது இலக்கணக்கட்டுரைகள், விமர்சனக் கட்டுரைகள் பல தமிழ் நாட்டு செந்தமிழ் பத்திரிகையில் வெளிவந்துள்ளன. ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதுதல், சிறுவர்களுக்கான எளியநடை நூல்களை எழுதுதல்.இலக்கிய வாழ்க்கை வரலாற்று நூல்களையாத்தல், தொல்லிலக்கியங்களுக்கு உரைவகுத்தல், இலக்கண நூல்களை உரைவிளக்கக் குறிப்போடு பதிப்பித்தல், செய்யுளிலக்கியம் படைத்தல் முதலான கல்வித்தொண்டில் தன்னிகரில்லாத்தமிழ்ப் பேரறிஞராக விளங்கியவர். மேலும் இவர்தம் பணிகளை நினைத்து என்றும் வணக்கத்திற்குரியவர் என்ற வகையில் புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை சித்திவிநாயகர் ஆலய முன்ற லிலும், வருத்தலைவிளான் கற்பகவிநாயகர் ஆலய முன்றலிலும் சிலை எழுப்பப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ள இம் மகான் 1958-11-08 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

## சங்கம்வளர்த்த பிரம்மஸ்ரீ தியாகராசக்குருக்கள் சதாசிவஐயர்



1882.09.22ஆம் நாள் அளவெட்டி பெருமாக்கடவை யில் பிறந்தவர். அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியையும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் உயர்தரக் கல்வியையும் கற்றவர். கல்கத்தாப் பல்கலைக்கழகத்தில் B.A பரீட்சையில் சித்தியெய்தி பின்னர் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராக மல்லாகம் ஆங்கிலப் பாடசாலையில் தலைமையாசிரியராகப் பணியாற்றியவர். 1910ஆம் ஆண்டளவில் ஆங்கில இலக்கண புத்தகம் ஒன்றினை எழுதி வெளியிட்டவர். பின்னர் கல்விப்பரிசோதகராகவும் பணியாற்றியவர். மாவட்டக்கல்வி அதிகாரியாக வட,கீழ் மாகாணங்களில் சிறந்த கல்விச் சேவையாற்றியவர். தமிழ், ஆங்கிலம்,சமஸ்கிருதம் ஆகிய மும்மொழி களிலும் பாண்டித்தியம் பெற்றிருந்தவர். மதுரை தமிழ்ச் சங்கம் போல் யாழ்ப்பாணத்திலும் ஆரிய திராவிடபாஷா அபிவிருத்திச் சங்கத்தினை நிறுவியது மட்டுமல்லாது அதன் வளர்ச்சியிலும் பெரும்பங்காற்றியவர். சங்கத்தின் செயலாளராகப் பல ஆண்டுகள் பணியாற்றி தமிழ், சமஸ் கிருதம் ஆகிய இரு மொழிகளிலும் பிரவேசபண்டித, பாலபண்டித,

பண்டித வகுப்புப் பரீட்சைகளை ஒவ்வொரு வருடமும் ஒழுங்காக நடத்தி பல பண்டிதர்களை உருவாக்கியவர். இரு மொழிகளினதும் வளர்ச்சிக் காக சுன்னாகத்தில் பிராசீன பாடசாலையை நிறுவி தமிழையும், வட மொழியையும் முறையாகப் பயிலவைத்தவர். இப்பாடசாலையில் வித்து வான் கணேசையர் தலைமையில் தமிழும், வியாகரணசிரோன்மணி சீத்தாராம சாஸ்திரிகள் தலைமையில் சமஸ்கிருதம் படித்த பலர் பண்டித ரானார்கள்.காளிதாசன் சமஸ்கிருதத்தில் பாடிய மேகதூதம், இரு சங்காரம் ஆகிய காவியங்களை தமிழில் பாடியவர். சங்கமிருந்து தமிழா ராய்ந்த மதுரையம்பதியிலே பெருமக்கள் பலர் நான்காம் சங்கமாக மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவித்தமிழிற் பரீட்சைகள் நடத்தி வருவதைக் கண்ணுற்ற, இவ்வீழமண்டலத்திலும் அப்படி ஒரு சங்கத்தை நிறுவினாலென்ன என்று யோசித்து, முனைந்து, முயற்சி செய்து வெற்றியும் கண்டவர் தான் சதாசிவ ஐயரவர்கள். ஊருக்கொரு பண்டிதரும் மேடைக்குப் பல பேச்சாளர்களுமாக நிரம்பியிருக்கும் இந்தவளர்ச்சிக்குவித்திட்ட பெருமை ஐயரவர்களையே சேர்ந்தது.கரவை வேலன் கோவை, ஐங்குறுநூறு, வசந்தன் கவித்திரட்டு ஆகிய நூல்களை அவர் அரிதில் முயன்று வெளியிடவும் செய்தார். பகுதி வித்தியாதரிசகராக இருந்த ஐயரவர்கள், இளம் மாணவர்களது இடர்பாட்டை நீக்கத் தமிழ் மொழிப்பயிற்சியும் தேர்ச்சியும் என்ற அரியநூலை வெளியிட்டு உதவி னார். தேவிதோத்திரமஞ்சரி, இருது சங்காரகாவியம் இவற்றைக் கவிதை உருவத்திலே ஆக்கினார்.1950.11.27 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.


## புலவர்மணி சுப்பிரமணியபாரதியார் நவநீதகிருஸ்ணபாரதியார்



1889.03.01 ஆம் நாள் சோழவள நாட்டுத்திருக்கண்ண புரத்தில் பிறந்தவர்.இவரை இலங்கையின் யாழ்ப் பாணம்மாவையம்பதி சுவீகரபுத்திரனாக்கிக் கொண் டது. குருகுல மரபிலே தமிழை முறையாகக் கற்றுத் தேர்ந்து தமிழ்ப் பணியாற்றிய பெருந்தகை. உலகியல் விளக்கம் என்ற கவிதை நூலின் மூலம் உலகின் இயல்பு எவ்வாறு அமைய வேண்டும், எது செய்யலாம்,எது செய்யக்கூடாது என்ற ஒழுக்க நெறிகளை அகவற்பாவில் கூறியுள்ளார்.மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசகம் முழுமைக்கும் விரிவான விளக்கவுரை எழுதி வெளியிட்

டுள்ளார். மாணவர்களுக்கான இலக்கண நூலை பாரதீயம்-1, பாரதீயம்-2 என பகுதிகளாக வெளியிட்டவர். பழைய குருகுல மரபிலே தமிழை முறையாக கற்றுத்தேறி, சங்கச்செய்யுள் நடையிற்பாக்கள் ஆக்கும் புலவர் பரம்பரையில் வந்தவர்களான சேர் பொன். இராமநாதனின் மதிப்புக்குப் பாத்திரராகிய இவர்.இராமநாதன் கல்லூரியிலும், பரமேஸ்வராக் கல்லூரியிலும் கடமையாற்றினார். 1922 ஆம் ஆண்டு அவர் வெளியிட்ட உலகியல் விளக்கம் என்னும் செய்யுள்நூல் பாவலர், நாவலர் என்போரின் பெருமதிப்பினைப் பெற்றுப் பாரதியாரின் பெருமைக்கு நிலைக்களனாக விளங்குகின்றது. அவரால் வெளியிடப்பட்ட திருவாசக விரிவுரை அவரது புலமைமிக்க சங்கநூல் ஆட்சியை விளங்குந் தன்மையதாக மிளிர்கின்றது. பாரதியாரவர்கள் தமிழறிஞர் மாத்திர மன்றி, சுதந்திர நாட்டமுடைய தீரபுருடராகவும் விளங்கினார். காந்திய டிகளின் கொள்கைகளைப் பின்பற்றி அவர் எழுதிய காந்தி வெண்பா என்ற அச்சு வாகனமேறாத நூல் அவர் உள்ளத்தின் பிரதிபலிப்பாகும். பறம்புமலைப்பாரி, செழுங்கதிர்ச் செல்வம், திருவடிக் கதம்பம், இலங் கைத் தலைவர்களைப் பற்றியபாடல்கள் இவரது புலமையின் பெறு பேறுகள். சுன்னாகம் இராநாதன் கல்லூரி, திருநெல்வேலி பரமேஸ் வராக்கல்லூரி, இராமநாதன் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை ஆகியவற்றில் தலைமைத் தமிழாசிரியராகப் புகழ்பெற்றவர். இவருக்கு ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச்சங்கம் புலவர்மணி என்னும் பட்டமளித்துக் கௌர வித்தமை குறிப்பிடத்தக்கது. 1954ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

## சி.சுவாமிநாதன்



1891-06-10 ஆம் நாள் மயிலிட்டியில் பிறந்தவர்.படைப் பிலக்கியத்தில் சிறந்த ஆற்றல் உடையவர். பேச்சாளர் கலாரசிகன், சிறந்தகல்வியியளாளர், கூட்டுறவியக்கம், பிரித்தானியசக்கராதிபத்தியத்தின் சரித்திரச்சுருக்கம் ஆகிய நூல்களை வெளியிட்டவர். கோப்பாய் சைவாசிரியர் கலாசாலை யின் விரிவுரையாளராகப் பணிபுரிந்தவர். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மொழியியல் துறையில் பேராசிரியராகக் கடமையாற்றும் சுசீந்திரராசா வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் தலைவராகக் கடமை யாற்றிய அமரர் ஸ்ரீ பாஸ்கரன் ஆகியோரது தந்தையாருமாவார்.

குருகவி ம.வே.மகாலிங்கசிவம்



மாவிட்டபுரத்தைச் சேர்ந்த ம.வே.மகாலிங்கசிவம் அவர்கள் சிறந்த தமிழறிஞர் செய்யுள்யாப்பதில் வல்லவர். 1892ஆம் ஆண்டு மட்டுவிலில் பிறந்தவர். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் தமிழ் விரிவுரையாளராக இருந்தவர். அக்காலத்தில் விழாமலர்களிலும், இதழ் மலர்களிலும், பாராட்டு விழாக்களிலும் இவரது பாடல்கள் சிறப்பாக இடம் பெற்றன. இவரை குருகவி என அறிஞர்கள் அழைப்பர். கற்பனைச் சுரங்கம் எனப் போற்றப்பட்டவர். தமிழகத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் சைவப்பிரகாச வித்தியாசாலையில் அதிபராக இருந்தவரும், ஈழத் தமிழர்களின் வரலாறு கூறும் ஈழமண்டல சதகம் என்னும் ஆசிரியரும், புகழ்பெற்ற உரையாசிரியருமான மட்டுவில் ம.க.வேற்பிள்ளை அவர்களின் புதல்வனுமாவார். இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப் பிள்ளையவர்கள் இவரைப்பற்றித் தன் இலக்கியவழி நூலில் (1994 பக்கம்-91) பின்வருமாறு குறிப்பிடுகின்றார். கவிசமயம் என்று ஒரு சமயம் சொல்லுவார்கள் அந்தச்சமயம் சைவசமய வகைகளைச் சேர்ந்தது. கவிஞன் ஒருவன் ஓர் உணர்ச்சி கை வந்த பிறகு அதன் பரிபக்குவ பருவம் நோக்கி நன்றாகக்கனிந்து விட்டது என்று கண்ட பொழுது ஏற்ற சந்தர்ப்பங்கள்.பாத்திரங்களை நாடி அதனை இன்னும் இன்னும் பொறாது பொறுக்க முடியாது. கருவுயிர்த்தற்கு சொல்லுருவத்திற் கண்டுகளித்தற்கு முகஞ்செய்கின்றான். அம் முகத்திற்கு கவிச்சமயம் என்று பெயர் வைத்துக்கொள்வோம்.அப்படி ஒரு சமயம் மகாலிங்கசிவத்திற்கு இல்லை. எந்தச்சமயமும் அந்தக்கவிஞருக்கு கவிசமயமே "இருடி கருப்பத்திற்கு "இனி"என்ற வார்த்தையில்லை. மகாலிங்கசிவத்திற்கும் பிறகு என்ற பேச்சில்லை." என்று குறிப்பிட்டதிலிருந்து இவரது இலக்கிய மற்றும் கவிப்புலமைகளை நாம் உணரக்கூடியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. 1941 ஆம் ஆண்டு வாழ்வுலகை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

## ஈழகேசரி நா. பொன்னையா



1892.06.22 ஆம் நாள் தெல்லிப்பளை குரும்பசிட்டியில் பிறந்தவர். நூல் பதிப்பித்தற்துறையில் வரலாற்றுப் பெருமைபெற்றவர். ஈழ கேசரிப்பொன்னையா அவர்கள் தமிழுக்கும், தமிழ்இலக்கியத்திற்கும் ஆற்றியபணி யினை தமிழ் கூறும் நல்லுலகம் நன்கு அறியும்.தேசிய நோக்குடைய சமூக சீர் திருத்தவாதியாகவிருந்து அவர் செயற்பட்டவர். பத்திரிகைகள், பாடநூல்களை வெளியீடு செய்து எழுத்துலகை புதியபரி மாணங்களுக்குக் கொண்டு சென்றவர். ஈழத்தின் பல சிறந்த எழுத்தாள ர்கள் இவரின் பண்ணையிலேயே உதயமானவர்கள் என்றால் மிகை யாகாது. குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் தந்தையெனக் கொண்டா டப்படும் இவர் ஆங்கில மோகம் தலைவிரித்தாடிய 1930 களிலே சுன்னாகம் திருமகள் அச்சகத்தினை நிறுவினார். தமிழிலே அரசிய லையும், கட்டுரை, நாவல், சிறுகதை என்பவற்றைச் சொல்ல முடியாத காலத்தில், தமிழ்ப் பத்திரிகைகளை வாங்குவோரற்ற காலத்தில் அதிலும் தமிழ்வாரப் பத்திரிகைகளில் என்ன இருக்கப்போகின்றது என்று அறிஞர் களால் உச்சரித்த காலத்தில் "ஈழகேசரி" என்ற வாரப்பத்திரிகையை எவருடைய துணையுமின்றித் தொடங்கி, மின்சார வசதிகளற்ற அக்காலத் திலே கையாலே சுழற்றி அச்சடித்துப் பிழை ஒன்றும் இல்லாமல் இலக்கியம், சமயம், அரசியல் மூன்றையும் மூன்று கண்ணென மதித்து இருபத்தைந்து வருடம் பெரும் பொருள் நட்டத்துடன் நடத்தியவர்.அது அவரது வரலாற்றுக்காவியம். ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியிலே "ஈழகேசரிக் காலம்" என்று எழுத்தாளர்கள் பெருமைப்படுகின்றார்கள். இது பொன்னையா அவர்களின் இரத்தத்துளி, நெற்றிவியர்வை, நீண்ட பெருமூச்சு. மறுமலர்ச்சிக்கால இலக்கியகாரர்களை வளர்த்து விட்டவர் எனக்கூறின் அது மிகையாகாது. பிற்காலத்தில் ஈழத்து இலக்கிய வானில் பிரகாசித்துக்கொண்டிருக்கும் இலக்கியவாதிகளைக் குறிப்பிடலாம். அவர்களில் அமரர்களான வரதர், அ.செ. முருகானந்தன், அ.ந.கந்தசாமி, மகாகவி உருத்திரமூர்த்தி, கனக.செந்திநாதன் முதலியவர்களுக்கு களம் அமைத்துக்கொடுத்த பெருமை ஈழகேசரிக்கு உண்டு. திருமகள் அழுத்தகம் நாவலர் நெறிநின்று எழுத்துப் பிழைகள் எதுவுமின்றி மிக

உயர்ந்ததரத்தில் நூல்களை வெளியிட்ட பெருமைக்குரியது. வித்துவ சிரோன்மணி ச.கணேசையரின் தொல்காப்பிய உரைவிளக்கம் முதல் பாலபாடம் முதலான பாடநூல்கள் வரை பதிப்பித்த தனிப்பெருமைக் குரியவர் ஈழகேசரி நா.பொன்னையா என்றால் அது தவறில்லை. மேலும் "கேசரி"என்ற பெயரில் எச்.எஸ்.பேரின்பநாயகம் என்பவரை ஆசிரியராகக் கொண்டு ஆங்கில வாரப்பத்திரிகையையும் நடத்தி வந்தவர். 1957.03.30 ஆம் நாள் வாழ்வுலகை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

## சிந்தனைச்செல்வர் பொ.கைலாசபதி



1902ஆம் ஆண்டு அளவெட்டியில் பிறந்தவர். திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலையில் விரிவுரை யாளராகவும், துணை அதிபராகக் கடமையாற்றியவர். சிந்தனைச்செல்வரால் எழுதப்பட்ட ஆக்கங்களாக 1933 ஆம் ஆண்டு வெளியான யாழ்ப்பாணத்து கலாநிலை யத்தின் வெளியீடாகிய ஞாயிறு இதழில் எழுதியுள்ள தமிழகத்து தருக்க நூல் வளர்ச்சி என்னும் கட்டுரை ,1934 ஆம் ஆண்டு வயாவிளான் வாலிபதூதனில் வெளியான உண்மைச் சமயமும் கட்டுரைச் சமயமும் என்னும் கட்டுரை பொ. கைலாசபதி அவர்களின் சிந்தனை என்னும் நூலில் சிந்தனையின் ஆழம், விரிவு, தீட்சண்யம் போன்ற விடயங்கள் உள்ளடங்கி உள்ளன. இவர் தூயகணிதம், பிரயோக கணிதம், தருக்க வியல் போன்றவற்றைப் படித்து பட்டம் பெற்றவர். எனினும் வடமொழி, தமிழ் இலக்கியங்கள், சைவ சித்தாந்தம், ஆங்கிலம், மேலைத்தேய சிந்தனைகள், புத்தம்,சமணம் போன்ற தத்துவங்களில் ஆழ்ந்த புலமையு டையவர். இவரது இத்தகைய அறிவுப் புலத்திற்கு பன்னாலை சிவானந்தையரிடம் இளமையிலேயே வடமொழியையும், ஆங்கிலத் தையும் கற்றதனால் மிகவும் அறிவுடையவராக விளங்கினார். பண்டித மணி அவர்கள் கைலாசபதியவர்களை நெற்றிக்கண்ணர் என்று குறிப்பிடுகின்றார்.இவருடைய சிந்தனைகள் சில பொருளைப் பொருளாகக் காண்பது ஆரியம், அன்புநடை, தமிழ்அன்புப்பிழை தமிழ்த் திரிவு என்பனவாகும். கைலாசபதியவர்கள் பல சிந்தனைத் துளிகளை வழங்கியவர்.


## பண்டிதர் க.சச்சிதானந்தம்



1912-10-19 ஆம் நாள் மாவிட்டபுரத்தில் பிறந்தவர். பிராமணவீதி தும்பளை பருத்தித்துறை என்னும் முகவரியில் வசித்து வந்தவர். மிகச்சிறந்த கவிஞர், தமிழறிஞர், ஆங்கிலத்திலும், தமிழிலும்,வடமொழி யிலும் வல்லவர்.உளநூல், கல்விநூல் விற்பன்னர். பண்டிதர். பலாலி ஆசிரியர் கலாசாலையில் உபஅதிபராய் இருந்து ஓய்வு பெற்றவர். சுவாமி விபுலானந்தர் யாழ்நூல் உருவாக்கிய காலத்தில் அவருடனிருந்து ஆய்வுகளுக்கும், எழுத்துப் பணிகளுக்கும் உதவிய பெருமைக்குரியவர். யாழ்ப்பாண மண்ணில் ஒரு நடமாடும் நூலகமாக, அறிவுச்சுடராக, மிளிர்ந்த இவர் தமிழில் கீழைத்தேய, மேலைத்தேய இரு வழிக்கல்வியிலும் ஈடுபாடும் புலமையுமிக்கவர். கவிதை,சிறுகதை, நவீனம், காவியம், நாவல், வானியல், சோதிடம் முதலாம் பல்துறை இலக்கியத் திறண்படைத்தவர். மதுரையில் தமிழன் நாளிதழ், இலங் கையில் சக்தி, ஈழகேசரி, போன்ற நாளிதழ்களில் இருபதிற்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார்."சாகில் தமிழ் படித்துச்சாக வேண்டும் - எந்தன் சாம்பல் தமிழ்மணந்து வேக வேண்டும்" என்ற பாடலடிக்குச் சொந்தக்காரர். இவரின் நவகவிதைகளின் தொகுப்பாக ஆனந்தத்தேன் என்ற நூல் 1954 இல் வெளி வந்தது.1952 இல் மாவைமுருகன் என்ற நூலையும், 1960 இல் தியாகமாலை என்ற நூலையும் வெளியிட்டவர். 1450-1467காலப்பகுதியில் யாழ்ப்பாண அரசனாகவிருந்த கனகசூரிய சிங்கையாரியனைகோட்டை அரசன் ஆறாம்பராக்கிரமபாகு ஆட்சியின் போது அவனுடைய வாரிசான சம்புமால் குமனரையன் வென்று யாழ்ப்பாண அரசைக்கைப்பற்றி ஆண்டதான வரலாற்றையும், தமிழ் நாட்டிலிருந்து வந்தபடை விஜயபாகுவை வென்று ஆட்சியைக் கைப்பற்றிய செய்தியையும் கொண்டதாக 1998ல் யாழ்ப்பாண காவியம் என்ற பெருநூலை வெளியிட்டவர். இவ்வறிஞரின் படைப்புக்கள் பலவும் அச்சுப்பெறாமலேயே உள்ளன. கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, கிளாலித்துறைமுகம் என்பவற்றை நிலைக்களமாகக் கொண்டமைந்ததும், 1950 முதல்42வருட கால

வரலாற்றையும், செல்வன் என்னும் தமிழ்ச் சிறுவனும், அவன் பள்ளி மாணவரும் பத்துவருடகாலத்தில் படுகின்ற துன்பங்களையும் கருவாகக் கொண்டதுமாய் நாலாயிரத்து முன்னூறு கவிதைவரிகளில் எழுதப் பெற்றதுமான மகாகாவியம் பருவப்பாலியர் படும்பாடு என்னும் நூமிழியல், மொழியியல் தொல்காப்பிய அடிப்படையில் தமிழுக்கோர் பிர யோக இலக்கணம், எனது யாழ்ப்பாணமே, தமிழர்யாழியல், மஞ்சு, மலரக்கொத்து, எடுத்தமலரும் தொடுத்த மாலையும், பறவைகளே போன்ற நூல்களும் குறிப்பிடத்தக்கனவாகும். மரபு இலக்கியங்களிலும், நவீன இலக்கியங்களிலும் ஆற்றல்மிக்க பேரறிஞர்களில் ஒருவர் என் பதும் குறிப்பிடத்தக்கது. தெல்லிப்பளை கலை இலக்கியக்களம் இவரது ஆக்கங்கள்பற்றி மாவைப்பண்டிதர் க.சச்சிதானந்தன் இலக்கியப் பணி என்ற கைநூல் ஒன்றினையும் வெளியிட்டுள்ளது. ஈழகேசரி, மறுமலர் சிக்கால இப்பிரதேச புனை கதையாசிரியர் எனப் போற்றப்படும் கவிஞரவர் களின் அன்னபூரணி என்னும் தொடர் நவீனம் ஈழகேசரியில் வெளி வந்து பல புனைகதையாசிரியர்கள் உருவாக முன்னோடியாக இருந் தவர். இவரது இத்தகைய பணிகளைப்பாராட்டி 1999 இல் சாஹித் தியரத்னா,2005 இல் இலங்கை அரசின் உயர்விருதான கலாகீர்த்தி, 2001 இல் சம்பந்தன் விருது, 2003 இல் வடக்குக் கிழக்கு மாகாண கௌரவ ஆளுநர் விருது, 2004 இல் தந்தைசெல்வா அறக்கட்டளை விருது, கதிரவேற்பிள்ளை சனசமூகநிலையவிருது போன்ற பல விருதுகள் வழங்கிப் பெருமைப்படுத்தப்பட்டவர். 2008-03-21ஆம் நாள் வாழ்வுலகை நீத்து நிலையுலகம் சென்றார்.

## செல்லையா சிவசுப்பிரமணியம்



1915.02.24ஆம் நாள் தெல்லிப்பளையில் பிறந்தவர். பாடசாலை அதிபராகவும்சிறந்த புராணபடன வித்த கராகவும் படைப்பு இலக்கியத்தில் மிகுந்த ஈடுபாடு உடையவராகவும் விளங்கியவர். யாழ்ப்பாணத்தின் சிறந்த பௌராணிகர்களில் ஒருவராகக் குறிப்பிடற் குரியவர். கீரிமலை நகுலேஸ்வரப்பெருமான் மீது புன்னாலைக் கட்டுவன் அப்பாசாமி ஐயரவர்களால் பதினொருபடலங்களையும்,அறுநூற்றி இரு

பத்தெட்டு விருத்தப்பாக்களையும் கொண்டதாக பாடப்பெற்ற நகுலகிரிப் புராணத்திற்கு உரையெழுதியவர். மேலும் இவரால் அவ்வப்போது பாடப்பெற்ற பக்திப் பிரபந்தங்கள் யாவும் இவரது நினைவாக இறை மணிமாலை என்னும் நூலாக தொகுக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது. 1999.11.04 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

**இலக்கணவித்தகர்.இராமசாமி நமசிவாயதேசிகர்**



1915.11.10ஆம் நாள் கட்டுவனில்பிறந்தார்.தமிழ் இலக்கணத்துறையில் அவருக்கு நிகர் அவரே என்று சான்றோரால் குறிப்பிடப்பட்டவர். ஆரம்பக் கல்வியின் பின்னர் 1932 ஆம் ஆண்டு வித்துவ சிரோன்மணி பிரம்மஸ்ரீ கணேசையரிடம் பிரவேச பண்டித வகுப்பில் சேர்ந்தார். கணேசையரவர்களுடைய பண்டித வகுப்புக்களை நடத்துகின்றளவிற்கு இவருடைய புலமை காரணமாக அமைந்தது. கணேசையரது தொல்காப்பியப் பதிப்பு முயற்சியின் போது அவர் அருகிலிருந்து உதவியவர். வரன் முறையான இலக்கணத்தெளிவு பெற்றவர். யாழ்ப்பாணத்து கல்விப்பாரம்பரியத்தின் இலக்கணச் செம் மையை பலருக்கும் புகட்டியவர். திருக்குறள்,கம்பராமாயணம், வில்லி பாரதம், கந்தபுராணம்,சங்கத்தொகை நூல்கள், நெடும்பாடல்கள் முதலாம் இலக்கியங்களிலும், தொல்காப்பியம் முதலான இலக்கண நூல் களிலும்,சிவஞானபோதம் முதலான சித்தாந்த சாஸ்திரங்களிலும் அவ்வவற்றின் உரைகளிலும் பிறவற்றிலும் மிகுந்த புலமையுடையவர். பத்திரிகைகளிலும்,சஞ்சிகைகளிலும் எழுதியவர். கும்பகருணன் வதைப் படலஉரை, கழுத்துறைமுருகன், ஹற்றன் விநாயகர், திருகோணமலை ஆலடிப்பிள்ளையார், மாங்குளம் தச்சகடம்பன் பிள்ளையார், நெல்லண் டைப் பத்திரகாளி, மயிலிட்டி கொழுவியன் கலட்டிப் பிள்ளையார், கட்டுவன் ஐயனார், முத்துமாரி அம்மன், யூனியன் கல்லூரி அம்மன், அளவெட்டி குருக்கள் கிணற்றடி முருகன், பண்ணாகம் பனிப்புலம் அம்மன் போன்ற ஆலயத்தில் வீற்றிருக்கும் தெய்வங்கள் மீது பதிகங்கள் பாடியவர். சந்நிதிக்கந்தர் சதகம், நகுலேசர் திருவந்தாதி, கட்டுவன் முத்துமாரி அம்மன் திருப்பள்ளியெழுச்சி போன்ற பாடல்களையும்

பாடியவர். இவரது இலக்கிய ,இலக்கணப்புலமையைப் பாராட்டி யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாசாபிவிருத்திச்சங்கம் பிரவேச பண்டித பாலபண்டிதபட்டங்களையும், மதுரைத்தமிழ்ச் சங்கத்தால் பண்டித பட்டமும், நல்லை ஆதீனத்தால் செந்தமிழ்த்திலகம் என்றபட்டமும் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தால் மகாவித்துவான் என்னும் சிறப்புப்பட்டமும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தால் இலக்கண வித்தகர் என்ற சிறப்புப்பட்டமும், இலங்கை அரசினால் சமாதான நீதிவான்பட்டமும், வித்துவசிரோன்மணி கணேசை யரால் தேசிகர்பட்டமும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பண்டிதரவர் கள் புறநானூறு கூறும் ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர். அவரது உலகம் பகுத்தறிவு உலகம், அவரது சிந்தனை தனித் துவமானது. 2000.11.09 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

## பண்டிதர் வ.நடராஜா



1915.11.11 ஆம் நாள் நாவற்குழியில் பிறந்து தெல்லிப் பளை குரும்பசிட்டியில் வாழ்ந்தவர் பழந்தமிழ்ப் பேரறிஞர் ஈழகேசரிப் பொன்னையாவின் திருமகள் அழுத்தகப் பாடநூல்கள் வரிசையில் பல செந்தமிழ் நூல்களை எழுதிய ஒரு தலைமுறையின் தமிழறிவை வளம்படுத்திய பெருமைக்குரியவர். நாவலர் வழிவந்த வித்துவ சிரோன்மணி கணேசையர் முதலான தமிழறிஞர்களிடம் பயின்று மதுரைத்தமிழ்ச்சங்கம் நடத்திய பண்டிதர் பரீட்சையில் சித்திபெற்றவர். இலக்கண, இலக்கியத் துறையைத்துறை போகக்கற்ற இவர் வசனநடை கைவந்த வல்லாளராகவும் மிளிர்ந்தவர். பிரவேச,பால பண்டித வகுப்புகள் மூலம் பல தமிழறிஞர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர். இவரது நூல்கள் செந்தமிழ்வளமும், இலக்கியச் சுவையும், தூயஇனியவசன நடையும் வாய்க்கப் பெற்றவை. இலக்கிய மஞ்சரி, உரைநடைவிருந்து, மொழிப்பயிற்சி, சகுந்தலைசரிதை, மணிமேகலை முதலான நூல்களை ஆக்கியவர். இவரால் இறுதியாக எழுதப்பெற்ற நூலான கடவுள் ஒருவர் சிந்தனையைத் தூண்டவல்ல தனித்துவமுடையது. இலக்கியமஞ்சரி

உரைநடைவிருந்து, மொழிப்பயிற்சி மற்றும் சகுந்தலை முதலான நூல்கள் இவருக்குப் புகழைப் பெற்றுக் கொடுத்தவை. ஈழகேசரியிலும், கலைச்செல்வி சஞ்சிகையிலும் பல இலக்கியக் கட்டுரைகளையும், விமர்சனங்களையும் எழுதியவர். இத்தகைய படைப்புக்களின் சிறப்பே இவரை கல்வி வெளியீட்டுத் திணைக்கள பாடநூற் பதிப்பகத்திற்கு பணி புரியுமளவிற்கு உயர்த்தியது. தனது வழிகாட்டி ஈழகேசரி. நா.பொன்னையா அவர்களே என்று கூறிப் பெருமிதம் கொண்டவர். 2000.08.17 ஆம் நாள் வாழ்வுலகை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

**கனகசபை திருச்செல்வேள்**



1916.11.05 ஆம் நாள் குரும்பசிட்டியில் பிறந்து அளவெட்டியில் வாழ்ந்தவர். சிறந்த கல்வியியலாளராக விளங்கிய இவர் இரசிகமணி கனகசெந்திநாதன் என்ற பெயரில் தமிழ் இலக்கியத்துறையில் ஈழகேசரி, மறுமலர்ச்சி, ஆனந்தன், ஈழநாடு, தினகரன், வெற்றிமணி, மல்லிகை போன்ற சஞ்சிகைகளில் எழுதிவந்தவர். ஈழத்து இலக்கியவானில் இணையற்ற பிரகாசத்துடன் விளங்கிய ஒரு நட்சத்திர எழுத்தாளர். கிராமியச்சூழலில் பிறந்து இளமையிற் தந்தையை இழந்து வறுமையில் வாடி கடின உழைப்பில் ஆசிரியராக முகிழ்த்தவர். தானுண்டு தன் குடும்பமுண்டு என்று சும்மா இராமல் எதுவித ஊதியமுமற்ற எழுத்துத்துறையில் கால்பதித்தவர். எழுத்துலகில் சில காரியங்களை தன்னாலும் செய்ய முடியும் என்ற கோதாவில் தன் சிறிய ஊதியத்தின் பெரும்பங்கை புத்தகங்கள், பத்திரிகைகள்,விசேடமலர்கள் என்பவற்றை வாங்குவதற்காகச் செலவு செய்தவர். நீண்ட வாசனையாளர். ஈழநாடு, ஈழத்து எழுத்தாளர், ஈழத்துப் படைப்பாளிகள் என்று சிந்தித்துச் செயற்பட்டவர். சிறுகதை, நாவல், நாடகம், விமர்சனம், கட்டுரை, இலக்கிய ஆய்வு என்பனவற்றில் முழு மனதுடன் அர்ப்பணித்து எழுதியவர். தமிழ் நாட்டு எழுத்தாளர்களுக்கு எந்த வகையிலும் ஈழத்து எழுத்தாளர்கள் குறைந்தவர்கள் அல்ல என்ற தன்னம்பிக்கையை ஊட்டி ஈழத்து எழுத்தாளர்களை உற்சாகப்படுத்திய பெருமைக்குரியவர். 1937-1938 காலப்பகுதியில் திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலையில்

பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களது முதன்மை மாணவனாக கல்வி பயின்றவர். ஈழத்து தமிழ் இலக்கியவளர்ச்சியில் இருபத்தைந்து சிறுகதைகளையும், நான்கு நாவல்களையும், பன்னிரண்டு நாடகங்க ளையும் எழுதியுள்ளார். அவற்றுடன் அறிஞர்கள் பற்றிய நான்கு வரலாற்று நூல்களும், மூன்று விமர்சன நூல்களும், பல கட்டுரை நூல்களும் இவரால் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவற்றுள் வெண்சங்கு, ஒருபிடி சோறு,விதியின்கை, கவிதைவானில் ஒரு வளர்பிறை, மூன்றாவதுகண், ஈழத்துக்கவிமலர்கள், நாவலர் அறிவு ரைகள், ஈழத்துத் தமிழ் நூல்வழிகாட்டி, கவின் கலைக்கோர் கலாகேசரி, என்கதை, ஈழம்தந்தகேசரி, ஈழத்து இலக்கிய வளர்ச்சி முதலான பல நூல் களைக் குறிப்பிடலாம். பூச்சரம்,மலர்மாலை என்பன இவரைப் பற்றிய தொகுப்பு நூல்களாகும். ஒருபிடிசோறு என்னும் சிறுகதை ருஸ்சிய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளமை எமது பிரதே சத்திற்குப் பெருமை சேர்ப்பதாகும். யாழ் இலக்கிய வட்டத்தினை உருவாக்கி அதன் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவர். 1964 ஆம் ஆண்டு கிழக்கிலங்கை எழுத்தாளர் சங்கம் இரசிகமணி என்ற பட்டத் தினையும்,1969 ஆம் ஆண்டு அம்பனை கலைப்பெருமன்றம் இலக்கியச் செல்வர் என்றபட்டத்தினையும் வழங்கிக்கௌரவித்தமை குறிப்பிடத் தக்கது.1977.11.16ஆம் நாள் வாழ்வுலகை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

## அருணாசலம் விஸ்வநாதன்



1917-03-04ஆம் நாள் அளவெட்டியில் பிறந்தவர். இவர் தனது ஆரம்பக்கல்வியை ஞானோதய வித்தியசாலை யிலும், இடை நிலைக் கல்வியை கந்தவரோதயக் கல்லூரியிலும் பயின்றதோடு இலண்டன் மற்றிக் குலேசன் பரீட்சையிலும் சித்தியடைந்தார். இவர் சைவ சமயத்தீட்சை பெற்று சைவாசாரசீலராய் ஆன்மீகத்தில் ஆழ்ந்த பற்றுடையவராய், திரு முறைகள், புராணங்களில் வல்வராய்த் திகழ்ந்தவர். சைவ சித்தாந்தத் தில் மிகுந்த அறிவுடையவர். சிறந்த பௌராணிகர். கந்தபுராணம், திரு விளையாடற் புராணம், திருவாதவூரடிகள் புராணம் ஆகியவற்றை இசை

யுடன் பாடுவதுடன் விளக்கவுரை கூறுவதிலும் வல்லவர். தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயத்திலும், திருக்கேதீச்சரத்திலும் புராண படனம் செய்து வந்தவர். கல்விப்பணி, சமயப்பணி மட்டுமல்லாது சமூகப் பணி யையும் செய்து வந்தவர். அளவெட்டி ப.நோ. கூ.சங்கத்தின் ஆரம்ப காலத் தலைவராய் இருந்து அதன் வளர்ச்சிக்கு முன்னின்று உழைத்தவர். அளவெட்டி மகாஜனசபை சனசமூக நிலையம் என்பனவற்றின் ஆரம்ப கால உறுப்பினராகச் செயற்பட்டவர். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளில் பாண்டித்தியம் பெற்ற புலமையாளர். நல்லாசா னாய், நல்லவர்கள் வரிசையில் அருணோதயாவை அலங்கரித்த நல்லறிஞர். மந்திரம், மானுடம், அந்தணர், ஆகமம் செந்தமிழ், திரு முறை என ஆழ்ந்து சிந்தித்த அங்கீகரிக்கப்பட்ட ஆய்வாளன். கும்பழா வளை,கேணிக்கரை, துர்க்கைஅம்பாள்,பெருமாக்கடவை,அளவோலை, தவளக்கிரி எனத்தன்னை ஆன்மீகப் பிராந்தியத்தில் நிலைநிறுத்திய ஆன்மீகவள்ளல். அளவெட்டி அருணோதயக் கல்லூரிக்கு சூரியர்,சந்திரர் உள்ளவரை கிடைக்குமென மலேசிய சின்னப்பு தம்பதிகள் வழங்கிய பரிசில் நிதிக்கு பொறுப்பாளராவிருந்து திறம்பட நடத்தியவர். இவரால் 1978 ஆம் ஆண்டு அருணோதயக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்ட பரிசளிப்பு நிதியம் காலப்போக்கில் அவரின் முயற்சியால் அளவெட்டிக் கிராமத்திலுள்ள ஏனைய ஆறு பாடசாலைகளுக்கும் பரிசளிப்பு நிதியம் வழங்குவதற்கும், இக்கிராமத்தில் கஸ்ரநிலையில் வாழும் ஏழைக் குடும்பங்களுக்கு சித்திரைப் புத்தாண்டை ஒட்டி அன்னவஸ்திர, சொர்ண புஸ்ப தானங்களை வழங்குவதற்கும் பொறுப்பாகவிருந்து சிறப்பாகப் பணிபுரிந்தவர். அளவெட்டி மகாஜனசபை,சனசமூக நிலையம், ஸ்ரீசுப்பிர முனிய சுவாமிகள் ஆச்சிரமம், சைவவாலிபர்சங்கம் ஆகியவற்றின் ஆரம்பகால உறுப்பினராக இருந்து அவற்றின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. 2008-10-15 ஆம் நாள் வாழ் வுலகை நீத்து நிலையுலகம் சென்றார்.

### பேராசிரியர் அம்பலவாணர் சிவராசா




குரும்பசிட்டியை சேர்ந்த இவர் நாவற்குழியை வசிப்பிடமாகக் கொண்டவர் அரசஅறிவியல் தொடர்பாக பலநூல்களை எழுதியவர். அரசறிவியல் பேராசிரியராக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றியவர். இவரது இலங்கை அரசியல் வரலாறு என்ற நூல் குறிப்பிடத்தக்கது.

### மு.க.சுப்பிரமணியம்



குரும்பசிட்டியை சேர்ந்தவர் இவர் "வெற்றிமணி" என்ற சஞ்சிகையின் ஸ்தாபகராகவும் ஆசிரியராகவும் இருந்து பல படைப்பாளிகள் உருவாகுவதற்கு காலாக இருந்தவர். தற்பொழுது ஜேர்மனியில் வசிக்கும் இவரது புதல்வனால் தொடர்ந்தும் இச்சஞ்சிகை வெளியிடப்பட்டு வருகின்றது. குரும்பசிட்டி பொன் பரமாநந்தாக் கல்லூரியின் புகழ் பெற்ற அதிபர்களில் ஒருவர். இவருடைய புதல்வன் கே.எஸ். சிவகுமாரன் ஓவியக்கலையில் சிறந்து விளங்குவதுடன் இத்துறையில் பல சாதனை களையும் புரிந்து வருகின்றார் என்பதுடன் வெற்றிமணி சஞ்சிகையினை தொடர்ந்து உலக நாடுகள் தோறும் இலவசமாக வெளியிட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

### மாரிமுத்து மாணிக்கம்



1921.03.17ஆம் நாள் வேலணையில் பிறந்து அளவெட்டியில் வாழ்ந்தவர். சைவத்தையும், தமிழை யும் தன் இருகண்களாகக் கொண்டு அதன்வளர்ச் சிக்காக முழு நேரமாய் செயற்பட்டவர். பண்டிதரவர்கள் கவிதை, கட்டுரைகள், கல்வெட்டுக்கள், கதாப்பிரசங் கங்கள், புராணபடிப்புகள், பலநூல் படைப்புகள் எனப் பலகோணங் களிலும் தன்திறணை வெளிக்கொணர்ந்தவர். இசையோடு உட் பொருளை சுவையோடு வழங்கும் புராணப்படிப்புக்கு நிகர் இவரே எனப் பலராலும் குறிப்பிடப்பட்டவர். கந்தபுராணச்சுருக்கம், பெரியபுராணச் சுருக்கம், திருக்குறள் வசனச்சுருக்கம், நளவெண்பாக்களின் பதவுரை,

புறநானூற்றில் சிந்தைக்கினிய செய்திகள் சில ஆகிய நூல்களை வெளி யிட்டவர். பண்டிதர்,ஆசிரியர்,அதிபராக கடமையாற்றியவர். மாணிக்கப் பண்டிதர் என அழைக்கப்பட்டவர். பழந்தமிழ் நூல்களை இக்காலச் சாதாரண மக்களுக்கும் விளங்கும் வகையில் இலகுவான மொழி நடையில் எழுதிவழங்க வேண்டுமென்ற கொள்கையுடையவர். ஆயிரத் திற்கு மதிகமான கல்வெட்டுக்களையும், யாழ்ப்பாணத்து இந்து ஆலயங் கள் சிலவற்றின் மீது திருப்பள்ளியெழுச்சிப் பாடல்கள், ஊஞ்சற் பாடல்கள், துதிப்பதிகம் போன்ற பாடல்களையும் பாடியவர் என்பதும் குறிப்பிடத் தக்கது. 2003.03.27 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்

## செல்லையா கதிரேசர்பிள்ளை



1921.10.30 ஆம் நாள் அளவெட்டி வடக்கு என்ற இடத்தில் பிறந்த இவர். தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் புகழ்பூத்த ஆசிரியராக இருந்து பல அறிஞர் களை உருவாக்கியுள்ளார். நாடகநடிகராகவும், நெறி யாளராகவும் எழுத்தாழராகவும், கவிஞராகவும் சொற் பொழிவாளராகவும், புராணபடன விற்பன்னராகவும் எனப்பல் துறைத் திறமைகள் வாய்க்கப்பெற்ற இவர் 1939 ஆம் ஆண்டு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி மாணவராக இருந்தவர். இக்காலத்தில் விரிவுரையாளராக இருந்த கருகவி வே.மகாலிங்கசிவம் அவர்களிடம் பயிற்சி பெற்றதுடன் கவிதைத்துறையில் ஆற்றல் மிகு கவிஞனாக மிளிர்வதற்குரிய தூண்டுதல்களையும் பெற்று புகழ் பெற்ற கவிஞராக பின்னாளில் கலைப் பணியாற்றியவர். இலங்கையின் மலையகம் டிக் கோயாதோட்டப் பாடசாலையில் 1943-1946 வரையும், அட்டன் ஸ்ரீபாதக் கல்லூரியில் 19046-1950 வரையும்,கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியில் 1950-1951 வரையும்,தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் 1951-1980வரையும், புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் 1981ல் பணியாற்றி ஓய்வு பெற்றவர். தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்து நல்ல பல அறுவடைகளை கல்வியுலகிற்கு வழங்கியவர். 5 நாடகங்களை உள்ளடக்கிய தொகுப்பு நூலான பாரதம்தந்தபரிசு(1980) கதிரேசன் பாலர் கதைப் பாடல்கள்(1988)

போன்ற பல நூல்களையும் வெளியிட்டவர்.1969 ஆம் ஆண்டு ஆறுமுக நாவலர் சபையால் நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் முதலாம் பரிசினையும். பாரதம்தந்தபரிசு நாடகத்தொகுப்பு நூலுக்கான சாகித்திய மண்டலப் பரிசினையும், 1986ல் யாழ் இலக்கியவட்ட இலக்கியப் பேரவைப் பரிசினையும் பெற்றவர். இவரால் அகில இலங்கை கலைக் கழக நாடகப் போட்டியில் 1965 ஆம் ஆண்டு முதல் 1969 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகள் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி சார்பாக அரங்கேற்றப்பட்ட நாடகங்கள் தேசியமட்டம் வரை முதலாமிடத்தினைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. தனது தாயின் நினைவாக தாய் என்னும்நூலை 1977 இல் வெளியிட்டவர். பக்தி நலமேம்பாடுள்ளவராதலாற் பல தெய்வங்கள்மீது பதிகங்கள், இரட்டை மணிமாலை, திருப்பள்ளியெழுச்சி, திருத்தல வெண்பா, ஊஞ்சல் முதலான நூல்களை எழுதியுள்ளார். பன்னாலை வருத்தலம் கற்பகவிநாயகர் இரட்டைமணிமாலை (1974), தவளக்கிரி முத்துமாரி அம்மை திருப்பள்ளியெழுச்சி, வீரகத்தி விநாயகர் திருத்தல வெண்பா (1983)என்பன சிலவாகும். இவரால் எழுதப்பட்ட கவிதைகள் அனைத்தும் கதிரேசன் கவிதைகள் என்ற பெயரில் நூலுருப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அருட்கவி சீனியர் விநாசித்தம்பி



1921.11.03ஆம் நாள் அளவெட்டியில் பிறந்தவர்.உலக மறிந்த அருளாளரும்.கவிஞருமான இவர் இசைச் சொற்பொழிவு, கவிதை, படைப்பிலக்கியம் என்பவற்றில் சிறந்து விளங்கியதுடன் என்நேரமும் கவி பாடவல்ல ஆசுகவி. கதாப்பிரசங்கி, சோதிடமும் தமிழும் இணைந்தபுலமை மிக்கவராகவும், அளவெட்டி நாகவரதநாராயனர் தேவஸ்தானத்தின் தலைவராகவும் ஸ்தாபகராகவும் இருந்து பக்தர்களுக்கு அருள்வாக்குச் சொல்லி மக்களை ஆற்றுப்படுத்தியவர். இவரது பாடல்கள் எவருக்கும் விளங்கத்தக்க இலகுவான அருள்வார்த்தைகளாலானவை. அதேவேளை ஆழமான தத்துவக் கருத்துக்கள், புதுமைநயம் மிளிர

வைக்கும் பாணியில் அமைந்தவை. பல்லாயிரக் கணக்கான பல் வகைப்பாடல்களை ஆக்கியுள்ள இவரது நூல்கள் பல வெளிவந்துள்ளன. 2000இல் வெளிவந்த கந்தபுராண வசனகாவியம் என்னும் நூல் இவரது தனித்துவத்தை எடுத்துக் காட்டுவதாகும். வசன நடை, சுவையான கவிதை நடையாகவே அமைவது இவருக்கேயுரிய இயல்புகளாகும். வள்ளிநாயகன் செல்வச்சந்நிதிக்கந்தன் திருப்பாமாலை, அருண்மலர் மாலை,கூட்டுப் பிரார்த்தனைப்பாடல்கள், கண்ணன்கீதை உபதேசம் முதலான ஏராளமான நூல்களுக்கு இவர் ஆசிரியராவார். இவர் பாடிய கவிகளில் கூடுதலானவை கடவுள் சம்பந்தமானவையாகவும், தமிழிலக்கிய வகையைச் சார்ந்தவையாகவும் காணப்படுகின்றது. உதாரணமாக பிள்ளைத்தமிழ், தலபுராணம், பாமாலை, தோத்திர மாலை, திருப்பதிகம், திருப்புகழ், திருவந்தாதி, திருப்பள்ளியெழுச்சி போன்றனவற்றைக் குறிப்பிடலாம். வாழ்த்துப்பாடல்கள், வரவேற்புப் பாடல்கள், மாணவர்களுக்குத் தேவையான பாடல்கள் போன்றவற்றை உடனுக்குடன் பாடும் ஆற்றல் படைத்தவர். இவரது பாடல்கள் சந்த இன்பம், பொருளின்பம், பக்திச்சுவை என்பன இயல்பாகவே காணப் படுகின்றன. சித்திரபுத்திர நாயனார் வரலாற்றினை புராணமாகப் பாடியவர். பாத்திரம் ஏற்று நடித்தவர். கதாப்பிரசங்கம், சொற்பொழிவு களை மகோற்சவ காலங்களில் பல்வேறு ஆலயங்களிலும் நிகழ்த்தி வந்தவர். இவரது அறிவுத்திறண் சமய,சமூக சேவைகளினூடாக மக்களுக்கு பயனுடையதாய் இருந்தமை குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாண த்திலே அருள் வழங்குகின்ற பல கோயில்களுக்கான ஊஞ்சற்பாடல்களை பாடியவர்.இவருடைய இத்தகைய சேவைகளை கௌரவித்து மதிப் பளிக்கும் முகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் "கௌரவ முதுகலை மாணி" என்ற பட்டத்தினை வழங்கியதும் குறிப்பிடத்தக்கது. மேலும் அருட்கவி,கவி,யோகி, மூதறிஞர் ஆகியபட்டங்களும் வழங்கப் பெற்றவர். அத்துடன் 1969இல் செல்வச்சந்நிதி திருத்தலப் புராணச்சுருக்கம் என்ற நூலை எழுதி வெளியிட்டபோது "அருட்கவிப்புலவர்" என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. 2005.12.11 ஆம் நாள் இறை வனடி சேர்ந்தார்.

## தெல்லியூர் செல்லையா நடராசன்



1923.11.14 ஆம் நாள் தெல்லிப்பளையில் பிறந்து தற்காலிகமாக குமாரசாமி வீதி கந்தர்மடம் என்னும் முகவரியில் வாழ்ந்தவர். தமிழ்மணி, சுடலையாடி, தமிழரசு தமிழ்நானா, பாலபாரதி, ஆடியபாதன், தமிழரசன், கலாபாரதி,தெல்லியூர் கலாபாரதி, ஜரதன், ஆடலரசன், கூத்தன், யாழ்பாடி, கலைஞானி என்னும் புனைபெயர்களில் பல்வேறு இலக்கியப் பணிகளையாற்றிய இவர் ஓர் அரச திணைக்கள மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றியவர். தமிழ், ஆங்கிலம், சமஸ் கிருதம் ஆகிய மும்மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர். தமிழ், சமயம், சோதிடம், உளவியல், சாரணியம், வரலாறு, அரசியல் போன்ற துறைகளில் பல்வேறு நூல்களை எழுதி வெளியிட்டவர். அந்த வகையில் தமிழன்மாட்சி, தங்கத்தாத்தா, ஓநாய்க்குருளை, குருளைமந்தை அமைப்புபூரண குருளையாகும்வழி, கில்வெல் பேடன்பவெல்பிரபு, இளைஞரும் சாரணியமும், குருளைப்பரீட்சை, இளம்பாதன், சாரண நடுவன், சாரணமுதல்வன், அபலைப்பெண், வள்ளுவரின் அரசியல் ஞானம், திருவள்ளுவர் ஞானபோதம், ஈழநாட்டில் தமிழன்மானம், பௌதீக இரசாயன கலைச் சொல் அகராதி, ஆங்கிலத்தமிழ் தொழில் நுட்பச்சொல் அகராதி போன்ற பல நூல்களுக்குச் சொந்தக்காரர். கில்வெல் பேடன் பவெல்பிரபு ஆங்கிலத்தில் எழுதிய இளைஞர் சாரணியம் என்னும் பெருநூலை இளைஞர் சாரணியம் என்னும் பெயரில் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டவர். யாழ்பாடி, ஜோதிடம், தமிழ்மணி, இளைஞன், வெள்ளியரங்க வாழ்க்கை ஆகிய பத்திரிக்கைகளை வெளியி ட்டவர். வீரகேசரி பத்திரிகையின் துணை ஆசிரியராகவும் சுதந்திரன் பத்திரிகையின் ஆசிரியராகவும்,இந்து சாதனம் சஞ்சிகையின் ஆசிரியர் குழுவில் ஒருவராகவும் பணியாற்றியவர். 2002.09.19 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

## பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன்



1924.05.08 ஆம்நாள் தெல்லிப்பளை வீமன்காமத்தில் பிறந்தவர். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் விபுலானந்த அடிகள், பேராசிரியர். க.கணபதிப்பிள்ளை, பேராசிரியர் வி.செல்வநாயகம் போன்ற பேரறிஞர் களிடம்பயிலும் வாய்ப்பைப்பெற்றவர். பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையவர்களிடமிருந்தே பேராசிரியரவர்கள் ஆராய்ச்சித் திறமை, கலைஈடுபாடு, கற்பிக்கும் ஆற்றல் என்பவற்றைப் பெற்றுக் கொண்டார். 1948இல் லண்டன் பல்கலைக்கழகத்தில் பத்துப்பாட்டு, வரலாறு-சமூகவியல் மொழியியல் நோக்கு என்னும் பொருளில் கலாநிதிப்பட்டம் பெற்றவர். ஆங்கிலத்தில் அமைந்த இக்கட்டுரையை தமிழில் தமிழர்சால்பு என்ற அரியநூலாக 1954இல் வெளியிட்டு முதலாவது பண்பாட்டாய்வாளராக மிளிர்ந்தவர். 1963இல் ஆராய்ச்சித் துறைத் தலைவராகவும்,1970 இல் பேராசிரியராகவும் பதவியுயர்வுகள் பெற்றவர். 1977 இல் யாழ்ப்பாணவளாகத் தலைவராகவும், 1979 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உருவாகியபோது அதன் முதலாவது துணைவேந்தராகவும் பதவி வகித்தவர். தமிழ்த்துறையிற் தலைமை தாங்கிய பேராசிரியர் கலைத்துறையிலும் பேரார்வமுடையவராக விளங் கினார். பாரம்பரியக்கலை வடிவமான நாட்டுக்கூத்தினை பல்கலைக்கழக மட்டத்தில் அறிமுகம் செய்து பல்கலைககழக மாணவ மாணவிகளைக் கொண்டு விடிய விடிய ஆடியகூத்தை சுருக்கி காலத்திற் கேற்ற வகையில் மரபுகெடாமல் களரி ஏற்றியவர். வடமோடி, தென் மோடிக் கூத்துக்களுடன் பேராசிரியரவர்கள் நிற்கவில்லை. இக்கலை பற்றிய ஆராய்ச்சி அரங்குகளை நாட்டின் பல பகுதிகளிலும் நடத்தினார். அண்ணாவிமா ரைக் கௌரவிக்கும் மாநாடுகளை நடத்தியதுடன் கலை மகிழ்நன் என்ற புனைபெயரில் மறைந்து நின்று பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் எழுதியவர். இவருடைய அறிவாற்றலையும், கலைத் திறமையையும் அறிந்த கலை நிறுவனங்களான இலங்கைக் கலைக்கழக தமிழ் நாடகக்குழு, இலங்கை சாகித்திய மண்டலம்,இலங்கை தேசியநாடக நூற்கட்டளை நிறுவனம், ஐ.நா. கல்வி, கலை, விஞ்ஞான நிறுவனத்தின்

இலங்கைக்குழு ஆகியன உறுப்பினராக்கியும், தலைமைப் பதவிகளை வழங்கியும் இவரது செயலாற்றலைப் பயன்படுத்திக் கொண்டன. இவர் பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்டு அரங்கேற்றிய கர்ணன் போர், நொண்டிநாடகம், இராவணேசன், வாலிவதை போன்ற நாடகங்கள் குறிப்பிடத்தக்கன. அதுமட்டுமன்றி ஏட்டுச்சுவடிகளாக இருந்த கூத்துக்களான வாழபீமன், மார்க்கண்டேயர், பதினெட்டாம்போர், போன்ற பல்வேறு கூத்துச்சுவடிகளை நூலாக்கம் செய்து ஆவணப் படுத்தியவர். அண்ணாவிமார் மாநாடுகளையும், நவீன நாடகக் கருத்தரங்குகளையும், நவீன நாடகப்போட்டிகளையும் நடத்தியதனூடாக நாடகக்கலை வளர்ச்சியில் பெரிதும் பங்காற்றியவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் என்ற பாடத்தினை ஆரம்பித்து இன்றைய யாழ்ப்பாணத்து அரங்க வளர்ச்சிக்கு அடிகோலி யவர் என்ற பெருமையும் இவரையேசாரும். தமிழர்சால்பு, நாடகம் நாட்டாரியற் சிந்தனைகள், கலையும் பண்பும், தமிழியற் சிந்தனைகள் ஆகிய நூல்களை வெளியிட்டவர். 1984இல் வித்தியானந்தம் துணை வேந்தர் வித்தி, அரங்கு கண்ட துணைவேந்தர், கலை மகிழ்நன் முதலான நூல்கள் பேராசிரியரவர்களைப் பற்றியதாக பல்வேறு அறிஞர் களாலும் எழுதப்பெற்றனவாகும். நடிகமணி வீ.வீ.வைர முத்துவினது பார்சிவழி முறையிலமைந்த அரங்கச் செயற்பாடுகளை பல்கலைக்கழக மட்டத்தில் அரங்கேற்றியது மட்டு மல்லாமல் இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனத்தின் துணையுடன் ஒலி,ஒளிப்பதிவு செய்து ஆவணப் படுத்தியதுடன் இக் கலைவடிவத்தின் பெருமையை உலகறியவும் வைத்தவர். 1989.01.22 ஆம் நாள் வாழ்வுலகை நீத்து நிலையுலகம் சென்றார்.

## தமிழருவி தம்பு சண்முகசுந்தரம்



1925 ஆம் ஆண்டு மாவிட்டபுரத்தில் பிறந்தவர். தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரியின் அதிபராய் இருந்த போதிலும் படைப்பிலக்கியம், பௌராணிகர், இசை, நாடகம், சொல்லாடல், கிராமியக்கலைகள் என்பவற்றுடன் தலைசிறந்த இலக்கிய கர்த்தாவாகவும்

திகழ்ந்துள்ளார். பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை,பேராசிரியர் சு.வித்தியானந்தன் ஆகியோரால் பெரிதும் மதிக்கப்பட்டவர். இலங்கைக்கலைக் கழகத்தின் தமிழ் நாடகக்குழு உறுப்பினாராயிருந்து கலைப்பணியாற்றியவர். நாடகம், நாவல், வரலாறு, கலை, இலக்கியம் ஆகிய பல்துறைப் படைப்புக்களைத் தந்துள்ளார். வாழ்வுபெற்றவல்லி (1962), பூதத்தம்பி (1964), இறுதிமூச்சு (1965) முதலிய நாடக நூல்களின் ஆசிரியர். 1974 இல் வெளிவந்த மீனாட்சி என்ற நாவலும், பேராசிரியர் கணபதிப்பிள்ளை என்னும் நூலும், பேராசிரியர் சு.வித்தியானந்தன் பற்றிய கலைமகிழ்நன (1984), நூலும், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பற்றிய சிவத்தமிழ்ச் செல்வம் (1925) போன்ற நூலும் ஈழத்து இலக்கிய வரலாற்றிற்கு வளம் சேர்ப்பனவாகும். சமூக நோக்குடைய பலபக்தி இலக்கியங்களையும் படைத்துள்ளார். வெற்றிலை மான்மியம், ஈழத்துச்சித்தர் சிந்தனை விருந்து(1984), காகப்பிள்ளையார் மான்மியம் (1983)சிவத்தமிழ்ச் செல்வம், யாழ்ப்பாணத்து இசை வேளாளர் பற்றிய நூல்களான கலையும் மரபும், இசையும் மரபும் (1974),குருவிச்சி நாய்ச்சிசலிப்பு, கண்ணகி அம்மன் கஞ்சிவார்ப்புத் தண்டற்பாட்டு, யாழ்ப்பாணத்து வீரசைவர், இறங்கணியவளை குருநாதர் மாண்மியம்,வள்ளி திருமணவேட்டைப் பாடல்நூல், மாவை முருகன் காவடிப்பாட்டு, மழை இரங்கிப்பாடல்த் தொகுப்பு, வன்னி வளநாட்டுக் கூத்து மரபு, முருகனைப் பூசிக்க அருமறைக் கல்வி, சிவனே போற்றி குகனேபோற்றி யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்ற மாட்டு வண்டில் சவாரியின் வரலாற்றினை வெளிப்படுத்துகின்ற யாழ்ப்பாணத்து மாட்டு வண்டில்ச்சவாரி தொடர்பிலான வரலாற்றுப்பதிவினை யாழ்ப்பாணத்து மாட்டுவண்டில்ச்சவாரி போன்ற இருபத்தைந்திற்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டவர். பல இளம் இலக்கியகர்த்தாக்களை உருவாக்கிய பெருமை இவருக்குண்டு. தசம் என அனைவராலும் அன்பாக அழைக்கப்படும் தமிழருவி த.சண்முகசுந்தரம் ஆசிரியரவர்கள் ஏறக்குறைய அறுபது ஆண்டுகள் வாழ்ந்து இயற்கை எய்தினார். இவர் தஞ்சாவூர்த் தமிழ்ப்பல்கலைக் கழகத்தில் புலமைப்பரிசில் பெற்றமை

குறிப்பிடத்தக்கதாகும்.மிகச்சிறந்த எழுத்தாளர், பயன்தரத்தக்க பல நூல் களை எழுதியவர்.பெருமக்கள் சிலரின் வாழ்க்கை வளங்களை போற்றும் வகையில் சுயசரிதை நூல்வடிவில் எழுதியமை குறிப்பிடத் தக்கது. உண்மையான இலக்கியச் செல்வங்களென்றே இவரின் கைவண்ணத்தில் வெளிவந்த நூல்களைக் கூறலாம். 1986 ஆம் ஆண்டு வாழ்வுலகை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

**சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**



1925.01.07 ஆம் நாள் மல்லாகத்தில் பிறந்தவர். சைவத்தமிழ் எழுச்சியில் ஆற்றிய சமய ஆன்மீகப் பணிகளுடன் சைவம் வாழவேண்டும், சைவத் தமிழ் ஒழுக்கம் பேணப்பட வேண்டும் என்ற வகையில் நாவலர் பெருமானுக்கு அடுத்த படியாக அவர் வழியில் நின்று உலகளாவிய மட்டத்தில் வாழும் சைவத் தமிழ்ப் பெண்கள் எல்லோரிலும் முதன்மையானவராகத் திகழ்கின்றார். பண்டிதர், சைவப் புலவர் பட்டங்களைப்பெற்று ஆசிரியராக 31 ஆண்டுகள் பணிபுரிந்த இவர் தன்னுடைய பேச்சுத்திறத்தால் நாட்டின் வட திசையின் கொடு முடியாகத் திகழும் நகுலேஸ்வரர் ஆலயம் முதல் மத்திய மாகாணத்தின் மணிமுடியாகத்திகழும் ஹற்றன் மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் வரை இவரது கணீரென்ற குரலோசை ஒலித்தமையும் சைவத்தமிழ் எழுச்சி எங்கும் பரவியமையும் கண்கூடு. இதுபோலவே இந்தியா முதல் பற்பல நாடுகளுக்கும் சென்று சைவத்தமிழ்ப் பெருமையை பறைசாற்றி நின்ற திறத்தால் அவர் பெற்ற பட்டங்களோ அனந்தம். ஆனால் மார்கழித் திருவாதிரை காலத்தில் காரைநகர் ஈழத்துச்சிதம்பரத்தில் அவர் ஆற்றிய உரைகளின் எழுச்சி கண்டு அவர்களால் வழங்கப்பட்ட சிவத்தமிழ்ச் செல்வி என்ற பட்டமே அவருடன் என்றும் நின்று பெருமை சேர்த்தது என்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.இதுவன்றி சைவம் வாழ வேண்டும் என்பதை நோக்காகக்கொண்டு தான் பிறந்த ஜனவரி ஏழாந் திகதியை அறக்கொடை விழாவாக ஆரம்பித்து அத்தினத்தில் ஒவ்வோர் ஆண்டும் ஓரிரு நூல்களை வெளியிட்டு அதன் மூலம் வருகின்ற நிதியினை அறக்கொடைக்கே வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

ஆசிரியப்பணி, சமூகப்பணி, ஆலய அறங்காவல்ப்பணி, சொற்பொழிவுப் பணி ஆகிய பன்முகப் பணிகளால் மக்கள்பணி செய்தவர். தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவராக 1977 ஆம் ஆண்டு பொறுப்பேற்று இறக்கும் வரை பணியாற்றியவர். இவரது காலத்தில் தெல்லிநகர் துர்க்கைஅம்மன் ஆலயம் பேரெழுச்சி கண்டமை வரலாற்றில் மறுக்கமுடியாத உண்மை. இங்கு மகளிர் இல்லம், அன்னையரில்லம், சைவத்தமிழ் ஆய்வுநூலகம், யாத்திரிகர்மடம் எனப்பல அமைப்புக்களை நிறுவியவர். பல நூல்களின் ஆசிரியராகவும், பழம் பெரும்நூல்களின் பதிப்பாசிரியராகவும் திகழ்கின்றார். சிங்கப்பூர், மலேசியச்சொற்பொழிவுகள், இலண்டனில் ஏழுவாரம், பத்துச்சொற்பொழிவுகள், கந்தபுராணச் சொற்பொழிவுகள், முதலான இவரது நூல்களும்,இவரைத் தலைவியாகக் கொண்டமைந்தமணி விழாமலர், சிவத்தமிழ் இன்பம், பவளவிழாமலர், தங்கம்மா நான் மணிமாலை, தங்கத்தலைவி போன்ற நூல்களும், இவரால் பதிப்பிக்கப் பெற்ற நூல்களான பெரியபுராணவசனம், அரியவும் பெரியவும்-பகுதி1, பகுதி11, சைவபோதம், அபிராமிஅந்தாதி,கந்தபுராணச் சுருக்கம் சைவக்கிரியைகளும் விரதங்களும் போன்றனவும் குறிப்பிடத்தக்கது. இவருடைய தன்னலம் கருதாத பணிகளைப் பெருமைப்படுத்தும் நோக்கில் யாழ் பல்கலைக்கழகம் 1997ஆம்ஆண்டு கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. 2008.06.15ஆம் நாள் வாழ்வுலகை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

### செல்வி அன்னலச்சுமி சின்னத்தம்பி



1934-01-11 ஆம் நாள் மாவிட்டபுரத்தில் பிறந்தவர். தெல்லிப்பளையில் விழிப்புலன் அற்றோர் இல்லம் ஒன்றை ஸ்தாபித்து ஒரு சிறந்த நிர்வாகக் கட்டமைப்பில் பார்வை இழந்த பிள்ளைகளைத் தேடி ஒன்று சேர்த்து பார்வை இழப்பு வாழ்வின் முடிவல்ல.... பாரினில் மேன்மை காண அது ஒரு தடையல்ல...... என்ற தூர நோக்குடன் அவர்களை அன்புடன் அரவணைத்து பராமரிப்பதிலும், அவர்களது நல்லறிவை வளர்ப்பதிலும் அவர்களது தனித்திறமைகளை இனம் கண்டு

அவற்றிற்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து வளர்த்தெடுப்பதிலும்,தமது பணிகளைத்தாமே செய்வதிலும் மேம்பாடுள்ள பிள்ளைகளாக அவர் களை மிளிர வைப்பதில் ஒரு சிறந்த கர்மபலத்தியாகியாகத் தன் வாழ்வை அர்ப்பணித்தவர். தெல்லிப்பளையிலிருந்து இடம் பெயர்ந்து மருதனார் மடம் சபாபதிப்பிள்ளை வீதியில் நிரந்தரக்கட்டடம் அமைத்து வாழ்வகத் தின் உயர்ச்சிக்கு அடிகோலியவர். இவரால் இன்று எத்தனையோ மாணவர்கள் கல்வியில் உயர்ந்து கல்வியியலாளர்களாக மிளிர்ந்து வாழ்ந்து வருவதும் கண்கூடு. இவரது தன்னலமற்ற சேவை போற்றப்பட வேண்டியது. 2006.09.11ஆம் நாள் வாழ்வுலகை நீத்துக்கொண்டார்.

**இரத்தினசபாபதி இராஜேஸ்வரன்**



யாழ்ப்பாணம் தெல்லிப்பளை வசாவிளானைப் பிறப் பிடமாகவும் சென்னையை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் 1946.01.30 ஆம் நாள் பிறந்தார்.சிலோன் விஜயேந்திரன் என்ற பெயரில் திரைப்பட நடிகராகவும், கவிஞராகவும்,எழுத்தாளராகவும் விளங்கியவர். சிறந்த தமிழாற்றலும், பரந்துபட்ட நூலறிவும், அபாரமான கற்பனை வளமும் நல்ல நடிப்பாற்றலும், உலகளவில் சினிமாவைப் பற்றிய புதியவிசய ஞானமும் தன்னகத்தே கொண்டிருந்தவர். இருந்தாலும் சமூகத்தை இனங்காண்பதற்கு இவர் தெரிந்தெடுத்த பரிமாணம் நடிப்பு ஆகும். எழுத்தாழராகவும்,நடிகராகவும் ஏக காலத்தில் தொழிற்படும் ஆற்றல் பெற்றிருந்த மிகச் சிறந்த ஆக்க இலக்கிய புலமையாளர் என்று குறிப்பிடுவது பொருத்தமானதே.கம்பதாசன் கவிதைத்திரட்டு நூல் வெளியிடுவதற்கு முன் நின்றுழைத்தவர். இலக்கியம், இலக்கணம் மட்டுமன்றி நடிப்புக்கலையிலும் முத்திரை பதித்தவர். இந்திய சினிமாவில் வில்லன் பாத்திரமேற்று நவரசங்களை நடிப்பில் வெளிப்படுத்தி நடித்து சிலோன் விஜயேந்திரன் என்று கௌரவமாக அழைக்கப்படலானார். ஈழ நாட்டுப் புலவர்கள்,பாரதியார், விவேகானந்தரின் உபதேசங்கள் போன்ற பல நூல்களைத் தொகுத்து வெளியிட்டவர். ஈழத்தின் புகழ் பூத்த கண்டனக் கவிஞர் எனப் போற்றப்படும் கல்லடி வேலுப்பிள்ளை அவர்களின் பேரன் என்பதும் குறிப்பிடத்தக்கது. 2004.08.03ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.


## ஆறுமுகம் மகாதேவன்



1947.10.19 ஆம் நாள் தெல்லிப்பளை குரும்பசிட்டி எனும் இடத்தில் பிறந்துவசாவிளான்மத்திய மகாவித்தி யாலயம், யாழ் இந்துக்கல்லூரி ஆகியவற்றில் இரசாயன வியல் கற்பிக்கும் மிகச்சிறந்த ஆசிரியராகக் கடமை யாற்றியவர். மேலும் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகவும் கடமையாற்றியவர். மும்மொழிப் புலமைமிக்க இவர் சிறந்த பேச்சாளர். தமிழ் மொழி மூலம் பல இரசாயன நூல்களை வெளியிட்டவர். மெய்ஞ்ஞானம், கலை இலக்கியம், ஆகிய வற்றிலும் ஆற்றலுடையவர். சிறந்த பாடகர். இத்துறையில் சேதன இரசாயனம், அசேதனஇரசாயனம், பொதுஇரசாயனம், பௌதீக இரசாயனம் போன்ற பல நூல்களை வெளியிட்டவர். சேதன இரசாயனம் கற்பிப்பதில் மிகவும் பாண்டித்தியம் பெற்றவர். இவரிடம் கல்வி பயின்ற மாணவர்கள் பலர் இன்று வைத்தியத்துறையிலும், பொறியியற் துறையிலும், ஆசிரியத் துறையிலும் இன்னும் பலதுறைகளிலும் சிறந்து விளங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. 2002.01.01 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

# இசைக்கலைஞர்கள்

## வயிரவிப்பிள்ளை கந்தையா நடராஜா



1938.09.24 ஆம் நாள் அளவெட்டி என்னும் இடத்தில் பிறந்தவர். இவரது இசையார்வத்தைக் கண்ட பெற்றோர் இந்தியாவிலிருந்து வருகை தந்த சைவக்குருக்கள் மறைக்காடு தேசிகரவர்கள் உருவாக்கிய அளவெட்டி சைவவாலிபர் சங்கத்தில் இணைக்கப்பெற்ற பாடசாலை ஊடாக பண்ணிசைப்பயிற்சியை ஆரம்பத்தில் பெற்றவர். தொடர்ந்து யாழ்ப்பாணம் கொட்டடியைச்சேர்ந்த மூர்த்திஐயரிடம் ஆறு வருடங்கள் தொடர்ந்து பயின்றவர். பின்னர் அளவெட்டியில் உருத்திரா பதி, இசைப்புலவர் சண்முகரட்ணம் ஆகியோர்களிடமும் பயின்றவர். 1958ஆம்ஆண்டு தமிழகம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அப்துல்கலைக்கழக விரிவுரையாளரான ரீ.கே.சங்கராச்சாரியார், இசை

யரசு எம்.எம். தண்டபாணி தேசிகர், திருப்பாம்புரம் சிவசுப்பிர மணியபிள்ளை, மன்னார்குடி இராஜகோபாலபிள்ளை, மைலம் வச்சிர வேலு முதலியவர்களிடமும் இசையைப் பயின்று சங்கீதபூஷணம் பட்டம் பெற்றவர். இவரது இசைஅரங்கேற்றம் 1962 ஆம் ஆண்டு கும்பழா வளை விநாயகர் ஆலயத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. பண் ணிசை, கருநாடக சங்கீதம் ஆகியதுறைகளில் பல மாணவர்களையும் இசையாளர்களையும் உருவாக்கிய வலிகாமம் வடக்கின் மூத்த இசையாளராவார். சங்கீத ஆசிரியராக 42வருடங்கள் கடமையாற்றி 53மாணவர்களை இசையாசிரியர்களாக உருவாக்கியவர். அத்துடன் யாழ்பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழகத்தின் இசைத் துறையில் வருகை விரிவுரையாளராகவும் கடமையாற்றியவர். வலிகா மம் வடக்கு கலாசாரப் பேரவையின் உப தலைவராக பணியாற்றி வரு கின்றார். இவரது புதல்விகள் இருவர் தந்தைவழியில் கடல் கடந்த நாடு களில் இசைக்கலையில் பிரகாசித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. இவரது இத்தகைய சேவைகளைப் பாராட்டி வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவை கலைச்சுடர் என்ற கௌரவ விருதினையும் இலங்கை அரசின் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கலாபூஷணம் விருதும், இந்துசமய அலுவல்கள் திணைக்களத்தினால் கலை ஞானகேசரி என்ற விருதும், இந்துசமய பேரவையினால் சிவகலாபூஷணம் என்ற விருதும் வழங்கப்பெற்றவர். திருகோணமலை, அனுராதபுரம், மட்டக்களப்பு, கிளிநொச்சி போன்ற மாவட்டங்களிலும், யாழ்ப்பாணத்தின் ரசிகரஞ் சனசபா, திருநெல்வேலி மும்மூர்த்திகள் இசைக் கலைமன்றம், நல்லூர் இளங்கலைஞர் மன்றம், இலங்கை வித்துவசபை ஆகிய இடங்கள் மட்டுமன்றி 2002ஆம் ஆண்டு இலண்டன் மாநகரிலும் இசைக் கச்சேரி யினை நடத்தியவர். மேலும் சிறுவர்களுக்கான அடிப்படை இசைக்கல்வி நூல்களை வெளியிட்டவர். அருட்கவி விநாசித்தம்பிப் புலவரவர்களால் இயற்றப்பெற்ற பல பாடல்களுக்கு மெட்டிசைத்துப் பாடியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. 1998 ஆம் ஆண்டு வடக்குக் கிழக்கு மாகாண வதிவிடசங்கீதக் கருத்தரங்கினை தலைமையேற்று நடத்தியவர்.

## இசைமணி வல்லிபுரம் செல்லத்துரை



கொல்லங்கலட்டி தெல்லிப்பளையில் பிறந்த இவர் இசைக்குயில் K.P.சுந்தராம்பாள் பாடியுள்ள "ஞானப் பழத்தைப் பிழிந்து" எனும் இராகமாலிகையை $5\frac{1}{2}$ கட்டை சுருதியில் பாடிப்பழகி, கோயில் விழாக்களில், சபாக்களில் அவ் இராகமாலிகையைப் பாடி அனைவராலும் பாராட்டப்பட்டவர். மாவிட்டபுரம் நாதஸ்வரமேதை உருத்திராபதி அவர்களைத் தனது ஆரம்ப குருவாகக் கொண்டு இசைக் கலையைப் பயில ஆரம்பித்தவர். உருத்திராபதி ஆசிரியர் அவர்களிடம் 1950 ஆம் ஆண்டு தொடக்கம் இசை கற்று, வட இலங்கைச் சங்கீத சபையின் பரீட்சையில் 6ஆம் தரத்திலும் சித்தி பெற்றவர். தென்னிந்திய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசை பயின்று 1961 ஆம் ஆண்டு "இசைமணி" பட்டம் பெற்று முதற் பிரிவில் சித்தியடைந்தவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இசை கற்பித்தவர்களான பேராசிரியர் T.K.ரங்காச்சாரி, திரு.M.M.தண்டபாணிதேசிகர், திருப் பாம்புரம் T.N.சிவசுப்பிரமணியபிள்ளை, மன்னார்குடி இராஜகோபால் போன்றவர்களிடம் இசையைப் பயின்ற பெருமைக்குரியவர். திரு.M.A. கல்யாணகிருஷ்ணபாகவதர் அவர்களிடம் பஞ்சரத்ன கிருதிகளை நேரடியாகக்கற்றவர். பின்னர் இலங்கை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மாணவனாக இணைந்து மஹாவித்துவான் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் போன்றோரிடம் இசை பயின்றுள்ளார். கோப்பாய் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் பயிற்றப்பட்ட ஆசிரியராகவும், இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத் தேர்வில் சித்தி பெற்று A தர பாடகராகவும் விளங்கியுள்ளார். யாழ்ப்பாணம், கொழும்பு போன்ற இடங்களில் தியாகராஜ ஆராதனை விழாக்களில் பங்குபற்றிப் பாடிப்பாராட்டுப் பெற்றுள்ளவர். நல்லை ஞானசம்பந்தர் ஆதீன பீடாரோகண விழாவில் 1976 ஆம் ஆண்டு "கானாம்நாதபூஷணம்" என்னும் பட்டம் கொடுக்கப்பட்டமை, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தினால் "கலைஞானசேரி" எனும் பட்டம் 2001 ஆம் ஆண்டு மூத்த கலைஞர் கௌரவிப்பின் போது கொடுக்கப்பட்டமை, இலங்கை இந்து கலாசாரத்

திணைக்களத்தினால் 1999 ஆம் ஆண்டு "கலாபூஷணம்" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை என்பன குறிப்பிடத்தக்க விருதுகள் ஆகும். மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலைமன்றத்தில் 12 வருடங்கள் இசையாசிரியராகப் பணியாற்றியவர். 1991 ஆம் ஆண்டு மருதனார்மடம் கோட்ட இசை ஆசிரியஆலோசகராகவும் பின்னர் தொலைக்கல்விப் போதனாசிரியராகவும் கடமையாற்றியவர். அதன் பின்னர் 1996 ஆம் ஆண்டு தொடக்கம் 2001 ஆம் ஆண்டு வரை யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் வருகை தர விரிவுரையாளராகவும், வேதசிவாகம குருகுல கலாசாலை (ஆனைப் பந்தி)யில் சில வருடங்கள் பண்ணிசை ஆசிரியராகவும் கடமை புரிந்துள்ளார்.

**கலாபூஷணம் கந்தையா சந்திரகேது**



1936.04.21 இல் பிறந்த இவர் தனது ஆரம்பக்கல்வியை கொல்லங்கலட்டி சைவ வித்தியாலயத்திலும், பின் உயர்தரக் கல்வியை தெல்லிப்பளை யா/யூனியன் கல்லூரியிலும் பயின்றவர்.இளவயதிலேயே அக்கால இசைவித்துவான்களான ஆ.தண்டபாணி தேசிகர், மதுரை சோமசுந்தரம், முசிறி சுப்பிரமணிஐயர், மதுரைமணி ஐயர், இவர்களின் பாடல்களை இசைத்தட்டுக்களிலும், வானொலிகளிலும் கேட்டு தனது இசைப்புலமையை வளர்த்தார். பின் மாவிட்டபுரம் பிரபல நாதஸ்வர வித்துவான் திருவாளர் உருத்திராபதியிடம், குருகுலவாச முறைப்படி கல்வியைப் பயின்று, பின்னர் பிரபல சங்கீத பூஷணம் அளவையூர் வர்ணகுலசிங்கம் அவர்களிடம் சிட்சை பயின்றவர். அதன் பின் மகாராஜயாவும் விஷ்வநாத ஐயரின் மகன் சங்கீத வித்துவான் சந்தானம் ஐயரிடம் (இசைப்பேராசிரியர் இராமநாதன் நுண்கலைப்பீடம்) பயின்றவர். பண்ணிசை பாடுவதிலும் வல்லவர். திருவாதுறை ஆதீன வித்துவான் சோமசுந்தரதேசிகரிடம் கற்றுத் தேர்ச்சி பெற்றவர். பண்ணிசைச் செல்வன், கவிவாளன் போன்ற பட்டங்களைப் பெற்றவர். சீர்காழி கோவிந்தராஜன் பாடிய தேனொழுக செந்தமிழ் என்னும் என்னும் ராகமாலிகையைப் பாடிப்புகழ் பெற்றவர். இலங்கையரசு 2000 ஆம் ஆண்டு கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவித்தது. இலங்கை வானொலிக் கலைஞராகவும் பணியாற்றியவர்.

## தம்பிராசா சிவசுப்பிரமணியம்




1938.11.05 ஆம் நாள் பிள்ளையார் கோவிலடி கட்டுவன் தெற்கு தெல்லிப்பளை என்னும் இடத்தில் பிறந்து அளவெட்டி வடக்கினை தற்காலிக இடமாக அரவ ணைத்து வாழ்ந்து வருகின்றார். 30 வருடங்களுக்கு மேலாக புல்லாங்குழல் இசைப்பதில் மிகுந்ததிறன் வாய்ந்தவராக விளங்குகின்றார். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த திருவிழாக்களில் இவருடைய புல்லாங்குழல் இசைக்கச்சேரி நடைபெறுவது வழக்கம். தற்போது இடம்பெயர்ந்த சூழ்நிலையிலும் மாவைக் கந்தனுடைய ஹாம்யோற்ஷவ திருவிழாக்களில் இவருடைய புல்லாங்குழல் இசைக்கச்சேரி நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## திருமதி நேசபூபதி நாகராஜா



1942.03.09 ஆம் நாள் தென்மயிலை மயிலிட்டி தெற்கு தெல்லிப்பளை என்ற இடத்தில் பிறந்து சீகல்வான்ஷன் 55 ஆவது ஒழுங்கை வெள்ளவத்தை கொழும்பு - 6 என்னும் முகவரியில் வசித்து வருகின்றார் அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தின் சங்கீத பூஷணம் பட்டம் பெற்றவர். 40 வருடங்களுக்கு மேல் சங்கீத ஆசிரியராகப் பணியாற்றி யதுடன் இலங்கை வானொலியிலும் பல மேடைகளிலும் இசைக் கச்சேரி களை நிகழ்த்தியவர். வலிகாமம் வடக்கின் மூத்த ஆக்க இலக்கியப் புலமையாளரான அனு.வை நாகராஜன் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிதம்பரப்பிள்ளை செல்வரட்ணம்



1943.05.03 ஆம் நாள் காங்கேசன்துறை தையிட்டி என்னும் இடத்தில் பிறந்தவர். தற்பொழுது J/229 துர்க்காபுரம் மகாதனை தெல்லிப்பளை என்னும் முகவரியில் தற்காலிகமாக வாழ்ந்து வரும் இவர் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் ஒப்பந்த அடிப்படையில் ஆங்கில ஆசிரியராக கடமைபுரிந்து வருகின்றார்.

பண்ணிசைக் கலைஞரான இவர் வல்லின, மெல்லின, இடையின திருப்புகழ்களை நுணுக்கமாகவும், சபையோரைக் கவரும் வகையிலும் இசைக்க வல்லவர். இதன் காரணமாக திருப்புகழ் வாருதி என்னும் பட்டம் வழங்கப் பெற்றவர். இதனைவிட ஆர்மோனியம் வாசிப்பதிலும், அதனைக் கற்பிப்பதிலும் ஆற்றல் உடையவர்.

### செல்லத்துரை இராசா



மல்லாகம் காளிகோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர்.பக்கவாத்தியக் கருவி களில் ஒன்றான முகர்சிங்வாசிப்பதில் ஈடினையற்ற வராகவும், தொழில் முறைக்கலைஞனாகவும் திகழ்ந்து வருவதுடன் தனி ஆவர்த்தனக் கச்சேரி நிகழ்த்து வதிலும், மிருதங்கம்,டோல்கி போன்ற இசைக் கருவிகளை வாசிப்பதிலும் வல்லவர். வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையின் நிர்வாக உறுப்பின ராகவும் பணியாற்றியவர். 1969 ஆம் ஆண்டிலிருந்து மிருதங்கம் வாசிப் பதிலும், 1974 ஆம் ஆண்டிலிருந்து மோர்சிங் இசைப்பதிலும் ஈடுபடத் தொடங்கினார். மிருதங்க வித்துவான் ப.சின்னராசா அவர்களின் வழி காட்டலிலே மிருதங்கத்தினையும் தனது சொந்த முயற்சியால் மோர்சிங் இசைக்கருவியையும் வாசிக்கத் தொடங்கினார். 1973 ஆம் ஆண்டில் மல்லாகம் காளிதேவி ஆலயத்தில் மிருதங்க அரங்கேற்றம் செய்தார். 1994 இல் கம்பன் விழாவிற்கு யாழ் பல்கலைக்கழக இசைவிழாவிற்கும், 1999 இல் சந்நிதி வசந்தன் ஒலி நாடாவிற்கும், 2002 இல் நல்லை சம்பந்த ஆதீன சிறப்பு விழாவிற்கும் மோர்சிங் பக்கவாத்தியகாரராகச் சேவையாற்றியுள்ளார். 2002 இல் சர்வதேச இந்து மத குருபீடத்தினால் "இசை ஞான கலாபமணி", 2003 இல் வலிகாமம் வடக்கு கலாசார பேரவையால் "கலைச்சுடர்" ஐயனார் சனசமூக நிலையத்தினால் "லய வாருதி" தெல்லிப்பளை பாலர் ஞானோதய சபையால் "நல் மாணாக்கன்" எனும் பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்.

## சின்னத்தம்பி ஈஸ்வரதாசன்




1946.03.19 ஆம் நாள் தெல்லிப்பளை கொல்லங்கலட்டி என்னும் இடத்தில் பிறந்து சைவசமயத்தைத் தழுவிய வராக தற்பொழுது துர்க்காபுரம் தேவஸ்தானத்தில் பௌராணிகராகத் தொண்டாற்றி வருகின்றார். 40 வருடங்கள் இத்துறையில் அனுபவம் பெற்றவர்.

## சிற்றம்பலம் சிவானந்தராஜா




1950.09.27ஆம் நாள் அலுக்கை அளவெட்டியில் பிறந்து தற்பொழுது செட்டிக்குறிச்சி பண்டத்தரிப்பு என்ற இடத்தில் வசித்து வருகின்றார். வாய்ப்பாட்டிசை திரு முறைப்பண்ணிசை போன்ற கலைத்துறைகளில் அரிய சேவைகள் ஆற்றி வருகின்றார். வட இலங்கை சங்கீத சபையினரின் சங்கீத ஆசிரியர் தராதரப்பத்திர அகில இலங்கை இந்து மாமன்றத்தினரின் திருமுறைப் பண்ணிசைமணி, சங்கீத சபையினரின் சங்கீதகலாவித்தகர் போன்ற பட்டங்களைப் பெற்றவர். இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்தாரின் குரல் தேர்வில் வாய்ப்பாட்டிசை, திருமுறைப்பாடல்கள், மெல்லிசை மூன்றிலும் சித்தி பெற்று 1974-1983 காலப்பகுதியில் வானொலிக் கலைஞராகத் திகழ்ந்தவர். இவருடைய கலைத்துறை ஆக்கங்களாக கர்நாடகசங்கீதம் - கையேடு 1, இலக்கிய இசைச்சாரல் நூல், அருளிசைப்பாடல்கள் நூல், ஈழத்துக்கலைத்துறைப் பதிவுகள், கர்நாடக சங்கீதம் 72 மேள கர்த்தாக்கள் கையடக்க நூல், கலைமுகங்கள்நூறு போன்ற ஆக்கங்களை வெளியிட்டவர். கர்நாடக சங்கீத வாய்ப்பாட்டிசை, திருமுறைப்பண்ணிசை வகுப்புக்களை மாண வர்களுக்கு கற்பித்து வருகின்றார். இவரால் எழுதப்பெற்ற ஈழத்துக் கலைத் துறைப்பதிவுகள் என்னும் நூலில் நுண்கலைகளுடன் தொடர் பான கலைஞர்களின் நூலாக்கங்கள், கௌரவிப்புகள்,அரங்கேற்ற நிகழ் வுகள், ஒலிஒளிப்பதிவு நாடாக்கள், கலைமன்றங்களடங்கிய சுமார் ஆயிரத்திற்கு மேற்பட்ட தகவல்களை உள்ளடக்கியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

### திருமதி சிவரூபி சொக்கலிங்கம்



1951.03.28 ஆம் நாள் அளவெட்டி என்னும் இடத்தில் பிறந்து இசை அழகியற்கலைகளில்22 வருடங்களுக்கு மேலான அனுபவம் உடையவராகவும், இசைமணி செல்லத்துரை அவர்களை முதற்குருவாகக் கொண்டும் இசைபயின்றவர். இசைமணியவர்கள் இந்தியாவிற்குச் சென்றகாரணத்தினால் சங்கீதபூஷணம் வீ.கே.நடராஜா அவர்களிடம் தொடர்ந்து இசைபயின்றவர். மேலும் அளவையூர் இசைக்கலைமன்றம் நடத்திவந்த இசைப்பயிற்சி வகுப்புகளில் பல காலம் இசைக்கலையைப் பயின்றவர். யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழகத்தின் கர்நாடகசங்கீத டிப்ளோமாவும், கல்வியியலில் பட்டப்பின் டிப்ளோமா பட்டமும் பெற்றவர். வட இலங்கை சங்கீதசபையின் சங்கீதபாட ஆசிரியர் தராதரப் பரீட்சையில் சித்தி பெற்று சங்கீத கலாவித்தகர் பட்டம் பெற்றவர். தனது முதற் கச்சேரியை அளவெட்டி கும்பழாவளை விநாயகராலயத்தில் நிகழ்த்தியவர். தற்பொழுது அளவெட்டி சதானந்தா வித்தியாசாலையில் அதிபராக கடமையாற்றி வருகின்றார். வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையின் நிர்வாகசபை உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

### திருமதி பாகீரதி கணேசதுரை



1952.12.02 ஆம் நாள் மாவிட்டபுரம் என்னும் இடத்தில் பிறந்து லக்ஸ்மிஸ்தான் உடுவில் வீதி மருதனார்மடம் என்னும் முகவரியில் தற்காலிகமாக வாழ்ந்து வருகின்றார். சங்கீத ஆசிரியரான இவர் சொல்லாடல், நாடகம், படைப்பிலக்கியம்,உளவியல் போன்ற துறை களில் செயற்பட்டு வருகின்றார். வடஇலங்கை சங்கீதசபையின் நாடகத் துறையில் ஆசிரியர்தராதரப்பரீட்சையில் சித்தியெய்தி கலாவித்தகர் பட்டம் பெற்றவர்.30வருடங்களுக்கு மேலான கலைத்துறை அனுபவத்தினை கொண்டுள்ளதுடன் தற்பொழுது தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் நாடக ஆசிரியராகக்கடமையாற்றி வருவதுடன் பல நாடகங்களை எழுதி

நெறிப்படுத்தி அரங்கேற்றியதுடன் பல நாடக களப்பயிற்சிகளையும் நடத்தி வருகின்றார். அத்துடன் கவிதை பாடுவதிலும் ஆற்றல் உடையவர். இவரு டைய புதல்வர்களான அபயன் மற்றும் தீபன் ஆகிய இருவரும் இசைத்து றையில் பிரகாசித்து சாதனை படைத்துள்ளதுடன், இசை அல்பங்க ளையும் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திரு.சிற்றம்பலம் சிவஞானராஜா

1952.09.18ஆம் நாள் அலுக்கை அளவெட்டி கிழக்கு என்னும் இடத்தில் பிறந்து கொக்குவிலில் தற்காலிகமாக வசித்துவருகின்றார். சிறந்த சைவப்பற்றாளர். வீ.கே.நடராசா ஆசிரியவர்களை முதற்குருவாகக் கொண்டு இசைக்கலையைபயில ஆரம்பித்தவர். பின்னர் பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் இசைமாணி பொன்.முத்துக்குமார். திரு ஏ.திலகேஸ்வரன்,திருமதி மல்லிகாதேவி போன்றவர்களிடமும் இசையைப் பயின்றவர். தமிழார்வம் கொண்ட இவர் தானாகவே பாடல் களை இயற்றி இசையமைத்துப்பாடக்கூடிய ஆற்றலுள்ளவர்.அந்த வகை யில் அளவெட்டி கும்பழாவளை விநாயகர் மீது பாடிவெளியாகிய ஒலி நாடா குறிப்பிடத்தக்கது.34 வருடங்களுக்கு மேல் சங்கீத ஆசிரியராகக் கடமை யாற்றி வருவதுடன் நூலாசிரியராகவும் விமர்சகராகவும் செயற்பட்டு வருகின்றார். திருமலைஅமுது, ஸ்கந்தன், பஞ்சாமிர்தம், கிராமியப் பாடல்கள், அழகு தமிழ் போன்ற நூல்களையும் சங்கீத வினா விடை போன்ற பல இசைத்துறைசார் நூல்களையும் வெளியிட்டவர். இவரு டைய இத்தகைய சேவைகளை கௌரவிக்குமுகமாக இந்துகலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கலைஞான கேசரி என்னும் விருது வழங்கப் பெற்றவர். இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத் தாபனத்தில் பக்தமஞ்சரி, கிராமியப் பாடல்கள், பாமாலை, இசைச் சித்திரம், பேச்சு, அப்துல்ஹமீத்துடன் முப்பது நிமிடம் என்ற பேட்டிநிகழ்ச்சி எனப்பல நிகழ்ச் சிகளை தயாரித்து சாதனை செய்தவர்.வட இலங்கை சங்கீத சபையில் கர் நாடக சங்கீதத் துறையில் ஆசிரியர் தராதரபரீட்சையில் சித்தியெய்தி கலா வித்தகர் பட்டம் பெற்றவர்.

## நாகமுத்து இரகுநாதன்



காங்கேசன்துறையில் 1954-01.11 ஆம் நாள் இலங்கை வானொலி நிலையக் கலைஞரான ஆர்மோனிய வித்து வான் அண்ணாவி நாகமுத்துவின் மகனாக பிறந்தவரே ஈழத்து சௌந்தரராஜன்என்று அனைத்து மக்களாலும் அழைக்கப்படும் N.ரகுநாதன் ஆவார். இவர் தனது 6 வயதில் தந்தையாரின் வழிகாட்டலில் கர்நாடக சங்கீதத்தை கற்க ஆரம்பித்தார். மாவிட்டபுரம் உருத்திராபதி ஆசிரியரிடம் ஆரம்ப அறிவைப் பெற்றுக் கொண்ட இவர் தனது 12வது வயதில் தனி மேடைக்கச்சேரியை மேற்கொண்டார். கித்தூர் சுப்பிரமணியம்பிள்ளை, ஐயாக்கண்ணு, தேசிகர் தனதேவி சுப்பையா, சரஸ்வதி பாக்கியராஜா, சங்கர்ஐயர் போன்ற குருக்களிடம் தனது சங்கீத அறிவை வளர்த்துக் கொண்ட இவர் 1973ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் மெல்லிசை கலைஞராகவும், 1974ம் ஆண்டு தொடக்கம் கர்நாடக கலைஞராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு இன்று வரை தனக்கென தனியிடத்தை தக்க வைத்துள்ளார். 1988ம் ஆண்டு வானிசை திலகம் ஆ.மோகன் ராஜின் அழைப்பில் "அப்ஸ்சராஸ் இசைக்குழுவில் இணைந்து கொண்டார். "சின்னஞ் சிறிய வண்ணப்பறவை"என்ற பாடலுடன் அப்ஸசராவின் பெயரையும் தனது பெயரையும் உலகம் முழுவதும் பிரபல்யமாக்கிக் கொண்டார். சினிமா உலகின் சிகரங்களான T.M.S.சௌவுந்தரராஜன் P.சுசீலா, ஜானகி, வாணிஜெயராம், ஜிக்கி, ஜமுனாராணி, P.லீலா, L.R.ஈஸ்வரி, K.J.யேசுதாஸ் தொடக்கம் இன்றைய முகேஷ், மாலதி வரைக்கும் இணைந்து பாடிய ஒரேயொரு இலங்கைக் கலைஞன் என்ற புகழையும் தன்னகத்தே கொண்டுள்ளார். T.M.சௌந்தரராஜனால் "எனது அவதாரம் ரகுநாதன்" என்ற பாராட்டைப் பெற்றவர். மாத்தளை இந்து தேசிய கல்லூரியில் சங்கீத ஆசிரியராக 1989ம் ஆண்டு தொடக்கம் கடமையாற்றி வருகின்றார். கீதகலாபூஷணம் இசைஞானமணி, இன் னிசை திலகம்,கலைமணி,கலாரத்தின இசை வாருதி என பல கௌரவப் பட்டங்களைப் பெற்றுக் கொண்ட இவர் அவுஸ்திரேலிய அமெரிக்கா தவிர்ந்த அனைத்து நாடுகளிலும் தனது குரல் வளத்தால் ரசிகர்களைத் தனதாக்கிக் கொண்ட ரகுநாதன் இலங்கையின் தேசிய கலைஞர் என்பது குறிப்பிடத்தக்கது.

## திருமதி தெய்வீகசவுந்தராராணி செளந்தராராஜனி



1954.12.08ஆம் நாள் அளவெட்டி எனும் இடத்தில் பிறந்தவர்.இசை ஆசிரியரான இவர் வயலின் வாசிப் பதில் மிகுந்த ஆற்றல் உடையவர். வடஇலங்கை சங்கீத சபையின் சங்கீத ஆசிரியர்தராதரப் பரீட்சையில் சித்தியெய்தி கலாவித்தகர்பட்டம் பெற்றவர்.கலை நிகழ்வுகளுக்கு பின்னணி இசையமைப்பாளராக பணிபுரிபவர். தெல்லிப் பளை மகாஜனக்கல்லூரியில் இசையாசிரியராகக் கடமையாற்றும் இவர் அக்கல்லூரியின் தயாரிப்புகளான நாடகங்கள், நடனம்,நாட்டிய நாடகங்கள், இன்னிசைக்கச்சேரிகள் எனப் பலநிகழ்வுகளுக்கும் வயலினை இசைப்பது மட்டுமல்லாமல் வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையின் கலாசார விழா நிகழ்வுகள் மற்றும்கலை முயற்சிகளுக்கு வயலின் இசைக்கலைஞராகப் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. இசைக்கலை மணி, கலைஞானகேசரி ஆகிய விருதுகள் பெற்றவர்.

## குலசேகரம் கமலேஸ்வரன்



1955.12.25 ஆம் நாள் அளவெட்டி காத்தவராயன் கோயிலில் என்ற இடத்தில் பிறந்தார். தெய்வங்கள் மீதான கீர்த்தனைகளை இயற்றிப்பாடி வரும் இக் கலைஞர் தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் சந்நிதியான் சைவ பண்பாட்டுப்பேரவை, கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம், பொன்னாலை கிருஸ்ணன் ஆலயம் போன்ற வற்றில் தனது கீர்த்தனைகளைப் பாடி ஆன்மீக வழியில் வாழ்ந்து வரும் பெருமைக்குரியவர். இவரால் இயற்றி வெளியிடப்பட்ட முதற்பதிப்பான நாம இன்பரசம் என்னும் நூலானது யாழ்ப்பாணத்தின் புகழ் பெற்ற ஆலயங்கள் மீது இயற்றிப்பாடப் பெற்றதாக அமைந்திருக்கின்றது. 2001 ஆம் ஆண்டு அமரர் விநாசித்தம்பிப் புலவரவர்களால் "துர்க்கா கவிஞானி" என்ற விருதுடன் தங்கப்பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கப் பெற்றவர். யோகாசபைக் கலையிலும், சிறுவர்களுக்கான சமய நாடகங்களிலும் ஈடுபட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**கந்தன் மனோகரராசா**



1959.04.19 ஆம் நாள் சென்மேரிஸ் லேன்காங்கேசன் துறை என்னும் இடத்தில் பிறந்தவர் நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலைகளால் இடம் பெயர்ந்து வாழ்கின்ற போதிலும் தம் ஊரில் கைக்கொள்ளப்பட்டு வந்த கலைப்பழக்க வழக்கங்களை இன்றும் கைவிடாது செயற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. வாய்ப்பாட்டுக் கலையிலும் மற்றும் ஆர்மோனியம் வாசிப்பதிலும் ஆற்றல் உடையவர். பல இசை நாடகங்களுக்கும் கலை நிகழ்ச்சிகளுக்கும் ஆர்மோனியம் வாசித்து வருபவர். 25வருடங்களாக இக்கலைத்துறையில் ஈடுபட்டு வருகின்றார்.

**சதாசிவம் நித்தியானந்தன்**



1959-09-20 ஆம் நாள் அளவெட்டி மேற்கு என்னும் இடத்தில் பிறந்தவர்.வீ.கே.நடராசா ஆசிரியரவர்களை குருவாகக்கொண்டு இசைக்கலையைப் பயின்றவர். அளவெட்டி அருணோதயக்கல்லூரியில் மாணவனாக இருந்த காலத்தில் இவரது இசையார்வத்தினையும், குரல்வளத்தினையும் கண்டு கொண்ட குருநாதர் இவரை முழுமையாக இசைத்துறைக்குக் கொண்டு சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. பாடசாலையில் கற்கும் காலத்தில் பல இசைப்போட்டிகளில் பங்கு கொண்டு பரிசில்களைப் பெற்றவர். தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரியில் உயர்தர கலைப்பிரிவில் கர்நாடகசங்கீதத்தை ஒரு பாடமாகத் தெரிவு செய்து அதனை முழு மூச்சாகக் கற்றவர். பாடசாலைக் கல்விக்கும் அப்பால் வடஇலங்கைசங்கீத சபையில் கற்று ஆசிரியர் தராதரப் பரீட்சைக்குத் தோற்றி சிறந்தபெறுபேறுகளைப் பெற்றவர். யாழ்பல் கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீடத்தில் இசைக்கலைமாணி பட்டம்பெற்றவர். வயலின் இசைக்கருவியினை மீட்பதிலும் தேர்ச்சி பெற்றவர். அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் இசையாசிரி யராகக் கடமையாற்றி வருகின்றார். பல்வேறு இந்து ஆலயங்களிலும் இசைக்கச்சேரிகளை நிகழ்த்தி வருகின்றார். என்பதுடன், சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் திருமுறை, தேவபாராயணம் செய்து

வந்தது மட்டுமல்லாமல் சிங்கப்பூர் செண்பக விநாயகராலயத்தில் நடைபெற்ற திருமுறை மகாநாட்டு விழாவில் இசைக் கச்சேரியினையும் நிகழ்த்தியவர் என்பதும், செண்பக விநாயகராலயத்தின் சங்கீத இசைக் கல்லூரியில் இசை விரிவுரையாளராகவும் பணியாற்றியவர். இவற்றினைவிட சிங்கப்பூர் இசைக் கலைமன்றத்தில் பண்ணிசையையும், சைவ சமயத்தையும் போதித்தவர். அருட்கவி விநாசித்தம்பிப் புலவரவர்களால் இயற்றப்பெற்ற பாடல்கள் சிலவற்றிற்கு மெட்டமைத்து பாடிய பெருமைக் குரியவருமாவார்.

## திருமதி விமலாதேவி நாகேஸ்வரன்



1955-03-25 ஆம் நாள் அளவெட்டி மத்தியில் பிறந்தவர். இயற்கையாக அமையப்பெற்ற குரல் வளத்தோடு சிறப்பான முறையில் இசையை பயில ஆரம்பித்தவர். இவர் தனது ஐந்தாவது வயதிலிருந்து இசையைப்பயில ஆரம்பித்தவர். இவருடைய முதற்குரு வீ.கே.நடராஜா ஆசிரியரவர்களாவார். பின்னர் சங்கீதபூஷணம் திலகேஸ்வரன், இசை மேதை முத்துக்குமார், திருமதி.ஞானாம்பிகை சிவநேசன், மல்லிகாதேவி போன்றோரிடம் மேலதிகமான இசைப்பயிற்சி பெற்றவர். வடஇலங்கை சங்கீத சபையினரால் நடத்தப்படும் சங்கீத ஆசிரிய தராதரப்பரீட்சையில் சித்தி பெற்று கலாவித்தகர் பட்டம் பெற்றவர். மேலும் யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் இசைக் கலைமாணி என்ற பட்டமும், பட்டப்பின்கல்விடிப்ளோமா பட்டமும் பெற்றவர். ஸ்வரஞானம் இராகஞானம், தாளஞானம் என்பன அமையப் பெற்றவர். சரளமாகப் பாடும் திறமை பொருந்தியவர். இதன் காரணமாக இலங்கை வானொலியில் ஆறு வருடங்கள் தொடர்ச்சியாக இசை நிகழ்வுகளை வழங்கியவர். பல இடங்களிலும் இசைக்கச்சேரிகளை நடத்தியவர். வடஇலங்கை சங்கீதசபையினால் நடத்தப்படும் பரீட்சைகளுக்கு பரீட்சகராகப் பணியாற்றுபவர். உளவள நிலையத்தின் உளவளத் துறையினருக்கு பாடல்களை இசையமைத்தும், சிறுவர்பாடல்களுக்கு இசையமைத்தும் பல சேவைகளை ஆற்றிவரும் இவர் வலிகாமம் கல்வி வலயத்தில் சங்கீத ஆசிரிய ஆலோசகராகப் பணியாற்றி தற்பொழுது வலிகாமம் கல்வி வலயத்தின்

சங்கீத பாட உதவிக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது. அருட்கவி சி.விநாசித்தம்பிப் புலவரவர்களால் "பொன் விமலா" என்ற பட்டமும்,2000 ஆண்டு சந்நிதி வசந்தம்-2இல் பாடிய பாடல் தொகுப்பிற்கு "இசைக்குயில்" என்ற பட்டமும், சந்நியான் ஆச்சிரம த்தினால் "சங்கீதவித்தகி" என்ற பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப் பெற்றவர். இசைபயின்ற காலத்தில் தமிழ்த்தினப் போட்டி, பண்ணிசைப் போட்டி என்பவற்றில் பங்குபற்றி பல பரிசில்களைப் பெற்றுக் கொண்டவர். குறிப்பாக சைவபரிபாலனசபையால் நடத்தப்பட்ட பண்ணிசை மத்திய பிரிவு போட்டியில் அகில இலங்கை ரீதியில் தங்கப் பதக்கம் பரிசாகப் பெற்றுக்கொண்டவர்.

**அன்பரசி குகதாசன்**



1963.12.12 ஆம் திகதி அளவெட்டியில் பிறந்த இவர் 1989.07.19 தொடக்கம் 2002.12.31வரை கிளி/ அக்கராயன் மகாவித்தியாலயத்திலும் 2003.01.01 தொடக்கம் 2004.12.31 வரை யா/இராமநாதன் கல்லூ ரியிலும் 2005 தொடக்கம் இன்றுவரை யா/மகாஜனக் கல்லூரியிலும் இசைகற்பித்து வருகின்றார். இவர் T.V விநாயகமூர்த்தி, V.K நடராஜா,A.திலகேஸ்வரன், செல்வி நாகம்மா கதிர்காமநாதன் ஆகியோரிடம் திறம்பட இசையைக்கற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**திருமதி விஜயலச்சுமி போயநாஜசர்மா**



1968.01.14 ஆம் நாள் அளவெட்டி என்னும் இடத்தில் பிறந்து ஜேர்மனியைத் தற்காலிக வசிப்பிடமாகக் கொண்டுவாழ்ந்து வருகின்றார். வாய்ப்பாட்டு,பண் ணிசை ஆகியவற்றில் 18 வருடங்கள் ஈடுபட்டஅனுபவம் உடையவர். வடஇலங்கை சங்கீதசபையின் சங்கீத ஆசிரிய தராதரப் பரீட்சையில் சித்தியெய்தி கலாவித்தகர் பட்டம் பெற்றவர். யாழ் பல்கலைக்கழக நுண்கலைக்கழகத்தின் இசைத்துறை விரிவுரை யாளராகவும் பணிபுரிந்தவர்.மெல்லிசை ஒலி நாடாக்கள் சிலவற்றை வெளியிட்டுள்ளார்.

## செல்வநாயகம் ஞானசொரூபன்



1970.12.02ஆம் நாள் கேணிக்கரை அளவெட்டி கிழக்கு என்னும் இடத்தில் பிறந்தவர். இசைத்துறையில் வி.கே.நடராஜா அவர்களைக் குருவாகக் கொண்டு பயின்றவர். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் இசைக் கலைமாணிபட்டம் பெற்றவர். பல்வேறு கச்சேரிகளை இத்து றையில் நிகழ்த்தியவர். இளங்கலைஞர் மன்றம், துர்க்கா மணிமண்டபம் போன்ற இடங்களிலும் பல்வேறு கலை விழாக்களிலும் தனது கச்சேரி களை நிகழ்த்தி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையின் இசைநிகழ்வின் பிரதான பாடகராய் அமர்ந்து கச்சேரி செய்தவர். இவர் தற்போது சங்கீத ஆசிரியராகக் கடமையாற்றி வருகின்றார்.

## செல்வி ஜெயக்குமாரி முருகையா



1969.05.05ஆம் நாள் பெரியாவுடை கொல்லங்கலட்டி தெல்லிப்பளை என்னும் இடத்தில் பிறந்து தற்போது 1 ஆம் ஒழுங்கை அம்பலவாணர் வீதி உடுவிலில் வசித்து வருகின்றார்.சிறப்புக்கலைமாணி நுண்கலைப்பட்டம் பெற்றவர். இயற்கையாக அமையப்பெற்ற குரல்வளத் தோடு சிறப்பான முறையில் இசையைப் பயில ஆரம்பித்தவர். சங்கீத பூஷணம் செல்வி நாகம்மா கதிர்காமர், இசைமணி வல்லிபுரம் செல்லத்துரை, இசைக்கலைமணி விமலாதேவி நாகேஸ்வரன், முதுகலைமாணி பரமேஸ்வரி கணேசன் ஆகியோரிடம் சங்கீதத்தையும், திருமதி.S. மங்கைலட்சுமி, இசைஞானதிலகம் திரு.உ.இராதா கிருஷ்ணன் ஆகியோரிடம் வயலினையும் முறையாகப் பயின்றவர். வாழ்வகம் (விழிப்புலன்வலுவிழந்தோர்) இல்லத்தில் சேவை அடிப்படையில் 10 வருடங்கள் இசைகற்பித்தமையும், தனது இல்லத்திலும் இசைவகுப்பை நடத்தி வடஇலங்கை சங்கீதசபை பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தியுள்ளமையும். மேலும் யா/தெல்லிப் பளை யூனியன் கல்லூரியில் பண்ணிசை கர்நாடக சங்கீதம் கற்பித்து


மாணவர்களை இசைப் போட்டிகளில் பங்கு பெறச்செய்து அகிலஇலங்கை ரீதியில் தங்கப்பதக்கம் பெற்றமையும், தமிழ்த்தினப்போட்டியில் தேசிய இடங்கள் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. வடஇலங்கை சங்கீதசபையின் கர்நாடக சங்கீதத்தில் ஆசிரியர்தராதரப்பரீட்சையில் சித்தியெய்தி சங்கீத "கலாவித்தகர்" பட்டம் பெற்றவர்.

### திருமதி கல்பனா உமாபரன்



1976.09.23 ஆம் நாள் தெல்லிப்பளை துர்க்காபுரம் மாதனை என்னும் இடத்தில் பிறந்து நியூசிலாந்தில் வசித்து வருகின்றார். இவர் இசை, நடனம், நாடகம், சொல்லாடல், அழகியற்கலை, கிராமியக்கலை ஆகிய கலைத்துறைகளில் மிகுந்த ஈடுபாடு உடையவர். யாழ்ப் பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் கர்நாடக சங்கீதத்தில் நுண்கலைமாணிபட்டம் பெற்றவர். வட இலங்கை சங்கீத சபையின் கர்நாடகசங்கீதத்தில் ஆசிரியர் தரப்பரீட்சையில் சித்தியெய்தி கலாவித்தகர் பட்டமும், வயலின் இசைப்பரீட்சையில் மூன்றாம் தரத்தில் விஷேட சித்தியும், நாடகமும் அரங்கியலிலும் மூன்றாந்தரத்தில் சித்தியும்,பரதநாட்டியத்தில் நான்காந்தரத்தில் சித்தியும் பெற்றவர். பாடசா லைகளுக்கூடான பட்டிமன்றம், பேச்சு,வில்லுப்பாட்டு போன்ற போட்டி களில் மாவட்டமட்டத்தில் பரிசில்கள் பெற்றவர். தெல்லிப்பளை பாலர் ஞானோதயசபையின் பண்ணிசையாசிரியராகவும், சோலைக்குயில் அவைக்காற்றுக்கழத்தின் அங்கத்தவராகவும் பணியாற்றியவர்.

### சிவநாதன் ரஜீவன்



1978.06.13 ஆம் நாள் இணுவிலில் பிறந்தவர். மல்லாகம் கிழக்கு மல்லாகம் என்னும் முகவரியில் வசித்து வருகின்றார்.இவர் இசை,நாடகம்,ஓவியம், சொல்லாடல் போன்ற கலைத்துறைகளில் ஈடுபாடு உடையவராகவும் பின்னணி இசைக்கலைஞராகவும் திகழ்வதுடன் ஓர்கன் என்னும் இசைக்கருவியினை ஒழுங்கமைவுக் கேற்ப கற்றகலைஞன். யாழ்ப்பாணத்திலே தயாரிக்கப்படுகின்ற

நாடகங்கள், இசை நிகழ்வுகள் என்பவற்றிற்கு சிறந்த முறையில் இசைய மைப்பதிலும்,இசை ஒலி நாடாக்களை வெளியிடுவதிலும் தனது கணி சமான பங்களிப்பினை நல்கி வருகின்றார். தனது இல்லத்தில் நவீன ஒலி, ஒளிப்பதிவுக்கூடம் ஒன்றினை அமைத்து ஒலி,ஒளிப்பதிவு நடவடிக்கை களை செயற்படுத்தி வருகின்றார். இசையாசிரியராக மன்னார் மாவட்டத் தில் கடமையாற்றி வருகின்றார்.

## புஷ்பலச்சுமி உமாசங்கர்



1980.05.25ஆம் நாள் பிறந்தவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கர்நாடகசங்கீத, வாய்ப்பாட்டி சையில் நுண்கலைமாணி பட்டம்பெற்றவர். துர்க்கா தேவி அம்மன் ஆலய அறநெறிப் பாடசாலையில் சங்கீத ஆசிரியராகக் கடமையாற்றியவர். பல்வேறு இசைப் போட்டிகளில் நடுவராகப்பணியாற்றிய அனுபவமும் கொண்டவர் என்பதுடன் வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையின் இசை நிகழ்வுகளின் ஒழுங்கமைப் பாளராகவும் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மறைந்த இசையாளர்கள்

## இசைஞானமணி பிரம்மஸ்ரீ இ.விஷ்வநாதையர்



யாழ்ப்பாணப்பிரதேசம் முழுவதும் 1944 ஆம் ஆண்டு முதல் 1990 வரையில் தனிப்பட்ட இசை ஆசிரியராக இல்லங்கள் தோறும், சங்கீத சபாக்கள் தோறும், பொதுப் பணி மன்றங்கள் மூலம் சுத்த கர்நாடக இசையைக் கற்பித்த நல்லாசிரியராக நினைவு கொள்ளப்படுபவர் என்பதுடன் இன்றும் நம் நாட்டின் மூத்த இசையாளர்களால் போற்றப்படு பவருமாவார்.தமிழ்நாடு மாயவரம் இராமசாமிஐயர்,நாகலஷ்மி அம்மா வின் புதல்வராக பிறந்த ஐயரவர்கள் அக்காலத்தில் பிரபலமாக விளங்கிய தஞ்சை சகமறாவ் என்பவரிடம் குருகுல வாசஞ்செய்து ஆறு ஆண்டுகள் சங்கீதம் பயின்று இலங்கையின் யாழ்ப்பாணம் தெல்லிப்பளைப் பிரதேசத்தில் சங்கீத ஆசிரியராகப் பணியைத்தொடங்கி தனக்கென


தனியிடத்தைப் பிடித்தவர். நந்தனார்,சிவகவி போன்ற நாட்டிய இசைச் சித்திரங்களை எழுதி அரங்கேற்றிப் பாராட்டுப்பெற்றவர். யாழ்ப்பாணம் இரசிகரஞ்சன சபாவின் அதிபராகவும், தெல்லிப்பளை பாலர் ஞானோதய சபையின் இசை ஆசிரியராகவும் ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் பணியாற்றிய ஐயரவர்களின் மாணவர்கள் இன்றும் இசையாசிரியர் களாகத்திகழ்வதைக் காணலாம். நாதஸ்வர மேதைகளான வீ.கே. பஞ்சமூர்த்தி, அளவெட்டி சிதம்பரநாதன், அமரர் என்.கே. பத்மநாதன் போன்றவர்கள் ஐயா அவர்களிடம் வந்து தங்கள் சந்தேகங்களை நிவர்த்தி செய்வதோடு,தியாகராசசுவாமிகளின் பஞ்சரத்ன கீர்த்தனை களை ஸ்வரசாகித்யமாக கற்பித்த பெருமையுடையவர்.

## சீனியர் சிதம்பரப்பிள்ளை



1901.06.28ஆம் நாள் அளவெட்டி அம்பனை என்னும் இடத்தில் பிறந்தவர்.சிறந்த உடுக்கடிக்கலைஞர். காத்த வராயன் கூத்துக்களுக்கும், ஆலயத் திருவிழாக்களிலே நடைபெறுகின்ற காவடிஆட்டம் பத்தர்களின் கலை யாடல் போன்றவற்றிக்கு உடுக்கு வாத்தியத்தை வாசிப் பதில் மிகவும் பிரசித்தமானவர். இவரது இத்தகைய திறமைகளினால் எல்லோரும் இவரை உடுக்கடிசிதம்பரப்பிள்ளை என்றே அழைப்பது வழக்கம். இவரது கலைத்திறமை வலிகாமம் வடக்கு மட்டுமல்லாது யாழ்ப்பாண மாவட்டத்தில் இவரது கலைத்திறமையை அனைத்து மக்களும் போற்றி இரசித்து வந்தமை குறிப்பிடத்தக்கது 1995.12.09ஆம் நாள் கலையுலக வாழ்வை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

## தாமோதரம்பிள்ளை பொன்னம்பலம்




1917 ஆம் ஆண்டு அளவெட்டி என்னும் இடத்தில் பிறந்தவர். யாழ்ப்பாணத்தில் அருள்பாலிக்கின்ற சைவாலயங்கள் அனைத்திலும் கதாப்பிரசங்கம் என்னும் இசைச்சொற்பொழிவு நிகழ்வினை நிகழ்த்திய இசைச் சொற்பொழிவாளர். 1989 ஆம் ஆண்டு இறை வனடி சேர்ந்தார்.

## எஸ்.கே. பரராஜசிங்கம்



தெல்லிப்பளை கட்டுவனைச் சேர்ந்த வானொலி விளம்பரக் கலையின் விற்பன்னராக இலங்கையில் மட்டுமன்றி தமிழகத்திலும் மிகுந்த புகழ் பெற்றவர். மலிபன் கவிக்குரல் என்ற விளம்பர நிகழ்ச்சிக்காக இவர் தயாரித்த நாட்டார் பாடல்கள், உள்ளூர் ரசிகர்களின் பாடல்களே ஈழத்து மெல்லிசையின் தொடக்கப் புள்ளியாகும். இதனால் ஈழத்து மெல்லிசைக் கலையின் மூலவராக பராபுகழ் பெறுகின்றார். இவரால் தயாரித்து வழங்கப்பட்ட இதயரஞ்சினி எனும் கலை இசை மஞ்சரி நிகழ்ச்சியும் கனதியானது. இந்நிகழ்ச்சிக்காக பேராசிரியர் என்.சண்முகலிங்கத்துடன் இணைந்து ஆக்கிய பண்பாட்டு கோலங்கள் சார்ந்த இசைவெளியீடாக நூல் வடிவம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவரது கனிந்த குரலின் காலை வேளைகளில் ஒலித்த பாமாலை நிகழ்ச்சிகளில் சிவபுராணம், விநாயகர் அகவல், கந்தர்சஷ்டிகவசம், மற்றும் இசைச் சித்திரங்களான சித்திரக்கலை, பாரதிபாதி நான்பாதி போன்ற ஆக்கங்கள் நெஞ்சை விட்டு அகலாதன. சந்தன மேடை என் இதயத்திலே அழகான ஒரு சோடி கண்கள், குளிரும் நிலவினிலே போன்ற இவரது பாடல்கள் இன்றும் பல ரசிகர்களை ஈர்ப்பன. தேர்ந்த இவரது பாடல்களின் தொகுப்பாக "ஒலி ஓவியம்" பேராசிரியர் கா.சிவத் தம்பி அவர்களின் அறிமுகத்துடன் வெளியாகி உள்ளமை குறிப்பிடத் தக்கது. பொன்மணி திரைப்படத்திலும் பாரவின் பாடல்கள் ஒலித்துள்ளன. பரத நாட்டிய நிகழ்ச்சிக்கான சிறந்த பாடகராகவும் இவர் புகழ்பெற்றுள் ளார். திரை விமர்சனம், கலை விமர்சனம் ஆகியவற்றிலும் பரா முத்திரை பதித்துள்ளார். சிறந்த ஒலியமைப்பாளருக்கான உண்டா விருது பெற்ற வராக 1999.03.28 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

## இளயவர் நமசிவாயம்



1916.02.05ஆம் நாள் தெல்லிப்பளை விழிசிட்டியில் பிறந்தவர்.இவர் மிகச் சிறந்த பௌராணிகர் புராணக் கதைகளை சுவைபட இசையோடு சொல்வதில் திறமை வாய்ந்தவர் வலிகாமம் வடக்கில் உள்ள ஆலயங்களில் மட்டுமல்லாது வேறு பல ஆலயங்களிலும் புராணபடண வித்தகராக ஆன்மீகப் பணியாற்றியவர்.

### கந்தையா திருநாவுக்கரசு



1919-.01.14ஆம் நாள் பன்னாலையில் பிறந்தவர் பண்ணிசை விற்பன்னராகவும் சிறந்த பௌராணி கராகவும் திகழ்ந்தவர். ஆலய மகோற்வங்களில் பண்ணிசைக் கச்சேரியை நடத்தி வந்தவர். ஆலயங் களில் புராணபடனம்பஞ்சபுராணம்பாடுதல் பண்ணிசை பஜனை என்பனவற்றில் ஈடிணையற்றவராக மிளிர்ந்தார். 1980.01.14 ஆம் நாள் இவர் இறைவனடி சேர்ந்தார்.

### பொன்னம்பலம் முத்துக்குமாரன்



1920.07.26 ஆம் நாள் தெல்லிப்பளை பன்னாலையில் பிறந்தவர். இசைத்துறையில் பல சாதனைகள் செய்தவர். நாடகநடிகர் சொற்பொழிவாளர். இசைமணி என அழைக்கப்பட்டவர். அண்ணாமலை இசைக் கல்லூரியில் சங்கீதபூஷணம் பட்டம் பெற்றவர். பால பண்டிதர் பரீட்சையில் சித்தியெய்தியது மட்டுமல்லாமல் இசையாசிரியராக தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தியாசாலையில் கற்பித்து பதவியுயர்வு பெற்று பலாலி ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் இசைவிரிவுரை யாளராகப் பணியாற்றியவர். வலிகாமம் வடக்கில் பண்ணிசை வகுப்பு களை ஆரம்பித்து நடத்தியவர். தெல்லிப்பளை கலாரஞ்சன சபைத் தலை வராக நீண்டகாலம் பணியாற்றி பல இசை விழாக்களை நடத்தியவர்.பல இத்துறைசார் மாணவர்கள் பலரை உருவாக்கியவர். 1998.12.31ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்


### செல்லையா பொன்னுச்சாமிதேசிகர்



1921-07-21ஆம் ஆண்டு கீரிமலையில் பிறந்தவர். ஆர்மோனியம் வாசிப்பதில் மிகுந்த திறமை வாய்ந்தவர். ஈழத்து இசை நாடகங்களுக்கான பின்னணி இசை வழங்குவதில் பெரும்பங்காற்றியவர். தனது தந்தை யாரால் தயாரிக்கப்பட்ட சிறுத்தொண்டர் நாடகத்தில் சீராளனாகப்பாத்திரமேற்று நடித்தமையே கலையுலகில் பிரவேசிக்கக் காரணமாயிற்று. இருப்பினும் பிறவியிலேயே இசைவல்லமை படைத்த

வராக விளங்கியமையினால் இசைக் கலையிலேயே அதிகம் நாட்டம் கொண்டவராகத் திகழ்ந்தார்.ஆர்மோனிய வித்துவானாகவும், இராஜபாட் நடிகராகவும்,நாடகப் பக்கப்பாட்டுக்காரனாகவும்,தமிழகத்தில் சில ஆண்டு கள் செயற்பட்டவர். மதுரை நாடகசபா உறுப்பினராகச் செயற்பட்டதுடன் காலத்துக்குக்காலம் கலை நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வதற்காகவும் மதுரைக்கு அழைக்கப்பட்டவர்.1949இல் மதுரை நாடகசபா இவருக்கு தேசிகர் பட்டம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. டப்பாசெற், மணிக் கொம்பனி, யப்பான்செற் என காலத்துக்குக்காலம் தோன்றிய நாடக அமைப்புக்களில் இருந்த தென்இந்திய நடிகர்களுடனும் ஈழத்து முதுபெரும் நாடகக்கலைஞர்களான காலஞ்சென்ற சின்னையாதேசிகர், மாசிலாமணி,நடிகமணி வீ.வீ.வைரமுத்து போன்றவர்களுடன் இணை ந்து கூத்துமேடைகளை அலங்கரித்தவர்.காலப்போக்கில் மேடையில் நடிப்பதை நிறுத்தி ஆர்மோனியம் வாசிப்பதை மட்டும் தொழிலாகக் கொண்டார்.நாடகங்களுக்கு மட்டுமன்றி மெல்லிசை, இன்னிசை, சதுர்க் கச்சேரி என்பவற்றிற்கும் ஆர்மோனியம் வாசிப்பதில் தனித்துவம் பெற்றிருந்தார். தந்தையாரால் எழுதப்பட்ட யாழ்நகர் கோரச்சிந்து, முக்கொலை,யுத்தமுழக்கமும் ஊரவர்கலக்கமும், சூரசங்காரம், இராசம ணியின்நேசம் போன்ற கவிதை நூல்களுக்கு இசையமைத்து உயிர் கொடுத்து மெருகூட்டியவர். நடிகராகவும், பாடகராகவும், ஆர்மோனியக் கலைஞனாகவும் விளங்கிய இவர் புன்னைக் கோட்டை வாத்தியம் என்னும் புதிய வாத்தியத்தையும் ஈழத்துக் கலையுலகிற்கு அறிமுகம் செய்தவராக.வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1991-01-22 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

## ஓதுவார்மூர்த்தி வீ.ரீ.வீ.சுப்பிரமணியம்



1923.06.12ஆம் நாள் கட்டுவனில் பிறந்தவர். பண்ணிசையில் சிறந்து விளங்கிய இவரை ஓதுவார் மூர்த்தி என அழைப்பர். திருமுறைப் பாடல்கள்மூலம் மக்களை நல்வழிப்படுத்தியவர். யாழ்ப்பாணத்தில் உள்ள அத்தனை சைவாலயங்களிலும் பண்ணிசை மூலம் தெய்வீக மகிமையை,வழிபாட்டுமுறையை மக்கள் மத்தியில் விழிப்படையச் செய்தவர். 1987.10.18 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

### சுப்பிரமணியம் நமசிவாயம்



1925.09.05ஆம் நாள் காங்கேசன்துறை கருகம் பனையில் பிறந்தவர். கர்நாடக சங்கீதக் கலையில் பணியாற்றிய இவர் இலங்கை வானொலியின் இசைக் கலைஞராகத் திகழ்ந்தவர். அகில இலங்கைத் தமிழ் பாடசாலைகளுக்கிடையிலான பண்ணிசைப்போட்டியில் தங்கப்பதக்கம் பெற்றவர். இலங்கை அரசின்கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கலாபூஷணம் விருது பெற்றவர்.

### தியாகராஜ ஐயர் சுந்தரமூர்த்திஐயர்



1927ஆம் ஆண்டு தெல்லிப்பளையில் பிறந்தவர். சிறந்த சங்கீதஞானம்மிக்க இசைஆசிரியராகத் திகழ்ந்த இவர் வயலின் வாசிப்பதில் மிகுந்த ஆற்றலுடையவர் கதாப்பிரசங்கியாரான திருமுககிருபானந்தவாரியார் அவர்கள் யாழ்ப்பாணத்தில் ஒருமுறை கதாப்பிரசங்கம் செய்தபொழுது அவருக்கு வயலின் வாசித்துப் பெருமை பெற்றவர். 1992ஆம் ஆண்டு வாழ்வுலகை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

### செல்வி நாகம்மா கதிர்காமர்



1932- 12-21 ஆம் நாள் கீரிமலை என்னும் இடத்தில் பிறந்தவர். இளவாலை மெய்கண்டான் மகாவித்தி யாலயத்திலும், இளவாலை கன்னியர்மடம் மகளிர் கல்லூரியிலும் கல்வி கற்றவர், மாவிட்டபுரம் இசை மேதை நாதஸ்வரச்சக்கரவர்த்தி சோ.ப.உருத்திராபதி அவர்களிடம் முறைப்படி கர்நாடக சங்கீதத்தைக் கற்று வடஇலங்கை சங்கீத சபையின் ஆசிரியர்தரபரீட்சையில் முதலாம்தரத்தில் சித்திபெற்று இசை ஆசிரியராக முகிழ்த்தார்.1958 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைக்கல்லூரியில் இணைந்து சங்கீதபூஷணம் பட்டம் பெற்றார். முற்றிலும் தன்னை இசைக்காகவே அர்ப்பணித்த இவரிடம் காணப்பட்ட கம்பீரமான குழைவான சாரீரவளத்தால் கேட்போர் உருகிப் பிணிக்கும் வண்ணம் அவர் பாடல்கள் விளங்கின எம். தண்டபாணி

தேசிகர்.T.K ரங்காச்சாரி T.N சிவசுப்பிரமணியம்பிள்ளை போன்றவர் களிடமும் வீணைப் பேராசிரியரான செல்வி கௌரி அம்மாவிடம் ருத்ர வீணையையும் கற்றுக் கொண்டவர். 2009-01-07ஆம் நாள் வாழ்வு லகை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

### லயனல் திலகநாயகம் போல்



1941-07-06 ஆம் நாள் யாழ்ப்பாணம் குருநகர் என்னும் இடத்தில் பிறந்து அமெரிக்கன்மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை வீதி, கொக்குவில்மேற்கு என்னும் முகவரியில் வாழ்ந்தவர். திருமணபந்தத்தின் மூலம் பலாலி வடக்கிற்குரியவராகின்றார். இறப்பின் இறுதி நிகழ்வுகளும் வலிகாமம் வடக்கிலேயே நடைபெற்றமை குறிப்பிடத் தக்கது கர்நாடகசங்கீதத் துறையில் மிக்காரும் ஒப்பாரும் போற்றத்தக்க வகையில் தனக்கென்றொரு தனியிடத்தை ஈழத்துக் கலாரசிகர்கள் மட்டு மல்லாது உலகநாடுகளிலும் ஏற்படுத்தி வாழ்ந்த இசையுலக மாமேதை யாவார். ஈழத்தில் 50 வருடங்களுக்கு மேலாகக் கலைப் பணியாற்றிவர் என்பதுடன் பல்வேறு இசையாளர்களையும் உருவாக்கியவர் என்ற பெருமைக்குரியவருமாவார். இளைப்பாறிய உதவிக் கல்விப்பணிப் பாளராகிய இவர் 1961-1965 வரை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்று சங்கீத பூஷணம் முதலாம் பிரிவில் சித்தியடைந்தவர். ஆசிரியநியமனம் பெற்று மன்னார்,வவுனியா, மட்டக்களப்பு போன்ற இடங்களில் கடமையாற்றியாவர். பலாலி ஆசிரிய கலாசாலையில் சங்கீத விசேட பயிற்சி பெற்றவர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாகினிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் சுப்பர்கிரேட் பாடகராக முப்பத்தைந்து வருடங்களாகப்பாடி வந்தவர். நாற்பதிற்கு மேற்பட்ட மெல்லிசைப் பாடல்களின் சொந்தக்காரர். இலங்கையின் பலபாகங் களிலும் முன்னூறுக்கு மேற்பட்ட இசைக்கச்சேரிகளை நிகழ்த்தியவர். சங்கீதம், பரதநாட்டியம் சம்பந்தமான பாட விதானத்திற்கமைய நூல் களை எழுதி வெளியிட்டதுடன் புதியநோக்கில் செந்தமிழ் செவ்விசைப் பாக்கள் என்னும் நூலின் ஆசிரியருமாவார். இலண்டன், நோர்வே,

பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்குச் சென்று பல இசைக்கச்சேரிகள் செய்ததோடு வானொலி, தொலைக்காட்சி, சஞ்சிகைகள், பத்திரிகைகள், இசை நிறுவனங்கள் பல்வேறு அமைப்புக்களின் பாராட்டுக்கள், சான்றிதழ்கள் பெற்றவர். கிறீஸ்தவப் பாடல்களை இசையமைத்து ஒலிநாடாவாகவும், இறுவட்டாகவும் வெளியிட்டவர். யாழ் இராமநாதன் நுண் கலைக் கழகத்தின் இசைத்துறையில் வருகை விரிவுரையாளராகவும், 2008,2009 இல் வருகைப்பரீட்சகராகவும், வடஇலங்கை சங்கீத சபையின் ஆசிரியர்தராதர விரிவுரையாளராகவும், பரீட்சகராகவும் நீண்ட காலம் பணியாற்றியவர். இவர் தனது அரங்கேற்றத்தினை தனது 24 வது வயதில் அரங்கேற்றியவர். யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் ஈழத்தின் தலை சிறந்த நாடகக்கலைஞரான கலையரசு சொர்ண லிங்கமவர்களின் தலைமையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. அன்று தொடங்கிய இவரது இசைப்பயணம் இறக்கும் வரை தொடர்ந்தது. இவரது இத்தகைய சேவைகளைப்பாராட்டும் வகையில் பல்வேறு நிறுவனங்கள் உட்படகலை அமைப்புக்களும் பாராட்டிக் கௌரவித் துள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் நல்லை ஆதீனத்தினரால் அவரது 20 வது பீடாரோகணத்தின்போது பொன்னாடை போர்த்தியும், 1985,1986 களில் கம்பன் கழகத்தாரால் மூன்று முறை பொன்னாடை போர்த்தியதுடன் தங்கப்பதக்கமும் வழங்கிக் கௌரவிக்கப் பெற்றவர். மேலும் 1992இல் யாழ்கர்நாடக இசைரசிகர் மன்றம் இவரதுவெள்ளி விழாவை முழுநாள் விழாவாகக் கொண்டாடியதுடன் பல கல்விமான் களால் 25வருட சேவை பாராட்டப்பட்டு பொன்னாடைகள், பதக்கங்கள் அணிவிக்கப்பட்டு "ஸ்வரராகலயவிநோதசுரபி" என்றபட்டமும் வழங்கப் பட்டது. 1994 இல் இந்துசமயகலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கலைச்செம்மல் விருதும், 1999 இல் இலங்கை அரசின் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கலாபூஷணம் விருதும், 2008இல் வடக்கு மாகாண கௌரவஆளுநர் விருதும் வழங்கிக் கௌரவிக்கப் பெற்றவர்.2009-12-05 ஆம் நாள் வாழ்வுலகை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

## இராமலிங்கஐயர் சோமசுந்தரேஸ்வரக் குருக்கள்



1945.06.20ஆம் நாள் அளவெட்டி கும்பழாவளையில் பிறந்தவர். பாடசாலையில் படிக்கின்ற காலத்திலேயே பண்ணிசைப் போட்டிகளில் பல தங்கப்பதக்கங்களைப் பெற்றவர். கும்பழாவளை பிள்ளையாராலய பிரதம குருவாக பணிபுரிந்ததுடன் பண்ணிசை, புராண படனங்கள் ஓதுவதில் திறமை வாய்ந்தவர். 2004.03.05 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்

## திருமதி சுபத்திராதேவி விவேகானந்தன்



1945.08.07ஆம் நாள் அழகொல்லை அளவெட்டி வடக்கு என்னும் இடத்தில் பிறந்து பயிற்றப்பட்ட சங்கீத ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்.தனது ஆறாவது வயதில் இசையைக் கற்கத்தொடங்கியவர். பாடசாலைப் பருவத்தில் இசைப் போட்டிகளில் பங்குபற்றி முதல் தரத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. ஆரம்ப இசையை இவர் மறைக்காடர் என்ற ஓதுவாரிடமே பயின்றவர். பின்னர் மகாராஜபுரம் விஸ்வநாதஐயரின் மகனான சந்தானம்அவர்களிடம் இருவருடங்கள் பயின்றவர். இந்தியாவைச் சேர்ந்த பேராசிரியர் சாம்பமூர்த்தி,சென்னை கருநாடக இசைக்கல்லூரி அதிபர் ஶ்ரீனிவாசராவ் ஆகிய இரு பரீட்சகர்கள் முன்னிலையில் தோற்றி சித்தியடைந்து சங்கீதரத்தினம் பட்டம் பெற்ற வர்.தமிழகம் அடையாறு கர்நாடக இசைக்கல்லூரியில் மூன்று வருடங் கள் இசை பயின்று சங்கீத வித்துவான் என்னும் பட்டத்தினையும் பெற்ற வர். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும்,சிங்கப்பூரிலும் இசைக் கச்சேரிகள் செய்தவர். சிறுவயதுமுதல் இறக்கும் வரை அளவையூர் கும்பழாவளைப் பிள்ளையாராலயத்தில் துதிபாடி வந்தமையும், மகோற்சவ காலங்களில் இசைக் கச்சேரிகள் செய்து வந்ததனையும் சிறப்பாகக் குறிப்பிடலாம். .2010-01-27 ஆம் நாள் வாழ்வுலகை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

### அப்புக்குட்டி திலகேஸ்வரன்



1948-03-15 ஆம் நாள் அளவெட்டியில் பிறந்தவர். சங்கீத ஆசிரியராகவும், தம்புராக் கலைஞனாகவும் வாழ்ந்தவர். இன்று புகழ்பெற்று பிரகாசிக்கும் பல சங்கீத வித்துவான்களையும், கலைஞர்களையும், ஆசிரியர் களையும் உருவாக்கிய பெருமைக்குரியவர். அளவெட்டி சைவவாலிபர் சங்கத்தோடிணைந்து பாரிய இசைவிழாக்களை முன்னின்று நடத்தியவர். 2007-12-10 ஆம் நாள் வாழ்வுலகை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

## இசைநாடகம்

### தொமிங்கு இராசதம்பி



சீந்திப்பந்தல் இளவாலையில் 1932.02.01 ஆம் நாள் பிறந்தவர். நாடகம் நாட்டுக்கூத்து, நெறியாள்கை போன்றதுறைகளில் பெரும்பங்காற்றியவர். இலங்கை வானொலியில் மூன்றுக்கும்மேற்பட்ட நாடகங்களில் நடித்தவர். நளமகாறாஜன், சகுந்தலை, அரிச்சந்திரா என்பனவையாகும். 50க்கும் மேற்பட்ட நாட்டுக்கூத்துக்கு நெறியாளராக இருந்தவர். 125க்கும் மேற்பட்ட நாடகங்களில் நடித்தவர். ஆரம்பகால கட்டங்களில் பெண்வேடம் ஏற்று நடித்தவர். பிற்பட்டகாலத்தில் என்றிக் கெம்பரதோர், ஜெனகப்பு, கற்பலங்காரி, வரதமனோகரி போன்ற நாடகங்களை மாணவர்களுக்கு பழக்கி மேடையேற்றிய பெருமைக் குரியவர். தென்மோடித்திலகம் என்னும் பட்டம்வழங்கிக் கௌரவிக்கப் பட்டதுடன் வலிகாமம்வடக்கு கலாசாரப் பேரவையினர் கலைச்சுடர் என்னும் விருதினை வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

### வைரவன் தில்லையன் செல்வராஜா



1935.07.30ஆம் நாள் காட்டடைப்பு றோட் காங்கேசன் துறையில் பிறந்து தற்பொழுது 22கண்டி வீதி அரியாலை, யாழ்ப்பாணத்தில் வசித்து வருகின்றார். நடிப்பு, நெறியாள்கை போன்ற துறைகளில் 1947-2005 வரை கலைப்பணியாற்றி வந்தவர். நடிகமணி வீ.வீ.வைரமுத்துவுடன் இணைந்து அவரது இசைநாடகங்களில் நடித்து

வந்தவர். தற்பொழுது நடிகமணி அவர்களின் வசந்தகானசபாவினை இயக்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. கலைஞானகேசரி மற்றும் வலிகாமம் வடக்கு கலாசாரப்பேரவையினரின் கலைச்சுடர் என்னும் விருதும் வழங்கப்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

**இசிதோர் சூசைப்பிள்ளை**



1935.08.27 ஆம் நாள் பலாலி தெற்கு வசாவிளானில் பிறந்து இருபாலை கிழக்கில் வசித்து வருகின்றார். நடிகைமணி, வீ.வீ.வைரமுத்து அவர்களிடம் கர்நாடக சங்கீதத்தையும் இசை நாடகங்களையும் பயின்றவர். பிலோமினா என்ற நாட்டுக்கூத்தில் நடித்துள்ளார். மனோகரா, ஜெனோபா, அலாபுதி, விதவையின் கண்ணீர் போன்ற நாடகங்களை நெறியாள்கை செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. அண்ணா, தந்தை யைக்கொன்றவன், இன்பஇரவு, நீதிபதியின் மகள் போன்ற நாடகங் களில் நடித்தவர்.மனோகரா என்ற நாடகத்தில் வைரமுத்து புருஷோத் மனாகவும், மனோகரனாக இசிதோர் சூசைப்பிள்ளையவர்களும் நடித்தமை குறிப்பிடத்தக்கது.

**ஜயாத்துரை வசந்தா**



1945.01.05ஆம் நாள் காங்கேசன்துறையில் பிறந்தவர். தற்பொழுது கல்லடி ஒழுங்கை மல்லாகம் என்னும் முகவரியில் வசித்துவருகிறார். நடிகைமணி வி.வி. வைரமுத்து அவர்களின் மூத்த புதல்வியாவார். காங்கேசன்துறையில் 1945.05.01.ஆம் நாள் பிறந்த வர். காங்கேசன்துறை, நடேஸ்வராக் கல்லூரியில் S.S.C வகுப்பு வரை படித்த இவர் தனது தந்தையாராகிய கலாநிதி. நடிகமணி. வி.வி. வைரமுத்து அவர்களின் நாடகங்களில் முக்கிய பங்காற்றி நடித்துள்ளார். சிறுவயதில் மயானகாண்டம் நாடகத்தில் லோகிதாஸனாகவும், பின்னர் சந்திரமதியாகவும் பேராதனைப் பல்கலைக்கழகம், கொழும்புலும்பினி மண்டபம் மற்றும் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் நடித்துள்ளார். ஆடற்கலையிலும் வல்லவரான இவர் பாடசாலை கலை நிகழ்ச்சியில்


மோகினியாக நடனம் ஆடியமை குறிப்பிடத்தக்கது. கலைப்பேரரசு ஏ.ரீ. பொன்னுத்துரை அவர்களால் நெறிப்படுத்தப்பட்ட பாடசாலை நாடகங் களில் நடித்துள்ளார். அதில் "மந்தரை சூழ்ச்சிப் படலம்" என்னும் நாடகத்தில் "கைகேயி" பாத்திரத்தை ஏற்று நடித்தமையும் சிறப்புக்குரி யது.1961 ஆம் ஆண்டு பல இடங்களில் அரிச்சந்திரனாகவும் நடித்து ள்ளார். தனது தந்தையைப்போல, மயானத்தில் சிறப்பாகப் பாடிநடித்தமை மிகவும் போற்றுதற்குரியது.

## திருமதி நவரட்ணம் லலிதா



1948.12.20ஆம் நாள் ஊறணி காங்கேசன்துறையில் பிறந்து தற்பொழுது ஜெர்மனியில் வசித்து வருகிறார். நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்களின் இரண்டாவது புதல்வியாவார். பாடசாலையில் படிக்கின்ற காலத்தில் மயானகாண்டம் நாடகத்தில் லோகிதாஷனாக நடித்து ள்ளார்.1959 ஆம் ஆண்டு பிரித்தானிய தொலைக்காட்சி நிலையம் இலங்கை வந்தபோது காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி திறந்த வெளியரங்கிலே நடைபெற்ற மயானகாண்டம் நாடகத்தை ஒளிப்பதிவு செய்தனர். இந்நாடகத்தில் அரிச்சந்திரனின் பிள்ளையாக இவர் நடித்து ள்ளார் கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை அவர்களால் மேடை யேற்றப்பட்ட மந்தரைசூழ்ச்சிப்படலம் நாடகத்தில் பரதன் பாத்திரம் ஏற்று நடித்தவர். தந்தையாரின் வழியில் இவரும் இவரது இளைய சகோதரியும் இணைந்து அரங்கேற்றிய அரிச்சந்திரா நாடகத்தில் சந்திரமதியாக நடித்தவர்.

## அம்பலம் கதிரமலை



1950.03.29 ஆம் நாள் மாவிட்டபுரம் மாரியம்மன் கோயிலடி என்னும் இடத்தில் பிறந்து வட்டுக்கோட்டை கிழக்கு வட்டுக்கோட்டையில் தற்காலிகமாக வாழ்ந்து வருகின்றார் சிந்துநடைக்கூத்தில் அண்ணாவியாராகத் திகழும் இவர் பவளக்கொடி, வள்ளி திருமணம் போன்ற

இசைநாடகங்களை மாவையம்பதியில் இயங்கிய மறுமலர்ச்சி நாடக மன்றத்தினூடாக அரங்கேற்றியவர். பரம்பரையாக இக்கலை வடிவத்தை சிறு வயதில் இருந்தே நடித்து வருகின்றார். மாவை வைரவிப்பிள்ளை அவர்களுடன் இணைந்து புராண, இதிகாச, சமூக நாடகங்களிலும் நடித்துப்புகழ் பெற்றவர். அந்த வகையில் மகுடபங்கம், ஏன் இந்த அவலம், நகைச்சுவை நாடகமான சட்டம்பியார் சரி, இயம உலகில் ஸ்ரைக், உண்மையே உன் விலை என்ன? (சமூக நாடகம்)போன்ற நாடகங் களைக் குறிப்பிடமுடியும். இக்கலை வடிவம் மட்டுமன்றி நாடகக் கலைஞர் களுக்கான உடை, ஒப்பனைக் கலையிலும் வில்லுப்பாட்டு எழுது வதிலும், தயாரித்து அரங்கேற்றுவதிலும் ஆற்றல் பெற்றவர்.

**வேலுப்பிள்ளை சிதம்பரநாதன்.**



மடத்தடி மாவிட்டபுரம் என்னும் இடத்தில் 1952.01.01 ஆம் நாள் பிறந்து நீர்வேலியில் தற்காலிகமாக வாழ்ந்து வருகின்றார். இசை, நாடகம், சுப்பம்போன்ற கலைகளில் ஈடுபாடுஉடையவராயினும் காத்தவராயன் சிந்துநடைக் கூத்தில் மிகுந்த ஈடுபாடும் திறமையும் கொண்டவர். இக்கலைத் துறையில் 40வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவமுடையவர். இன்று காத்தவராயன் கூத்தில் மிகச்சிறந்த அண்ணாவியர்களுள் ஒருவராகத் திகழ்கின்றார். பாரம்பரியக் கலைக் குடும்பத்தைச் சேர்ந்த இவர் தனது 13ஆவது வயதில் பாடசாலையில் மார்க்கண்டேயர் நாடக த்தில் மார்க்கண்டேயராகப் பாத்திரமேற்று கலையுலகில் புகுந்தவர். தமது 22வது வயதில் மாதனைக்கலா மன்ற உறுப்பினரும் நடிகர் திலகமாக விளங்கியவருமான நாடக ஆசிரியர் காலஞ்சென்ற து.மகாலிங்கம் அவர்களைக் குருவாகக் கொண்டு அவரது நெறியாள்கையில் உருவான சம்பூரண அரிச்சந்திரா நாடகத்தில் நாரதராகவும், சத்தியகீர்த்தியாகவும் நடித்துப்பலரது பாராட்டையும் பரிசில்களையும் பெற்றுக் கொண்டவர். இவரது கலைச்சேவையைப் பாராட்டி 1992 ஆம் ஆண்டு திருநெல்வேலி காளிகோவில் தேவஸ்தானம் சார்பாக இளம்கலைஞர், 1997ஆம் ஆண்டு ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாசாலையினர் இளம்கலை வேந்தன், 2002ஆம் ஆண்டு பாரம்பரியக்கலைகள் மேம்பாட்டுக் கழகத்தினர் மரபு கட்கலைச்சுடர் என்ற விருதினையும் இசை நாடகஜோதி, கலாசார அலு


வல்கள் திணைக்களத்தின் கலாபூஷணம் போன்ற பல கௌரவ விருது களையும் பெற்றவர். தனது முழுமையான சேவையை கலைத்துறைக்கு வழங்கி பல கலைஞர்களை உருவாக்கியதோடு தனது இரு புத்திரர் களையும் இத்துறையில் பிரகாசிக்கும் வண்ணம் செய்துத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### சின்னத்துரை புஸ்பராசா



1955-12-31 ஆம் நாள் பிரதான வீதி காங்கேசன்துறை என்ற இடத்தில் பிறந்தவர்.தற்பொழுது தேவாலய வீதி குளமங்கால் மல்லாகம் என்ற முகவரியில் வசித்து வருகின்றார். இசை நாடகத்துறையில் மிகுந்த ஈடுபாடு டையவர்.இவரதுபெரியதந்தையான நடிகமணி வீ.வீ. வைரமுத்து அவர்களின் வசந்தகானசபாவில் தனது 11 வது வயதில் நடிக்க ஆரம் பித்தவர். ஆரம்பத்தில் அயலாத்துப்பிள்ளை, லோகிதாசன் போன்ற பாத்திரங்களை ஏற்று நடித்ததுடன் வசந்தகான சபாவின் நாடகத்தயாரிப்பு களான பூதத்தம்பி, வள்ளி திருமணம், பக்தநந்தனார், அல்லி அர்ச்சுனா, கோவலன் கண்ணகி போன்றவற்றில் துணைப் பாத்திரங்களையும், தோழி போன்ற பெண் பாத்திரங்களையும் ஏற்று நடித்தவர். தற்பொழுது நடிகமணி வைரமுத்து வசந்தகானசபாவின் பொருளாளராகவும் பணி யாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

### திருமதி தவராஜா ஜெயந்தா



காங்கேசன்துறை என்ற இடத்தில்1955.01.06ஆம்நாள் பிறந்தவர். தற்பொழுது தேவாலய வீதி மல்லாகம் என்னும் முகவரியில் வாழ்ந்து வருகின்றார். நடிகமணி வி.வி. வைரமுத்து அவர்களின் நான்காவது புதல்வி யாவார். சிறு வயதில் தந்தையாரது நாடகங்களில் லோகி தாஷனாகவும், பூதத்தம்பி நாடகத்தில் பூதத்தம்பியின் பிள்ளையாகவும் நடித்துள்ளார். நிர்மலா என்ற இலங்கைத் திரைப்படத்தில் வரும் மயான காண்டம் காட்சியில் லோகிதாஷனாக நடித்தவர். தற்பொழுது நடிகமணி வீ.வீ.வைரமுத்து வசந்தகானசபா என்ற நாடக சபையை இயக்கி வருகின்றார்.

**வைரமுத்து சாரங்கனி**



பிரதான வீதி காங்கேசன்துறை என்னும் இடத்தில் 1963.08.04ஆம் நாள் பிறந்து ஜெர்மனியில் தற்காலி கமாக வாழ்ந்துவருகின்றார். நடிகமணி வீ.வீ.வைர முத்து அவர்களின் புத்திரனாவார். தந்தையாரது நாடகங்களில் பாத்திரமேற்று நடித்தது மட்டுமல்லாது ஜெர்மனியில் தமிழ் மன்றம், வசந்தகானசபா ஆகிய தமிழ் கலை வளர்க்கும் நிறுவனங்களை இயக்கி வருவதுடன் மிகச்சிறந்த பாடகராகவும் விளங்கிவருகிறார்.

**திருமதி யோகநாதன் நாகேஸ்வரி**



காங்கேசன்துறையில்1956.09.13ஆம் நாள் பிறந்தவர். தற்பொழுது சர்வோதயா வீதி ஆவரங்கால்,புத்தூரில் வசித்து வருகின்றார்.இவர் மிருதங்க வித்துவான் வீ.வீ.காசிநாதன் அவர்களின் புதல்வியாவார். இவரு டைய சிறிய தந்தையான வி.வி.வைரமுத்து அவர் களால் மேடையேற்றப்பட்ட பூதத்தம்பி நாடகத்தில் பூதத்தம்பியின் பிள்ளை யாகவும் அரிச்சந்திரன் மயானகாண்டம் நாடகத்தில் அரிச்சந்திரனின் பிள்ளையாகவும் பாத்திரம் ஏற்று நடித்தவர்.

**சங்கரப்பிள்ளை கிருபாநந்தன்**



1966.01.24ஆம் நாள் மாவிட்டபுரத்தில் பிறந்து எழுபாவோடை எட்டாம்கட்டை மல்லாகம் என்னும் முகவரியில் நிரந்தரமாக வாழ்ந்து வருகின்றார். அளவெட்டி அருணோதயக்கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றும் இவர் இசை நாடகத்துறையில் திறமை யுடைய பல்வேறு பிரமுகர்களுடன் இணைந்து பூதத்தம்பி, சத்தியவான் சாவித்திரி, வள்ளி திருமணம், பாஞ்சாலிசபதம் அரிச்சந்திரமயான காண்டம் போன்ற பல இசைநாடகங்களிலும், காத்தவராயன் சிந்து நடைக்கூத்திலும் நடித்தவர். மேலும் சிறுவர் நாடகத்துறையிலும், இலக் கிய சமூக நாடகத்துறையிலும் ஆர்வமுடையவர். வட இலங்கை சங்கீத

சபையின் நாடகமும் அரங்கியலும் துறையில் ஆசிரியர்தராதர பரீட் சையில் சித்தியெய்தி நாடகக் கலாவித்தகர் பட்டம் பெற்றவர். தற்பொழுது உளவியல் ஆற்றுப்படுத்தல் துறையில் பிரயோக அரங்க முறையையும் இணைத்து ஈடுபட்டு வருகின்றார். பாடசாலையின் தமிழ்த்தினப் போட்டிகளில் இவரால் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்படுகின்ற கூத்துக் கள் வலயமட்டம், மாகாணமட்டம் வரை பரிசில்களைப் பெற்றமை குறிப் பிடத்தக்கது. வலிகாமம் வடக்கு கலாசாரப்பேரவையின் செயற்குழு உறுப் பினராகவும் செயற்பட்டு வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.


## வைத்திலிங்கம் விஜயபாஸ்கர்



அளவெட்டி மேற்கு என்ற இடத்தில் 1966.10.18 ஆம் நாள் பிறந்தவர்.தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரியில் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றும் இவர் இசை நாடகத்துறையில் அதிகளவில் ஈடுபாடும் மிகுந்த திறமையும் கொண்டவர்.பாடசாலைப் பருவத்தில் இத் துறையில் ஈடுபாட்டுடன் ஆரம்பித்தவர்.யாழ்ப்பாணம் நாட்டார் வழக் கியல்கழகத்தின் செயற்பாடுகளிலும் பாரம்பரியக்கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் செயற்பாடுகளுடனும் தன்னை அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்தி வருபவர். பூதத்தம்பி, சத்தியவான் சாவித்திரி, அரிச்சந்திரா, வள்ளி திருமணம்,ஆனைஅடக்கிய அரியாத்தை, கண்ணகிவழக்குரை போன்ற இசைநாடகங்களில்முக்கிய பாத்திரங்களை ஏற்றுநடித்துப்புகழ் பெற்றவர்.

## அமரர்கள்

## வேலு மார்க்கண்டு



1916 ஆம் ஆண்டு வசாவிளான் தெற்கில் பிறந்தவர். இவர் தனது 19 வது வயதில் நடிகமணி வீ.வீ. வைரமுத்துவினது தலைமையில் இயங்கிய வசந்த கான சபாவில் இணைந்து சத்தியவான் சாவித்திரி நாடகத்தில் இயமன் பாத்திரமேற்று நடித்தவர். இப்பாத் திரத்தின் மூலம் நாடக உலகில் இயமன் மார்க்கண்டு என அழைக்கப்


படுபவரானார். மேலும் அரிச்சந்திரமயானகாண்டம், வள்ளி திருமணம், பக்தநந்தனார், கோவலன் கண்ணகி, பவளக்கொடி, அல்லி அருச்சுனா, பூதத்தம்பி போன்ற இசை நாடகங்களில் முக்கிய பாத்திரங்களேற்று பல தடவைகள் அரங்கேறியவர்.மேலும் இலங்கை வானொலியிலும், ரூபவாஹினி தொலைக்காட்சிச் சேவையிலும் இவரால் நடிக்கப்பெற்ற நாடகங்கள் ஒலி, ஒளி பரப்பப்பட்டன. பண்ணிசை, கர்நாடக சங்கீதப் புலமையும், காவடிக்கலையிலும் ஆற்றலுடையவர். இவரது புதல்வனான அமரர் வி.எம். குகராஜா மிகச்சிறந்த நாடகக்கலைஞன் என்பதும் குறிப் பிடத்தக்கது.1994 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

## அண்ணாவியார் பூ.நாகமுத்து



1919-01-10 ஆம் நாள் காங்கேசன்துறையில் பிறந் தவர்.இசைத்துறையிலும்,நாடகத்துறையிலும்பெரும் புகழ் பெற்றுவிளங்கியவர். இலங்கை வானொலியிலும் நாட்டின் பல பாகங்களிலும் பாடியும்நடித்தும் தனக்கென ஒரு பாணியை உருவாக்கி ஈழத்து நாடகவரலாற்றில் தனியிடம் பிடித்துக் கொண்டவர். நடன,நாடக நிகழ்வுகளுக்குப் பின்ன ணிக்கலைஞனாகப் பணியாற்றியவர். காங்கேசன்துறை வசந்தகான சபாவின் உறுப்பினராகவும், இராஜபாட்நடிகராகவும் கலையுலகில் வலம் வந்தவர்.நடிகமணி வீ.வீ.வைரமுத்து அவர்களுடன் இணைந்து வசந்த கான சபாவால் தயாரிக்கப்பட்ட இசை நாடகங்களில் நடித்து வலிகாமம் வடக்கின் உன்னத கலைஞனாகத் திகழ்ந்தமை நாடறிந்ததே.1976-09-17 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

## வெற்றிவேலு சுந்தரமூர்த்தி



1921.10.22 ஆம் நாள் அளவெட்டியில் பிறந்தவர்.இசை நாடகங்களில் பபூனாகத்தோன்றி மக்களைச் சிரிக்க வைத்த கலைஞன். பல ஆற்றல்மிகு கலைஞர்களுடன் இணைந்து நடிப்புத்திறனை வெளிப்படுத்தியவர். 1999.05.19 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தவர்.

## நடிகமணி வீ.வீ.வைரமுத்து



1924.02.11 ஆம் நாள் காங்கேசன்துறையில் பிறந்தவர். இசைநாடகக்கலையில் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்தவர். மிருதங்கம்,வயலின், புல்லாங்குழல், ஹார்மோனியம், ஜலதரங்கம் முதலான இசைக்கருவிகளை மீட்டுவதில்வல்லவர். இத்துறைகளில் தேர்ச்சியினையும், பயிற்சியினையும் தனது தாய்மாமனான பிள்ளைநாயகம் அவர்களிடம் கற்றுக் கொண்டவர். திரைப்படம், நடிகர், நெறியாளர் என அரங்கியல் ஆற்றலுடையவர். 1953 ஆம் ஆண்டு இலங்கையர்கோனின் துணையுடன் வசந்தகானசபா என்ற நாடக சபையை நிறுவி தனது உறவினர்களில் நடிப்பாற்றலுள்ளவர்களையும், ஊர்க்கலைஞர்களையுமிணைத்து பார்சி வழிநாடகங்களை இலங்கையின் பட்டிதொட்டிகளிலெல்லாம் அரங்கேற்றியவர். தமிழ்நாட்டின் சங்கரதாஸசுவாமிகளின் வழியைப் பின்பற்றி இந்தியநாடகக் குழுக்களினால் அரங்கேற்றப்பட்ட இசை நாடகங்களினால் கவரப்பட்டதன் வழிப்பேறாக ஈழத்தில் ஊற்றெடுத்ததே வைரமுத்துவின் அரங்க நடவடிக்கைகளாகும். அந்த வகையில் அரிச்சந்திரா, கோவலன்கண்ணகி, சத்தியவான் சாவித்திரி, நல்லதங்காள், ஞானசௌந்தரி, பூதத்தம்பி,இரணியன், இலங்கேஸ்வரன், மந்திரிகுமாரி, திருநீலகண்டர், வள்ளிதிருமணம், பவளக்கொடி, அல்லி அருச்சுனா, அப்பூதியடிகள்,பக்தநந்தனார் போன்ற பல இசைநாடகங்களை அரங்கேற்றியவர். பேராசிரியர் சு.வித்தியானந்தன், கிருபானந்தவாரியார் சுவாமிகள்,தமிழக நடிகர்களான ரீ.கே.பகவதி, ரீ.கே.சண்முகம், ஜெய்சங்கர், அசோகன், நாகேஸ், இயக்குநர் ஸ்ரீதர், மற்றும் பிரபல சிங்கள நாடகக்கலைஞர் தம்மயாகொட போன்றவர்கள் இவரது நடிப்பாற்றலை வியந்து பாராட்டியுள்ளதுடன் பட்டங்கள் வழங்கிக் கௌரவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. 1960 இல் கலையரசு சொர்ணலிங்கமவர்களால் நடிகமணி என்ற பட்டமும், பேராசிரியர் சு.வித்தியானந்தனவர்களால் கலைக்கோமான் என்ற பட்டமும், 2004 இல் யாழ்பல்கலைக் கழகம் தேகாந்த நிலையில் கௌரவ கலாநிதிப் பட்டமும் வழங்கிமை குறிப்பிடத்தக்கது.மேலும் நடிப்பிசைச்சக்கரவர்த்தி, நாடக ரத்தினா, நடிகரத்தினா,முத்தமிழ்வித்தகர், நாடகவேந்தன் போன்ற பட்டங்களும் அன்பர்களால் வழங்கப்பட்டுள்ளன. இவருடன் அரியாலை

செல்வம், வி.கே.ரத்தினம்,தெல்லிப்பளை க. உருத்திராபதி, வி.ரி.செல்வ ராஜா, சுன்னாகம் ம.தைரியநாதன், சண்டிலிப்பாய் வி.என்.செல்வராஜா போன்ற பல கலைஞர்கள் இணைந்து நடித்துப்புகழ் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.இவரைப்பற்றி கலாநிதி காரை செ.சுந்தரம்பிள்ளை யவர்களினால் நாடகதீபம், ஈழத்து இசை நாடக வரலாறு, பூதத்தம்பி இசைநாடகம், நடிகமணி வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும் என்பன போன்ற சுயசரிதை வடிவில் அமைக்கப்பட்ட ஈழத்து வரலாற்று நாடக ஆய்வு நூல்களாக எழுதியுள்ளார். இலங்கைத்தயாரிப்பான நிர்மலா என்னும் திரைப்படத்தில் இவருடைய மயானகாண்டம் என்ற நாடகத்தின் காட்சியும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கை வானொலி யிலும் இவரது நாடகங்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டு ஒலிபரப்பியமையும் 1959 இல் காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி திறந்த வெளியரங்கில் நடைபெற்ற மயானகாண்டம் நாடகத்தினை லண்டன் தொலைக் காட்சிநிலையம் ஒளிப்பதிவு செய்து உலகமெங்கும் ஒளிபரப்பியமை குறிப் பிடத்தக்கது. 1989-07-08 ஆம் நாள் வாழ்வுலகை நீத்து நிலையுலகம் சென்றார்.

## கந்தையா உருத்திராபதி



1927.12.14 ஆம் நாள் தெல்லிப்பளையில் பிறந்து தற்காலிகமாக மானிப்பாயில் வாழ்ந்தவர். இசை நாடகக் கலைஞர். நடிகமணி வி.வி.வைரமுத்துவினது நாடகங்களிலும், வேறுபல கலைஞர்களது நாடகங் களிலும் நடித்துப்புகழ் பெற்றவர். நடிகமணி வைரமுத்து சாவித்திரி யாகவும், உருத்திராபதி சத்தியவானாகவும் இணைந்து நடித்த முதுபெரும் கலைஞனாவார். இவர் இராமயணத்தில் இராமராகவும், அல்லி அருச்சுனாவில் அருச்சுனனாகவும், சத்தியவான் சாவித்திரியில் நாரதராவும், வள்ளிதிருமணத்தில் வேலன்,வேடன்,விருந்தன், நாரதராகவும், பூதத்தம்பியில் கைலாயபிள்ளையாகவும், ஞானசௌந்தரி யில் லேனாளாகவும், கோவலன் கண்ணகியில் கோவலனாகவும், பவளக்கொடியில் அரிச்சுனாவாகவும், மார்க்கண்டேயரில் மிருகண்ட முனிவராகவும், மயானகாண்டத்தில் சத்தியகீர்த்தி, நாரதர் போன்ற பல பாத்திரங்களிலும் நடித்துஈழத்து இசைநாடக வரலாற்றில் தனக்கென்

றொரு இடத்தைப் பதித்துக்கொண்டவர். இவருடன் இணைந்து நடித்த வர்களில் நடிகமணி வீ.வீ.வைரமுத்து,சி.ரி.செல்வராசா, வி.என். செல்வராசா, கனகரத்தினம் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். வானொலி இசைநாடகத்திலும் புகழ்பெற்றவர். 1978 ஆம் ஆண்டு இவரது வானொலி நாடகம் பிரபல்யமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்துசமயகலாசார அலுவல்கள் திணைக்களம் கலைஞானகேசரி, வலிகாமம் வடக்கு கலாசாரப்பேரவை கலைச்சுடர், கலாசார அலுவல்கள் திணைக்களம் கலாபூஷணம் போன்ற விருதுகள் வழங்கிப்பெருமைப் படுத்தப்பட்டவர். 2008.02.18 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

### தொமிங்கு தேவசகாயம்பிள்ளை



1926.06.07ஆம் நாள் சீந்திப்பந்தல் இளவாலையில் பிறந்தவர். நாட்டுக்கூத்து, நடிப்பு, நெறியாள்கை போன்ற கலைகளில் 1936-2005 வரை ஈடுபட்டு வந்தவர் தன்னுடைய பாடசாலைக் காலத்திலிருந்து நடிக்க ஆரம்பித்தவர். 16 நாட்டுக்கூத்துக்களில் நடித் தவர். அது மட்டுமல்லாமல் 9 கூத்துக்களுக்கு அண்ணாவியாராகப் பணியாற்றியவர். வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையினர் கலைச் சுடர் என்னும் விருதினை வழங்கிக்கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

### வேலு செல்வமணி




1935-08-06 ஆம் நாள் கொத் ஆல் கொக்கணை வளவு, கே.கே.எஸ்.போஸ்ற்,பலாலியில் பிறந்தவர். இவர்சிறந்த கிராமிய,இசைநாடகக் கலைஞரும், காத்த வராஜன் கூத்துக்கலைஞனும் ஆவார். மாமனாரான அண்ணாவியார் எஸ்.மயில்வாகனம் அவர்களால் உருவாக்கப்பட்ட வடமயிலை கலைமகள் நாடகமன்றத்தின் மூலம் வசாவிளான் கண்ணகி அம்மன் ஆலயத்தின் முன்னால் அமைந்திருந்த வாசிகசாலையில் மனோன்மணி என்ற நாடகத்தில் நடித்ததன்மூலம் நாடக உலகில் பிரவேசித்தவர்.பின்னாளில் பலபாரம்பரியக் கலைகளை அரங்கேற்றியவர்.அந்த வகையில் காத்தவராஜன், கதை வசனநாடகங்க ளான பண்டாரவன்னியன், மலர்புரியின் மணிமுடி, மலைக்கோட்டை மன்னன் முதலியசரித்திர நாடகங்களையும் அரங்கேற்றியவர். காத்வ

ராயன்கூத்தில் அம்மனாகவும், பக்தநந்தனாரில் ஐயராகவும் நடித்த பாத்திரங்கள் இவருக்குப்புகழைத் தேடிக்கொடுத்தன. மட்டக்களப்பைச் சேர்ந்த அகம்மதுஅலியாசு என்பவரை குருவாகக்கொண்டு சிலம்பு விளையாட்டையும் கற்றுக்கொண்டவர். மேலும் உடுக்கு,காவடி,கரகம் ஆகிய கலைகளை வா.கிருஸ்ணபிள்ளை என அழைக்கப்படும் அண்ணாவியாரிடம் பயின்றவர். இடம் பெயர்ந்து வாழ்ந்த போதிலும் கலையை அழியவிடாது தன்னுடைய இறப்பு வரையிலும் கற்றுக் கொண்ட கலை வடிவங்களைப் பேணிப்பாதுகாத்ததுடன், மற்றவர் களுக்கும் பயிற்றுவித்து பாரம்பரியக் கலைவடிவங்களின் தொடர்ச்சிக்கு வழியமைத்த பெருமைக்குரியவர்.

## எழுத்தாளர்கள்

### அமரசிங்கம் இராசதுரை



1938.05.11 ஆம் நாள் தையிட்டி கிழக்கு காங்கேசன் துறையில் பிறந்தவர்.தற்பொழுது துர்க்காபுரம் தெல்லிப் பளையில் வசித்து வருகின்றார். எழுத்துத்துறையில் தன்னிகரில்லாதவராக விளங்கிவருகின்றார். இவர் ஈழநாடு, வீரகேசரி, தினகரன், போன்ற பத்திரிகைகளில் எழுதிய சிறுகதைகளை தொகுத்து லண்டன் சிவயோகம் அறக்கட்டளை நிதியத்தின் நிதி உதவியில் "அகதி அரிசி" என்ற பெயரில் யாழ் இலக்கிய வட்டம் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. மேலும் நாடகம், திரைப்படம் போன்றவற்றுக்கான பிரதிகளை எழுதுவதிலும் ஆற்றல் வாய்ந்தவர்.

### வேலுப்பிள்ளை அமுதலிங்கம் (வேலமுதன்)



938.10.30 ஆம் நாள் மாயெழு குரும்பசிட்டி மேற்கு தெல்லிப்பளை என்னும் இடத்தில் பிறந்து தற்பொழுது 18/03/3, metro apt.,55th lane, Wellawatta, colombo-6 என்ற இடத்தில் வசித்து வருகின்றார். வைகறை, மாரீசம்,ஓர்மம் போன்ற சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட்டவர்.மரபுவழி நாடகத்திலும் ஆற்றலுடையவர். அறுவடை, வாழும் வழி போன்ற நாடகங்களை எழுதி அரங்கேற்றியவர். சாகித்திய மண்டல விருது பெற்றவர்.வேலமுதன் என்னும் பெயரில் மறைந் திருக்கும் படைப்பாளியாவார்.

### இரவி அருணாசலம்



அளவெட்டியைச் சேர்ந்த இவர் எழுபதுகளின் பிற்பகுதியில் அளவெட்டியிலிருந்து வெளிவந்த"புதுசு"சஞ்சிகையின் ஆசிரியர்களுள் ஒருவர்.சரிநிகர் இதழின் ஆசிரியர் குழுவில் பணியாற்றியவர்.தற்பொழுது லண்டனில் இருந்து ஒலிபரப்பாகும் I.B.C. வானொலியில் பணியாற்றி வருகின்றார். நவீன தமிழின் முக்கியமான சிறுகதையாசிரியர்களுள் ஒருவர்.

### முத்துத்தம்பி வாமதேவன்.



1942.04.19 ஆம் நாள் தந்தைசெல்வாபுரம் தெல்லிப்பளை கிழக்கில் பிறந்து சைவப்பாடசாலை வீதி கோண்டாவில் மேற்கு கோண்டாவிலில் வசித்து வருகின்றார்.விமர்சனங்கள்,கட்டுரைகள் எழுவதில் 40 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம்உடையவர்.யாழ்ப்பாணம் கூட்டுறவுச்சபையின் வெளியீடான ஐக்கியதீபம் பத்திரிகையின் பிரதான ஆசிரியராகப் பணியாற்றியவர். தற்பொழுது யாழ்தினக்குரல் பத்திரிகையின் பிரதான ஆசிரியராகப் பணியாற்றிவருவது குறிப்பிடத்தக்கது. அது மட்டுமல்லாமல் நாடகங்கள் எழுதுவதிலும் நடிப்பதிலும் சிறந்து விளங்கி வருகின்றார்.இவரது சேவைகளைக் கௌரவிக்கும் முகமாக வலிகாமம் வடக்கு கலாசாரப்பேரவையினர் கலைச்சுடர் என்ற விருதினையும்,இந்து சமய அலுவல்கள் அமைச்சினால் நடத்தப்பட்ட இரண்டாவது உலக இந்து மாநாட்டில் ஊடகத்துறையினருக்கான விருதும் வழங்கிக்கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

### நவரத்தினம் பரமேஸ்வரன்



1962.12.27ஆம் நாள் கீரிமலை காங்கேசன்துறையில் பிறந்து தற்பொழுது 40/2 மாரியம்மன்வீதி, திருநெல்வேலி யாழ்ப்பாணத்தில் வசித்து வருகின்றார்.ஈழமுரசு பத்திரிகையின் மூலம்பத்திரிகைத்துறையில் நுழைந்த இவர் முரசொலி, ஈழநாடு,சக்தி வானொலி, சுவர்ண ஒலி,சி.எவ்.எம். போன்றவற்றில் நிருபராகப் பணியாற்றியதுடன் சரிநிகர் பத்திரிகையின் பத்தி எழுத்தாளராகவும் பணியாற்றியவர். தற்போது உதயன் பத்திரிகையின் பத்தி எழுத்தாளராகப்பணியாற்றுகின்றார்.

உதயன் பத்திரிகையில் ஞாயிறு தோறும் தாண்டவன் என்ற பெயரில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளை எழுதி வருகின்றார். புலமைப்பரிசில் மூலம் இந்தியா சென்று இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைகளில் பயிற்சி பெற்றது மட்டுமல்லாது மேலும் ஒரு புலமைப்பரிசில் மூலம் டென்மார்க்கிற்கும் சென்று பத்திரிகைத்துறையில் பயிற்சி பெற்றவர்.தற்போது டெய்லி மிரர் செய்திஸ்தாபனம்,பி.பி.சி, சண்டேடைரம்ஸ்,அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் போன்றவற்றின் யாழ்ப்பாணச் செய்தியாளராகக் கடமையாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது. அப்புஆச்சி ஆண்டமண்ணில் **Pradise Life and Camp Life** என்ற தலைப்புக்களில் வலிகாமம் வடக்கின் இருப்பைப் பற்றி இரண்டு நூல்களை வெளியிட்டுள்ளார். யாழ் பல்கலைக் கழக ஊடகவளங்கள் பயிற்சி மையத்தில் வருகை விரிவுரையாளராகவும் பணியாற்றி வருகின்றார்.

## செல்வி ஆரபி சிவஞானராஜா



1981.07.15 ஆம் நாள் அளவெட்டி அலுக்கை அளவெட்டியில் பிறந்து தற்பொழுது கொக்குவில் மேற்கு கொக்குவிலில் வசித்துவருகிறார். சிறுகதை எழுதுவதில் 5 வருட அனுபவம் உடையவர். கரைதேடும் அலைகள்,தேயாத நிலவுகள் போன்ற சிறுகதை நூல்களை வெளியிட்டவர்.

# அமரத்துவமடைந்தவர்கள்

## மங்களநாயகம் தம்பையா

எழுத்துலகில் ஆண்களும் பெண்களும் எழுதுகின்ற போதிலும் பெண்களில் ஒரு சிலரே எழுத்துத் துறையில் ஈடுபாடு கொண்டுள்ளனர். இது வலிகாமம் வடக்கிற்கும் பொருந்துவதாகும்.ஈழத்தின் முதற் பெண் எழுத்தாளர் என்ற பெருமைக்குரியவர் தெல்லிப்பளையை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மங்களநாயகம் தம்பையா அவர்கள்.இவர் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் புகழ் பெற்று விளங்கியவர்.மங்களநாயகம் தம்பையா நொறுங்குண்டஇதயம்,அரியமலர் ஆகிய இரு நாவல்களை


யும் அனுபவக்களஞ்சியம் என்ற கட்டுரைத்தொகுப்பு நூலையும் வெளி யிட்டுள்ளார். இவரது கணவர் அப்புக்காத்தான ஐசாக் தம்பையா அவர்கள் இக்கட்டுரை நூலை "ரேஸ்ட் அன் சீ"என்ற பெயரில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். மங்களநாயகம் தம்பையா தெல்லிப் பளை ரீ.டபிள்யூ.பி.குமாரகுலசிங்க முதலியாரின் கனிஸ்ட புத்திரியாவார். முதலியார் "பதிவிரதை விலாசம்" என்னும் நாடக நூலாசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**ச. அம்பிகைபாகன்**



1908.05.05ஆம் நாள் மல்லாகத்தில் பிறந்தவர். சிறந்த அறிஞராக விளங்கியவர். யாழ்ப்பாணம் வைத்தீஸ் வரக்கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றியவர். ஆரா ய்ச்சித்திறண் மிக்கவர். சிறந்த பேச்சாளர். எழுத்தாளர். புதிய உத்திகளைக் கையாண்டு சிறுகதைகளை எழுதுவதில் வல்லவர். 1967 இல் கச்சியப்பர் கந்தபுராணம் ஒரு தமிழ்க் காப்பியம். 1972 இல் சுன்னாகம் செல்லாச்சி அம்மையார், யோகர் சுவாமிகள். 1978 இல் கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி, முதலான பல தமிழ் நூல்களையும்,1981இல் **Eelanadu and Tamil Sangam** (ஈழநாட்டுத்தமிழ்ச்சங்கம்) என்ற ஆங்கில நூலையும் எழுதி வெளி யிட்டுள்ளார். 1986.01.26 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

**அ.செ.முருகாநந்தன்**



1921 ஆம் ஆண்டு மாவிட்டபுரத்தில் பிறந்து அள வெட்டியில் வாழ்ந்தவர். இவரது படைப்புகள் மனித நேயப்பண்பு உடையனவாகும். கட்டுரை, சிறுகதை, நாவல், குறுநாவல் ஆகிய துறைகளில் தடம்பதித்தவர். அ.செ.மு என இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்ட எழுத்தாளர். அளவெட்டி செல்லக்கண்ணு முருகாநந்தம் அவர்கள் ஈழத்து நவீன தமிழ் சிறுகதை முன்னோடிகளில் ஒருவர். தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரியில் மாணவனாகத் திகழ்ந்த காலத்திலேயே சிறந்த எழுத்தாளராக விளங்கியவர். அப்பொழுதே ஈழகேசரி ஆசிரியர் குழுவில்

சேர்ந்து தீவிரமாக எழுத்துத்துறையில் ஈடுபட்டவர். இதே காலத்தில் மறுமலர்ச்சிச் சங்கத்தில் முக்கிய உறுப்பினராக இருந்து செயற்பட்டவர். ஈழகேசரியின் பிரதம ஆசிரியராகவும் பணியாற்றவர். அ.செ.மு.ஈழகேசரியில் பீஸ்மன் என்ற புனைபெயரில் ஆங்கில நாவல் ஒன்றை அலிபாவாவின் குகை என்ற பெயரில் தொடர்ந்து மொழி பெயர்த்து வெளியிட்டவர். ஈழகேசரியில் வண்டிச்சவாரி என்ற பெயரில் தொடர்கதை எழுதியவர். ஜேர்மன் மொழியில் வில்கெம்ஸிமித் என்பவர் எழுதிய நாவலை போட்டி என்ற பெயரில் மொழிபெயர்த்தவர். திருகோணமலையில் வாழ்ந்த காலத்தில் 1950 களில் எரிமலை என்ற பத்திரிகையை ஆரம்பித்து நடத்தியதுடன் புகையில் தெரிந்தமுகம் என்ற புனைகதையையும் எழுதியவர். யாத்திரை என்ற நவீனத்தை ஈழகேசரியில் 1957 களில் எழுதி வெளியிட்டவர்.1958இல் ஈழகேசரி வெளிவராமல் நின்று விட்டதனால் ஈழநாட்டுப் பத்திரிகையில் தொடர்ந்து வெளிந்தமை குறிப்பிடத்தக்கது. இவர் சிறுகதை,நவீனம் ஆகிய புனைகதைத் துறைகளிலும் ஈடுபட்டிருந்த போதிலும் சிறுகதை எழுதுவதிலேயே சிறந்து விளங்கியவர்.இவரால் எழுதப்பெற்ற சிறுகதைகளில் சிலவற்றைத் தொகுத்து யாழ்ப்பாணமாவட்ட கலாசாரப்பேரவையால் மனிதமாடு என்ற பெயரில் 1980 களில் வெளியிப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. 1989 யூலை22 மல்லிகை இதழில் எழுத்தாளர் குகன் என்பவர் இவரது சிறப்பையும் பெருமையையும் விதந்து குறிப்பிடுகின்றார். காளிமுத்துவின் பிரஜாவுரிமை, மனிதமாடு போன்ற இவரது சிறுகதைகள் காலத்தால் அழியாதவை. அழகான தமிழ் நடை,உணர்வு வெளிப்பாடுகள், மண்வாசனை, சமூகப்பிரச்சினைகள் என்பன இவரது சிறுகதைகளினது சிறப்பம்சங்களாகும். தமிழ்ச்சிறுகதைகளை ஆராயும் எவரும் அ.செ.முருகானந்தனை மேற்கோள்காட்டத் தவறுவதில்லை. அண்மையில் பதினைந்து ஈழத்துத்தமிழ்ச் சிறுகதைகள் மொழி பெயர்த்து சிங்களத்தில் வெளியிடப்பட்டன. அவற்றில் இவரது காளிமுத்துவின் பிரஜாவுரிமை என்ற சிறுகதையும் ஒன்றாகும். 1998.10.02 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.


## வேலுப்பிள்ளை நடராஜன்



1933-07-28ஆம் நாள் வடமராட்சி வல்வெட்டித்துறையில் பிறந்தவர் திருமணமாகி அளவெட்டி கணேஸ்வரம் என்னும் இடத்தில் வாழ்ந்தவர். இலக்கியத்துறையில் ஆர்வம் கொண்டவர். அமரர் ஆசிரியர்.திரு.கனக செந்திநாதன்.அமரர் கவிஞர் திரு.இ.நாகராஜன், அமரர் கலைப்பேரரசு ஏ.ரீ.பொன்னுத்துரை,கலாநிதி க.குணராஜா, கவிஞர் திரு காரைசெ.சுந்தரம்பிள்ளை, திரு.எஸ். பொன்னுத்துரை ஆகியோர் இவரது எழுத்தாற்றலுக்கான அடித்தளமிட்டோராவர் எனப்பெருமித்துடன் பேசிக் கொண்டவர். இவர் இலங்கையில் யாழ்ப்பாணக் கதைகள், ஊரும் உலகமும் என்ற சிறுகதைத் தொகுதியையும், இந்தியாவில் வேலி என்ற சிறுகதைத்தொகுதியையும் வெளியிட்டவர். வீரகேசரி, தினகரன், ஈழநாடு போன்ற பத்திரிகைகளில் நூற்றைம்பதுக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியவர்.1981ஆம் ஆண்டு தொடக்கம் பன்னிரண்டு ஆண்டுகள் பனை தென்னைவள அபிவிருத்திச் சங்கங்களின் சமாச வெளியீடான கற்பகம் இதழின் ஆசிரியராகவும் பணியாற்றியவர். எழுத்துலகில் யாழ்ப்பாண சமூகத்தில் அடிநிலைப் படுத்தப்பட்ட மக்களின் உள்ளக் குமுறல்களை தன்சிறுகதைகள் மூலம் வெளிப்படுத்தியவர். இழவு, கறை, ஊருக்காக, தேர், ஒன்றுக்குள்ஆயிரம், நரபலி, சாம்பல், அப்புவைத்தி ன்னிகள், ஊரும்உலகும் போன்ற படைப்புகள் இவருக்குப் புகழைப் பெற்றுக் கொடுத்தன என்பது குறிப்பிடத்தக்கது. 2004-12-05 ஆம் நாள் வாழ்வுலகை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

## ஓவியக்கலைஞர்கள்

## சரவணமுத்து சபாநாயகம்



1928.07.22 ஆம் நாள் நவாலியில் பிறந்து மில் ஒழுங்கை மல்லாகம் என்னும் இடத்தில் நிரந்தரமாக வாழ்ந்து வருகின்றார்.தமிழ் நாட்டில் உள்ள அரசினர் சிற்ப.ஓவியக்கலாசாலையில் பயின்று ஓவியக்கலையில் முதல் தர டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர். இந்தியாவிலும் இலங்கையிலும் நடைபெற்ற ஓவியக் கண்காட்சிகளில் பல

படைப்புக்களை காட்சிப்படுத்திப் பாராட்டுப் பெற்றவர். மேலும் வீரகேசரி பத்திரிகையில் பலகாலம் ஓவியராகப் பணியாற்றியவர். அத்துடன் ஈழநாடு வாரமலர் பத்திரிகையில் வெளிவந்த சிறுகதைகள், தொடர் கதை களுக்கும் ஓவியங்கள் வரைந்ததோடு, தினகரன் வாரமலர் பத்திரிகைக் கும் பலகாலம் பகுதிநேர ஓவியராக ஓவியங்கள் வரைந்துள்ளார். கவிதைகள், சமயக் கட்டுரைகள் ஆகியவற்றிற்கும் கருத்தான ஓவியங் களை வரைந்தவர்.அதுமட்டுமல்லாது விளம்பரங்களுக்கான ஓவியங் களையும் வரைந்தவர்.மேலும் நாவல்கள், புத்தகங்கள், சஞ்சிகைகளுக் கான அட்டைப் படஓவியம் வரைவதிலும் திறமைவாய்ந்தவர். 2008 ஆம் ஆண்டு ஓவியதரிசனம் என்ற இறுவட்டையும் வெளியிட்டவர். இவரது இத்தகைய சேவைகளை பாராட்டும் நோக்கில் வலிகாமம் வடக்கு கலாசாரப்பேரவை கலைச்சுடர் விருதினையும், 1997 ஆம் ஆண்டு கலா சாரஅலுவல்கள் திணைக்களத்தினால் கலாபூஷணம் விருதும் வழங்கப் பெற்றவர்.யாழ்பல்கலைக்கழகத்தின் கலைப்பீடாதிபதியும் மெய்யியல் துறைப் பேராசிரியருமான அமரர் சோ.கிருஸ்னராஜா அவர்கள் இவரது ஓவியங்களைப் பாராட்டி மல்லிகை சஞ்சிகையில் எழுதியுள்ளமையும், 2008 ஆம் ஆண்டு உதயன் பத்திரிகையில் இவருடைய ஓவியக்கலை தொடர்பிலான செவ்வியும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

### சுபாஸ் சந்திரபோஸ்



அளவெட்டியில் பிறந்து தற்பொழுது சுவிஷ்லாந்தில் வாழ்ந்துவருகின்றார்.ஆரம்பகாலங்களில் மரபுரீதியான ஓவியங்களை வரைந்து கொண்டிருந்த இவர் படிப்படியாக அவற்றில் நவீனத்தைப்புகுத்தி புதிய தேடல்களையும் பல்வேறு வகையான உணர்வு களையும் மிக நுட்பமாக வெளிப்படுத்தி வருகின்றார்.இவரது பல ஓவியங் கள் ஈழத்தின் யுத்த சூழலையும் அதனால் அவதியுறும் மக்களின் வாழ் வையும் சித்தரிப்பதாய் உள்ளன.

### தூசை அடைக்கலமுத்து



1932.04.1932 ஆம் ஆண்டு கருகம்பனையை பிறப்பிடமாகவும் குளமன்காலை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் சிறுவயதில் இருந்தே ஓவியத்துறையில் தீவிர நாட்டங்கொண்டு முறையாக கற்றுத்தேறி இற்றைவரை இத்துறைக்கு தன்னைஅர்ப்பணித்து செயலாற்றி வருகின்றார். ஓவியத்துறையில் பன்முகப்பட்ட பணிகளை ஆற்றும் இவர் இத்துறையின் மூலமே தனது வாழ்வூதியத்தையும் பெற்றுவருகின்றார்.காண்பவரை வியக்கவைக்கும் கலைவண்ணங்களை தனது கைத்திறத்தால் நொடிப் பொழுதுகளுக்குள் வரைந்துவிடக்கூடிய இக் கலைஞன் சமூகத்திற்கு ஆற்றிய பணிகள் அளப்பரியவை.1960 ஆம் ஆண்டிலிருந்து திருமறைக்கலாமன்றத்தினுடைய அரங்கச்செயற்பாடுகளுக்குப் பின்னணி ஓவியம் வரையும் கலைஞனாகச்செயற்பட்டவர். வர்த்தகத் துறையினருக்காக எழுத்தோவியம், வர்ணக் கலை ஓவியம், ஆலயங்களின் சுவர் சித்திரம், வர்ணம்பூசுதல் போன்ற கலைத் துறைசார் செயற்பாடுகளை ஒப்பந்த அடிப்படையில் தொழிலாக மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### சுந்தரம்பிள்ளை இரகுராகவன்



1978.09.03 ஆம் நாள் அளவெட்டி வடக்கு என்னும் இடத்தில் பிறந்தவர்.யாழ்பல்கலைக்கழகஇராமநாதன் நுண்கலைக் கழகத்தில் சித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறியைப்பூர்த்தி செய்தவர். வடக்குக் கிழக்கு மாகாண கைத்தொழில் துறைத்திணைக்களம் 2004 ஆம் ஆண்டு நடத்திய கண்காட்சியில் இவரால் காட்சிப்படுத்தப்பட்ட சிற்பம், ஓவியப்படைப்புக்கள் முதலாம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. 2004இல் ஏற்பட்ட சுனாமி அழிவுகளைச் சித்தரிக்கும் காட்சி ஓவியங்களும் இவரது அரியபடைப்புக்களாகும்

## அமரர்கள்

### தம்பையா சிவலிங்கம்




1912 ஆம் ஆண்டு அளவெட்டியில் பிறந்தவர்.ஓவியக் கலை ஆசிரியராக பணியாற்றி பல ஓவிய ஆசிரியர்களை உருவாக்கியவர்.1987 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

## சிதம்பரப்பிள்ளை பொன்னம்பலம்



1917.11.17ஆம் நாள் அளவெட்டியில் பிறந்தவர். தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் ஓவிய ஆசிரியராகப்பணியாற்றியவர். பாடசாலை மற்றும் கலை மன்றங்களினால் அரங்கேற்றப்படுகின்ற நாடகங்களுக்குப் பின்னணி ஓவியம் வரைந்தவர். கலையரசு சொர்ணலிங்கம் அவர்களினது நாடகத் தயாரிப்புகளுக்கு பின்னணி ஓவியம் வரைந்தவர்.ஆதவன் என்னும் புனைபெயரில் பலஆக்கங்களை பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் எழுதிவந்தவர்.இலக்கிய உலகில் பிரபல எழுத்தாளராகத்திகழும் சிற்பியின் கலைச்செல்வி சஞ்சிகையின் ஓவியராகப் பணிபுரிந்தவர்.1975ஆம் ஆண்டு கடுகண்ணாவையிலும், குழவி சுட்டான் நெடுங்கேணியிலும் ஓவியக்கண்காட்சிகளை நடத்தியவர். ரமணி என்றழைக்கப்படும் வை.சிவசுப்பிரமணியம், சங்கானையைச்சேர்ந்த ஞானசேகரம் ஆகியோர் இவரிடம் ஓவியக் கலையை முறையாகப் பயின்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பல இயற்கைக் காட்சிகளை மட்டுமல்லாது பல சுவரோவியங்கள், திரைச்சீலைகள், தத்ரூபமான படங்கள் வரைந்து பாராட்டுக்களைப் பெற்றவர். அத்துடன் ஆலயங்களுக்கான ஓவியங்கள், வர்ணங்களை நுணுக்கமாக வரைவதில் புலமை வாய்ந்தவர். அளவெட்டி பெருமாக்கடவை விநாயகர், நாகவரத நாராயனர் தேவஷ்தானம் ஆகிய ஆலயங்களுக்கு வர்ணப் பூச்சுக்களும் ஓவியங்களும் வரைந்தவர். கொழும்பு கலாபவனம் என்ற நிறுவனம் இவரது "மாலைநேரச்சந்தை" என்ற ஓவியத்திற்கு தேசிய மட்டத்தில் 2ஆம் பரிசினை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. 1999.11.04 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

## நடராசா தட்சணாமூர்த்தி



1934.06.28ஆம்நாள் அளவெட்டியில் பிறந்தவர். ஓவியக் கலையில்தனித்துவமான உருவங்களை வரைவதில் வல்லவர்.தொழில் ரீதியான விளம்பர வர்ணப்படங்களையும் பெயர்ப்பலகைகளையும் வரைவதிலும் எழுதுவதிலும் மிகுந்த திறன் வாய்ந்தவர். பல தங்கப்பரிசில்களையும் வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையின் கலைச்சுடர் விருதினையும் பெற்றவர்.2006.04.12 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

## குமாரவரோதயம் சிவகடாட்சம்பிள்ளை



1931.11.26ஆம் நாள் இல.08 குமாரகோவில் வீதி காங்கேசன்துறை என்ற இடத்தில் பிறந்தவர். மரபுவழிக் கவிதைகளையும் புதுக்கவிதைகளையும் எழுதுவதில் வல்லவர். அது மட்டுமல்லாமல் கலையரசு சொர்ண லிங்கத்துடன் இணைந்து நாடகங்கள் பலவற்றில் நடித்தவர். ஓவியம்வரைவதிலும், சிற்பங்களைச் செதுக்குவதிலும் ஆற்றலுடையவர். நாடக மேடைகளுக்கு ஒளிஅமைப்பு செய்வதிலும் வல்லவர். மாவை முருகனின் சேவற்கொடியை நினைவு கூரும்முகமாக மாவை செங்கோடன் என்ற புனைபெயரில் பலகதைகள், கட்டுரைகள், நாடகங்கள்,கவிதைகள் எனப்பலவற்றை பத்திரிகைகளுக்கும், வானொ லிக்குமென பிரதியாக்கம் செய்து வழங்கியிருக்கின்றார். இவரால் எழுதப் பெற்ற பெட்டிசம்பெரியதம்பி என்ற வானொலி நாடகம் இவருக்குப் புகழைப் பெற்றுக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

## முத்தையா திருநாவுக்கரசு



அளவெட்டிக் கிராமத்தில் கடந்த பல தலைமுறைகளாக வாழ்ந்த நீர்ப்பாசன எந்திரி திரு.திருமதி முத்தையா, செல்லாட்சி தம்பதிகளின் மூத்த புதல்வனாக 1939.04.01 ஆம் நாள் பிறந்தவர். விகடகவி என்ற புனை பெயரில் மறைந்திருந்து இலக்கிய, சமூக, சமயப் பணிகளை ஆற்றி வரும் இவர் சட்டத்தரணியாக பத்தொன்பது ஆண்டுகள் பணியாற்றிய பின் பன்னிரண்டு ஆண்டுகள் நீதிவானாகி, பின்னர் மாவட்ட நீதிபதியாகி ஓய்வுபெற்ற ஓர் வழக்கறிஞராகவாழ்ந்து வருகின்றார். அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் பயின்று பின் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் சுமார் ஏழு ஆண்டுகள். லண்டன் A/L வரை படித்து விட்டு சட்டக்கல்லூரியில் பிரவேசித்து 1968 ஆம் ஆண்டு சட்டத்தரணியானவர். பாடசாலை மாண வனாக இருந்த போதே விகடமாகக்கவி எழுதி பலரையும் வியப்புக்குள்ளாக்கியவர். இதனால் அக்கால ஆசிரியர்கள் மற்றும் மாணவர் குழாமால் புலவர் என

அழைக்கப்பட்டவர். யாழ்ப்பாணக்கல்லூரியில் பட்டப்படிப்பு மாணவர் மத்தியில் நடைபெற்ற எழுந்தமான பேச்சுப் போட்டியில் தங்கப்பதக்கத்தை சுவீகரித்து பின் சட்டக்கல்லூரியில் நான்கு ஆண்டுகளும்,அறம்கூறும் அரசியற்துறை என்ற பேச்சுப் போட்டியில் நான்கு தங்கப்பதக்கங்களைப் பெற்றதோடு சட்டக்கல்லூரி விவாதக் குழுவில் மூன்றாண்டுகள் தொடர்ச் சியாய் அங்கம் வகித்தவர். கட்டுரைகள் வரைவதிலும் மற்றும் கவிதை புனைவதிலும், பட்டிமன்றங்கள், விவாத மேடைகள், கவியரங்குகள், சமயஇலக்கியச் சொற்பொழிவுகள் எனப் பல்வேறு முகத்தோடு இலக்கியப் பணி ஆற்றிவருபவர். இவர் உதயன் பத்திரிகையில் நாளொரு பாடலாக எழுதிய முன்னூறு பாடல்களையும் தொகுத்து நூலாக வெளியிட எண்ணி இருப்பதும் இங்கு குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும். இவரது சமய, இலக்கியப் பேச்சுக்களில் மற்றும் கவிதைகளில் விகடம் தலைதூக்கி நிற்பது யாவரும் அறிந்ததே. சுமார் அரை நூற்றாண்டு காலமாக அரசியல் தொட்டு சமூக மறுமலர்ச்சி காண சலிக்காது உழைத்து வருபவர்.

## கவிஞர் வி.கந்தவனம்



அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றிய இவர் குரும்பசிட்டியில் பிறந்து தற்பொழுது கனடாவில் வாழ்ந்து வருகின்றார். தமிழிலும், ஆங்கிலத்திலும் புலமை பெற்றவர். ஈழத்தின் தலை சிறந்த கவிஞர்களில் ஒருவர். இலக் கியம், கவிதை, நாவல், வரலாறு முதலான பல்துறை சார்ந்த நூல்களை எழுதியுள்ளார். கவியரங்குகள் மூலம் தமிழ்க் கவிதையை சாதாரண மக்கள் மட்டத் திலும் பரவலாக்கிக் கொண்டு சென்றவர். எளிமையாகவும் இலகு வாகவும் துள்ளும் சந்தநடை கொண்டவையாகவும் அமைவது இவரது கவிதைகளின் முக்கிய பண்புகளில் ஒன்றாகும். ஈழத்துக் கவிதையின் தனித்துவமான இயல்புகளுக்கு இவருடைய பங்கும் முக்கியமானதாகும். 1964 இல் இலக்கிய உலகம், ஏனிந்தப் பெருமூச்சு, 1969 இல் கீரிமலையினிலே, 1972 இல் கவியரங்கில் கந்தவனம், 1972 இல் பாடுமனமே, 1969 இல் எழுத்தாளன், 1995 இல் முத்தானதொண்டர், 1998 இல் பத்துப்பாட்டு, ஆறுமுகம் ஆகிய கவிதை நூல்களை வெளி

யிட்டவர். நுணாவிலூர் என்பது இவர் எழுதிய வரலாற்று நூலாகும். மேலும் 1970 இல் கூனியின்சாதனை, 1953 இல் முறிகண்டிப்பத்து,1971 இல் குரும்பசிட்டி விநாயகர்பத்து, நல்லூர்நாற்பது, தங்கம்மா நான்மணி மாலை முதலான பல நூல்களையும் வெளியிட்டவர். தற்பொழுது கனடா விலிருந்து புலம்பெயர் இலக்கியப்பணிபுரியும் இவர் வலிகாமம் வடக்கின் மூத்த கவிப்புலமையாளர்களில் ஒருவராவார்.

## சின்னப்பு அமிர்தநாதன் குருக்கள்



1944-12-10 ஆம் நாள் தெல்லிப்பளையில் பிறந்தவர். குளமன்கால் மல்லாகத்தில் வசித்து வரும் இவர் தெல்லியூர்ப்புலவர் என அழைக்கப்படுபவர்.கவிதை மற்றும் நாடகத்துறைகளில்அதிகளவில் ஈடுபாடு டையவர். இவரால் எழுதப்பெற்ற காலத்தை வீணாக் காதே என்ற வானொலி நாடகம் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகி தங்கப்பதக்கம் பரிசு பெற்றமை குறிப்பிடத்தக்கது. ஏ!மனிதா ஏன் உன் நிலை மாற வேண்டும்?, வரலாற்றிலே ஒரு புதிய கண்ணோட்டம், குழந்தைகளின் இசை மலர் ஆகிய கவிதை மலர்களை வெளியிட்டவர். பிள்ளைகளின் நல்வாழ்வு மலர்வது எப்படி? என்ற நூலுக்கு சாவகச்சேரி பிரதேசசபையினால் பாராட்டும் பரிசும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## உருத்திரமூர்த்தி சேரன்



அளவெட்டியில் பிறந்து கனடாவில் வாழ்ந்து வருகின் றார். தற்காலத் தமிழ்க் கவிதைகளில் பரீட்சயமுடைய அனைவரது வாயிலும் உச்சரிக்கப்படும் பெயர் சேரன் ஆகும் மகாகவி உருத்திரமூர்த்தி அவர்களின் புதல் வனாவார்.2ஆவதுசூரியஉதயம்,யமன்,கானல்வரி, எலும்புக்கூடுகளின் ஊர்வலம், எரிந்து கொண்டிருக்கும் நேரம் என்பன இவரது கவிதை நூல்கள். தற்பொழுது கனடாவில் ஜோர்க் பல்கலைக் கழகத்தில் அகதிகள் ஆய்வுகளுக்கான நிலையத்தில் முதுநிலை ஆய் வாளராகவும் சமூகவியல் விரிவுரையாளராகவும் கடமையாற்றுகின்றார்.

## நடராஜா சிறிஸ்கந்தராசா



1958-04-23 ஆம் நாள் அளவெட்டி வடக்கு என்னும் இடத்தில் பிறந்தவர்.மரபுவழிக்கவிதைத் துறையில் மிகுந்த ஈடுபாடுடையவர். ஆயினும் சிறுகதை,கட்டுரை எழுதுவதிலும் ஆற்றல்பெற்றவர். பாடலாக்கப்போட்டி களில் பிரதேச, மாவட்ட, தேசியமட்டநிலைகளில் பலதடவைகள் பரிசில்கள் பெற்றவர். பாடசாலைக்காலங்களில் நாடகம் நடித்தல்,கவிதை புனைதல் போன்ற செயற்பாடுகளில் திறமைகளை வெளிப்படுத்தியவர். தற்காலத்தில் சிறுவர்களுக்கான நாடகத்தயாரிப்பு களிலும் முனைப்புடன் செயற்பட்டுவருகின்ற புலமையாளராவார்.

## சுப்பிரமணியம் குகதேவன்




1963.03.04ஆம் நாள் கொல்லங்கலட்டி தெல்லிப் பளையில் பிறந்து தற்பொழுது எழுபாவோடை தெல்லிப் பளையில் தற்காலிகமாக வசித்து வருகின்றார்.கவிதை எழுதுவதில் 15 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தை உடையவர். பல பட்டிமண்டபங்களிலும்,கவியரங்கு களிலும் பங்குபற்றி சிறந்த ஆக்ரோசமான வெளிப்பட்டை ஏற்படுத்தி வருபவர். புலவர் பார்வதிநாதசிவம், கவிஞர் சோ. பத்மநாதன், சைவப் புலவர் சு.செல்லத்துரை ஆகியோரது தலைமையின் கீழ் பல கவியரங்குகளில் பங்கு கொண்டவர்.இன்னும் தெல்லிப்பளை கலை இலக்கியக் கழத்தின் சங்கநாதம் அமைப்பில் வளர்க்கப்பட்டவர். இவர் தமது கவிதாஞானத்தின் குருவாக புலவர் பார்வதிநாதசிவம் அவர் களையே போற்றி வருகின்றார். இன்னும் மலையக மண்ணில் வாழ்ந்த பேறினாலும் அங்கே கவிஞர் க.ப.லிங்கதாசன் போன்றோரின் தொடர் பால் மெருகூட்டப்பட்டவர். காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் கல்வி பயின்றகாலத்தில் மாணவமன்றத்தின் பல கவிதைகளை பாடிய சிறப்பே இன்றைய எழுச்சிக்கு வழிகோலியது என்றும் பெருமிதத்துடன் பேசிக்கொள்வது கண்கூடு. மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய முருகன் மீதும், கீரிமலை நகுலேஸ்வரப்பெருமான் மீதும் உற்சவ காலத்தில் பல கவிதைகளைப் பாடியவர். இவரின் கவிதைகள் சிவராத்திரி காலங்களில் வானொலியிலும் ஒலிபரப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பார்வதிநாதசிவம் மகாலிங்கசிவம்



1968.06.21ஆம் நாள் மயிலங்கூடல் இளவாலையில் பிறந்து தற்பொழுது இணுவிலில் வசித்து வருகின்றார். இவர் பாடசாலையிலும், யாழ் பல்கலைக்கழகத்திலும் படிக்கின்ற காலத்தில் கவிதை மழை பொழிந்து பரிசில்களைத் தட்டிச்சென்றவர்.50ற்கும் மேற்பட்ட கவிதைகளை எழுதியவர். யாழ்பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட கலைவாரப் போட்டிகளான கவிதை. சிறுகதை போன்றவற்றில் பங்குபற்றி முதலிடங்களைப் பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. கலைவிழாக்கள், பாடசாலை நிகழ்வுகளில் கவியரங்கக்கவிஞனாகவும் தலைமைக் கவிஞனாகவும் பல கவியரங்கமேடைகளை அணிசெய்தவர். ஐம்பதிற் கும் மேற்பட்ட கவிதைகளை எழுதியுள்ளதுடன், இவரதுபத்துச் சிறுகதை கள் சஞ்சிகைகளிலும்,பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன. தமது கலை மாணிப்பட்ட ஆய்வுக்காக தமது பேரனாரும்,ஈழத்து இலக்கிய கவிதா ஞானத்தின் தலைசிறந்தவருமான குருகவி என்று போற்றப்படும் மகாலிங்கசிவம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை குருகவி மா.வே. மகாலிங்கசிவம் வரலாறும் ஆக்கங்களும் என நூலுருவாக்கிய பெரு மையும் இவரைச்சேரும். மேலும் பண்டிதர் மா.வே.திருஞான சம்பந்த பிள்ளை வாழ்வும் வகிபாகமும் என்ற நூலையும்வெளியிட்டவர்.

## திருமதி மாலாதேவி மதிவதனன்



1973.03.18ஆம் நாள் மங்குனியன் வளவு அளவெட்டியில் பிறந்தவர்.கவிதை எழுதுவதில் 15 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவத்தை உடையவர். கலாசார அலுவல் கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பவற்றால் நடத்தப்படுகின்ற கவிதை சிறுகதை கட்டுரைப் போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களை பெற்றமை இங்கு குறிப் பிடத்தக்கது. விரைந்து வேண்டும் விடுதலை என்ற கட்டுரையையும், அஸ்தமனத்தில் ஓர் உதயம் என்ற சிறுகதையையும், வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையால் 1999 இல் வெளியிட்ட நிஷா இறுவட்டிற்கான கவிதைகளையும் எழுதியவர் என்பதுடன் பின்குரலையும் வளங்கி இறு வட்டின் வெற்றிக்கு துணையாய் நின்றவர்.வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையின் கலைவிழாக்கள் மற்றும் பல்வேறு நிகழ்வு களுக்கும் கவிதைபாடும் கவிஞனாய் மிளிர்பவர்.

தம்பித்துரை ஐங்கரன்



1975.08.27ஆம் நாள் குரும்பசிட்டி கிழக்கு தெல்லிப்பளையில் பிறந்து தற்பொழுது குருமன்காடு வவுனியாவில் வசித்துவருகின்றார். கவிதை எழுதுவதில் வல்லவர். இந்தப்பூவும் மணக்கும் என்ற கவிமலர் வெளியிட்டவர்.

## மறைந்தகவிஞர்கள்

ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை



1860-03-07 ஆம் நாள் வசாவிளானில் பிறந்தவர். அஞ்சாமைக்கு இலக்கணமானவர். கண்டனங் கீறக்கல்லடியான் என்ற சிறப்புப் பட்டமும் பெற்றவர். எடுத்த எடுப்பில் கவி பாடக்கூடியவர். ஆதலால் ஆசுகவி எனப்போற்றப்பட்டவர். கல்லடிவேலன் என்றால் கடந்த நூற்றாண்டில் தெரியாதார் இல்லை. உயர்ந்த ஆன்மீகக் கவிதைகள், கண்டனக் கவிதைகள், நகைச்சுவைக் கவிதைகள் முதலாகப் பண்டித ரையும், பாமரரையும் ஒருங்கே கவரவல்ல பாடல்களைப் பாடியவர். பாமர மக்கள் இவரை விகடகவி என்று அழைத்தனர்.இவரது வாழ்க்கை வரலாற்றை இவரது பேரனும் தென்இந்திய திரைப்பட நடிகருமான சிலோன் விஜயேந்திரன் கல்லடி வேலுப்பிள்ளை வாழ்கை வரலாறு என்னும் நூல் மூலம் உலகறியச் செய்தவர். கவிதை, கண்டனம், கட்டுரை, விமர்சனம்,வரலாற்றாய்வு என்பன இவரது சிறப்புக்கள் 1902 முதல் 1944 வரை சுதேசிய நாட்டியம் என்னும் வீராவேசமும் சுதந்திர உணர்வும் இலக்கியத்திறனும் மிக்க பத்திரிகையை நடத்தியவர். இவர் எழுதிய நூல்களிலே மிகப்புகழ் பெற்றது யாழ்ப்பாண வைபவகௌமுதி என்னும் யாழ்ப்பாண வரலாற்றுப் பெருமை கூறும் நூலாகும். போலிப் புலவர்களைச்சாடி யதார்த்தவாதி வெகுசனவிரோதி என முழக்கமிட்டு தமிழ் இனத்தின் பெருமைக்காக வாழ்ந்தவர். நினைத்தவுடன் கவிபாடும் தெய்வீக சக்தி மிகவாய்க்கப் பெற்றவர்.ஈழத்துத் தமிழ்ப் பேரறிஞர்களிலே கவிதை,உரைநடை, பத்திரிகை, கண்டனம், கட்டுரை, வரலாறு, ஆராய்ச்சி முதலிய பலதுறைகளில் முன்னணியில் வைத்துக்கணிக்கப்பட

வேண்டியவர். இவரால் எழுதப்பெற்ற அழகம்மா திருமண அலங்கோலக் கும்மி என்ற கவிதைத் தொகுப்பு குறித்த காலகட்டத்தில் யாழ்ப்பாணத்துப் பண்பாட்டு நிலைகளை ஆவணப்படுத்தியிருப்பதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். "அச்சமென்பதிருப்பினும் இல்லாமை சொல்லேன், அதிகநிதி வழங்கினும் இல்லாமை சொல்லேன், பாசத்துக்காயும் நானிலாமை சொல்லேன், பரிகசிப்பவரைத் துணிந்து பரிகசிப்பேன்" என்று தலை நிமிர்ந்து இறுமாப்போடு பாடுங்கவிஞர். வலிந்து கேட் போரைத் தாக்கும்படி நகைச்சுவையுடன் விடை கூறுவதிலும், அப்படியான பாடல்களைப் பாடுவதிலும் அவருக்கு நிகர் அவரே. அவரைப் பற்றிய கதைகள் கிளைவிட்டுப் பரந்து, கற்பனைகளோடு சேர்த்துக் கிராமங்கிராமமாகப் பலபடிபேசப்படுகின்றன. "யதார்த்தவாதி வெகுஜன விரோதி" என்ற இலட்சியத்தைக் கடைப்பிடித்துச் "சுதேச நாட்டியம்" என்ற பத்திரிகையை நடத்தி எதிரிகளைக் கதிகலங்கடித்தவர் அவர்.பிற்காலத் தில். "உன் சித்தாத்தமென்ன" "கதிரை வேலவர் பதிகம்" என அவர் பாடியு ள்ள பாக்கள் மனதை உருக்கக் கூடியன. நகைச்சுவை செறிந்த அவரது வாழ்க்கையை எடுத்துக்காட்டும் அரிய வரலாறும் இனிய பாக்களின் தொகுதியும் பாதுகாக்கப்படவேண்டும்.1944 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

**மகாகவி து.உருத்திரமூர்த்தி**



1927.01.09 ஆம் நாள் அளவெட்டியில் பிறந்தவர்.இவர் கவிதை, நாடகம்,வில்லுப்பாட்டு எனப்பல்துறை ஆற்றலு டையவர்.தமிழ்க் கவிதையுலகில் தனக்கென ஒரு தனியிடத்தைப் பிடித்துக்கொண்ட நாடறிந்த கவிஞன். பேச்சோசைக்கு மிகவும் அண்மித்ததான ஒருநடைக்கு தமிழ்க் கவிதையை எளிமையாகவும்,அழகாகவும் நகர்த்தியதில் இவரது பங்கு மிகமுக்கியமானது.சாதாரண மக்களிடையே கவிதையை எடுத்துச் செல்ல வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டவர். ஈழத்திலும் தமிழகத்திலும் புகழ்பெற்ற கவிஞர்.மறுமலர்ச்சிக்காலத்தில் எழுத்துலகில் புகுந்த மகாகவி 1971 ஆம் ஆண்டுவரை கவிதை,காவியம், பாநாடகம்

முதலான பல்வேறுதுறைகளிலும் கவிதைவடிவிலேயே தனது படைப்புக் களையாத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.மகாகவி ஒரு புதிய சந்ததியை விருத்தியாக்கும் ஒரு காலகட்டத்தவராகின்றார். கோடை,புதியதொருவீடு என்ற இவரது நாடகங்களும்,கண்மணியாள்காதை என்ற வில்லுப் பாட்டும் தமிழர் வாழிடங்களெல்லாம் பல முறை மேடையேற்றம் கண்டி ருக்கின்றன.தமிழில் ஒரு புதியமுயற்சியாக இவர் எழுதிய குறும்பா என்னும் வடிவம் மிகவும் பிரசித்தமானது. இவரெழுதிய சிறுகதைகளுள் ஒன்று தூக்கணாங்குருவிக்கூடு சிறப்பாகப்பேசப்பட்டது. மகாகவியின் கவிதைகள் பெருமளவில் பத்திரிகைகளிலும் இதழ்களிலும் வெளிவந்துள் ளன.1955 இல் வள்ளி, 1966 இல் குறும்பா, 1968 இல் கண்மணியாள் காதை, 1971 இல் ஒரு சாதாரண மனிதனது சரித்திரம் 1970 இல் கோடை, 1973 இல் வீடும்வெளியும், 1974 இல் இரண்டுகாவியங்கள்,1984 இல் மகாகவி கவிதைகள், புதியதொருவீடு,2000 இல் மகாகவியின் ஆறுகாவி யங்கள் ஆகிய பத்து நூல்கள் மகாகவி வாழ்ந்த காலத்திலும் மறைந்த பின்னரும் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. "நவீனதமிழுக்குப் புதிய பரிணாமத்தை ஏற்படுத்தியதே" இவருடையபெருமைக்குக்காரணம் "தமிழக்கவிதைத்துறையில் மகாகவியின் தனிச் சிறப்புக்கள் இன்னும் சரியானமுறையில் பரவலாக இனங்காணப்படவில்லை.மகாகவியின் படைப்புக்கள் அனைத்தும் நூலுருப்பெறுவதும் வரலாற்று ரீதியில் புறநிலைப்பட்ட ஆய்வு முறைக்கு அவற்றை உட்படுத்துவதும் மகாக வியைச்சரியான முறையில் இனங்காண உதவக்கூடும்"என கவிஞர் எம்.ஏ.நுஃமான் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இன்னும் மகாகவி து. உருத்திரமூர்த்தியின் பெருந்தொகையான கவிதைகள் நூலுருப்பெற வேண்டியுள்ளன. எனினும் அவர் ஈழத்தின் தலைசிறந்த கவிஞர் என இதுவரை வெளிவந்த நூல்களே சான்றுபகர்கின்றன.அ.ந.கந்தசாமி ,அ.செ.முருகானந்தம்,மகாகவி உருத்திமூர்த்தி ஆகியமூவரும்மகாஜனா தந்த மும்மணிகள் என்றும்,அளவெட்டி தந்தமூவர் என்றும் ஒரே குடும் பத்தைச்சேர்ந்தமூவர் என்றும் போற்றப்படுகின்றனர். 1971.06.20 ஆம் நாள் வாழ்வுலகை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

## சிவகடாட்சம்பிள்ளை சத்தியகுமாரன்



1965-09-12ஆம் நாள் மாவிட்டபுரத்தில் பிறந்தவர். சிறுகதை, கவிதை, சிறுவர்பாடல்கள், மேடைநாடகம், விமர்சனம் எனப்பல்துறைகளில் தனது எழுத்தாற் றலை வெளிப்படுத்தியவர். மாவை வரோதயன் என்ற புனை பெயருடைய சிவகடாட்சம்பிள்ளை சத்திய குமாரனாவார். இவர் பெரும் எண்ணிக்கையிலான கவிதைகளையும், சிறுவர்பாடல்களையும், நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளையும், மேடை நாடகம் தொடர்பிலான விமர்சனக்கட்டுரைகளையும் எழுதியவர். இவருடைய சிறுகதைகள் வேப்பமரம் என்னும் பெயரில் சிறுகதைத் தொகுதியாகவும், கவிதைகள் இன்னமும் வாழ்வேன் என்ற பெயரில் கவிதைத் தொகுதியாகவும், சிறுவர்பாடல்கள் ஒற்றுமையாய்ஆடுவோம் என்ற சிறுவர்பாடல் தொகுப்பாகவும் வெளியிடப் பெற்றுள்ளன. உதயன், சஞ்சீவி,வீரகேசரி,தினகரன் முதலிய பத்திரிகைகளிலும், ஈழத்துச் சஞ்சிகைகளிலும் விமர்சனக் கட்டுரைகள் பலவற்றை எழுதியவர். தொண்ணூறுகளில் இடம் பெயர்வதற்கு முன்னர் மாவிட்டபுரப் பகுதிகளில் வாழ்ந்த புகழ் பெற்ற ஒரு சிலரின் ஒருநாள் வாழ்க்கை எவ்வாறு இருந்தது என்பதனை தாயகம் என்ற சஞ்சிகையில் வலிகாமத்து மைந்தர்கள் என்ற தலைப்பில் தொடர்கட்டுரையாக எழுதியவர்.இவரது இலக்கியத்துறை வளர்ச்சிக்கு இலங்கை வானொலியும்,எழுத்தாளர் வேல்அமுதனும் மிகப்பிரதான காரண கர்த்தாக்களாவர் எனப்பெரு மிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.2009-08-20 ஆம் நாள் வாழ்வுலகை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

# அமரத்துவம் அடைந்த கூட்டுறவாளர்கள்

## வல்லிபுரம் பொன்னம்பலம்



1930.12.18 அன்று அளவெட்டியில் பிறந்தவர். சிறந்த கூட்டுறவாளராகவும் அளவெட்டி, மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் உருவாகுவதற்கு காலாகவும் இருந்தவர். 1994.03.05 அன்று இயற்கை எய்தினார்

### சின்னத்தம்பி சிவமகராசா



கொல்லங்கலட்டியைச் சேர்ந்த இவர் 1938.06.28 ஆம் நாள் பிறந்தவர். கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும், பல்வேறு தொண்டு நிறுவனங்களின் தலைவராகவும், உறுப்பினராகவும்,நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர். சிறந்த கூட்டுறவாளர்.2006.08.20 ஆம் நாள் இறைவடி சேர்ந்தார்.

## அமரத்துவம் அடைந்த சவாரியாளர்கள்

### வேலுப்பிள்ளை சின்னத்தம்பி



அளவெட்டியைச் சேர்ந்த இவர் 1912 ஆம் ஆண்டு பிறந்தவர். சிறந்த மாட்டு வண்டில் சவாரியாளர் ஆவார். 1987 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

### சுப்பிரமணியம் குணராஜசிங்கம்



1926.07.20 ஆம் நாள் மல்லாகத்தில் பிறந்தவர். வண்டில் சவாரிக் கலையில் முன்னோடிகளில் ஒருவர். மாட்டுவண்டில் சவாரியில் இன்று பலர் ஈடுபட்டு வருகின்றனர். இத்தகைய வளர்ச்சிக்கு இவர் ஆற்றிய பங்கு அளப்பரியது. 1960 ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் சேர் ஜோன்கொத்தலாவ தலைமையில் காலிமுகத்திடலில் நடைபெற்ற அலங்காரப் பவணியில் சவாரிவண்டில் மற்றும் அலங்கரிக்கப்பட்ட காளைகளுடன் பங்குகொண்டு யாழ்ப்பாண மண்ணின் பெருமையை உலகறியச் செய்தவர்.1948 ஆம் ஆண்டிலிருந்து மாவை கந்தனின் தீரத்தோ ற்சவ வீதியுலா ஊர்வலத்தினை அலங்கரிக்கப்பட்ட மாட்டு வண்டில் மூலம் கீரிமலையிலிருந்து மாவிட்டபுரம் வரை அழைத்து வந்தவர். இவருடைய இத்தகைய சேவைகளைப் பாராட்டும் வகையில் வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவை கலைச்சுடர் விருது வழங்கியமை குறிப்பிடத் தக்கது. 2007.08.10ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

### இளையதம்பி வைத்திலிங்கம்



1927.03.13 ஆம் நாள் அளவெட்டியில் பிறந்தவர். சிறந்த மாட்டுவண்டில் சவாரியாளர். 2008.12.08 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

### தம்பையா சுப்பிரமணியம்



1929.05.23 ஆம் நாள் மாவிட்டபுரத்தில் பிறந்தவர். மாட்டுவண்டில் சவாரியில் மிகுந்த ஈடுபாடுடையவர். பந்தயம் கட்டிச் சவாரி செய்வதில் வல்லவர். இவர் சவாரிச்சுப்பண்ணை என்று அழைக்கப்பட்டார். 2006. 05. 12 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

### நடராஜா சிதம்பரநாதன்



1947.03 ஆம் நாள் இளவாலை சித்திரமேழியில் பிறந்தவர். மாட்டு வண்டில் சவாரிக்கலையில் மிகுந்த ஈடுபாடு உடையவர். 1989.03.20 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

### அந்தோனிப்பிள்ளை ஜெயரட்னம் ( குட்டிப்பிள்ளை)



1949.09.08 ஆம் நாள் மயிலங்கூடல் இளவாலையில் பிறந்தவர். மாட்டுவண்டில் சவாரிக்கலையில் மிகுந்த ஈடுபாடு உடையவர். 2004.04.11 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

## சிற்பக் கலைஞர்கள்

### செல்லையா சிவப்பிரகாசம்



1928-06-21 ஆம் நாள் அளவெட்டியில் பிறந்தவர். தற்பொழுது 11/2.2 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசித்து வருகின்றார். தனது ஆரம்பக்கல்வியை தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரியில் பயின்று பின்னர் கொழும்பு நுண்கலைக் கல்லூரியில் ஓவியம், சிற்பம் ஆகிய கலைகளில் டிப்ளோமா பட்டம் பெற்றவர். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் சித்திர ஆசிரியராகப் பணியாற்றியவர். தனது ஆசிரியப்பணிக்காலத்தில் இத்துறையில் பல

மாணவர்களை மிளிரச்செய்தவர். ஆசிரியப்பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறையில் சித் திரமும் வடிவமைப்பும் கற்கை நெறியின் வருகை விரிவுரையாளராக ஐந்து வருடங்கள் தொடர்சியாகப் பணியாற்றியவர். இவர் தனது கலைப் பணியினை கொழும்பு,வவுனியா,திருகோணமலை மட்டுமல்லாது இலங்கையின் பிற மாவட்டங்களிலும் கற்பித்தல் மற்றும் கண்காட்சி முறைகளில் செயற்படுத்தியவர். இவர் பண்டைத்தமிழ் வரலாற்று மன்னர்களாகப் போற்றப்படும்பண்டாரவன்னியன், சங்கிலியன், சோழ, பாண்டிய மன்னர்களது உருவச்சிலைகள், சமய ஆன்மீக வாதிகள், கல்விமான்கள், அரசியல் தலைவர்கள், சமூகத்தொண்டர்கள், கலை ஞர்கள்,கல்லூரி அதிபர்கள்,ஸ்தாபகர்கள் எனச் சுமார் அறுபது உருவச் சிலைகளுக்கு மேல் வடித்துள்ளார். சீமெந்து, கல் முதலியவற்றை உள்ளீடுகளாகக் கொண்டு உருவச்சிலைகளை வடிவமைப்பதில் தனக் கென ஒரு பாணியை ஏற்படுத்திக்கொண்டவர். அத்துடன் சமயப்பெரியார் கள், அறிஞர்கள், கல்விமான்கள் போன்றோரது தோற்றங்களை மைவண்ண ஓவியங்களாக வரைவதிலும் தனக்கென ஒரு பாணியை ஏற்படுத்திக்கொண்டவர். ஐம்பது வருட கலையுலக அனுபவம் கொண்ட வர். சித்திரம், ஓவியம் மட்டுமல்லாது நாடகக்கலையிலும், கட்டடக் கலையிலும், திரைப்படத்துறையிலும் மிகுந்த ஈடுபாடுடையவராகத் திகழ்ந்தவர். 1978 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட தெய்வம்தந்தவீடு என்னும் திரைப்படதின் கலை இயக்குனராகக் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. திராவிட சிற்பக்கலை மரபினை ஆலயங்களில் பேணும் வகையில் கட்டட நிர்மாணப் பணிகளுக்காக மாதிரிப்படங்களை வரைந்து கொடுத்தவர்.அந்த வகையில் அளவெட்டி அழகொல்லைப்பிள்ளையார் ஆலயத்தின் புதிய கட்டடத்தோற்றம் மற்றும் விக்கிரக அமைப்புகள் இவரது மாதிரி வரைபிற்கேற்ப அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. சாயிசித்திரக் கோட்டம் என்ற அமைப்பினை தனது வாழ்விடத்தில் அமைத்து நடத்தி வருகின்றார்.1974 இல் பிரதம மந்திரிஅமரர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களால் சிற்பக்கலாநிதி,1985இல் ஓவியசிற்பவாரிதி,1996இல் கலாபூ ஷணம், அகில இலங்கை ஐயப்பசாஸ்தா பீடத்தலைவரினால் சிற்பக் கலைமணி, சிற்பக்கலாநிதி, சிற்பச்சக்கரவர்த்தி, கலைஞானகேசரி, யாழ்

பிரதேச கலாசாரப்பேரவையின் யாழ்ரத்னா, ஐந்தாவது சேக்கிழார் மாநாட்டில் திருத்தொண்டர்மாமணி, வலிகாமம் வடக்குகலாசாரப் பேரவையின் கலைச்சுடர் போன்ற பல விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப் பெற்றவர்.

**அகஷ்ரின் வேதாநந்தம் (ஏ.வி.ஆனந்தன்)**



1944.09.23 ஆம் நாள் குளமன்கால் மல்லாகம் என்னும் இடத்தில் பாரம்பரிய கலைக்குடும்பத்தில் பிறந்து அங்கேயே இன்று வரை வாழ்ந்து வருகின் றார். 1960 ஆம் ஆண்டிலிருந்து சிற்பக் கலையில் ஈடுபட்டு வரும் இவர் இக்கலை மட்டுமல்லாது கூத்து, நாடகம், பாடல் எனப்பல் துறைக்கலைஞனாகவும் வாழ்ந்து வருகின்றார். தொழில்முதல்வன், நடிகன்,பாடகன்,இசைக்கருவிமீட்போன்,கவிதைகள் யாப்போன், வர்த்தகத்துறையில் வித்தகர், பலதொழில்களை துறைபோகக் கற்றவர். நாடகத்துறையில் பிரமாண்டமான கண்கவர் நாடக அரங்குகளை அழகுற நிர்மாணிப்பவர். காட்சியமைப்பாளர், படவரைஞர், மரத்தால் உருவங்களை சிற்பமாகச்செதுக்கும் அற்புதச் சிற்பி. இருப்பினும் சிற்பக்கலையில் தன்னை ஆழமாக அர்ப்பணித்து பல சாதனைகளையும் பதிவுகளையும் ஏற்படுத்தி எழிமையாக வாழ்ந்து வருகின்றார். யாழ்ப்பாணம், திருகோணமலை, கண்டி, கொழும்பு மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் தனது மரச்சிற்பப் படைப்புக்களை காட்சிப்படுத்தியவர். இவரின் ஆக்கப்படைப்புச்சிந்தனை என்பது மரபிலி ருந்து நவீனம்வரை சகலதையும் மறுதலிக்கின்ற ஒன்றாக அர்த்தம் கொள்ளப்படமுடியாதது. இன,மதபேதமின்றி அனைவரையும் அரவ ணைத்து தனது கலைப் படைப்பில் வெளிப்படுத்தி வருவதும் குறிப்பிடத் தக்கது. வேப்பமரத்தில் செதுக்கப்பட்ட ஆனந்த கணபதி, வாகைமரத்தில் செதுக்கப்பட்ட நாதஸ் வரக்கச்சேரி, கல்வாகையில் கமக்காரன், சீமைநூக்கில் ஏழையும் தோழனும், காவல்காரன், குழந்தையேசுவும் மாதாவும், பனை மரத்தினால் ஆன இவரது சிற்பப்படைப்பு வத்திக்கான் மியூசியத்திலும் யாழ் மக்களின் மறக்க முடியாத "மாபெரும்புறப்பாடு"

என்னும் சிற்ப ஆவணம் ஜேர்மன் கலைக்காட்சியகத்திலும் இடம்பெற்றுள்ளமை எமக்குப் பெருமை தருவதாகும். எட்டடிஉயரம் பத்தடிச் சுற்றளவு உயரமரத்தில் சுனாமியின் அழிவுகளை செதுக்கிய மரச்சிற்பம் போன்றவற்றை இவரது அரியபடைப்புக்களுக்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். ஜேர்மனி டெற்ல்ன் கலைக்கூடம், ஜேர்மனி தமிழர் கலாசாலை மண்டபம், பிரான்ஸ் அமோக்மண்டபம், நெதர்லாந்து உலாமியூசியம், சுவிற்சர்லாந்து நகரமண்டபம், லண்டன் கலையரங்கம் போன்ற மேலைத்தேச நாடுகளில் சிற்பக் கண்காட்சிகளை நடத்தியவர்.1997 ஆம் ஆண்டு யாழ்ப்பாண பொதுநூலக கேட்போர் கூடத்தில்யப்பானிய தூதுவராலய அனுசரனையுடன் நடைபெற்ற சிற்பக்கண்காட்சியில் இவரால் எழுதப்பட்ட மும்மொழிநூல்களான கலைச்சுவடுகள்(தமிழ்), கலாசட்டகான (சிங்களம்), வூட்ஸ்கல்ப்ரர்ஸ் (ஆங்கிலம்) ஆகிய நூல்களை கனேடிய உயர்ஸ்தானிகர் அலோய்பெரேரா அவர்கள் வெளியிட்டு வைத்த பெருமைக்குரியவர்.யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தில் ஆரம்பகால உறுப்பினராக இருந்து அம்மன்றத்தின் பல செயற்பாடுகளுக்கும் உறுதுணையாகத் திகழ்பவர். இவரது இக்கலையின் வெளிப்பாட்டுத் திறணைப் போற்றும் வகையில் 1997 இல் திருமறைக் கலாமன்றத்தினால் சிற்பச்செல்வன் விருது, இதே ஆண்டில் திருகோணமலையில் 100சிற்பங்கள் புகைப்பட அஞ்சலட்டை வெளியீட்டு விழாவில் தங்கவிருது, கோணேஸ்வரர் விருதும், கண்டி சிற்றிமிஸன் மண்டபத்தில் சிற்பஜோதி விருதும்,ஜேர்மன் கலாசார ஆன்மீகப் பணியகத்தினால் அரும்கலைச் சுவடுகளின் காவலன் விருதும், வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையினரின் கலைச்சுடர் விருதும், இலங்கை அரசின் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கலாபூஷணம் விருது,இவரது புதிய தொழில்முயற்சிகளைப் பாராட்டி "சில்ப கர்மாந்த" என்னும் ஜனாதிபதி விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற வலிகாமம் வடக்கின் மூத்த படைப்பாளிகளில் ஒருவராவார். வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையின் பொருளாளராக 2008-2009 வரையான காலப்பகுதியில் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### சரவணமுத்து ஜெயகாந்தன் ஸ்தபதியார்

மயிலிட்டி வடக்கு காங்கேசன்துறையில் 1958 ஆம் ஆண்டு பிறந்த இவர் மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தியாலயம், காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி ஆகிய கல்வி நிறுவனங்களில் பயின்றவர். தந் தையார் சரவணமுத்து, தாய்வழிப் பேரனார் முருகேசு நாகலிங்கம் ஆகி யோரிடம் மரச்சிற்பக் கலையைப் பயின்றவர். கலாகேசரி ஆ.தம்பித்துரை அவர்களின் மாணவனாக இருந்து சுதுமலை புவனேஸ்வரி அம்மன், மாத்தளை முத்துமாரிஅம்மன் தேர் நிர்மாணப் பணிகளில் பயிற்சி பெற்றவர்.செல்வச்சந்நிதி முருகன் புதிய தேர்,காரைநகர் ஈழத்துச் சிதம்பரம், ஐயப்பன் உள்ளிட்ட தேர்களை இலங்கையில் நிர்மாணித்துப் புகழ் பெற்றவர். இங்கிலாந்து, பிரான்ஸ், டென்மார்க், மலேசியா உட்படப் பல நாடுகளில் யாழ்ப்பாணத்தின் தேர்க்கலையின் சிறப்புக்களை பரப்பிய முதலாவது ஸ்தபதி இவரென்றால் அது மிகையாகாது.2007 ஆம் ஆண்டின் பின்னர் இங்கிலாந்தில் நிரந்தரக் குடியுரிமை பெற்று வாழ்ந்து வருகின்றார்.

### வேலுப்பிள்ளை பாலேந்திரன்



1965-04-15 ஆம் நாள் தெல்லிப்பளை கிழக்கு தெல்லிப்பளை என்னுமிடத்தில் பிறந்தவர். மிகச் சிறந்த கைவினைக் கலைஞன்.சுன்னாகம் ஐயனார் வீதியில் பாலா தொழிலகம் என்னும் பெயரில் இவரது கைத் தொழிற்கூடம் அமைந்திருக்கின்றது. கலை ஞர்கள், அறிஞர்கள், விளையாட்டுத்துறை ஆர்வலர்கள் எனப் பலரும் நடத்துகின்ற நிகழ்வுகளுக்கான விருதுகள், வெற்றிக் கிண்ணங்கள், கேடயங்கள், பாண்ட் வாத்தியங்கள், ஆலயப் பொருட்கள், அலங்கார வளைவுகள் போன்ற கலைத்துறையில் தன்னை ஆழமாக அர்ப்பணித்து செயற்பட்டுவரும் இந்திரன் அவர்கள் யாழ்ப்பாணத்தில் மிகச்சிறந்த கைவினைக் கலைஞனாகத் தன்னை நிலைநிறுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. யாழ் வர்த்தக நிலையங்களில் கண்டு கொள்ளமுடியாத அளவிற் பெரிய விதம் விதமான வனப்புடைய வெற்றிக்கிண்ணங்கள், கேடயங்கள், பதக்கங்களை மிக இலாவகமாக யாழ்ப்பாணத்தில்

நடைபெறுகின்ற விளையாட்டுப் போட்டிகள், கலை இலக்கியப்போட்டிகள் போன்றவற்றிற்கு செய்து வழங்கியுள்ளமை மட்டுமல்லாது பாடசா லைகள், கல்லூரிகள் பொது நிறுவனங்களினதும் அலங்காரமான பெரிய வளைவுகளையும், பெயர்ப்பலகைகளையும் அமைப்பதிலும், சிறுவர்க ளுக்கேற்ற வகையிலான பாண்ட்வாத்தியக்கருவிகளை மிகக்குறைந்த விலையில் உற்பத்தி செய்து பாலர் பாடசாலைகளுக்கு வழங்கி பெரும் பாராட்டைப் பெற்றதும், ஆலயங்களுக்குரிய திருவாசி, வாகனங்கள், பீடங்கள், சோடனைகள் முதலானவற்றை சில்வர், பித்தளை, வெள்ளி போன்ற உலோகத்தகடுகளால் செய்து வழங்கி வருவதும் குறிப்பி டத்தக்கது. தெல்லிப்பளை யூனியன்கல்லூரியில் கல்வி கற்றபோது சித்திர ஆசிரியராகிய தேவி ரீச்சர் கவின்கலைத்துறையில் தன்னைத் தட்டிக் கொடுத்ததாக இன்றும் நினைவிற் கொள்கின்றார். 2002 ஆம் ஆண்டில் அர்ச்சனா அக்கடமி என்ற அமைப்பின் மூலம் கொழும்பில் திரு வனந்தபுரத்திலிருந்து வருகை தந்த பரதன் என்பவர் வழங்கிய பன்முகப் பயிற்சிகள் குறிப்பாக திரைஅச்சுக்கலை (Screen Printing) பயிற்சியில் பங்கு பற்றி பல்வேறு தொழில் நுட்பங்களையும் அறிந்துகொண்டவர். காலச் சூழலே இவரை உலோக வேலையிலீடுபடவும், மரபு வழியான மரவேலை அனுபவங்களும்,கல்லூரியில் கற்றுத்தேர்ந்த சித்திரக்கலை நுட்பங்களும் இவருடைய வளர்ச்சிக்குப் பக்கபலமாக அமைந்ததென லாம். இவருடைய கலைத் திறணையும், கலைச்சேவைகளையும் பல்வேறு நிறுவனங்கள் பாராட்ட முன்வந்தன. அந்த வகையில் சுன்னாகம் ஐயனார் சனசமூக நிலையத்தினர் 2000 ஆம் ஆண்டில் கைத்தல வித்தகவினோதன் என்ற பட்டத்தினையும், 2009 ஆம் ஆண்டு ஸ்ரீ நாக வரதநாராயணர் தேவஸ்தானம் சிற்பவிஸ்மர் என்ற பட்டத் தினையும் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தினரால் 2000ஆம் ஆண்டில் யாழ்ப்பாண மாவட் டத்தில் தேர்ந்தெடுத்துக் கௌரவிக்கப்பட்ட முப்பெரும் கலைஞர்களில் இவரும் ஒருவர். 2009 ஆம் ஆண்டு வடக்கு மாகாணத்தினால் சிறந்த கைத்தொழில் கலைஞருக்கான சான்றிதழும், விஞ்ஞான தொழில் நுட்ப புத்தாக்குனருக்கான மாவட்டத்தில் இரண்டாமிடத்திற்கான சான்றிதழை யும் பெற்றுக்கொண்டவர்.

### உருத்திரமூர்த்தி சுயானன்



1975.10.26 ஆம் நாள் அளவெட்டி வடக்கு என்னும் இடத்தில் பிறந்தவர். தந்தை வழியில் சிற்பக்கலையில் ஈடுபாடுடையவர். சைவாலயங்களில் வணங்கப்பட்டு வரும் விக்கிரகங்களை அமைப்பதில் ஆற்றல் உடையவர்.அத்துடன் சிறுகதை கவிதை எழுதுவதிலும் ஆற்றலுடையவர். தனது தந்தையாரைக் குருவாகக் கொண்டு சிற்பக் கலையினைப் பயின்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அரசசேவையின் அனுபவங்களின் மீள் நிர்மாணம் - 2006 சிறுகதைப் போட்டியில் தமிழ்மொழிமூலம் தேசியரீதில் முதலாம் இடத்தினையும் 2008 இல் அரச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் போட்டியில் சிறுகதையில் ஆறுதல் பரிசினையும் 2007 இல் வடக்குமாகாண சிறுகைப்பணிப் பொருட்கள் கண்காட்சியில் கிராமியக்கலை தொடர்பான முகமூடி முதலாமிடத்தினையும் பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

## அமரர்கள்

### காசிப்பிள்ளை சரவணமுத்து

1920 ஆம் ஆண்டு அச்சுவேலியில் பிறந்த இவர் மயிலிட்டி வடக்கில் புகழ் பெற்ற முருகேசு நாகலிங்கம் ஆசாரியாரின் மகளைத் திருமணம் செய்ததன் மூலம் மயிலிட்டியின் புகழில் உயர்ந்தவர்.1941 ஆம் ஆண்டு வண்ணை வீரமாகாளி அம்மன் கோயில் தேரினை திருநெல்வேலி ஆறுமுகம் ஆச்சாரியார் வடிவமைத்தபோது அவருடன் இருந்து பயிற்சி பெற்றவர். இப்பயிற்சியின் மூலம் தேர்நிர்மாணப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியவர். இவரது தலைமையில் உருவாகிய மயிலிட்டி கொழுவியன் கலட்டி விநாயகராலயத் தேர்த்திருப்பணி குறிப்பிடத்தக்கது. ஜெயராம், ஜெயகாந்தன், ஜெயமோகன் என்னும் மூன்று தேர் நிர்மாண ஸ்தபதிகளை உருவாக்கிய பெருமகன்.2002ஆம்ஆண்டு வாழ்வுலகை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

## கந்தையா உருத்திரமூர்த்தி



1928.10.13 ஆம் நாள் அளவெட்டியில் பிறந்தவர். சிற்பம், ஓவியம்,கிராமியக்கலை, கட்டடக்கலை, ஆகிய வற்றில் வல்லவராயினும் சிற்பக்கலையிலே விற் பன்னராகத் திகழ்ந்தவர் ராகலைப் பிள்ளையார் கோயில் விக்கிரகங்கள் அமைத்தமை, திருமலை கிருஸ்ணன் கோயில் சமாதி, பன்னாலை வரத்தலம் பிள்ளையார் கோயில் முகப்புக்கட்டட அமைப்பும், விக்கிரக அமைப்பும், பன்னாலை குருநாதசாமி கோயில் பண்டிகை அறுங்கோணத்தில் அமைத்துக் கட்டியவர்.சிற்பங்கள் வடிவமைத்தமை.அளவெட்டி வடக்கு ஆதி வீரபத்திரர் கோயிலின் கட்டட அமைப்பும் சிற்பங்கள் வடிவமைத் தமையும்,கீரிமலை கடற்கரைப் பிள்ளையார் கோயில் கட்டடஅமைப்பும், விக்கிரகவேலைப் பாடுகளும், கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தில் ஓவியங்கள் வரைந்தமை. பளை அரசினர் வைத்தியசாலையில் விநாயகர் ஆலயம் ஒன்றை அமைத்து விக்கிரகம் செய்தமை. கிராமியக் கலை வடிவங்களான அனுமனாட்டம், குதிரையாட்டம் போன்ற வற்றுக்கான முகமூடிகளையும் அவற்றுக்குப் பொருத்தமான உடுப்புக் களையும் வடிவமைத்து வழங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது இத்தகைய சேவைகளைப்பாராட்டும் வகையில் சிற்பாசாரி என்றபட்டமும் பொன்னாடைபோர்த்தியும் கௌரவிக்கப் பெற்றவர். இவரிடம் பயின்ற மாணவர்களாக புறாப்பொறுக்கி ஆலடியைச் சேர்ந்த தங்கமயில் ஆசாரி,அதேயிடத்தைச் சேர்ந்த தேவராசா, இவரது புதல்வனான சுஜானன் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.1999.11.17 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.


## சின்னத்துரை நவரட்னம்



1942.04.06 ஆம் நாள் மயிலிட்டியில் பிறந்தவர் மரச்சிற்பவாகனங்களை வடிவமைப்பதில் ஆற்றலு டையவர். ஸ்ரீ முருகன் கனகசிற்பாலயம் இவர் நடத்திய சிற்பக் கல்லூரியாகும்.நாற்பது வருட கலை அனுபவம் பெற்றவர். 1973இல் மயிலிட்டி சங்கவத்தைப்பிள்ளை யாராலய எலிவாகனமும், தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலய குதிரை வாகனமும்,1975இல் கரவெட்டி தச்சன்தோப்புப் பிள்ளை

யாராலய கைலாசபர்வத ஊர்தியும் 1980 இல் மயிலிட்டி முனையன் வளவு முருகையன் ஆலய சித்திரப்பெருந்தேர் வடிவமைத்தமையும், 1984இல் கரவெட்டிதச்சன் தோப்புப் பிள்ளையாராலய சித்திரப் பெருமஞ் சமும், 1993இல் சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி கோயிலின் கைலாச வாகனமும், 1994இல் கிளிநொச்சி கந்த சுவாமி கோயிலின் அறுகோணத் தங்கரதமும்,1998இல் புதுக்குடியிருப்பு உலகளந்த பிள்ளையாராலய சித்திரப்பெருமஞ்சப்பறமும், 1999இல் ஊற்றங்கரை சித்திவிநாயகராலய சித்திரப்பெருஞ்சப்பறமும், 2001இல் உப்பு நீரில் விளக்கெரியும் வரலா ற்றுப்புகழ் மிக்க வற்றாப்பளை கண்ணகையம்மன் ஆலய சித்திரப் பெருமஞ்சமும் வடிவமைத்தபெருமைக்குரியவர். சிற்பவாருதி, சிற்ப சாகரம், கலைஞர்திலகம் ஆகிய பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப் பெற்றவர். 2004.04.12 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

**கலாகேசரி ஆறுமுகம் தம்பித்துரை**



1932.05.05 ஆம் நாள் திருநெல்வேலியில் பிறந்து குரும்பசிட்டியில் வாழ்ந்தவர். ஓவிய ஆசிரியரான இவர் இலங்கையின் தேர்க்கலை மரபில் புதிய பாணியைத் தோற்றுவித்தவர். பல கோயில்களின் தேர்களை வடிவமைத்தவர். கவின்கலைப் பாட உதவிக்கல்விப் பணிப்பாளராயிருந்தவர். ஓவியக் கலையில் பல சாதனைகளைப் படைத்தவர். குரும்பசிட்டி சன்மார்க்கசபையின் தலைவராகப் பல காலம் பணியாற்றி இலக்கிய,சமய,கலைப்பணிகள் புரிந்தவர். ஓவியக்கலையை இலவசமாவே கற்பித்து மாணவர்களை ஊக்குவித்ததோடு பல்கலைக் கழகத்தில் ஓவியம் கற்பிக்கப்பட வேண்டுமென்று அயராது உழைத்தவர். 1964 இல் தனது தந்தையாரின் பெயரால் ஆறுமுகம் சிற்பாலயம் என்ற நிறுவனத்தைப் பதிவுசெய்து சிற்பக் கலையை முன்னெடுத்தார். குரும்பசிட்டி அம்மன், நந்தாவில் அம்மன், பண்ணாகம் முருகமூர்த்தி, வண்ணார்பண்ணை விசுவேச விநாயகர், ஐயனார் ஆலயங்களின் சித்திரத்தேர்களை நிர்மாணித்து ஈழத்து தேர்க்கலை வரலாற்றில் புதிய பரிணாமத்தை எற்படுத்தியவர்.1970 களின் ஆரம்பத்தில் குரும்பசிட்டி கலாகேசரி கலாலயம் என்ற நிறுவனத்தை அமைத்து அதன் பெயரில்

சுதுமலை அம்மன், குப்பிளான் கற்பக விநாயகர்,மாத்தளைமுத்துமாரி அம்மன், தெல்லிப்பளை துர்க்கைஅம்மன்,புற்றளை விநாயகர், கொக்கு வில் சிவசுப்பிரமணியர், கோண்டாவில் சிவபூதராயர், சுன்னாகம் சிவன்கோயில்,இணுவில் செகராசசேகரப்பிள்ளையார் முதலான ஆலயங் களில் தனித்தனியான கலையம்சங்களுடன் அமைந்த தேர்களை நிர்மாணித்தவர். இவற்றோடு மஞ்சம்,சப்பறம்,கேடகம், வாகனங்கள் போன்றவற்றையும் வகைகொகையாகச்செய்து ஆலயங்களுக்கு வழங்கியவர்.பாடசாலையில் சிறுவர்சித்திரத்தை ஊக்குவித்ததுடன் வர்ணகாகித ஒட்டு வேலைகள், கழிமண், மணல், பசை,மரம், சுளகுச் சித்திரங்களை ஆசிரியர்களுக்கு அறிமுகம் செய்தவர். ஓவியம், சிற்பம் தொடர்பாகப் பல ஆக்க நூல்களைத் தந்தவர். சிறுவர்சித்திரம், தையற் கலைச்சித்திரங்கள்,ஓவியக்கலை,கலாயோகி ஆனந்த குமாரசாமி யாழ்ப் பாணத்து பிற்காலச்சுவரோவியங்கள், பண்பாட்டின் மூன்று கோலங்கள் போன்ற நூல்கள் குறிப்பிடத்தக்கன. இவரைப்பற்றிய சுயசரிதை நூல் களாகவே. அம்பிகைபாகனின் "கலாகேசரி ஆ.தம்பித்துரை", கனக செந்திநாதனின் கவின்கலைக 'கோர்கலாகேசரி" என்ற நூல்கள் குறிப்பிடத்தக்கன. இவருடைய இத்தகைய சேவைகளைப் பாராட்டி நந்தாவில்அம்மன் தேர் நிறுவியமையைக்காக "கலாகேசரி" என்ற பட்டமும், இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கலாபூ ஷணம் விருதும், இராஜஸ்தபதி, இரதச்சக்கரவர்த்தி, சிற்பகலா திலகம் போன்றபட்டங்கள் வழங்கிப் பெருமைப்படுத்தப்பட்டவர். 1994.ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

## சீனாடி சிலம்பக்கலை

### கந்தப்பிள்ளை சின்னத்தம்பி



1940 ஆம் ஆண்டு மாவிட்டபுரத்தில் பிறந்தவர். பாடசாலைப் பருவத்தில் கலையிலும் விளையாட்டிலும் ஆர்வம் கொண்டவராகத் திகழ்ந்தார். பின்னர் மாவை டொலர் அலுமீனியம் தொழிற்சாலையில் ஊழியராகக் கடமையாற்றும்போது உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களில் சிறந்த வீரனாகத் திகழ்ந்தவர். சீனாடி

சிலம்புக்கலையில் ஆர்வம் கொண்ட இவர் இந்தியாவிலிருந்து வந்து காங்கேசன்துறையில் வாழ்ந்த சீனாடிசிலம்புக் கலையின் விற் பன்னரான சீமான் என்பவரைத் தனது குருவாகக் கொண்டு இக்கலை யைப்பயின்றார்.சீனாடி சிலம்புக்கலை என்பதனுள் சிலம்பு சுற்றுதல், சுருள்வாள்விசுக்குதல், கழுத்து, மார்பு, வயிறு போன்ற உடலின் பாகங் களில் வாழைக்காய் போன்றவற்றை வைத்து கூரியவாளால்வெட்டுதல், தீப்பந்தம் சுற்றுதல், பொய்க்கால்குதிரை கரகம்,பொய்க்கால்நடை, தலையில் தேங்காய் உடைத்தல் போன்ற சாகச விளையாட்டுக்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.மாவை முத்தமிழ் கலாமன்றத் தினால் மாவைக் கந்தன் திருவீதியில் 1958ஆம் ஆண்டு முதன்முதலாக இக்கலையை இவர் அரங்கேற்றினார். இதனைத்தொடர்ந்து டொலர் அலுமீனியத் தொழிற்சாலை அதிபருடைய மகனின் திருமண ஊர்வலத் தின் போது இரண்டாவது முறையாக நிகழ்த்திக் காட்டினார். பல வருடங்களின் பின்னர்ஆலய உற்சவகாலத்தில் தெய்வத்தை மகிழ் விக்கும் கலையாகப் பரிணமித்தபோது இலங்கையின் பல்வேறு ஆலயத் திருவிழாக்களிலும் இக்கலையினை செயற்படுத்தி வந்தமை மட்டு மல்லாது தனது புதல்வர்களையும் இக்கலையில் நிபுணத்துவமுடைய வர்களாக உருவாக்கினார்.மேலும் பல்வேறு கலைவிழாக்களிலும் முன்னின்று செயற்படுத்தி வருவதுடன் இக்கலையில் பல நுணுக் கங்களையும் புகுத்தி மெருகூட்டி நின்று நிலைத்திட உழைத்திட்ட இக் கலையின் மூலவராகத் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.இவரது கலைச் சேவையைப்பாராட்டி வலிகாமம் வடக்கு கலாசாரப்பேரவை கலைச்சுடர் என்ற விருதினை வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

**சின்னத்தம்பி காந்தரூபன்**



1970-12-20ஆம் நாள் மாவிட்டபுரம் என்னும் இடத்தில் பிறந்தவர். தனது தந்தையாரைக் குருவாகக் கொண்டு சீனாடி சிலம்பக்கலையில் ஈடுபட்டு வரும் இவர் தீப்பந்தம் சுற்றுதல், தலையில் தேங்காய் உடைத்தல், சுருள்வாள் சுற்றுதல், சிலம்பம் சுற்றுதல், மார்பில் வாழைக்காய் வெட்டுதல் போன்ற சாகச விளையாட்டுக்களை செய்வதில் துணிகரமுடையவராக விளங்கும் இவர் ஒரு மிகச்சிறந்த

விவசாயி ஆவார். தனது தந்தையாருடன் இணைந்து ஆலயங்கள் தோறும் நடைபெறும் திருவிழாக்களில் இவர்களது சீனாடிசிலம்பக்கலை நிகழ்வுகள் நடைபெறுவது வழக்கம். மேலும் தெல்லிப்பளைப் பிரதேச செயலகம், சங்கானைப் பிரதேசசெயலகம் போன்றவற்றின் கலாசார விழாக்களிலும், வடக்கு மாகாணத் தமிழிலக்கிய விழாவிலும் நடைபெற்ற சாகசவிளையாட்டுக்களில் பங்கு கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.


**சின்னத்தம்பி நந்தகுமார்.**



1977-11-24 ஆம் நாள் மாவிட்டபுரத்தில் பிறந்தவர். தனது தந்தையாரைக் குருவாகக் கொண்டு சீனாடி சிலம்பக் கலையில் ஈடுபட்டுவரும் இவர் தீப்பந்தம் சுற்றுதல், தலையில் தேங்காய் உடைத்தல், சுருள்வாள் சுற்றுதல், சிலம்பம் சுற்றுதல், மார்பில் வாழைக்காய் வெட்டுதல், பொய்க்கால் கரகமாடுதல், பொய்க்கால் சிலம்பம் சுற்றுதல், போன்ற சாகச விளையாட்டுக்களை செய்வதில் துணிகரமுடையவராக விளங்கும் இவர் ஒரு மிகச்சிறந்த நாடகக் கலைஞனுமாவார். சிறிது காலம் செயற்திறன் அரங்க இயக்கம் என்ற நாடகக்குழுவுடன் இணைந்து செயற்பட்டவர். தனது தந்தையாருடன் இணைந்து ஆலயங்கள் தோறும் நடைபெறும் திருவிழாக்களில் இவர்களது சீனாடி சிலம்பக்கலை நிகழ்வுகள் நடைபெறுவது வழக்கம். மேலும் தெல்லிப்பளைப் பிரதேச செயலகம், சங்கானைப் பிரதேசசெயலகம் போன்றவற்றின் கலாசார விழாக்களிலும், வடக்கு மாகாணத் தமிழிலக்கிய விழாவிலும் நடைபெற்ற சாகச விளையாட்டுக்களில் பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அமரர்

**தம்பு இரத்தினம்பிள்ளை**



காங்கேசன்துறை வீரமாணிக்கதேவன்துறை என்னும் இடத்தில் பிறந்த இவர் தனது பன்னிரண்டாவது வயதில் பாய்க்கப்பல் மூலம் இந்தியாவிற்குச்சென்று அங்கு வாழ்ந்ததுடன் இந்தியக்கிராமங்கள் பலவற்றிற் கும் சென்று உடற்பயிற்சி, உடல்வித்தைகள், மல்யுத்தம், யோகாசனம், நீந்துதல், போர்க் கருவிப் பாவனை, சித்தமருத்துவம்,

மாந்திரிகம்,சாத்திரம் போன்ற பல கலைகளைக் கற்றார். பின்னர் இலங்கை வந்த இவர் காங்கேசன்துறை வீரமாணிக்கதேவன்துறை என்னும் இடத்திலுள்ள தனது வீட்டு வளவில் கோதா அமைத்து மல்யுத்தம், தற்காப்புக்கலை, உடற்பயிற்சி, யோகாசனம் போன்ற கலை களைப்பயிற்றி வந்தார். இவர் நடத்திய நிறுவனத்திற்கு இராமமூர்த்தி உடற்பயிற்சி நிறுவனம் என்று பெயர்சூட்டி நடத்தி வந்தார். இந்நிறு வனத்தின் மூலம் பலநூற்றுக் கணக்கானவர்கள் பயிற்சி பெற்று பல சாதனைகளை நிலைநாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவரது கலை யாற்றலினாலும்,அறிவினாலும்,அனுபவத்தினாலும் இவரை எல்லோ ரும் பயில்வான் தம்பு என்ற பட்டப்பெயரால் அழைத்து வருவது வழக்க மாயிற்று.

## சொற்பொழிவாளர்கள்

### சிவத்திரு குமாரசாமி ஐயர்



23.04.1945ஆம் ஆண்டு காட்டடைப்புவீதி, காங்கேசன்துறையில் பிறந்தவர். மயிலணி, சுன்னாகத்தை தற்காலிக இடமாகவும் கொண்டவர். சிவஸ்ரீ. ஐயம்பிள்ளைக் குருக்கள் கீரிமலையில் இவரது தீட்ஷாகுரு சிவஸ்ரீ. கந்தையாச்சுவாமிகள் (குடைச்சு வாமிகள்), சிவஸ்ரீ.கடவுள் சுவாமிகள் (செல்வச்சந்நிதி) இவரது ஞானகுரு ஆவர். இவர் 01.01.1976 இல் வலிகாமம் வடக்குப் பிரதேசசபை காங்கேசன் துறையின் நூலக சேவையில் தற்காலிகமாகச் செயற்பட்டு 01.01.1979 இல் நிரந்தர நூலகப் பொறுப்பாளராகப் பதவி உயர்வு பெற்று 26 வருட சேவையைப் பூர்த்தி செய்து 23.04.2005 இல் ஓய்வு பெற்றார். காங்கேசன்துறை அருள்மிகு வீரபத்திரசுவாமி ஆலயம் ஸ்ரீஞான வைரவப் பெருமான் ஆலயம், ஸ்ரீகாளி அம்மாள் ஆலயம் ஆகியவற்றின் அர்ச்சகராகப் பணிபுரிந்தள்ளார். 18 வயது தொடக்கம் இன்று வரை பல பிரசித்தி பெற்ற ஆலயங்கள் மற்றும் கிராமச் சூழல்களிலுள்ள ஆலயங்களில் இன்னிசையுடன் கூடி சமயச் சொற்பொழிவுகளை ஆற்றி வருகின்றார். இப்பணிக்காகப் பல பட்டங்களையும் தங்க வெள்ளிப் பதக்கங்களையும், பல கேடயங்களையும் பெற்றுள்ளார். திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் கி.வா.ஜகந்தநாதன், கவியோகி சுத்தா

னந்தபாரதியார், சிவலோகஜோகி, மகராஜி, குருமகராஜி, குடைச் சுவாமிகள், மௌனகுரு கடவுள் சுவாமிகள், சபாரட்ணம் சுவாமிகள், செல்லத்துரை சுவாமிகள், வடிவேல் சுவாமிகள், குன்றக்குடி அடிகளார் போன்ற சமயப் பெரியார்கள், சித்தர்கள் ஆகியோரின் நல்லாசிகளையும் பெற்று வாழ்பவர்.மறவன்புலோகடவுள் சுவாமிகளின் சிஷ்யனாக இவர் வாழ்ந்து வருகின்றார். செல்வச்சந்நிதி, சந்நிதியான் ஆச்சிரமத்தால் வெளியிடப்பட்டு வரும் "ஞானச்சுடர்" பத்திரிகையில் "மானுடத்தை மேன்மைப்படுத்தும் மான்புமிகு கோட்பாடுகள் மகாபாரதத்திலிருந்து" என்ற தலைப்பில் 10 வருடங்களாகத் தொடர்கட்டுரை எழுதியுள்ளார். அதன் முதல் பாகம் நூலாக வெளி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**கந்த சத்தியதாசன்**



1965-12-24 ஆம் நாள் தெல்லிப்பளை மாவிட்டபுரம் என்ற முகவரியில் பிறந்தவர். தற்பொழுது முருகன்திடல் புத்தூர் கிழக்கு புத்தூரில் வசித்துவருகின்றார். இவர் மிகச்சிறந்த சொற்பொழிவாளரும், பேச்சாளருமாவார். ஆலய மகோற்சவங்களின்போது நேர்முக வர்னனை யாளராகப் பணிபுரிந்து ஆன்மீகப் பேச்சாளராகத் திகழ்கின்றார் என்பதுடன் பட்டிமன்றப் பேச்சாளராகவும், நடுவராகவும் செயற்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. தற்பொழுது வலிகாமம் கல்விவலயத்தில் சமயபாட ஆசிரிய ஆலோசகராகவும் பணியா ற்றுகின்றார். அருட்சொல்வாரி, அருள்நெறித் தமிழருவி, அறநெறிக்குரு போன்ற பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப் பெற்றவர்.

## சித்தவைத்தியர்களும் சோதிடர்களும்.

**சின்னத்தம்பி சுப்பையா**



1941.11.18 ஆம் நாள் வவுணாவத்தை, துர்க்காபுரம், தெல்லிப்பளை என்னும் இடத்தில் பிறந்தவர் பரம்பரையான வைத்தியத்துறையில் ஈடுபாடு உடை யவர் இளமையில் புன்னாலைக் கட்டுவன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை (1946-1950) வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் (1951-1952) சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி (1953 1964) ஆகிய பாடசாலைகளில் H.S.C கல்வி வரை

கற்றவர் சித்த ஆயுள்வேத சர்வாங்க வைத்தியம் பாம்புக்கடி, விஷகடி, முறிவுநெரிவு வைத்தியம் ஆகியவற்றில் சிறப்பு ஆற்றல் பெற்றவர். 1964 - 1991 வரை இலங்கை பொலிஸ் சேவை. 1964 1979 பொலிஸ் கொஸ்தாபல். 1980 1991 பொலிஸ் சார்ஜண்ட சிரேஸ்ட பொலிஸ் சார்ஜண்ட ஆகிய தொழில் அனுபவம் உடையவர் பொலிஸ் சேவையில் பணியாற்றிய காலத்தில் 1968 ஆம் ஆண்டு "தோஸ்தி" என்ற ஹிந்தியில் இருந்து சிங்களத்திற்கு மொழிமாற்றம் செய்யப்பட்ட திரைப்படத்தில் கௌரவ நடிகராக பங்கேற்றவர். 1967 இல் ன்சிக்கிள் கொறா" சிங்களத் திரைப்படத்தில் பொலிஸ் வேடத்தில் நடித்துள்ளார். பாடசாலைப் பருவத்தில் 1953 இல் Second From கல்வி பயின்ற காலத்தில் வேடன் வாழ்க்கை தொடர்பான தனிநபர் நடிப்பில் "வேடனாக நடித்துள்ளார். 1971 முதல் சித்த ஆயுள்வேத வைத்திய முறையில் சர்வாங்கம் பாம்புக்கடி, விஷகடி, முறிவு நெரிவு ஆகிய வைத்தியங்கள் செய்து வருவதுடன். கைரேகை, வீட்டுக்கு நிலையம் பார்த்தல், திருமணப் பொருத்தம், ஜாதகக்குறிப்பு எழுதுதல், ஜாதகம் பார்த்தல், கிணற்றிற்கு நிலையம் அமைத்தல். ஆகியவற்றிலும் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. விஷகடிவைத்தியத்தில் 1991 ஆம் ஆண்டு விளக்கு வைத்த குளம் எனுமிடத்தில் புடையன் பாம்பு தீண்டிய ஒருவருக்கு (இரவு 12 மணியளவில்) அவசர வைத்திய சிகிச்சை வழங்க முடியாத நிலையில் இருந்த போது அப்பிரதேசத்தில் இருந்த மூலிகை வகைகளை கொண்டும் பார்வை பார்த்தல் மூலமும் உயிரை காப்பாற்றிக் கொடுத்துள்ளார். இவரது மருத்துவமுறை சார்பாக ஆயுள்வேத தலைமை அலுவலகம், நாவின்னவைச் சேர்ந்த ஆணையாளர் ரமணி குணவர்த்தனா 2009 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் இவரது வீட்டிற்கு தனது சகாக்களோடு வந்து இவரது மருந்துகள், தைல வகைகளை பரிசோதித்து பெற்றுச் சென்றுள்ளார்கள். அதன் பின்பு இவரது வைத்தியம் தொடர்பாக மாண்புமிகு சுதேச வைத்திய அமைச்சர் திஸ்ஸ கரலியத்த அவர்களுடன் ஆணையாளர் கலந்துரையாடி 2009 ஆம் ஆண்டு "எங்கள் வைத்திய இல்லம்" என்ற வைத்தியசாலையை உருவாக்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமை இவரது வைத்தியச் சிறப்பிற்கு ஒரு எடுத்துக் காட்டாகும்.

## அமரத்துவமடைந்த சோதிடர்கள், சித்தவைத்தியர்கள்

### பரிகாரியார் வேலுப்பிள்ளை நாகமுத்து



வளமாரி கட்டுவனில் 1875 ஆம் ஆண்டு பிறந்தவர். தமிழ்ப்பரம்பரை வைத்தியம்.சோதிடம், நாட்டார் கலைகள் தமிழ் இலக்கியம் என்பவற்றில் ஆழ்ந்த பயிற்சியும் புலமையும் கொண்டவர். கிராமத்தில் செயற்பட்டு வந்த கிராம சங்கங்களிலும் சமூகசேவை அமைப்புக்களிலும் பணியாளராக விளங்கியவர்.1937ஆம் ஆண்டு ஸ்ரீ ராம நவமி நாளன்று இறைவனடி சேர்ந்தார்.

### சித்தவைத்திய கலாநிதி கோவிந்தர் சின்னத்தம்பி



1908-13-30 ஆம் நாள் காங்கேசன்துறையில் பிறந் தவர்.சோதிடம்,கைரேகை,சாஸ்திரம், வீட்டு நிலைய மெடுத்தல்,விசக்கடிக்குப் பார்வை பார்த்தல் மருத்துவம் எனப்பல்துறை ஆற்றலுடையவர். மகப்பேற்று மருத்து வத்தினை தனது சிறப்பானதுறையாகக் கொண்டு விளங்கியவர். நாடிபிடித்துப்பார்த்து நோயினைக் குணப்படுத்துவதில் வல்லவராக இவர் விளங்கினார்.2000-11-05 ஆம் நாள் வாழ்வுலகை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

### வைரவநாதர் நடேசு



1916.01.01 ஆம் நாள் தெல்லிப்பளை மாவிட்டபுரத்தில் பிறந்தவர்.சாஸ்திரம்,வீட்டுநிலையம் எடுத்தல் என்ப வற்றில் பாண்டித்தியம் பெற்றவர் நடேசு சாஸ்திரியாரை யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் வந்து அழைத்துச்செல்லும் அளவிற்கு பிரபல்யம் பெற்றி ருந்தவர். 1995.03.02 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

### தங்கமுத்தம்மா நாகலிங்கம்



1922-05-07 ஆம் நாள் தெல்லிப்பளையில் பிறந்தவர். சித்தவைத்தியத் துறையில் செங்கண்மாரி நோயினைக் குணப்படுத்துவதில் மிகச்சிறந்த வைத்தியர் என்ற பெயரைப்பெற்றவர். யாழ்ப்பாணம் மட்டுமன்றி இலங்

கைத்திருநாட்டின் சகல பாகங்களிலுமிருந்து நோயாளர்கள் இவரைத் தேடி வந்து சிகிச்சை பெற்றார்கள்.தனது பேச்சு வல்லமையினாலும், திறமையினாலும் எல்லா நோயாளர்களையும் குணப்படுத்தினார். இவரின் அன்பினாலும், அறிவுத்திறமையினாலும் தன்னல மற்ற சேவையினாலும் சிறுவர், முதல் பெரியவர், வயோதிபர் என்ற பாரபட்சமற்ற பணியினாலும் மக்கள் மனதில் என்றும் மறக்க முடியாத அம்மா என்ற பெயரைப்பெற்றவர்.2004-10-17 ஆம் நாள் வாழ்வுலகை நீத்து நிலையுலகம் சென்றார்.

### சங்கரப்பிள்ளை இளையதம்பி



1928.05.01 ஆம் நாள் தெல்லிப்பளை வீமன்காமத்தில் பிறந்தவர். கொக்குவில் இரகுநாதையரின் வாக்கிய பஞ்சாங்கக் கணிப்பின் முக்கிய சோதிடராகப் பணியாற்றியவர். 2004.11.01 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

## தவிற் கலைஞர்கள்

### வேதையா ஸ்ரீதரன்



1953-04-01 இணுவிலில் பிறந்து அளவெட்டியில் வாழ்ந்து வருகின்றார். இந்தியாவைச் சேர்ந்த பிரபல தவில்வித்துவான் திருமெஞ்ஞானம்,ரீ.கிருஸ்ண மூர்த்திப்பிள்ளையிடமும் 1961 ஆம் ஆண்டு ஆரம்பப் பாடம் கற்றுப்பின்னர் 1964 ஆம் ஆண்டு இணுவில் பிரபல தவில்வித்துவான் என்.ஆர்.சின்னராசபிள்ளையிடம் தவில் பயின்று பின்னர் அவருடன் சேர்ந்து நான்கு ஆண்டுகள் தொடர்ந்து கச்சேரி செய்தது மட்டுமல்லாது அவருடைய கலை நுணுக்கங்களையும் கற்றுப் பின்னர் இலங்கையில் உள்ள பிரபல நாதஸ்வர, தவிற் கலைஞர் களுடனும் பங்கு கொண்டு வருவதுடன் யாழ்ப்பாணத்தின் பல்வேறு ஆலயங்களினதும் மகோற்சவங்கள் மற்றும் திருவிழாக்களுக்கும், கலை நிகழ்வுகளிலும் பங்கு கொண்டு தன்னாலான இசைப்பணியை ஆற்றி வருகின்றார். இவரது இரு புதல்வர்களும் தவிற்கலையை தமது

தந்தையிடமே பயின்று தவிற்கலைஞர்களாகத் திகழ்ந்து வருகின்றனர். இவரது இத்தகைய பணிகளுக்காக வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையினரால் கலைச்சுடர் விருதும்,சர்வதேச இந்துமத குருபீடம் லய ஞானமணி என்ற விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பெற்றவர்.

## வடிவேலு இராமச்சந்திரன்



1957.03.18ஆம் நாள் அளவெட்டியில் வடக்கில் பிறந்தவர். அ.சின்னக்கணேசு அவர்களை முதற் குருவாகக்கொண்டு தவிற்கலையைப் பயின்றவர். பின்னர் யாழ்ப்பாணம் இராஜகோபாலபிள்ளை அவர்களிடம் மேலும் நுணுக்கமான பயிற்சிகளைப் பெற்று சிறந்த தவில் வித்துவானாக வாழ்ந்து வருகின்றார்.பாலசுதந்திரன் மேளக்குழுவில் தவில்க்கலைஞராகப் பங்கேற்றவர் தற்பொழுது யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல ஆலயங்களின் திருவிழாக்களில் தவிற்கலைஞராகப் பணியாற்றி வருகின்றார்.

## தெட்சனாமூர்த்தி உதயசங்கர்



1966 ஆம் ஆண்டுஅளவெட்டியில் பிறந்து தற்பொழுது கனடா வில்வாழ்ந்து வருகின்றார்.இசையுலகின் முடி சூடாமன்னன் தவில் மேதை அமரர் தெட்சனாமூர்த்தி அவர்களின் புதல்வனாவார்.இன்றைய இசையுலகில் முன்வரிசையில் இருக்கும் இளம் தவில்க்கலைஞர். தனது தந்தை வழி தவில் வாத்தியத்தை முறைப்படி கற்றுக் கொண்டார். பின்னர் ஈழத்தின் பிரபல்யமான தவில் வித்துவான்களான திரு நா.குமரகுரு,கா.கணேசரத்தினம்,இணுவையூர் கே.ஆர். புண்ணிய மூர்த்தி போன்றவர்களிடமும் இக்கலையை கற்றுத் தேர்ந்தார். மேலும் 1980 ஆம் ஆண்டு தென்னிந்தியா சென்று தவில்க் கலாமணி வலங்கை மான் திரு ஏ.சண்முகசுந்தரம்பிள்ளை என்பவரைக் குருவாகக் கொண்டு ஒரு வருடம் தவிற்கலையைப் பயின்றவர். இத்தகைய பயிற்சிகளினால் பல நுட்பங்களையும் அறிந்துகொண்டார். சங்கரவர்களின் தவில் வாசிப் பானது ஸ்வரசுத்தமும், லயசுத்தமும், விவகாரமும் நிறைந்து அமைந்

திருப்பதாக் குறிப்பிடப்படுகின்றது.ஆரம்ப காலங்களில் யாழ்ப்பாணத்தின் ஆலயங்கள் தோறும் தவில்க் கச்சேரியினை பல வித்துவான்களுடன் இணைந்து செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரது இத்தகைய பணிகளுக்காக 1982 இல் சுட்டிபுரம் அம்பாள் சந்நிதியில் மக்கள் மத்தியில் லயஞானமாமணி, செல்வச்சந்நிதி முருகனாலயத்தில் லய ஞானகலாநிதி ஆகிய பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பெற்றவர்.

## அமரத்துவமடைந்தவர்கள்

### கார்த்திகேசு கணேசரத்தினம்



அளவெட்டியில் 1919.02.02 ஆம் நாள் பிறந்தவர். மூத்த தவில் ஆசிரியராகப் போற்றப்படும் இவர் என்.கே. பத்மநாதன், எஸ்.சிதம்பரநாதன் முதலிய இசைக்குடும் பங்களை உருவாக்கியவர். இந்தியாவிலிருந்து மிகவும் புகழ் பெற்ற தவில்நாதஸ்வரக் கலைஞர்களை வரவ ளைத்து தமது குழுவில் இணைத்து இசைவளர்த்து எமது பிரதேச த்திற்குப்பெருமை சேர்த்தவர். அந்த வகையில் எம்.பி.திருநாவுக்கரசு பிள்ளை, சாவகச்சேரி அப்புலிங்கம்பிள்ளை, மாவிட்டபுரம் ராசா என் போருடன் இந்தியாவிலிருந்து வருகை தந்த சண்முகக்குட்டிப்பிள்ளை வேதாரணியம் வேதாரமூர்த்திப்பிள்ளை கோட்டூர் இராசரத்தினம் பிள்ளை பிரபல தவில் மேதைகளாகிய திருவிழந்தூர் ராமதாஸ்பிள்ளை, வடபாதிமங்களம் தட்சனாமூர்த்திப்பிள்ளை முதலியோரும் இக்குழுவில் அடங்குவர். இவர்களின் வருகையால் அக்காலத்தில் வாழ்ந்த எமது பிரதேச இளம் கலைஞர்கள் இத்துறையில் மேம்படுவதற்கு அரிய வாய்ப்பைக் கொடுத்தது. இப்பெருமை கணேசரத்தினம் தவில்க் கலை குருக்கே உரியது.கள்ளங்கபடமற்ற உள்ளமும்,உண்மையை எந்த இடத்திலும் தயங்காமல் கூறும் உன்னததிறமும் கொண்ட ஒரு சிறப்பான இசைக்கலைஞன். ஞானமிடுக்குடன் வாழ்ந்த மாபெரும் கலைஞன். 2007.12.14 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

## செல்லையா சுப்பிரமணியம்



1914 ஆம் ஆண்டு அளவெட்டியில் பிறந்தவர். மிகச் சிறந்த தவில் வித்துவானாகத் திகழ்ந்தவர். 1974 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

## விஸ்வலிங்கம் தெட்சணாமூர்த்தி



1933.08.26 ஆம் நாள் இணுவிலில் பிறந்து அளவெட்டியில் வாழ்ந்தவர். இவருக்குப் பெற்றோரிட்ட பெயர் ஞானபண்டிதன் என்பதாகும். ஆறாவது வயதில் தனது தந்தையாரிடம் தவில்ப் பயிற்சியை ஆரம்பித்தவர். யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை காமாட்சி சுந்தரம் என்பவரிடம் விரிவாகவும், நுணுக்கமாகவும் பயின்று அரங்குகளில் வாசித்து வந்தார். சிறுவயதிலேயே இவரது தவில்வாசிப்பானது யாவரும் பிரமிக்கும்படியாகவும், நாத சுகமுள்ளதாகவும், லயவேலைப் பாடுகள் நிறைந்ததாகவும் இருந்து வந்தது. மேலும் இந்தியப்பெருங் கலைஞரான நாச்சியார்கோயில் ராகவப்பிள்ளையிடம் லய சம்பந்தமான நுணுக்கங்களைப் பயின்றது மட்டுமல்லாமல் அவருடன் சேர்ந்து தவில் வாசிக்கும் பேற்றையும் பெற்றவர். மேலும் இந்திய நாதஸ்வர வித்துவான்களான காரைக்குறிச்சி அருணாசலம், ஷேக்சின்ன மௌலானா, நாமகிரிப்பேட்டை கிருஸ்ணன், ரீ.என்.இராஜரத்தினம் பிள்ளை போன்றவர்களது கச்சேரிகளில் வாசித்துப் பாராட்டுக்களையும், தங்கப்பதக்கங்களையும் பெற்றவர். ஈழத்திலும் இவருடன் இணைந்து எஸ்.பீ.எம். திருநாவுக்கரசு, பி.எஸ்.ஆறுமுகம், சாவகச்சேரி எம்.பஞ்சாபிகேசன் போன்றவர்கள் கானமழை பொழிந்தமையை இசையுலகம் எளிதில் மறந்து விடமுடியாது. ஷேக்சின்னமௌலானாவின் கச்சேரியில் தவில் வாசித்து இந்திய சங்கீத விமர்சகரான சுப்புடு அவர்களின் பாராட்டையும், தங்கக்கோபுரத்தையும் பரிசாகப்பெற்றவர். இவரது தவில் வாசிப்பினை கலாரசிகர்கள் எவறெஸ்ட்றொக்கற் எனவும் வியந்து பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்திய நாதஸ்வரச்சக்கரவர்த்தியான திருவாவடுராயரத்தினம்பிள்ளை அவர்களின் நினைவுவிழா

கரூரில் 12.12.1968 இல் நடைபெற்றது. அவ்விழாவில் தெட்சணாமூர்த்தி அவர்களுக்கு தங்கத்தாலான தவிற்கேடயம் பரிசாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவரது இத்தகைய கலைச்சேவைகளைப் பாராட்டும் வகையில் பல்வேறு விருதுகளும், கௌரவப்பட்டங்களும் அவருக்கு வழங்கப்பட்டன. அந்த வகையில் லயஞானகுபேரபூபதி, கற்பனைச் சுரங்கம், கரவேகசேகரி, தவில்வாத்திய ஏகச்சக்கராதிபதி போன்ற பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டமை சிறப்புக்குரியது. சுமார் 25ஆண்டுகளுக்கு முன்பே மூன்று அல்லது நான்கு மணித்தியாலங்கள் தொடர்ந்து கச்சேரி செய்து சாதனை படைத்தவர். இவர் தனது புதல்வர் களில் இருவரை தவிற்கலையில் நிலைத்து நிற்கும் சாதனை யாளர்களாக உருவாக்கியவர். இவர்களில் திரு.உதயசங்கரவர்கள் தந்தை வழியில் நின்று இன்று முன்னணிக்கலைஞராகத் திகழ்கின் றமை குறிப்பிடத்தக்கது. இவர் தனது வாழ்நாட்களின் பின்பகுதியை இந்தியாவிலேயே செலவிட்டுக் கலைத்தொண்டாற்றி ஈழத்திற்குப் பெருமை சேர்த்தவர். 1970 களின் பின்னர் மீண்டும் இலங்கை வந்து நம் நாட்டில் தவிலிசை பரப்பிய தவில் மேதை. 1975.03.13 ஆம் நாள் நாதப் பிரம்மத்தோடு ஒன்றி கலையுலக வாழ்வை நீத்துக்கொண்டார். இவரது தவில் வாசிப்பின் பெருமையினால் யாழ்ப்பாணம் இன்றும் இந்தியாவின் கலைப்பாரம்பரியத்தை மிஞ்சுமளவிற்குப்பெருமை கொண்டுள்ளது எனக் கூறின் அது மிகையாகாது.

### பக்கிரிசாமி குமாரசுந்தரம்



1921.12.13 ஆம் நாள் மாவிட்டபுரத்தில் பிறந்தவர். சிறந்த தவில் வித்துவான். இந்தியாவிலும் தவில் கச்சேரி களில்பங்கு பற்றும் வாய்ப்புப்பெற்றவர். சிறுவயதில் தென்இந்தியாவில் வாழ்ந்த பிரபல தவில்மேதை நாச்சியார் கோவில் இராவகப்பிள்ளை என்பவரிடம் குருகுலவாசம் செய்வதற்குச்சென்று அங்கு மதிப்பிற்குரிய பிரபல மேதைகளான நாதஸ்வரச்சக்கரவர்த்தி திருவாவடுதுறை ரீ.என்.இராஜரத்தினம்பிள்ளை காரைக்குறிச்சி அருணாசலம்பிள்ளை பிரபல தவில் மேதைகளான

நீடாமங்கலம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை, திருமுல்லைவாசல் முத்துவீர பிள்ளை போன்றோரது குழுவில் பங்கேற்கும் வாய்ப்பும் பெற்றுக் கொண்டவர்.இலங்கையில் தனது சிறிய தந்தையார் மாவை என்.எஸ். உருத்திராபதி, மாமனாராகிய மாவை எஸ்.கே.இராசா, சகோதரர் எஸ்.எஸ். அப்புலிங்கம் போன்றவர்களது குழுவில் தவில் வித்துவானாகப் பணியாற்றியவர். தவில் மேதை அமரர் தெட்சணாமூர்த்தி அவர்களுடன் இணைந்து இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் உள்ள முக்கிய தலங்கள் யாவற்றிலும் தவில் வாசித்த பெருமைக்குரியவர். 2004.01.17 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

## நாகலிங்கபிள்ளை குமரகுரு



1934.07.17 ஆம் நாள் அளவெட்டியில் பிறந்தவர். தனது தந்தையாரான நாகலிங்கபிள்ளையை முதற் குருவாகக் கொண்டு தவிற்கலையைப்பயின்றவர். பின் பிரபல தவில் மேதை வலங்கைமான் சண்முகம்சுந்தரம் பிள்ளையின் தந்தையாராகிய மூளாய் ஆறுமுகம் பிள்ளையை பிரதம குருவாகக் கொண்டு ஞானம் பெற்றவர். அக்காலத்தில் அளவெட்டி என்.கே.பத்மநாதனால் அமைக்கப்பட்ட இளம் நாதஸ்வர தவில்க் குழுவினருடன் இணைந்து தவிலிசைத்துப் புகழ் பெற்று விளங்கியவர். இதற்குப் பின்னர் பிரபல நாதஸ்வரக் கலைஞர்களாகிய திருமெய்ஞானம், பல்லவி ரீ.பீ.நடராஜசுந்தரம்பிள்ளை, பந்தனை நல்லூர் தெட்சணா மூர்த்திப்பிள்ளை முதலியவர்களை இந்தியாவிலிருந்து வரவழைத்து இசைக்குழு அமைத்து இசை வளர்த்துப் புகழ்தேடியவர். 1960 ஆம் ஆண்டு இந்திய இசையாளர் சங்கம் நடத்திய இசை விழாவிலும்,1968 இல் தமிழ் இசைச்சங்கம் நடத்திய இசைவிழாவில் என்.கே. பத்மநாதன், மூளாய் ஏ.பாலகிருஸ்ணன் ஆகிய இருவரும் நாதஸ்வரம் இசைக்க வலங்கைமான் சண்முகசுந்தரம்பிள்ளையுடன் இணைந்து தவில் வாசித்துப் பெருமை பெற்றவர். 1979 ஆம் ஆண்டு என்.கே. பத்மநாதன் குழுவினருடன் இணைந்து இங்கிலாந்திலும் பின்னர் பல உலக நாடுகளிலும் தவில் விற்பன்னராகப் புகழ் பெற்றவர். இவற்றுடன் பல வயலின் வாத்திய தனிக்கச்சேரியில் கெஞ்சிரா வாசித்துப் பெருமை தேடிய


வர். தமது வாரிசுகளில் மூத்த புதல்வனை நாதஸ்வரத்துறையில் பயிற்றுவித்ததுடன் இளைய புதல்வனாகிய பாலச்சந்திரனை தவில் இசைக்கவும் பயிற்றுவித்து கலை உலகிற்கு அறிமுகம் செய்துள்ளமையும் தரமான ஒருபெரிய சிஷ்ய பரம்பரையையும் உருவாக்கிய பெருமை இவருக்குண்டு. இன்று இசையுலகில் முன் வரிசையில் இருக்கும் இளம் தவிற் கலைஞர்களான த.உதயசங்கர், எஸ்.சுகுமார், கானமூர்த்தி, கண்ணதாசன், கனடாவிலிருக்கும் மனோகரன் என்போர் இவரால் உருவாக்கப் பெற்ற பரம்பரையினர் என்று குறிப்பிடுவது இவரது கலைச்சேவையின் உன்னத ஆற்றலை வெளிப்படுத்தி நிற்கின்றது என்பதில் ஐயமில்லை. 1968 ஆம் ஆண்டு கண்டி குறிஞ்சிக்குமரன் ஆலய இசைச் சங்கத்தினரால் லயஞானகலாநிதி என்ற விருதும்,1993 இல் இலங்கை அரசின் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கலாபூஷணம் விருதும் வழங்கப்பெற்றவர். 2007.09.26 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

**அழகர் சின்னக்கணேஷன்**



அளவெட்டியைச் சேர்ந்த இவர் 1941.03.06 ஆம் நாள் பிறந்து தவிற் கலைஞனாக வாழ்ந்தவர். பல தவிற் கலைஞர்களை உருவாக்கியதோடு மட்டுமல்லாமல் தனது தலைமையில் குழுக்களை அமைத்து யாழ்ப்பாணத்தின் பிரபல ஆலயங்களிலும் விழாக்கள் வைபவங்களிலும் இசைமழை பொழிந்தவர் இவரது வாசிப்பானது லய, நாத, சுருதிபிசகாத சங்கதிகள் நிறைந்ததாக இருக்குமென இவரது ரசிகர்களால் குறிப்பிடப்படுகின்றது.1996.10.05 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

**பாலசுப்பிரமணியம் பாஸ்கரன்**



1970.04.20 ஆம் நாள் அளவெட்டியில் பிறந்தவர். தனது 14ஆவது வயதில் இளம் தவில் கலைஞனாக வாழ்வை ஆரம்பித்தவர். இவர் தனது இளம் வயதில் கலை உலக வாழ்வை நீத்து இறைவனடி சேர்ந்தார்

## இராமநாதன் ஞானசுந்தரம்



1923.10.07ஆம் நாள் தெல்லிப்பளை மாவிட்டபுரத்தில் பிறந்தவர். 65 வருடங்களுக்கு மேற்பட்ட கலை அனுபவம் உடைய இவர் தனது 14 ஆவது வயதில் இக் கலையை தனது உறவினர்களான மாவிட்டபுரத்தைச் சேர்ந்த பக்கிரிசாமிப்பிள்ளை, உருத்திராபதி நடராஜா ஆகியோரிடம் முறைப்படி பயிலத் தொடங்கியவர்.மேலும் தமிழ் நாட்டின் சிறந்த நாதஸ்வரக் கலைஞனான திருச்சறை கிருஸ்ணமூர்த்தி அவர்களை குருவாகக் கொண்டு தொடர்ச்சியாக 4 வருடங்கள் நாதஸ்வரக் கலையைப் பயின்றவர். மேலும் தமிழ் நாட்டின் மூத்த சிறந்த தவில், நாதஸ்வர வித்துவான்களை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வந்து பல்வேறு இடங்களிலும் மேளக்கச்சேரிகளை நடத்திய பெருமைக் குரியவர். தெல்லிப்பளை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலின் ஆதீன வித்துவானாக இருந்து கலை வளர்த்தவர். மாவைக் கந்தன் ஆலயத்தின் நாதஸ்வர கலைப் பரம்பரையின் நான்காவது தலைமுறையைப்பேணும் வாய்ப்புப் பெற்றவர். இக்கலையின் வளர்ச்சிக்கும் பாதுகாப்பிற்குமாக மாவிட்டபுரத்தைத் தளமாகக்கொண்டு இசை வேளாளர் சங்கம் என்ற ஒரு சங்கத்தை நிறுவி அதன் தலைவராகப் பலகாலம் செயற்பட்டு வந்தவர். இச்சங்கத்தினூடாக "இசையாளன்" என்னும் மாதாந்த சஞ்சிகை ஒன் றினையும் தொடர்ந்து நடத்தி வந்தவர். இவரது இத்தகைய பணிகளை கௌரவிப்பதற்காக இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்களம் கலாபூஷணம் விருதினையும், மேலும் சமூகத்தொண்டன், ஸ்வரஞான கலாபமணி, இசைஞானவாருதி உட்பட பல கௌரவப்பட்டங்கள் வழங் கப்பட்டிருக்கின்றன. மூத்த இசையாளராக எம் மத்தியில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

## பெரியசாமி பாலகிருஸ்ணன்



1938.11.01 ஆம் நாள் நெல்லியடியில் பிறந்தவர். அளவெட்டி வடக்கு என்னும் இடத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றார். நாதஸ்வரம், வாய்ப்பாட்டுக் கலைகளில் 50 வருடங் களுக்கு மேலாக இப் பணியில் சேவையாற்றிவரும் இவர் தனது தந்தையாரிடமும் என்.கே.பத்மநாதன் தமிழ் நாட்டின் திருச்சறை கிருஸ்ணமூர்த்திப்பிள்ளை, திருமாளம் சோமஸ்கந்தபிள்ளை ஆகியோரிடம் இக்கலையைத்துறை போகக்கற்றவர். இன்று எம்மத் தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் மூத்த இசையாளர்களில் ஒருவர். இளம் பிரபல தவில் மேதைகளான சேகர், சுதாகர்(அமரர்) இவரது புதல்வர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த ஏ.என்.நல்லகுமார், எம்.பீ.நடராஜன் போன்ற கலைஞர்களுடன் இணைந்து யாழ்ப்பாணத்து வரலாற்றுப்புகழ் பெற்ற ஆலய மகோற்சவ காலங்களில் நாதஸ்வர கானமழை பொழிவது குறிப்பிடத்தக்கது. இலங்கையில் மட்டுமன்றி உலகில் பல பாகங்களிலும் நாதஸ்வரக் கலைஞனாகப் பங்கேற்று கானமழை பொழிந்து மக்களின் மனங்களில் நீங்காத இடத்தினைப்பிடித்தவர்.பல நாதஸ்வரக் கலைஞர்களை உரு வாக்கியவர். இன்று இசை உலகில் முன்னணியில் நிற்கும் இளம் நாதஸ்வர வித்துவான்களாகிய சாவகச்சேரி எம்.பீ.நாகேந்திரன், இணுவில் காங்கேஸ்வரன், தொண்டைமனாறு கோவிந்தசாமி, சித்தன் கேணி செல்வன், மதுரை இராசரத்தினம் போன்ற கலைஞர்களைக் குறிப்பிடலாம். 70வயது கடந்த நிலையிலும் தனது கலைச் சேவையினை வழங்கி வருகின்ற அற்புதக்கலைஞன். வாய்ப்பாட்டுக் கலையின் மூலம் பெறப்பட்ட இவரது ஞானம் நாதஸ்வர இசை வெளிப்பாட்டிலும் ஒரு தனிப் பாணியை உருவாக்கியது. இவர் இராக ஆலாபனை செய்யும் பாணி யையும் நாதஸ்வரத்தைக் கையாளக் கைவரப்பெற்ற சிறப்பையும் மூத்த பல இசைக் கலைஞர்களே புகழ்ந்து பேசுவது இவரது சிறப்பிற்கு மகிமை யான அடையாளமாகும். தமிழகத்தில் தமிழிசைச்சங்கம் நடத்துகின்ற

இசைவிழாவில் நாதகானம் செய்வதற்கு அழைக்கப்பெற்று பெருமைப் படுத்தப்பட்டவர். 1999 ஆம் ஆண்டில் கொழும்பு கம்பன் கழகத்தினரால் நடத்தப்பட்ட இசை விழாவில் நாதஸ்வரக்கச்சேரி செய்ததோடல்லாது வாய்ப்பாட்டுக்கச்சேரியும் செய்து எமது பிரதேசத்திற்குப் பெருமை தேடித் தந்தவர். இவருடைய இத்தகைய பணிகளுக்காக கர்நாடக சங்கீத நாதஸ்வரச்செல்வன், மதுரகானபூஷணம், லலிதஸ்வரநாத வாருதி போன்ற கௌரவப்பட்டங்களுடன் இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கலாபூஷணம் விருதும், 2009 ஆம் ஆண்டுக்கான வடக்கு மாகாண ஆளுநர் விருதும் வழங்கப்பெற்றவர்.

## சுப்பிரமணியம் ஸ்ரீகுமரன்



1958.03.17 ஆம் நாள் அளவெட்டியில் பிறந்தவர். அளவெட்டி மேற்கில் வாழ்ந்து வரும் இவர் நாதஸ்வரக் கலையில் 30 வருடங்களாக ஈடுபட்டு வருகின்றார். ஆலயங்களிலும் விஷேட வைபவங்களிலும் நாதஸ் வரக் கலையின் வளர்ச்சியில் பங்காற்றி வருகின்றார்.

## இராசு இந்திரகுமார்



1959.07.31 ஆம் நாள் மல்லாகம் என்னும் இடத்தில் பிறந்து கே.கே.எஸ்.வீதி மல்லாகத்தில் வசித்து வருகின்றார். ஆரம்பக்கல்வியினை மல்லாகம் மகாவி த்தியாலயத்தில் பயின்று தனது பன்னிரண்டாவது வயதில் நாதஸ்வரக் கலையில் ஏற்பட்ட ஆர்வம் காரண மாகத் தனது தந்தையைக் குருவாகக்கொண்டு இக்கலையைப் பயின் றவர். தனது மூத்த சகோதரரான வரதராஜன் என்பவருடன் இணைந்து கச்சேரிகளில் பங்கெடுத்துக் கொண்டவர். 31 வருடங்களுக்கு மேலாக பணியாற்றி வரும் இவர் பரம்பரையாக இக்கலையை தனது தந்தை யாரிடம் பயின்றவர். இந்தியாவில் இருந்து வருகை தந்த அம்புக்கோயில் புதுக்கோட்டை மாவட்டத்தைச்சேர்ந்த நாதஸ்வர வித்துவான் ஏ.என் நல்லகுமார், மற்றும் என்.பி நடராஜன் அளவையூர் எம்.பி. பாலகிருஸ் ணன் போன்றோருடன் சேர்ந்து மாவைக்கந்தன் ஆலயத்தில் இருபத் தைந்து நாள் திருவிழாவில் கச்சேரிசெய்தவர். மேலும் நாதஸ்வர வித்துவான் என்.கே. பத்மநாதன், வி.கே.பஞ்சமூர்த்தி ,வி.கே.கான

மூர்த்தி, சிதம்பரநாதன், சுந்தரமூர்த்தி, கே.பாலமுருகன் இவர்களுடன் சேர்ந்தும் கச்சேரி நிகழ்த்தியவர். அத்துடன் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் 25 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்தும் தனது சேவையை ஆற்றிவரும் இவர் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், மயிலணி முருகமூர்த்தி ஆலயம், கொல்லங்கலட்டிப் பிள்ளையார் கோவில் போன்ற ஆலயங்களிலும் தனது சேவையை ஆற்றி வருகின்றார். இவருடைய புதல்வர்களில் பாலமுரளி என்பவர் புதுக்கோட்டை திருக்கோணத்தில் தவில் வித்துவான் செல்லையா பிள்ளையிடம் பயிற்சி பெற்று இன்று மலேசியாவில் தவிற் கலைஞனாகத் திகழ்ந்து வருகின்றார். இரண்டாவது புதல்வனாகிய பானுசந்தர் கோண் டாவில் நாதஸ்வர வித்துவான் வீ.கே.பஞ்சமூர்த்தி,அளவையூர் எம்.பீ. பாலகிருஸ்ணன் போன்றோரிடம் பயிற்சி பெற்று இன்று துர்க்காதேவி தேவஸ்தானத்திலும் வேறு சில ஆலயங்களிலும் நாதஸ்வரக் கலையை இசைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவரது கலைச் சேவையைப் பாராட்டி வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையினர் கலைச்சுடர் என்னும் விருது வழங்கிப் பாராட்டியமை குறிப்பிடத்தக்கது.

**இரத்தினவேலு கேதீஸ்வரன்**



1950-01-23 ஆம் நாள் அளவெட்டியில் பிறந்தவர். தனது 9 ஆவது வயதில் தந்தையாரிடம் நாதஸ் வரக்கலையைப்பயில ஆரம்பித்தவர். தமிழருவி சண்மு சுந்தரம் ஆசிரியரால் தயாரிக்கப்பட்ட வாழ்வு பெற்ற வல்லி என்ற நாடகத்திற்கு நாதஸ்வரம் வாசித்தது மட்டுமல்லாது பாத்திரமேற்று நடித்தும் சிறப்புப் பெற்றவர். மாவிட்டபுரம் எஸ்.கே.ராசா, கோண்டாவில் நாராயண சாமிப்பிள்ளை, தமிழ்நாடுவந்த நல்லூர் தெட்ச னாமூர்த்திப்பிள்ளை ஆகியோரிடம் விசேடசிட்ஷை பெற்றவர். 1964-1993 வரை கலாசூரி என்.கே.பத்மநாதன் அவர்களுடன் இணைந்து நாதஸ்வரம் வாசித்தவர். இக்காலப்பகுதியில் பல இசை நுட்பங்களையும் கச்சேரிசெய்யும் அனுபவங்களையும் பெற்றவர். இவரது நாதஸ்வர வாசிப்பானது ஸ்வரசுத்தமும், லயசுத்தமும் நிறைந்த சுகமுடைய வாசிப்பாக அமைந்திருப்பது அனைவராலும் வியந்து பேசப்பட்ட

ஒன்றாகும். தமிழ் நாட்டின் முதலமைச்சர் அமரர் எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அகில உலக தமிழாராய்ச்சி மாநாட்டின் ஆரம்ப வைபவத்திற்கு நாதஸ்வரம் வாசித்தவர். தற்பொழுது தனக்கென ஒரு குழுவை அமைத்து கச்சேரிகள் செய்து வருகின்றார். இவரது இத்தகைய பணிகளுக்காக சங்கீத நாதசாகரம், நாதகலா ஞானநிதி, நாதஸ்வரகீதபானு,கலைச்சுடர் போன்ற விருதுகளும் சுவிஸ் லாந்தில் லலிதஸ்வர நாதவிபூஷ என்ற விருதும் லண்டன் கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தில் ஸ்வரலய ஞானவாருதி என்னும் விருதும் வழங்கப் பெற்றவர். இந்தியா மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, லண்டன், அவுஸ்ரேலியா, பாரிஸ்,சுவிஸ் போன்ற உலகநாடுகளிலெல்லாம் இசைக்கச்சேரிசெய்து எமது பிரதேசத்திற்குப் பெருமை சேர்த்த கலைஞர்.

**செல்லத்துரை சிதம்பரநாதன்**

அளவெட்டியில் பிறந்த இவர் தற்பொழுது கனடாவில் வாழ்ந்து வருகின்றார். நாதஸ்வரக் கலையை மிக இளம் வயதில் அளவெட்டி கும்பழாவளை விநாயகர் ஆலயத்தில் தனது தந்தையாரினது வழி நடத்தலில் ஆரம்பித்தவர். பின்னர் மாவிட்டபுரம் எஸ்.கே.ராசா அவர் களிடம் சாஸ்திரிய முறையில் நாதஸ்வரம் பயின்று தலை சிறந்த கலை ஞானத்துடன் இந்தியாவிற்கும் சென்று நுண்இசையில் மெருகேற்றப் பெற்றவர்.இவரது மாமனாரான தவிற்கலைஞர் கணேசரத்தினத்தின் வழி நடத்தலில் இக்கலையில் மேலும் மெருகூட்டப்பட்டவர். இவரது நாதஸ்வர வாசிப்பானது ஸ்வரசுத்தமும், லயசுத்தமும் நிறைந்ததாகவும், சம்பிரதாயம் தழுவியதாக கோயில்கிரியைகளிலும் இந்துக்களின் மங்கள வைபவங்களிலும் உரியமுறைப்படி இராகங்கள், உருப்படிகளை வாசிக்கும் விருப்புடையவர். இன்று தனக்கென ஒரு குழுவை அமைத்து நாதஸ்வரகான மழைபொழிந்து வருகின்றார். விடாமுயற்சியும், அபரா அசுர பயிற்சியின் மூலமும் தனக்கான ஒரு பாதையை அமைத்துக் கொண்டவர். நாதஸ்வரஇளம்தென்றல், நாதஸ்வரகானவாருதி என்ற விருதுகள் பெற்றவர்.

### செல்லத்துரை சிவகுருநாதன்



அளவெட்டியில் பிறந்து தற்பொழுது கனடாவில் வாழ்ந்து வருகின்றார். நாதஸ்வரமேதை சிதம்பரநாதனின் சகோதரராவார். இவர் தனது தந்தையாரிடம் ஆரம்பப் பாடத்தைக் கற்றுப்பின்னர் இந்தியா சென்று மேலும் தனது கலையில் மெருகூட்டப்பட்டவர். தனது சகோதரரான நாதஸ்வர மேதை சிதம்பரநாதனுடன் இணைந்து கச்சேரி செய்துவருவது குறிப்பிடத்தக்கது. அளவையூரின் இசைப்பாரம்பரியத்தில் இவரும் ஒருவர் என்று குறிப்பிடப்படுவது மிகவும் பொருத்தமானதே. இவரது நாதஸ்வர வாசிப்பானது ஸ்வரசுத்தமும், லயசுத்தமும் நிறைந்தனவாக அமைந்திருக்கும் எனவும் ரசிகர்களால் குறிப்பிடப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## அமரத்துவமடைந்தவர்கள்

### சோமசுந்தரம் பக்கிரிச்சாமி



1890 ஆம் ஆண்டு மாவிட்டபுரத்தில் பிறந்தவர். மூத்த நாதஸ்வர மேதையான இவர் பல இத்துறைசார் கலைஞர்களை ஆளுமையுள்ளவர்களாக உருவாக்கியவர். 1975 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.


### என். எஸ். உருத்திராபதி



1900 ஆம் ஆண்டு இலங்கைத் திருநாட்டின் வட பகுதியில் மூர்த்தி,ஸ்தலம் தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமையப் பெற்ற மாவிட்டபுரத்தில் பிறந்தவர். தனது நான்காவது வயதில் தந்தையையிழந்து பல்வேறு சிரமங்களின் மத்தியில் இந்தியாவின் சிதம்பரத்தைச் சேர்ந்த நாதஸ்வர வித்துவானாகிய வைத்தியநாதன் அவர்களை குருவாகக் கொண்டு இரண்டு ஆண்டுகள் நாதஸ்வரக்கலையைப் பயின்றவர். பின்னர் கொத்தமங்கலம் தண்டாயுதபாணியென்னும் நாதஸ்வரக் கலைஞனிடம் 4 ஆண்டுகள் நாதஸ்வரக் கலையைப் பயின்றவர். மிகச்சிறந்த நாதஸ்வர மேதை. தனக்கென ஒரு பாணியில் கர்த்தாராகங்களை மத்திம சுருதி பண்ணி வாசிப்பதிலும், பல்ல

விஸ்வரங்களை வித்தியாசமான தாளங்களில் வாசித்து கலைஞர் களையும், பாமர மக்களையும் மகிழ்விப்பதிலும் ஆற்றல் பெற்றவர். நாத ஸ்வர வித்துவானாக மட்டுமன்றி எல்லாவகை வாத்தியங்களையும் வாசிப்பதில் தேர்ச்சி பெற்றிருந்ததோடு இசையாசிரியராகவும் பணியாற் றியவர். மாவை ஆதீனத்தில் அர்த்த சாமப்பூசையின் போதும், வெள்ளி, செவ்வாய் நாட்களிலும், நடேஸ்வராக் கல்லூரியின் சரஸ்வதி பூசையின் போதும் புல்லாங்குழல் வாசித்துள்ளார். மாவை முருகனையே தன் உயிர்மூச்சாகக் கொண்டு தன்நாதஸ்வரக்கலையை முருகனுக்கு அர்ப்பணித்து மாவையாதீனத்தின் ஆஸ்த்தான வித்துவானாகவும் வாழ்ந்தவர்.இவரது கலைச் சேவையைப் பாராட்டி மிகச்சிறந்த வித்து வானென கலாரசிகர்கள் சார்பில் மாவையாதீன பிரதம குரு பிரம்மஸ்ரீ துரைச்சாமிக் குருக்கள் அவர்களால் தங்கநாதஸ்வரம் பரிசாக வழங்கப் பட்டமையும், அனேகரசிகர்களால் தங்கப்பதக்கங்கள் வழங்கியும் கௌரவிக்கப் பெற்றவர். அகில இலங்கை அரசினர் இசையாசிரியர் சங்கத்தின் சார்பாக 1964 ஆம் ஆண்டு சங்கீத வித்துவபூஷணம் என்ற விருதும், அகில இலங்கை சங்கீதவித்துவ சபையினால் 1965 ஆம் ஆண்டு பொன்னாடை போர்த்தியுடன் சங்கீத வித்துவமணி என்ற விருதும் யாழ் நகரில் நடந்த இசைவிழாவின் போது இராமநாதன் இசைக்கலைப் பேராசிரியராக இருந்த சித்தூர் சுப்பிரமணியபிள்ளை அவர்களால் பொன்னாடை போர்த்திப் பாராட்டப் பெற்றவர். இவரால் உரு வாக்கப்பட்ட மாணவர்களில் பலர் பிரபல நாதஸ்வர வித்துவான்களாக வும், இசையாசிரியர்களாகவும், பாடகர்களாகவும், இசை ஆராய்ச்சி அறிஞர்களாகவும் இன்று திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. 1980 .05. 24 ஆம் நாள் தனது கலையுலக வாழ்வை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

## சின்னத்தம்பி விஸ்வலிங்கம்



1902 ஆம் ஆண்டு அளவெட்டியில் பிறந்தவர். நாதஸ்வர வித்துவானாக பல ஆண்டுகள் பணியாற்றி யவர்.பல இசைக் குழுக்களை தன்னகத்தே வைத் திருந்து கலைப் பணியாற்றியவர். தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய ஆதீனகர்த்தாவாக 25 வருடங்கள்

தொடர்ச்சியாகப் பணியாற்றியவர்.புராண இதிகாசக் கதைகளை இசை வாத்தியங்கள் மற்றும் ஆட்டமுறையினூடாக வெளிப்படுத்தி நடனமாடுகின்ற பெண்நடனக் குழுக்களையும்,தவில், நாதஸ்வரக்கலைஞர்களை உள்ளடக்கிய மேளக்குழுக்களையும் செற்கட்டி வைத்திருந்து இசைக் கலை வளர்ச்சியல் வழிகாட்டுனராகப் பங்காற்றியவர். 1994 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

**கே.எஸ். ராசா**



1907.02.10 ஆம் நாள் ஈழத்து வடபால் மாவிட்டபுரம் கந்தசுவாமிதேவஸ்தானச்சூழலிலே இசைப்பாரம்பரியக் குடும்பத்திலே பிறந்தவர். நாதஸ்வரக் கலையை தனது உறவினரும் தேவஸ்தான வித்துவானுமாகிய குழந்தைவேலு என்பவரிடம் கற்றவர். இவர் மாவையாதீன சேவையுடன் ஈழத்து ஆலயங்களின் விஷேட நிகழ்வுகளுக்கும் இந்துக்களின் மங்களச்சடங்குகளுக்கும் மங்கள இசையை வழங்கியுள்ளார்.இக் கலைஞரது நாதஸ்வரவாசிப்பானது ஸ்வரசுத்தமும்,லயசுத்தமும்,விலகாரமும் பிரகாசங்கதிகளும் நிறைந்த சுகமுடைய வாசிப்பாகவும், கோயில் கிரியைகளிலும்சரி,இந்துக்களின் மங்களவை பவங்களிலும்சரி உரிய முறைப்படியே இராகங்கள் உருப்படிகளை வாசிக்கும் பழக்கமுடையவர். மிகச்சிறந்த நாதஸ்வர மாமேதை சம்பிரதாயங்களை அனுசரித்த முறையிலான வாசிப்பும் கிரியைகள் வைபவங்களில் உரிய முறைப்படி ராகங்கள் உருப்படிகளை வாசிக்கும் பழக்கமுடையவரும் ஒழுங்குடைய வருமாவார். மாவைக்கந்தன் வீதியிலே அமைந்திருந்த தனது வாசஸ்தலத்தில் இருந்தவாறே நாதஸ்வரத்திற்குச் சிறப்பான பல நாதஸ்வரக் கலைஞர்களை உருவாக்கிய பெருமையுடையவர். அந்த வகையில், மாவிட்டபுரம் சண்முகநாதன், அளவெட்டி சிதம்பரநாதன், இணுவில் சுந்தரமூர்த்தி, கோண்டாவில் கானமூர்த்தி போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இங்கு குறிப்பிடப்பட்ட நாதஸ்வரக் கலைஞர்களை விட ஈழத்தின் பெரும்பான்மையான நாதஸ்வரக் கலைஞர்கள் ராசா அவர்களிடமே நாதஸ்வரம் பயின்று இசைப் பணியாற்றி வருகின்றனர்

என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரின் நாதஸ்வர இசையானது ஈழ நாட்டின் பல ஊர்களிலும் பிரபல்யமான ஆலயங்கள் தோறும் கானமழை பொழிந்ததுடன் இவரது காலத்தில் எஸ்.பீ. எம். திருநாவுக்கரசு,ஆச்சாபுரம் சின்னத்தம்பி, மாவிட்டபுரம் எம்.எஸ். சண்முகநாதன், திருப்பங்கூர் இராமையா, கலாசூரி என்.கே பத்மநாதன் போன்ற நாதஸ்வரக் கலைஞர் கள் இவருடன் இணைந்து வாசித்து வந்துள்ளனர். மேலும் தவில் வித்துவான்களான இணுவில் சின்னத்தம்பிப்பிள்ளை, திருமுல்லை வாயில் முத்துவீரப்பிள்ளை, வண்ணை பொ.பழனிவேல், வலங்கை மான் ஷண்முகசுந்தரம், கும்பகோணம் தங்கவேலு, இணுவில் கனகசபாபதி ,திருமங்கலம் சுந்தரரேசன், வடபாதி மங்கலம் தட்சனா மூர்த்தி, பி.எஸ். இராய கோபால்பிள்ளை, அளவெட்டி குமாரசுந்தரம், பால கிருஸ்ணன் ஆகிய பழம்பெரும் வித்துவான்களும், பிற்காலத்தில் அளவெட்டி தட்சணாமூர்த்தி,இணுவில் சின்னராஜா, நாச்சிமார் கோயிலடி கணேசபிள்ளை ஆகியோரும் இவருடன் தவில் வாசித்தமை குறிப்பிடத் தக்கது. நாதஸ்வர இசை மேதையான ராசா அவர்கள் சிறந்த முறையில் உரிய கௌரவத்துடனும்,நாதஸ்வர சம்பிரதாயங்களைக் கையாண்டும், தனது இசைவாரிசுகளாகப் பல நாதஸ்வரக்கலைஞர் பரம்பரையை உருவாக்கியதுடன் பல்லாண்டு காலம் இசைச்சேவை புரிந்து நாதஸ்வர இசைக்கு முக்கியத்துவம் வாய்ந்த இடம் மாவிட்டபுரம் என்பதனை நிரூபணம் செய்யும் வகையில் வாழ்ந்தவர்.தனது இயலாத வயதுக் காலத்தில் 1994-01-01 ஆம் நாளில் 87 வது வயதில் மாவைக்கந்தன் திருவடியில் சரணபுகுந்தார்.

## அளவெட்டி எஸ்.பி.எம் திருநாவுக்கரசு



1920 ஆம் ஆண்டு பாரதநாட்டின் சீர்காழியிலே அவதரித்தவர் சிறு வயதிலேயே இசையார்வமுடை யவராக வாய்ப்பாட்டு, நாதஸ்வரம் ஆகிய இசைக் கலைகளில் நன்கு தேர்சியுடையவராக விளங்கி னார்.இவரது நாதஸ்வர இசை நுட்பத்திறணையறிந்த சித்தன்கேணியைச் சேர்ந்த தவில்வித்துவான் கோதண்டபாணி

அவர்கள் ஈழத்திற்கு அழைத்து வந்து இந்து ஆலயங்களிலும், இந்துக்களின் மங்கல நிகழ்ச்சிகளுக்கும் நாதஸ்வர இசைச்சேவையைச் செய்வதற்குச் சந்தர்ப்பங்களை வழங்கினார். இக் காலத்தில் இவருக்குப் பெரும் புகழ் கிடைக்கப் பெறலாயிற்று. இவரது நாதஸ்வர வாசிப்பானது இராக ஆலாபனை விஸ்தாரமுடையதாகவும், சுகமானதாகவும், சங்க திகள் நிறைந்ததாகவும் அமையும் என பல இசைக்கலைஞர்களாலும், ரசிகர்களாலும் பாராட்டப்பெற்றமை கண்கூடு. இவர் தவில், நாதஸ்வரக் கலைஞர்கள் சூழ்ந்த அளவெட்டி என்னும் பதியிலேயே பலகாலம் வாழ்ந்த காரணத்தினால் இவரை எல்லோரும் அளவெட்டித்திருநாவுக் கரசு என்றே அழைப்பது வழக்கமாயிற்று. இவருடன் இணைந்து அள வெட்டி என்.கே.பத்மநாதன், வண்ணை பி.எஸ். ஆறுமுகம்பிள்ளை, இணுவில்ஆர்.சுந்தரமூர்த்தி ஆகியோர் சேர்ந்து பலகாலம் நாதஸ்வரம் வாசித்து வந்துள்ளனர். ஈழத்து தவில் வித்துவான் வி.தட்சணாமூர்த்திய வர்கள் தனது குழுவில் திருநாவுக்கரசு அவர்களை இணைத்து மங்கல இசை நிகழ்ச்சிகளை சிறப்புற நடத்தி வந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத் தக்கது. இவரது காலத்தில் இந்தியாவிலிருந்தும் நாதஸ்வர, தவிற் கலை ஞர்கள் பிரத்தியேகமாக அழைக்கப்பட்டு ஈழத்துக் கலைஞர்களும் இணைந்து மங்கள இசைநிகழ்ச்சிகள் பலவற்றினை அரங்கேற்றியமை குறிப்பிடத்தக்கது.இவ்வரிசையில் திருநாவுக்கரசு அவர்கள் பிரபல நாதஸ்வரவித்துவான் காரைக்குறிச்சி அருணாசலம்பிள்ளை அவர் [illegible] இசை நிகழ்ச்சிகள் பல செய்துள்ளார். இவரது இசைச் சிறப்புக் காரணமாக அப்போதைய யாழ்ப்பாணத்து அரசாங்க அதிபர் எம்.ஸ்ரீ காந்தா அவர்கள் இவரைப் பாராட்டிக் கௌரவம் வழங்கிமையும் குறிப் பிடத்தக்கது. இக்கலைஞரிடம் அனேகமானோர் வாய்ப்பாட்டு இசையி னையும் பயின்றுள்ளார்கள். இவரிடம் நாதஸ்வர இசையை அவரது புதல் வர்களும்,ஆச்சாபுரம் சின்னத்தம்பி, மூளாய் பாலகிரு ஸ்ணன் ஆகியோர் நன்கு பயின்று இசைச்சேவை புரிந்தவர்களாவர்.இவராற்றிய கலைச் சேவை மற்றும் நாதஸ்வரக் கலையைக் கற்பித்தமை என்பவற்றிற்காக தங்கப்பதக்கம் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பெற்றவர்.1966 ஆம் ஆண்டு கலையுலக வாழ்வை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

வெங்கடாசலம் முருகையா



1924.03.01 ஆம் நாள் யாழ்ப்பாணத்தில் பிறந்து அளவெட்டியில் நிரந்தரமாக நாதஸ்வரக் கலைஞராக வாழ்ந்தவர். பல வருடங்களாக ஆலய மகோற் சவங்களிலும், விழாக்களிலும் கொண்டாட்டங்களிலும் இசைப் பணியாற்றியவர்.1980.07.15 ஆம் நாள் இறை வனடி சேர்ந்தார்.

**இராமநாதன் ராசு**



மல்லாகத்தில் பிறந்து நாதஸ்வரக் கலைஞராக வாழ்ந்தவர்.ஆலய மகோற்ஷவங்கள் பண்பாட்டு விழாக்கள் கொண்டாட்டங்களில் இசைப் பணியாற்றி யவர். இவரது புதல்வரான இந்திரகுமார் இன்று மிகவும் புகழ்பெற்ற நாதஸ்வரக்கலைஞராகவும் இவரது பேரப்பிள்ளைகள் வெளிநாடுகளில் நாதஸ்வரக் கலைஞர் களாகவும் வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. 1980.06.23 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

**சேதுராக்கர் சுப்பிரமணியம்**



1927.11.07 ஆம் நாள் அளவெட்டியில் பிறந்தவர். பல வருடங்களாக , நாதஸ்வரக்கலையின் மூலம் ஆலய மகோற்ஷவங்களிலும் பண்பாட்டு விழாக்கள் கொண் டாட்டங்களிலும் இசைப்பணியாற்றியவர்.1994.07.08 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

**என்.கே. பத்மநாதன்**



1931 ஆம் ஆண்டு அளவெட்டியில் பிறந்தவர்.நாதஸ்வர இசையுலகின் திலகமாகத்திகழும் இவர்மிக இளம் வயதில் தனது இசைப்பயணத்தை ஆரம்பித்தவர்.தனது தந்தையை முதற் குருவாகக் கொண்டு நாதஸ்வரக் கலையை பயில ஆரம்பித்தவர். அக்காலத்தில் சாஸ்திரிய சங்கீத விற்பன்னர் எனமதிக்கப்பட்ட எம்.பி. திருநாவுக்கரசு பிள்ளையை பிர

தம குருவாகக்கொண்டு நாதஸ்வர இசைப் பயிற்சி பெற்றவர். கேள்வி ஞானமும், தொடர்ச்சியான கடினபயிற்சியும் விடா முயற்சியும் இவர் தனக்கென ஒருபாணியை உருவாக்க முடிந்தது. மிக இளவயதிலேயே தனக்கென ஒரு இளம் இசைக்குழுவை உருவாக்க எண்ணி எம்.பி.பால கிருஸ்ணன், வி.தட்சணாமூர்த்தி, எம்.குமரகுரு முதலியவர்களை இணைத்து 1950ஆம் ஆண்டு நாதஸ்வர தவிற்குழு ஒன்றை அமைத் தார். இலங்கை மட்டுமன்றி உலகமெங்கும் இசைக் கச்சேரி செய்யும் பயணத்தை ஆரம்பித்து வைத்தவர். இவரது பன்நாட்டு இசைப்பயணம் தமிழர் வாழும் நாடுகளுக்கும் தொடர்ந்தது. இவரது புதல்வனாகிய அமரர் முரளிதரன் இளம் வயதிலேயே மிகச்சிறந்த நாதஸ்வரக் கலைஞராகத் திகழ்ந்தவர். வரலாற்றுப்புகழ் பெற்ற நல்லைக் கந்தன் ஆலயத்தில் 47வருடங்கள் ஆஸ்த்தான வித்துவானாகப் பணியாற்றிய பெருமைக் குரியவர். தொடர்ந்து மதுரையில் நடைபெற்ற இரண்டாவது தமிழாராய்ச்சி மாநாட்டிலும், மேற்குலக நாடுகளில் பிரபலமான [illegible]ங்களில் ஒன்றான பிரிட்டன் West Minister Hall இலும் நாதஸ்வரம் வாசித்த பெருமைக்குரியவர். இலங்கையில் மட்டுமல்லாது இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், கொங்கொங்,ஜேர்மன், பிரான்ஸ், கனடா, லண்டன் முதலான நாடுகளிலும் நாதஸ்வரம் வாசித்துப்புகழ்பெற்றவர். சோலோ என்று அழைக்கப்படுகின்ற பலவாத்தியங்களை ஒன்றிணைத்து நிகழ்த்தப்படுகின்ற கச்சேரிகளில் நாதஸ்வரம் வாசித்தவர் என்பதுடன் பரதநாட்டியக் கலையின் அணிசெய்வாத்தியக் கருவிகளில் ஒன்றாக நாதஸ்வரத்தினை உபயோகித்த பெருமையையும் பெற்றவர். என்.கே. பத்மநாதன் அவர்களின் நாதஸ்வர வாசிப்பானது ஸ்வரசுத்தமும், லய சுத்தமும், விவகாரமும், பிர்காசங்கதிகளும் நிறைந்த சுகமுடைய வாசிப்பாக அமைந்திருக்குமென அன்பர்களாலும்,ரசிகர்களாலும் வியந்து பேசப்பட்டமை கண்கூடு. கோயில் கிரியைகளிலும், சடங்குகளிலும், கச்சேரிகளிலும் சரி உருப்படிகளையும், இராகங்களையும் முறைப்படி வாசிக்கின்ற பழக்கமுடையவர். இவரது இசைக்கலைப் பணியை பாராட்டும் நோக்கில் இசைப்பிரியர்களால் பல உயரிய சமூக நிறு வனங்களால் கௌரவிக்கப் பெற்றவர். அந்தவகையில் நாதஸ்வரக்

கலாநிதி, இன்னிசைவேந்தன், 1964 இல் பன்னாலையில் நடைபெற்ற சேக்கிழார் விழாவில் நாதஸ்வர கானகலாநிதி, 1967 இல் எச்.டபிள்யூ. தம்பையா அவர்களால் ஏழிசைவேந்து, கனடா ஸ்ரீ வரசித்திவிநாயகர் தேவஸ்தானத்தால் கலைமாமணி போன்றனவும், 2004 இல் யாழ் பலகலைக்கழகத்தினால் கௌரவகலாநிதி என்ற பட்டமும் 1982 இல் இலங்கைஅரசின் உயர் விருதான கலாசூரி மற்றும் இலங்கைஅரசின் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கலாபூஷணம் போன்ற உயர் விருதுகள் வழங்கப்பெற்றவர். 2003 ஆம் ஆண்டு கலையுலக வாழ்வை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

## மகாலிங்கம் இராஜதுரை



1938.08.17 ஆம் நாள் பருத்துறையில் பிறந்து அளவெட்டியில் நிரந்தரமாக வாழ்ந்தவர். பல்லவி என்ற பாடத்தை நாதஸ்வரத்தில் சிறந்த முறையில் வாசிக்கும் திறனுடையவர் ஆதலால் பல்லவி இராஜதுரை எனப்பலராலும் போற்றப்பட்டவர். பல்லவி என்னும் விடப்பரப்பில் போட்டி என்ற முக்கியமான விடயம் காணப்படும். அனேகமாக கச்சேரிகளில் வாசிக்கின்ற பொழுது கலைஞர்கள் ஒருவரை ஒருவர் மடக்குவதற்காக போட்டிபோட்டு வாசிப்பதுண்டு. இதனைப் பார்க் கின்ற ரசிகர்கூட்டம் மிகுந்த ஆரவாரத்துடன் ரசிப்பதுண்டு. இத்தகைய ஒருநிலையினை நாதஸ்வரஇசையின் மூலம் உருவாக்கி பல்லவி என்னும்வாசிப்பினை ஏற்படுத்திய மிகச்சிறந்த நாதஸ்வரக் கலை ஞனாவார்.அமரர்களான என்.கே. பத்மநாதன், வி.தட்சணா மூர்த்தி, குமரகுரு போன்ற புகழ் பூத்த கலைஞர்களுடன் இணைந்து நாதஸ்வரம் வாசித்த பெருமைக்குரியவர். குறிப்பிட்ட பலவருடங்களாக இசைப் பணியாற்றிய இவர் தனது புதல்வர்களில் ஒருவரை தவில்க்கலையிலும் இன்னொரு வரை நாதஸ்வரக் கலையிலும் பயிலவைத்து இக் கலைக்கான தனது பரம்பரை தொடர்ச்சியினை ஏற்படுத்தியுள்ளார். 1978.10.10 ஆம் நாள் கலையுலக வாழ்வை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

### சுப்பிரமணியம் குருசாமி



1946.12.27ஆம் நாள் பொலிகண்டியில் பிறந்து அளவெட்டியில் நிரந்தரமாக வாழ்ந்தவர். ஆலயத்திரு விழாக்களிலும் பண்பாட்டு விழாக்கள், கொண்டாட்டங் களிலும் நாதஸ்வரக்கலையின் மூலம் இசைப்பணி யாற்றியவர். இவரது மகனான திரு பாலமுரளி இளம் தவில் கலைஞனாக திகழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. 2001.11.15 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

### M.P.B.S சுதாகர்



1966.12.27 ஆம் நாள் அளவெட்டியில் பிறந்தவர். நாதஸ்வர இளம் சக்கரவர்த்தியாகவும், இளம்தென்ற லாகவும் வாழ்ந்தவர். இரட்டைப்பட சுரங்களைச் சரளமாக வாசிக்கும் ஆற்றலுடையவர். 2004.05.22 ஆம் நாள் கலையுலக வாழ்வை நீத்துக்கொண்டார்.

### பத்மநாதன் முரளிதரன்



1967.11.20ஆம் நாள் அளவெட்டியில் பிறந்தவர். நாதஸ்வரமேதையான என்.கே.பத்மநாதன் அவர் களின் புதல்வன். மிக இளம்வயதில் மிகச்சிறந்த நாதஸ்வரக் கலைஞனாகத் திகழ்ந்தவர்.தமிழ் நாட்டின் மிகச்சிறந்த நாதஸ்வர கலைஞர்களிடம் பயின்றவர். 1987.12.02 ஆம் நாள் அன்று இறைவனடி சேர்ந்தார்.

### கந்தையா வடிவேலு



1914ஆம் ஆண்டு நைனாதீவில் பிறந்து அளவெட்டியில் நிரந்தரமாக நாதஸ்வரக் கலைஞனாக வாழ்ந்தவர். தவிற் குழுக்களை தன்னகத்தே வைத்திருந்து ஆல யத் திருவிழாக்களிலும் கொண்டாட்டங்களிலும் இசைப் பணியாற்றியவர்.இவரது புதல்வர்களில் ஒருவர் நாதஸ் வரக்கலையிலும் இன்னொருவர் தவில் கலையிலும் சிறப்பாக பணி ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கது. 1982 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

### மகாதேவன் மாசிலாமணி



1894 ஆம் ஆண்டு மாவிட்டபுரத்தில் பிறந்தவர். பிரபல நாதஸ்வர மேதையான ஞானசுந்தரம் அவர்களின் மாமனாராவார். மேளக்கோஷ்டிகளில் ஒத்து என்னும் வாத்தியத்தினை சிறந்த முறையில் ஊதும் ஆற்றலு டையவர். சுருதிப்பெட்டிக்கு ஈடிணையான பயன்பாடு உடையதாக ஒத்து என்ற இசைக்கருவி பயன்படுத்தப்பட்டது. 1964 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

### கோவிந்தசாமி கிட்டு



1922.10.21 ஆம் நாள் அளவெட்டியில் பிறந்தவர். இவர் நாதஸ்வரமேளக் குழுவினருக்குரிய தாளக்கலை ஞனாக திகழ்ந்தவர். இவர் இடம்பெறாத குழுக்களே இல்லை எனலாம். 2006 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

## நாடகக் கலைஞர்கள்

### ஆறுமுகம் தில்லைநாயகம்



04.12.1930 ஆம் ஆண்டு தபாற்கந்தோர் வீதி, வீமன் காமம் தெல்லிப்பளையில் பிறந்து தற்பொழுது 74, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம் என்னும் இடத்தில் வசித்து வருகிறார். நாடகத்துறையில் 35 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தை உடைய வர். இவரது குறிப்பிடத்தக்க படைப்புக்களாக சத்தியவான் சாவித்திரி, அரிச் சந்திரன், ஸ்ரீவள்ளி, கோவலன் கண்ணகி, பவளக்கொடி, வீரபாண்டிய கட்டப்பொம்மன், கண்டியரசன், விதவையின் வாழ்வு, பழிக்குப்பழி, தந்தையின் கொடுமை, காதலாகடமையா, எழுத்தாளன் காதலி போன்றன குறிப்பிடத்தக்கது. இவருடைய குரு அண்ணாவியார் தம்பித்துரை ஆவார்.

## வல்லிபுரம் செனகரத்தினம்



1933.02.15 ஆம் நாள் வல்லுவத்தை பன்னாலை தெல்லிப்பளையில் பிறந்தவர். தற்பொழுது வன்னிய சிங்கம் வீதி இணுவில் தெற்கு இணுவிலில் வசித்து வருகிறார். பாடசாலையில் படிக்கின்ற காலத்தில் நாடகத்தில் தனது கலைத்திறமையை வெளிப்படுத்தி நாடகக்கலையில் தன்னை நிலைநிறுத்தியவர். 1970-1971 காலப் பகுதிகளில் திருகோணமலை நகரசபை மண்டபத்தில் பூதத்தம்பி, சங்கி லியன் ஆகிய இரு நாடகங்களையும் மேடையேற்றி அகில இலங்கை ரீதியில் பரிசு பெற்றவர். 1977-1978 காலப்பகுதியில் வீமன்காமம் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றியபோது கண்ணப்பன் கண்டகாளத்தி, பொன்மனம் ஆகிய இரு நாடகங்களையும் மேடையேற்றியவர். 1979-1980 காலப்பகுதியில் கொல்லங்கலட்டி சைவ வித்தியாலயத்தில் கடமையாற்றிய போது மயானகாண்டம், நீதிதேவதை, மனச்சாட்சி ஆகிய நாடகங்களை மேடையேற்றியவர். 1981-1990 காலப்பகுதிகளில் தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றுகின்ற காலத்தில் பல நாடகங்களை நெறிப்படுத்திப் பல பரிசில்களை மாவட்ட மட்டத்தில் பெற்றுக்கொடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது படைப்புக்களாக மனச்சாட்சி, குருதட்சனை, இராஜராஜசோழன், சிலம்புச் செல்வி, கர்ணன், பெற்றமனம், நடனமாது, பாதகாணிக்கை, பூதத்தம்பி, மயானகாண்டம், பெண்ணாபேயா, பெண்ணின் நல்லாள், சிறையிருந்த சீதை, தென்புலத் தெய்வமே வாழ்க, பரிசு,குருபக்தி, கொடுமனக்கூனி, கோப்பெருந்தேவி, கண்ணகி, மனப் போராட்டம், பெண்ணே நீ வாழ்க, நீயா போன்ற நாடகங்களை அரங்கேற்றி அறிஞர்களிடையே பலபாராட் டுக்களையும், பரிசில்களையும் பெற்றவர். இது மட்டுமல்லாது சிறந்த இயக்குனராகவும், கதாசிரியராகவும்,இருந்து பரிசுகள் பல பெற்றவர். மேலும் பரதநாட்டியம், புராணபடனம் படித்தல் போன்ற துறைகளிலும் ஈடுபட்ட வலிகாமம் வடக்கின் நாடகப் புலமையாளராவார்.

## பிரம்ம ஸ்ரீ சபாரத்தினக் குருக்கள் சுப்பிரமணியசர்மா



புராண வரலாற்றுப் புகழ் மிக்க கீரிமலைக் கிராமத்தில் 1934.01.31 ஆம் திகதி பிறந்த சுப்பிரமணியசர்மா அவர்கள். ஆரம்பக்கல்வியை இளவாலை மெய் கண்டான் சைவவித்தியாசாலையிலும், பின் உயர்தரக் கல்வியை காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரி யிலும், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியிலும் கற்றுள்ளார். கீரிமலை உப தபாலதிபராக 1957.04.30 ஆம் திகதி பொறுப்பேற்று இளைப்பாறும் வரை தபாலதிபராக கடமையாற்றினார். கலைகளில் இசைக்கலை நாதஸ்வரக்கலைகளில் வல்லவரான சுப்பிரமணியசர்மா தனது மிருதங்கக் கலையை இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் மிருதங்கப் பேராசிரியராக இருந்த மிருதங்க வித்துவான் திரு.சி.இராம நாதனிடம் பயின்று பின் இந்தியாவில் கேரளாவில் உள்ள பிரபல்ய மிருதங்க வித்துவான் துரைசுவாமி ஐயரிடம் பயின்று, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்த வீரபாண்டிய கட்டப்பொம்மன் திரைப்படம் இலங்கையில் திரையிட முன்பே இலங்கை யாழ் நாடகமேடைகளில் வீர பாண்டிய கட்டப் பொம்மனாக நடித்துப் பிரபல்யம் பெற்றவர். மாவை ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ இ.சண்முகநாதக் குருக்கள் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட முத்தமிழ்க் கலை மன்றத்தின் மூலம் பல நாடகங்களில் நடித்தவர். குறிப்பாக, "தெய்வநீதி" என்ற வட மொழி (சமஸ்கிருத) நாடகம் யாழ் ரஞ்சனசபாவில் மேடையேற்றியவர். இன்றும் வாழ்ந்து கொண் டிருக்கும் மூத்த நாடகக் கலைஞராவார்.

## பிரம்ம ஸ்ரீ சபாரத்தினக் குருக்கள் சிவசர்மா

புராண வரலாற்றுப் புகழ்மிக்க நகுலேஸ்வரப்பதியில் 1952.02.24 ஆம் நாள் பிறந்தவர். இவர் தனது கல்வியை நகுலேஸ்வர வித்தியாலயத்தில் G.C.E (O/L) வரை கற்று தேர்ச்சி பெற்று, பல நாடகங்களில் நடித்த காலத்தில் சிறந்த நடிகனாக தங்கப்பதக்கம், பேச்சுவன்மை மிக்க வனாகவும் பாராட்டுப் பல பெற்றவர். கோவலன் கண்ணகி, நாடகத்தில் மாதவியாகவும், பாண்டிய அரசி போன்ற வேடமிட்டவர். பெண்வேடங் களிலும் நடித்தமையால் ரசிகர்களிடம் பாராட்டுக்களைப் பெற்றவர்.

## முத்தையாக் குருக்கள் நாகேந்திரசர்மா



1935.06.03 ஆம் நாள் மல்லாகம் பழம்பதி என்னும் இடத்தில் பிறந்தவர்.பழம்பதி விநாயகர் தேவஸ் தானத்தின் தர்மகர்த்தாவாக விளங்கும் இவர் மிகச் சிறந்த நாடகக் கலைஞனாவார்.வசாவிளானைச் சேர்ந்த வி.எம்.குகராஜாவுடன் இணைந்து பல நாடகங் களில் நடித்தவர். யாழ்ப்பாணத்தவர்களால் தயாரிக்கப்பட்ட திரைப்படங் களினும் நடித்தவர்.பாடசாலையில் பயிலும் காலத்திலேயே தனது நடிப்பாற்றலை வெளிப்படுத்தியவர்.மல்லாகம் ஆங்கில வித்தியாசாலை யினர் நடத்திய சுகுமாரின்காதலி என்னும் நாடகத்தில் பெண் பாத்திரம் ஏற்று நடித்ததுடன் இவரது கலைப்பயணம் ஆரம்பித்தது. மேலும் கல்யாணப்பரிசு, கொள்ளைக்காரன்காதலி, வேலைக்குப் போனவள். தங்கம், போன்ற மேடைநாடகங்களிலும், நான் சாகமாட்டேன் தொலைக் காட்சி நாடகத்திலும், சோழன்துறவு என்னும் வானொலி நாடகத்திலும் நடித்தது மட்டுமல்லாது இத்தகைய ஆற்றுகைகளில் கதாநாயகன், தந்தை, பூசகர், புலவர், சாமியார் போன்ற பல பாத்திரங்களை ஏற்று நடித் துப்புகழ் பெற்றவர். தங்கம் நாடகத்தில் சாமியார் பாத்திரமேற்று சிறப்பாக நடித்தமைக்காக தங்கப்பதக்கம் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப் பெற்றவர். வீ.எம்.குகராஜா, ம.தைரியநாதன், சி.ரி.செல்வராசா, போன்ற பல முன்னணிக் கலைஞர்களுடன் இணைந்து நடித்த பெருமைக்குரியவர்

## சின்னத்துரை நடராஜா



10.07.1941 ஆம் நாள் தெல்லிப்பளை குரும்பசிட்டியில் பிறந்தவர். வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் அதிபராக பலகாலங்கள் கடமையாற்றியவர். படைப் பிலக்கியம், சொல்லாடல் கிராமியக்கலைகள், நாடகம் எனப்பல்துறை ஆற்றல் உடையவர். இவரது தந்தை யாரான சின்னத்துரை அண்ணாவியாரிடம் நாடகக் கலையைப் பயின்ற வர். பண்டத்தரிப்பு மகளிர் பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிய

காலத்தில் இவரால் தயாரிக்கப்பட்ட மேலும்கீழும் என்ற இசை நாடகத்தில் நடித்தது மட்டுமல்லாமல் 51 தடவைகள் மேடையேற்றியவர். மேலும் அக்கரைப்பச்சை, எனக்கென்னபயம் போன்ற நாடகங்களை எழுதி மேடையேற்றியவர். பாடசாலை நாடகப் போட்டிகளில் இவரால் தயாரிக்கப்பட்ட இசை நாடகங்கள், நாட்டிய நாடகங்களும் குறிப்பிடத்தக்க வெற்றிகளை ஈட்டிக்கொடுத்தன. தற்பொழுது தினக்குரல் பத்திரிகையின் முகாமையாளராக கடமையாற்றும் இவர் கலையருவி என்னும் பகுதியை ஆரம்பித்து அம்பலவன் என்ற பெயரிலும்,உருத்திரன் என்ற பெயரிலும் பல கவின்கலைக் கட்டுரைகளை எழுதி வருகின்றார். குரும்பசிட்டி நுண்கலை மன்றம் என்ற நிறுவனத்தை உருவாக்கி குரும்ப சிட்டிக் கிராமத்தில் நாடகம், இசை நடனத்துறைகளின் வளர்ச்சிக்கு வழி வகுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது இத்தகைய பணிகளுக்காக வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையினரால் கலைச்சுடர்விருது வழங்கி கௌரவிக்கப் பெற்றவர்.

### கனகசபை அமரசிங்கம்



1945.06.25ஆம் நாள் பன்னாலை என்னும் கிராமத்தில் பிறந்தவர். நாடகத்துறை விற்பன்னரான இவர் ஒரு சிறந்த கூட்டுறவாளர். அமரர் பொன் கணேசமூர்த்தி,ஏ.ரி.பொன்னுத்துரை,வி.எம்.குகராஜா போன்றவர்களது படைப்புகளில் பங்கேற்றவரும் இணைந்து செயற்பட்டவரும் ஆவார். இரட்டைமுகம், சந்தனக்காடு, சந்தனக்கட்டை, சகுனியர்மூவர் போன்ற நாடகங்களிலும் முக்கிய பாத்திரங்கள் ஏற்று நடித்தவர். ஈழத்து திரைப்படங்கள் சிலவற்றிலும் நடித்து முத்திரை பதித்தவர். தெல்லிப்பளை பலநோக்குகூட்டுறவுச்சங்கத்தின் கூட்டுறவுதின விழாக்களில் கூட்டுறவுத்துறை சார்பான விழிப்புணர்வு நாடகங்களை அரங்கேற்றியவர். இவரது இத்தகைய பணிகளுக்காக வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையினரால் கலைச்சுடர் என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப் பெற்றவர்.

## மாணிக்கம் தேவராசா



1949 அம் ஆண்டு அளவெட்டி என்னும் இடத்தில் பிறந்தவர். 5 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் போது புறோக்கர் என்ற நாடகத்தில் சிறு பாத்திரமேற்று நடித்ததுடன் அவரது அரங்கியல் வாழ்வு ஆரம்பித்து படிப்படியாக முன்னேறி 1976 ஆம் ஆண்டு முதல் நடிப்புக் கலையில் ஒரு தொழில் முறைக்கலைஞனாக வாழ்ந்து வருகின்றார்.பல இசை நாடகங்களிலும் கூத்துக்களிலும் சமூக நாடகங்களிலும் நடித்து வந்துள்ளார். சுருதி, தாளம் பிசகாது சுத்தமாக இனிமையாகப் பாடும் இயல்பைப் பெற்ற தேவராசா இசை நாடகங்களில் கம்பீரமாகத் தோன்றினார். சத்தியவான்சாவித்திரி, பூதத்தம்பி, அரிச்சந்திரா, நந்தனார், வள்ளிதிருமணம், ஞானசௌந்தரி, நல்லதங்காள் என அவரது இசை நாடகப்பட்டியல்கள் நீளும்.சமூக நாடகங்களிலும் பிரதான பாத்திரமேற்று நடித்து அனைவரினதும் பாராட்டுக்களையும் பெற்றவர். சண்டியன் தம்பிப்பிள்ளை அவரது புகழ்பெற்ற நகைச்சுவை நாடகமாகும். இதைவிட நெஞ்சம்மன்னிக்கமாட்டாயா, தயங்காத இதயம், அணையா விளக்கு, வடக்கும்தெற்கும் போன்ற சமூக நாடகங்களில் நடித்தும் நெறியாள்கை செய்துமிருக்கின்றார். நடிப்பு மட்டுமல்ல இசைக் கருவிகள் வாசிப்பதிலும் ஆற்றலுடையவர். நல்லநடிகனாக, நெறியாளனாக, நாடக ஆசிரியனாக, வாத்தியக் கலைஞனாக, சிறந்த பாடகனாக விளங்கும் இவர் பாரதிகலைஞர் நாடகமன்றம் என்ற அமைப்பை உருவாக்கி நடத்தி வருகின்றார். யாழ்ப்பாணம் கொட்டடி சனசமூக நிலையம் நகைச்சுவைச் சக்கரவர்த்தி என்ற பட்டத்தினையும், வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையினர் கலைச்சுடர் என்ற விருதினையும், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கலைஞானகேசரி என்ற விருதினையும் வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

## ஐயம்பிள்ளை இரேவணராத்திரி



1934-03-26 ஆம் நாள் கீரிமலை என்னும் முகவரியில் பிறந்தவர். முப்பது வருடத்திற்கு மேற்பட்ட கலை அனுபவமுடைய இவர் கீரிமலையில் உதயசூரியன் என்ற நாடக மன்றத்தை அமைத்து நாடகக் கலையின் வளர்ச்சியில் முன்னின்று உழைத்தவர். 1970-1977 காலப்பகுதிகளில் காலத்திற்கேற்றவாறு பல சமூக நாடகங்களை கதை வசனம் எழுதி நெறிப்படுத்தி மேடையேற்றியவர். உதய சூரியன் நாடகமன்றத்தின் மூலம் முதலில் சகோதரபாசம் என்னும் கற்பனைக் கதை நாடகத்தை எழுதி நெறிப்படுத்தி அரங்கேற்றினார். இந்நாடகத்தில் மின்சாரவசதிகளற்ற காலத்தில் மின்சாரக் கத்திச்சண்டை ஒன்றை ஏற்படுத்தி திகிலூட்டும் படைப்பாக அமைத்தவர். மேலும் கட்டப் பொம்மன் வரலாற்றை கதைவசனமாக எழுதி பெரும் பொருட்செலவில் உதயசூரியன் நாடகமன்றக் கலைஞர்களையும், மாவை முத்தமிழ் மன்றக் கலைஞர்களையும் இணைத்து ஆடி அமாவாசை தினத்தன்று கீரிமலை சிவன்கோயிலின் மேற்கு வீதியில் மேடையேற்றியவர். இந் நாடகத்தில் கீரிமலையைச் சேர்ந்த உப தபாலதிபர் ச.சிவசுப்பிரமணிய சர்மா அவர்கள் கட்டப்பொம்மனாகவும், பொ.இராயலக்ஸ்மி ஜக்கம்மாவாகவும் நடித்தது மட்டுமல்லாமல் இருபது கலைஞர்கள் பங்கு கொண்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளமை கவனத்திற் கொள்ளத்தக்கது. மன்னன் மகள் என்ற வரலாற்று நாடகத்தினையும், வன்னியூர் வைத்தியர் என்னும் நகைச்சுவை நாடகத்தினையும் அரங்கேற்றிய இவர் தொழில் நிமித்தமாக சவூதிஅரேபியாவிற்குச் சென்றமையால் இடைப்பட்ட காலப் பகுதியில் இவரது அரங்கச் செயற்பாடுகள் தடைப்பட்டன.ஆயினும் சிறிது காலத்தில் நாடு திரும்பிய இவர் ஒலி, ஒளிபெருக்கிச்சேவை ஒன்றினை ஆரம்பித்து இதன் மூலம் சம்பந்தர், மலரும் அரும்புகள், சிறுவர் நிகழ்ச்சி, பண்ணையார் போன்ற பல நாடகங்களை வீடியோ மூலம் படம் பிடித்து நாடகக்கலையில் ஈடுபட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இராசையா இராசரத்தினம்



1949 ஆம் ஆண்டு இவரது முதல் மேடைநாடகம் வாடகை வீடு கொழும்பு குரும்பசிட்டி நலன்புரிசபை யினால் தயாரிக்கப்பட்டு அ.சிவதாசன் அவர்களால் நெறிப்படுத்தப்பட்டு 1968 ஆம் ஆண்டு குரும்பசிட்டி மகா தேவ வித்தியாலயத்தில் மேடையேற்றப்பட்டது. இந்த நாடகத்தில் பண்டிதராக நடித்துப் பலரின் பாராட்டைப் பெற்றார். 1969 ஆம் ஆண்டு திரு.அ.சிவதாசன் நெறிப்படுத்திய கமலாலயத்தின் தயாரிப்பான "ஞான ஒளி" என்ற நாடகத்தில் இரு வேறு குணாம்சங்களைக் கொண்ட அந்தோனியின் பாத்திரத்தில் நடித்து சிறந்த மேடைநடிகராகப் பாராட்டப் பட்டவர். இந்த இரு நாடகங்களும் மட்டக்களப்பு, நீர்கொழும்பு, காரை நகர், பேராதனைப் பல்கலைக்கழகம் போன்ற இடங்களில் மேடை யேற்றப்பட்டன. "ஞானஒளி" நாடகம் முதன் முதலாக பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் மேடையேற்றப்பட்ட பொழுது ஒளி அமைப்புச் செய்தவர் திரைப்படத் தயாரிப்பாளர் பாலுமகேந்திரா அவர்கள். வரணியூ ரானின் "சண்டியன் சின்னத்தம்பி", ஜேசுரட்ணத்தின் "முகத்தார் வீடு" போன்ற நாடகங்களிலும் நடித்துள்ளார். 1973 இல் இருந்து 1977 வரை யாழ்ப்பாணத்தில் இருந்தபோது குரும்பசிட்டி அமெச்சூர் நாடகவட்டம் தயாரித்து மேடையேற்றிய "அசட்டுமாப்பிள்ளை", "போராட்டம்", "சத்திய சோதனை" போன்ற நாடகங்களில் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்துள்ளார். தெல்லிப்பளை பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்திய நாடகப் போட்டி யில் வசாவிளான் கலைவாணர் நாடக மன்றம் தயாரித்த மு.திருநாவுக் கரசின் "சமுதாயம் மாறட்டும்" என்ற நாடகத்திலும் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்தவர் கனடாவில் கடந்த 5 வருடங்கள் பல கவிதைகளை எழுதியு ள்ளார். இக் கவிதைகள் முழக்கம் பத்திரிகையில் வெளிவந்துள்ளன. இரசிகர்களின் பாராட்டுக்களைப் பெற்றுள்ளார்.

## கந்தப்பு சிவதாசன்




குரும்பசிட்டி என்ற கிராமத்து நாடகக் கலைஞர்களில் திரு.கந்தப்பு சிவதாசன் அவர்கள் ஒரு சிறந்த நடிகனாகவும், தயாரிப்பாளனாகவும், நெறிப்படுத்து பவனாகவும் நாடகக்கலைக்கு தொண்டாற்றியவர். இவர் குரும்பசிட்டி சன்மார்க்க இளைஞர் சங்கத்தில் நிர்வாக உறுப்பினராக இருந்த பொழுது சிறந்த நடிகர் திரு.க.கோபிநாத் அவர்கள் எழுதித் தயாரித்து 1960 ஆம் ஆண்டு பொங்கல் விழாவிலே சன்மார்க்க சபை மண்டபத்தில் மேடையேற்றிய "பழிக்குப் பழி" என்ற நாடகத்தில் முதல் முதலாக கதாநாயனாக அவரது நெறிப்படுத்தலில் நடித்து நாடகக் கலையில் தன்னை ஈடுபடுத்தினார். அவரது தயாரிப்பான ஆயிரத்தில்ஒருவர், தாகம், பாசக்குரல், ஒளி பிறந்தது ஆகிய நாடகங்களில் நடித்து தனக்கென்று சில ரசிகர்களை உருவாக்கியதோடல்லாமல் நாட கங்களை தாமே தயாரித்து, நெறிப்படுத்தும் கலைப்பேரரசு திரு.ஏ.ரி. பொன்னுத்துரை அவர்களை தனது குருவாகக் கொண்டு நாடகக்கலையில் ஈடுபட்டு வருகின்றார். "அன்பின்எல்லை" என்ற நாடகத்தை தயாரித்து சன்மார்க்க சபை மண்டபத்தில் மேடையேற்றிய பொழுது காலஞ்சென்ற சிறந்த எழுத்தாளரும், விமர்சகருமான இரசிக மணி, கனக.செந்திநாதன், அவர்கள் மிகவும் சிறந்த நாடகம் என்று அவரைப் பாராட்டினார். பின்பு குரும்பசிட்டி சன்மார்க்க இளைஞர் சங்கம், வளர்மதி சனசமூக நிலையம், உதயதாரகை மன்றம் போன்ற அமைப்புக்களின் ஊடாக இலட்சிய வேட்கை, மெழுகுவர்த்தி, குடும்பம்ஒருகோயில், நெஞ்சுபொறுக்கு தில்லை, காதலும் மோதலும், சத்தியசோதனை, கௌரவம், போராட்டம், அசட்டுமாப்பிள்ளை, அடிபட்டபுலிகள் ஆகிய நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றி பலரினதும் பாராட்டைப் பெற்றவர்.

## செல்லத்துரை குணபாலசிங்கம்



05.09.1949 ஆம் நாள் மாவிட்டபுரம் தெல்லிப்பளை என்னும் இடத்தில் பிறந்தவர். யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பளையில் கல்வி கற்றவர். கலைப்பட்டதாரி, சைவப்புலவர் ஓய்வு பெற்ற ஆசிரியர் மாவிட்டபுரம் இந்து வாலிபர் சங்கத் தலைவர், மாவை முத்தமிழ் கலாமன்றம், தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலய இளைஞர் சங்கம், வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம், வவுனியா இந்து மாமன்றம் ஆகியவற்றின் அங்கத்தவர். வடபிராந்திய இந்துப் பேரவை (செயலாளர்)அகில இலங்கை சர்வமத சமாதான அமைப்பு (உபதலைவர் நிர்வாக உறுப்பினர் கருணை இல்லம் வவுனியா (ஸ்தாபகர்) போன்ற பல பொதுச்சேவைகளை ஆற்றி வரும் இவர் கதாகான மணி (கீரிமலை கிருஸ்ணர் ஆலயம்)முத்தமிழ் புலவர் (வவுனியா இந்து மாமன்றம்) நாடக மணி (வட்டு திருஞானசம்பந்தர் வித்தியாசாலை)கலைக்குரிசில் (நீர்வேலி காமாட்சி ஆலயம்) செஞ்சொற்கொண்டல் (சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் ஆலயம்) போன்ற கௌரவப்பட்டங்கள் பெற்றவர். தெல்லிப்பளை யா/யூனியன் கல்லூரியின் கல்வி கற்ற காலத்தில் க.பொ.த (உயர்தரம்) மாணவனாக இருந்தபோது கல்லூரி நவராத்திரி விஜயதசமி விழாவில் முதல் வில்லிசை அரங்கேற்றம் நடைபெற்றது. கொழும்பு மயூராபதி அம்மன் ஆலயத்தில் கலாவினோதன் நா.கணபதிப் பிள்ளை யுடன் சேர்ந்து வில்லிசை நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர். காத்த வராயன், அரிச்சந்திரா, வள்ளி, கருகிய மொட்டுக்கள், தற்கொடை, சத்தியவான் சாவித்திரி, களப்பலி, பாலன்பிறந்தான், தரகர்தம்பிப் பிள்ளை, ஓம்பொட்டு வைக்கிறன் போன்ற நாடகங்களை நெறியாள்கை செய்து நடித்து அரங்கேற்றியவர்.

## வல்லிபுரம் ஸ்ரீதரன்



1949-01-03 ஆம் நாள் வலிகாமம் வடக்கு போயிட்டி என்னும் கிராமத்தில் பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியை போயிட்டி சரஸ்வதி வித்தியாசாலையிலும் பின் கொல்லங்கலட்டி சைவவித்தியாசாலையிலும் கல்வி பயின்றவர். சிறுவயதில் ஈழத்துச் சித்தரான சடையம்மா அவர்களிடம் பிரதம சிஸ்யனான நல்லூர் நமசிவாயம்


குருநாதர் அவரிடம் சிஸ்யனாக இருந்து புராணபடனம், பண்பாடுதல் ஆகியவற்றில் ஈடுபாடுடையவராகத் திகழ்ந்த போதிலும் மாவை முத் தமிழ் கலைமன்றத்தில் இணைந்து நாடகத்துறையில் ஆற்றல் பெற்றதுடன் அம்மன்றத்தின் அங்கத்தவராக இருந்து மன்ற வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர். காங்கேசன் சீமெந்துத்தொழிற்சாலை நாடகக் கலாமன்றத்தின் பொருளாளராகப் பணியாற்றியதுடன் பல்வேறு நாடகங் களில் நடித்தது மட்டுமல்லாது தயாரித்து,நெறிப்படுத்தி மேடையேற்றிய வர்.மேலும் நடிகமணிவீ.வீ.வைரமுத்து அவர்களின் நெறிப்படுத்தலில் பூதத்தம்பி என்னும் நாடகத்தில் அட்மிரல் அன்ரோனி என்ற பாத்திரத்தில் நடித்து பலரது பாராட்டையும் பெற்றவர். காங்கேசன் நாடக மன்றத்தின் வெள்ளிவிழாவினை(1986-06-25)பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களது தலைமையில் நடத்தி வெளிவிழா மலர் ஒன்றினையும் வெளியிட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**சின்னத்துரை ஆனந்தராஜா**



1953.07.11 ஆம் நாள் காங்கேசன்துறை என்னும் இடத்தில் பிறந்தவர்.26 வருடங்களுக்கு மேலாக நாடகம் எழுதுவதிலும் நடிப்பதிலும் அனுபவம் உடை யவர். கூத்து அண்ணாவியாரான சின்னையாவின் பேரனான இவர் நடிகமணி வைரமுத்துவுடன் இணை ந்து அவரது நாடகங்களில் நடித்தவர். அத்துடன் சாம்பிராட் அசோகன், வீர பாண்டிய கட்டப்பொம்மன் முதலிய நாடகங்கள் இவருக்குப் புகழைப் பெற்றுக் கொடுத்தன.

**சங்கரப்பிள்ளை சிவானந்தராசா**



1958.07.09 ஆம் நாள் மாவிட்டபுரம் தெல்லிப்ப ளையில் பிறந்து எழுபாவோடை எட்டாம்கட்டை மல்லாகம் என்னும் முகவரியில் வசித்து வருகின்றார். நாடகம், பட்டிமன்றம் முதலியகலைகளில் சிறப்பான ஆற்றல் உடையவர். 1980 களில் இருந்து இக்கலையில் ஈடுபட்டு வருகின்றார். மாவைகிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் அரங்கேற்றப்பட்ட பல நாடகங்களில் நடித்தவர். தற்பொழுது இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றி வருகின்றார்.

## கனகசபை காராளசிங்கம்



1959.08.22 ஆம் நாள் பன்னாலை தெல்லிப்பளையில் பிறந்தவர். நாடகம், நாட்டார்பாடல், கரகாட்டம்,ஆகிய கலைத்துறைகளில் முப்பதுவருடஅனுபவம்உடையவர். ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் நடைபெறும் விழாக் களில் அரங்கேற்றப்படுகின்ற நாடகங்களில் முக்கிய பாத்திரங்கள் ஏற்றுநடித்தவர். தாயுமாய் நாயுமானார் இவருக்கு புகழ் பெற்றுக் கொடுத்த நாடகம். கரகாட்டக்கலையில் மிகச் சிறந்த ஆற்றல் உடையவர். நாட்டார் பாடல் வரிசையில் ஒப்பாரிப் பாடல்களை பாடுவதில் சிறப்பான ஆற்றலும் அதனைப் பேணுவதிலும் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றார். தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரியில் ஆசிரியராகக் கடமை யாற்றி தற்பொழுது தந்தைசெல்வா தொடக்க நிலைப்பள்ளியின் அதிபராக கடமையாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சின்னப்பொடி ஐயாத்துரை



1946.02.07ஆம் நாள் மயிலிட்டி வடக்கு வசாவிளான் என்னும் இடத்தில் பிறந்தவர். தற்பொழுது தற்காலிக மாக அளவெட்டி கிழக்கு மணற்புலம் என்னும் முகவரி யில் வாழ்ந்து வருகின்றார். நாடகம் நாடகத்திற்கான ஒப்பனை, நாடகத்திற்கான மேடைஅமைப்பு போன்ற கலைத்துறைகளில் செயற்பட்டு வருகின்றபோதிலும் ஒப்பனை மேடை அமைப்பு, போன்ற துறைரீதியாகவே இவர் பிரகாசித்திருக்கின்றார். மயிலிட்டியில் அமைக்கப்பெற்ற சிவசக்தி நாடமன்றத்தினூடாக இலங்கே ஸ்வரன், தேசிங்குராசன் போன்ற நாடகங்களை அரங்கேற்றியவர். இன்று யாழ்ப்பாணத்தில் அரங்கேற்றப்படுகின்ற நாடகங்களுக்கான ஒப்பனை,மேடை அமைப்புக்களான திரை,பக்கத்தட்டிகள், மேடைப் பொருட்கள் போன்ற பல விடயங்களையும் தொழில் ரீதியாக செயற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவரது இத்தகைய பணிகளைப் பாராட்டி வலிகாமம் வடக்கு கலாசாரப்பேரவை கலைச்சுடர் விருது வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

### சங்கரப்பிள்ளை தயானந்தன்




1962.05.31ஆம் நாள் சாயுடை மாவிட்டபுரம் என்னும் இடத்தில் பிறந்தவர்.தற்பொழுது தற்காலிகமாக ஐயனார் கோவிலடி கொக்குவில் மேற்கில் வாழ்ந்து வருகின்றார். நாடகம், வில்லிசை, கும்மி, கோலாட்டம் ஓவியக்கலைகளில் சிறந்த ஆற்றல்லுடையவர். மார்க்கண்டேயர், திருவிளையாடற்காட்சிகள், மகுடபங்கம் போன்ற நாடகங்கள் இவருக்குப்புகழைப் பெற்றுக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் ஓவிய ஆசிரியராக பயிற்சி பெற்றவர்.

### திருமதி வினோதினி ஸ்ரீமேனன்



1973-07-30 ஆம் நாள் பன்னாலை தெல்லிப்பளை என்னும் முகவரியில் பிறந்தவர்.தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் கல்வி கற்றகாலத்தில் பேச்சு, சமய அறிவுப் போட்டிகளில் நான்கு தங்கப்பதக்க விருதுகளைப் பெற்றவர். கலைப்பட்டதாரியான இவர் நாடகக் கலையில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகின்றார். தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையில் நாடகவழி உளநலசிகிச்சையாளராக நீண்டகாலம் பணியாற்றியவர். 1999ஆம் ஆண்டு தேசிய இளைஞர்கள் சேவை மன்றத்தினால் நடத்தப்பட்ட தனிநடிப்புப் போட்டியில் ஜனாதிபதி விருது பெற்றவர். நாடக எழுத்தாளராகவும், நெறியாளராகவும், நடிகராகவும் செயற்பட்டு வருகின்றார். தற்பொழுது யாழ்ப்பாண மாவட்டத்தின் மாவட்ட இளைஞர்சேவை அதிகாரியாகக் கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

### திருமதி மலர்விழி கங்காதரன்




1974-11-08 ஆம் நாள் கிராமசபை வீதி,மயிலிட்டி, காங்கேசன்துறையில் பிறந்தவர். தற்பொழுது தற்காலிகமாக தெல்லிப்பளையில் வாழ்ந்து வருகின்றார். தெல்லிப்பளை சோலைக்குயில் அவைக்காற்றுக் களத்தில் மாணவியாக இணைந்து நாடகத்துறையில் நல்ல நடிகையாக மிளிர்ந்தவர்.வடஇலங்கை சங்கீதசபையின் ஆசிரியர் தராதரப் பரீட்சையில் சித்திபெற்றவர். முதுசம், முயலார் முனைகிறார், வான்விழிம்பில் நட்சத்திரம், கோவலன்கண்ணகி, நிலவு, பாதம் ஆகிய நாடகங்களை நெறியாள்கை செய்ததுடன் நடித்துமுள்ளார்.

### கணேசன் சந்திரகுமார்



1978.01.18 ஆம் நாள் காங்கேசன்துறை மயிலிட்டியில் பிறந்தவர்.சுன்னாகம் அவைக்காற்றுகைக் குழுவினால் அரங்கேற்றப்பட்ட ஷேக்ஸ்பியரின் அவலச்சுவை நாடகங்களில் முக்கியகதாபாத்திர மேற்றுநடித்தவர்.மேச்சன் ஒவ் வெனிஸ் நாடகத்தில் மோரொக்கோ இளவரசனாகவும்,நீதிமன்ற எழுதுனராகவும் கம்லெட்டில் போலோனியஸ் ஆகவும் ஒதெல்லோவில் ஒதெல்லோவாகவும் பாத்திரமேற்று நடிப்பாற்றலை வெளிப்படுத்தியவர். மேலும் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் தமிழ்த்தினப் போட்டி நாடகங்களிலும் பங்காற்றியவர். தற்பொழுது மன்னார் சித்திவிநாயகர் கல்லூரியில் சித்திரஆசிரியராக பணியாற்றி வருவதுடன் இப் பிரதேசத்தில் நாடகமும் அரங்கியலும் மாணவர்களுக்கான கற்பித்தலையும் செய்முறைப் பயிற்சிகளையும் வழங்கி வருவதுடன் தமிழ் ஆங்கில நாடகங்களை அரங்கேற்றியும் பாடசாலை மட்டத்தில் தயாரிக்கப்பட்ட நாடகங்கள் தேசியமட்டப் போட்டிகளில் முதலாமிடத்தினைப் பெற்று சாதனை படைத்தவர் என்பதும் குறிப்பிடத் தக்கது. சித்திரமும் வடிவமைப்பும் பட்டதாரியான இவர் சுன்னாகம் அவைக்காற்றுகைக் குழுவின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவராக செயற்பட்டு வருகிறார். திரு.மா. அருள்சந்திரனிடம் நாடகஅரங்க அறிவினையும் நுட்பங்களையும் செய்முறைப் பயிற்சிகளையும் பெற்றுக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### பரம்சோதி கேதீஸ்



1979.07.18 ஆம் நாள் கோவில்வீதி மல்லாகம் என்னும் முகவரியில் பிறந்தவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நாடகமும் அரங்கியலும் சிறப்புப் பட்டதாரியான இவர் நடனம்,சொல்லாடல், ஓவியம், கிராமியக்கலை, திரைப்படம் ஆகிய கலைத்துறைகளில் முனைப்புடன் செயற்பட்டுவரும் இளம் கலைஞராவார். சுன்னாகம் அவைக் காற்றுகைக் குழுவினரால் தயாரிக்கப்பட்ட ஒதெல்லோ,கம்லெட்

ஆகிய நாடகங்களில் முக்கிய பாத்திரங்கள் ஏற்று நடித்தவர். ஹம்லெற்றில் ஹம்லெற்றாக பாத்திரமேற்று தனது நடிப்பாற்றலை வெளிப்படுத்தியவர். யாழ் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறை அரங்கியல் மாணவனாக இருந்த பொழுது அரங்கேற்றப்பட்ட அனைத்து நாடகங்களிலும் பங்கேற்றவர். அத்துடன் குறும் திரைப்படங்களிலும் நடித்தவர். மா.அருள்சந்திரன்,விரிவுரையாளர் க.ரதிதரன்,யாழ்ப்பாண தமிழ்நாடக மூலவேர் குழந்தை ம.சண்முகலிங்கம் ஆகியோரிடம் நடிப்பு தொடர்பான பயிற்சிகளையும் அரங்கியல் நுணுக்கங்களையும் கற்றுக்கொண்டவர்.

### அன்ரனி பிரசன்னா



1979.04.12 ஆம் நாள் காங்கேசன்துறையில் பிறந்து தற்பொழுது கோணாவளை வசாவிளானில் வாழ்ந்து வருகின்றார். சுன்னாகம் அவைககாற்றுகைக் குழுவினால் அரங்கேற்றப்பட்ட ஷேக்ஸ்பியரின் அவலச் சுவை நாடகங்களில் முக்கிய கதாபாத்திரமேற்று நடித்தவர். மேச்சன்ஒவ்வெனிஸ் நாடகத்தில் அன்ரோனியோவாகவும், கம்லெட்டில் கிளாடியஸ் ஆகவும் ஒதெல்லோவில் இயாகோவாகவும் பாத்திரமேற்று நடிப்பாற்றலை வெளிப்படுத்தியவர். மேலும் தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரியின் தமிழ்த்தினப் போட்டி நாடகங்களிலும் பங்காற்றியவர்.பொருளியல் சிறப்புப்பட்டதாரியான இவர் சுன்னாகம் அவைக் காற்றுகைக் குழுவின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவராக செயற்பட்டு வருகின்றார்.

### தவராசா அருள்குமரன்



தெல்லிப்பளை,காங்கேசன்துறையை நிரந்தர இடமாகவும்,சக்தி வாசா" கோவில் வீதி, மல்லாகத்தை தற்காலிக இடமாகவும் கொண்டவர். தனது ஆரம்பக் கல்வியை தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளி தெல்லிப்பளையில் கற்றார். உயர்கல்வியை யாழ்/ யூனியன் கல்லூரி, தெல்லிப்பளையில் கற்றார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் சிறப்புப்பட்டதாரியான இவர் நாடகமும் அரங்க்கலைகளும் இவரது நாடக எழுத்துருக்களான காட்சி, வறுமையின் வெறுமை,

மௌனவலி, பெண் வாழ்வின் தரிசனங்கள், முயற்சி, புரிதல், காலத்தின் விடியல்கள் என்பனவாகும். அத்துடன் காட்சி, வறுமையின் வெறுமை, மௌவலி, பெண் வாழ்வின் தரிசனங்கள், முயற்சி, புரிதல், காலத்தின் விடியல்கள் என்பவற்றை நெறியாள்கை செய்தார். இவர் செவ்விளக்கு, தெருவெளி அரங்குகள், விடம், அன்பமுதூறும் அயலார், மூடி, பாடுகள் சுமந்தவர் புழுதியில் கிடக்கிறார், சிகப்பு விளக்கு, களவு, நாடகம் நடிக்கலாம் வாங்க என்பவற்றோடு, குறும் படங்களான கால், மனிதம் - பின்னணிக்குரல் போன்றவற்றில் நடித்தவர்.

**தவராசா குமரன்**



பளை தெல்லிப்பளை,காங்கேசன்துறை என்னும் இடத்தில் பிறந்தவர் தற்பொழுது சக்திவாசா, கோவில் வீதி, மல்லாகம் என்னும் முகவரியில் வசித்து வருகின்றார்.தொடக்க நிலைப்பள்ளியிலும் பின்னர் யாழ்/ தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் கற்று யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கக் கலைகளும் என்ற கற்கை நெறியில் சிறப்புக் கலைமாணி பட்டம் பெற்றவர். சைவப்புலவர் சைவ சித்தாந்த பண்டிதர் சிந்தை தெளிவாக்கு, கனவாகிய கனவுகள், முயற்சி, புரிதல், வண்டித்துரை, ஈரம் சுரக்காத மண், களவு, சிறுதுளி போன்ற நாடக எழுத்துருவின் ஆசிரியராகவும் சிறுதுளி வானொலி நாடகம் சிந்தை தெளிவாக்கு, கனவாகிய கனவுகள், முயற்சி, புரிதல், வண்டிகைத்துரை, ஈரம் சுரக்காத மண், பொன்முடி, கனவு, கனவு மெய்ப்பட வேண்டும், கற்றலின் பயன் நாட்டிய நாடகம் ஜெயதேவி நாட்டிய நாடகம் ஆட்கொல்லி புதிய வாழ்க்கை நீண்ட பிரயாணம் போன்ற நாடகங்களின் நெறியாளராகவும் செயற்பட்டவர். நாட்டவன் நகர வாழ்க்கை தெருவெளி நாடகம் என்ற நாடகத் தயாரிப்பில் உதவி நெறியாளராகவும் பணியாற்றியவர். செவ்விளக்கு, விடம். அன்புதோறும் அயலவர், களவு, நாட்டவன் நகரவாழ்க்கை, பாடுகள் சுமந்தவர் புழுதியில் கிடக்கிறார், நீண்ட பயணம் புதிய வாழ்க்கை, ஆட்கொல்லி, சிவப்பு விளக்கு, சத்தியவான் சாவித்திரி ஆகிய நாடகங்களில் நடிகராகவும் கால் ,குறும்படம் மனிதம், குறும்படம் - பின்னணிக்குரல் ஆகியவற்றில் பங்கேற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அண்ணாவியார் வயித்தி யாக்கோபு



1890.07.07 ஆம் நாள் மல்லாகம் குளமன்கால் என்னும் இடத்தில் பிறந்தவர் பரம்பரைக் கலைஞராகிய இவர் நாட்டுக்கூத்து, ஆர்மோனியம்,மிருதங்கம் ஆகிய கலைகளில் ஆற்றல் உடையவர் கத்தோலிக்கப் பாரம் பரியமுடைய கூத்துக்களை நடித்தும் அரங்கேற்றியும் கூத்துக் கலையின் வளர்ச்சியில் கால் பதித்தவர்.நீண்டகாலம் திருகோண மலையில் வாழ்ந்தவமையால் திருமலையிலும் அதன் புறநகர்ப்பகுதி களிலும் பிரபல்யம் பெற்றிருந்தவர் ஞானசவுந்தரி கருங்குயில் குன்றம், எஸ்தாக்கியர், புனிதபிலோமினால் போன்ற கூத்துக்களின் அண்ண வியாராக தொழிற்பட்டு மேடையேற்றியவர். இவரது பாரம்பரியத்தில் வந்தவர்தான் இன்றைய நாடக, சிற்பக்கலைஞர் ஏ.வீ. ஆனந்தன் என்பது குறிப்பிடத்தக்கது. 1970 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தவர்.

## தம்பையா செல்லையா



1892.05.04 ஆம் நாள் கீரிமலையில் பிறந்தவர்.சிறந்த மரபுவழி நாடகக் கலைஞர். 1950ஆம் ஆண்டு கால கட்டங்களில் வாழ்ந்த அண்ணாவியாரவர்கள் பலதரப் பட்ட புராண,சரித்திர நாடகங்களை மேடையேற்றிய பெருமைக்குரியவர். இளவாலை மெய்கண்டான் வித்தி யாசாலையில் பண்ணிசை ஆசிரியராகவும், கோவில்களில் பண்ணி சைக் கச்சேரி நடத்துவதிலும் பெரும் புகழ்பெற்றவர். அயலூரான இளவா லையில் பெரும் பணக்காரன் பாலி அடைப்பானையும் அவர் காவலா ளர்கள் இருவரையும் பணத்திற்காகக் கொலை செய்த நிகழ்வினை யாழ் நகர் கோரச்சிந்து என்னும் முக்கொலை இலக்கியமாகப்பாடி நூலாக்கம் செய்து மேலும் பெரும்புகழ் பெற்றார். மேலும் யுத்த முழக்கமும் ஊரவர் கலக்கமும் என்ற இலக்கியத்தினையும் பாடியவர். சிறுத்தொண்டர், சத்தியவான் சாவித்திரி, பூதத்தம்பி,ஸ்ரீவள்ளி போன்ற நாடகங்களை மேடையேற்றி நடித்தவர். இவரது மகன் பொன்னுச்சாமி என்பவர் மிகச்சிறந்த நாடகநடிகராகவும், ஆர்மோனிய வித்துவானாகவும் பெரும் புகழ் பெற்றிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. 1980.11.15 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

## கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை



1925.05.15ஆம் நாள் குரும்பசிட்டியில் பிறந்தவர். நாடகக்கலையில் தீவிர செயற்பாட்டாளர். சிறுவர்நாடகம் மற்றும் மரபு வழிசார் கற்பனை நாடகங்களிலும் ஈடுபட்டவர். காவடிக் கலையினை தாளக்காவடி என்ற பெயரில் நாடக அரங்கில் கொண்டு வந்தவர். மயில், இறுதிப்பரிசு, கூப்பிய கரங்கள்,பக்திவெள்ளம், போன்ற நாடகநூல்களையும், அரங்கக்கலை ஞர்ஜவர், அரங்குகண்ட துணைவேந்தர், கலையுலகிற் கால்நூற் றாண்டு முதலான வரலாற்று நூல்களையும் ஆக்கியவர். காங்கேசன் துறை நடேஸ்வராக் கல்லூரியின் வாழ்க்கைக் காலத்தில் பலநாடக தீவிர செயற்பாட்டாளர்களை உருவாக்கியவர். குரும்பசிட்டி சன்மார்க்கசபை யின் மூலவேராய் நின்று யாழ்ப்பாணத்து நாடகக் கலையின் வளர்ச் சிக்குப் பெரும்பங்காற்றியவர். நாடகப்பிரதி எழுதுதல், நாடகங்களைத் தயாரித்தல், இயக்குதல், நடித்தல், நாடகம் பற்றிய ஆய்வுரைகள் நிகழ்த் துதல், கட்டுரைகள், விமர்சனங்கள் எழுதுதல், நவீன நாடக முறைகளை உள்வாங்குதல், நடிப்புத்துறையிற் புதிய உத்திகளை ஏற்படுத்துதல், களப் பயிற்சிகளை ஏற்படுத்துதல் முதலான சகல துறைகளிலும் கலைப்பேரரசு பங்களிப்பு செய்தவர். பிரபலமான நடிகர்களோடு சேர்ந்து நடித்தது மட்டு மன்றி பன்னூற்றுக்கணக்கான புதிய நடிகர்களையும் உருவாக்கியவர். பாடசாலை வாழ்க்கையிலே கலையார்வம் மிக்கவராகக் காணப்பட்ட இவர் மகாதேவாவித்தியாசாலையில் 1945 இல் அல்லி அருச்சுனா என்ற இசை நாடகத்தில் நடித்தன்மூலம் கலை வாழ்வில் புகுந்தவர். வசா விளான் மகாவித்தியாலயத்தில் பக்ததுருவன், பரமேஸ்வராக் கல்லூரி யில் லோபியின்காதல் போன்ற நாடகங்களில் நடித்தவர். 1951-1955 காலப்பகுதியில் சென்னை கிறீஸ்தவக்கல்லூரியில் பீ.ஏ.பட்டப் படிப்பை மேற்கொண்ட காலத்தில் இவரது நாடகப்பயில்வு மெருகூட்டப் பெற்றது. அங்கு முதலாளி, குவேனி, ராகிமைடியர் போன்ற நாடகங்களைத் தயாரித்து நடித்து பெரும் பாராட்டுதல்களைப் பெற்றுக் கொண்டவர்.

குரும்பசிட்டி சன்மார்க்கசபை இவரது நாடக ஆர்வத்திற்கு ஏற்ற தளமாக அமைந்தது.1951 இல் தனது கன்னிப் படைப்பான விதியின்சதி என்ற நாடகத்தை எழுதி,தயாரித்து, நடித்து மேடையேற்றினார். பின்னர் தாகம், இருமனம் என்பவற்றினையும் மேடையேற்றினார். 1961 ஆம் ஆண்டு அரங்கேற்றிய நிறைகுடம் என்ற நாடகம் நாட்டின் பல பகுதிகளிலும் இருபத்தைந்து தடவைகள் மேடையேறியது. அண்டல் ஆறுமுகம் என்ற நாடகம் இருபதுதடவைகள் மேடையேறியது. இவர் கற்பித்த பாடசாலை களான நடேஸ்வராக்கல்லூரி, கல்கிசை முஸ்லீம் மகாவித்தியாலயம், இராகலை தமிழ் இந்து மகாவித்தியாலயம் ஆகியவற்றிலும், மாவை முத்தமிழ் மன்றம் போன்றவற்றிலும் பல நாடகங்களைத் தயாரித்தும், களப்பயிற்சிகள் வழங்கியும் புதிய நடிகர்களை உருவாக்கியும் சென்ற இடமெல்லாம் கலை எழுச்சியை ஏற்படுத்தியவர். மரபுவழி நாடகங்களில் மட்டுமன்றி நவீன நாடகங்களிலும் மிகுந்த ஈடுபாடு காட்டியவர். கலாநிதி மௌனகுருவின் சங்காரம், திரு.தார்சீசியசின் பொறுத்தது போதும், மகாகவியின் கோடை போன்ற நாடகங்களிலும் நடித்து நல்ல நடிகராக உயர்ந்தவர். பிற்காலத்தில் தனிநடிப்புப் போட்டி யொன்றினை ஏற்பாடு செய்து பெறுமதியான பணப்பரிசில்களை தனது சொந்தப் பணத்திலிருந்து வழங்கி இளந்தலைமுறையினரை ஊக்கு வித்த பெருமைக்குரியவர். இவரால் எழுதப்பெற்றுத்தயாரித்து நடித்த நாடகங்களாக விதியின்சதி, முதலாளி தொழிலாளி, குவேனி, ராகிமைடியர், இருமனம், பகையும் பாசமும், நிறைகுடம், பண்பின்சிகரம், பாசக் குரல், செங்கோல்சரிந்தது, அண்டல்ஆறுமுகம், பிற்பகலிலே, இறுதிப் பரிசு, நாடகம், பஞ்சபூதங்கள், காதல்கைநட்டம், ஆயிரத்தில் ஒருவர், தாளக்காவடி போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவரது சேவையைப் பாராட்டி இலங்கை அரசின் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 1999 இல் கலாபூஷணம் விருது வழங்கிப் பெருமைப்படுத்தப்பட்டவர். மேலும் சாகித்திய மண்டலப் பரிசினையும் பெற்ற வலிகாமம் வடக்கின் மறைந்த மூத்த அரங்கிய லாளர் என்பது குறிப்பிடத்தக்கது. 2003-10-09 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

சின்னர் செ[illegible]ராசா



1928.04.10 ஆம் நாள் தெல்லிப்பளையில் பிறந்தவர். தாளக்காவடி, நடனம், கும்மி, நாடகம் ஆகியவற்றுடன் மிருதங்கம், ஆர்மோனியம் வாசிப்பதிலும் ஆற்றல் பெற்றவர். நாட்டுக்கூத்து அண்ணாவியாராக இருந்து பல கூத்துக்களை அரங்கேற்றியவர். கலைச்சுடர் விருது, கலை ஞானகேசரி ஆகிய விருதுகளைப் பெற்றவர். 2006.06.11 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

கார்த்திகேசு சோமசுந்தரம்




1929.06.17 ஆம் நாள் தெல்லிப்பளை வீமன்காமத்தில் பிறந்த இவர் சிறந்த நாடகவியலாளர் ஷேக்ஷ்பியரின் நாடகங்களை தமிழில்மொழி பெயர்த்து அரங்கேற்றியவர். இவரை எல்லோரும் ஒதெல்லோ சோமர் என அழைப்பது வழக்கம். ஆங்கில நாடக இயக்குனராகவும் நடனநாடக ஆசிரியராகவும் இயக்குனராகவும் தமிழ்நாடக அரங்க வரலாற்றில் இவர் ஆற்றியபங்களிப்பு முக்கியத்துவமுடையது. நாடகத் துறையில் சாதனைகள் பல புரிந்து, தனது ஆற்றல்களைக் கல்லூரிமாண வர்கள், ஆசிரிய கலாசாலைப் பயிலுநர் ஆசிரியர்கள், மற்றும் நாடகமன்ற உறுப்பினர்கள் எனப் பல தரத்தினருக்கும், தளரா ஊக்கத்துடன் ஊட்டி உவகை எய்திய பண்பாட்டாளன் - நாடகக் கலைஞன். ஷேக்ஸ்பியரை மானசீக நாடகக் குருவாக வரித்துக் கொண்ட கலைஞன். கல்லூரி ஆசிரி யனாக, ஆசிரிய பயிற்சிக்கலாசாலை ஆங்கில விரிவுரையாளனாக, கல்வியதிகாரியாக கல்வித்துறையில் பணிபுரிந்தார்.உத்தியோக ரீதியில், கல்வித்துறையே இவர் தேர்ந்தெடுத்த துறையெனினும், நாடகம் என்றதும் தனி ஈடுபாடும், தியாகநோக்கில் தொழிற்பாடும், ஒருவித வெறி நிலையில் அதே சிந்தனையில் மூழ்கும் சுபாவமும் கொண்டவர். இவரது தந்தை கந்தப்பு கார்த்திகேசு நாடக ஆர்வலராக மிளிர்ந்தமையினால், படிப்பு பண்பாட்டுடன் நாடகத்தின் அருமை பெருமைகளை மைந்தனுக்கு புகட்டியுள்ளார். 2006.08.25 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

## வன்னித்தம்பி வைரவப்பிள்ளை



1937.10.02 ஆம் நாள் 10 ஆம் கட்டை வீதி மாவிட்ட புரம் தெல்லிப்பளையில் பிறந்தவர். சிறுபராயத்தில் இருந்து நடிப்புத்துறையில் தன்னை அர்ப்பணித்து வந்தவர். நாடகத்துறை மட்டுமன்றி இசைத்துறை, சொல்லாடல், கிராமியக்கலை, கூட்டுப் பிரார்த்தனை, வில்லுப்பாட்டு போன்ற துறைகளிலும் ஈடுபட்டு வாழ்ந்தவர் தன்னுடைய நடிப்பாற்றலை ஆலயங்கள்,நாடகமேடைகளில் வெளிப்படுத்தியவர். பாடசாலைகளில் மாணவர்களுக்கு நாடகம் முதலான பல்வேறு கலைகளை பயிற்றுவித்ததோடு நிகழ்வுகள், விழாக்கள் என்பவற்றிற்கு மட்டுமன்றி போட்டிகளுக்கும் மாணவர்களைத் தயார்படுத்தி பல வெற்றி களையீட்டியவர். மாவை முத்தமிழ் கலாமன்றத்தில் முக்கியமான பல பொறுப்புக்களை வகித்ததோடு நாடக ஆற்றுகைகளிலும். மாவை மத்திய சனசமூக நிலையத்தில் முக்கிய பொறுப்புக்களை வகித்தது மட்டு மல்லாமல் அம்மன்றத்துப் பிள்ளைகளுக்கு தொடர்ச்சியாக நாடகப் பயிற்சிகளையும், அது தொடர்பிலான அறிவினையும் ஊட்டிய நாடகப் புலமையாளர் என்பது குறிப்பிடத்தக்கது. மகுடபங்கம். ஏனிந்த அவலம். இயமலோகத்தில் ஸ்ரைக், இவரது நாடகங்களாகும். இவரது சேவை யைப்பாராட்டி வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவை கலைச்சுடர் விருது வழங்கி கௌரவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 2007.05.28 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

## கந்தசாமி கணபதிப்பிள்ளை



1947.10.27 ஆம் நாள் குரும்பசிட்டியில் பிறந்து கனடாவில் வசித்து வந்தவர். சிறந்த நாடகக்கலைஞர். இவர் காங்கேயசபதம் ஜீவமணி, கோமகளும்குல மகளும், அம்பையின்வஞ்சம் போன்ற நாடகங்களில் சிறப்பாக நடித்து பலரது பாராட்டையும் பெற்றவர் இவர் குரும்பசிட்டி ஆ.சின்னத்துரை அவர்களின் இயக்கத்தில் "கற்பரசி நளாயினி" என்னும் நாட்டுக்கூத்தில் நளாயினியாக வேடமிட்டு முதன் முதலாக நடித்தார்.பின்பு நாட்டியக் கலைஞர் வேல் ஆனந்தனின்

இயக்கத்தில் பிரதான வேடமேற்று நடித்த "புலித்தேவன்" நாடகம் மன்னார் நாடக விழாவில் முதற்பரிசு பெற்றது. இவர் கதாநாயகனாக நடிக்கும் குரும்பசிட்டி உதயதாரகை மன்றத்தால் தயாரிக்கப்பட்ட "இதய ஒளி" என்னும் நாடகம் யாழ் மாவட்டத்தில் பல பாகங்களிலும் மேடை யேற்றப்பட்டது. குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலையம், சன்மார்க்க இளைஞர் மன்றம் ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட இலட்சிய வேட்கை, குடும்பம் ஒரு கோயில்,நெஞ்சு பொறுக்குதில்லை, போன்ற நாடகங் களிலும் முக்கிய வேடமேற்று நடித்தார். காங்கேயன் சபதம் (1965), ஜீவ மணி (1966), சாதனை சோதனை (1967), கோமகளும் குலமகளும் (1968), குருதட்சனை (1969) என்பன இவர் நடித்த பாடசாலை நாடகங் களாகும். . 2006.03.10 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

**பொன். கணேசமூர்த்தி**



1950.02.06 ஆம் நாள் காங்கேசன்துறையில் பிறந் தவர். நாடகம், கவிதை, இசை, திரைப்படம், நூலாக்கம், பத்திரிகை, நாவல் எனப் பலதுறை ஆற்றலுடைய வராகவும் நாடகக்கலையில் தன் வாழ்வை அதிகளவில் அர்ப்பணித்தும் வாழ்ந்தவர்.1965 ஆம் ஆண்டிலிருந்து காங்கேசன்துறை இளந்தமிழர் மன்றத்தினூடாக தனது கலைப் பயண த்தை ஆரம்பித்தவர்.நாடகத்துறையில் எழுத்தாழராகவும், நெறியாளரா கவும், நடிகராகவும்,பாடகராகவும் செயற்பட்டவர். சந்தனக்காடு, சகுனியர மூவர், மனுவிலங்குபோன்ற நாடகங்களுடன், சீதன அம்புகள் என்னும் நாட்டிய நாடகத்தையும் எழுதியவர்.இவரது சந்தனக்காடு நாடகம் யாழ்ப் பாணத்தின் மூலை முடுக்கெல்லாம் அரங்கேறியமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் மனுவிலங்கு என்ற நாடகம் 2004 ஆம் ஆண்டு தேசிய நாடக விழாவில் ஜோன் டீ சில்வா அரங்கில் மேடையேற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. மேலும் வானொலிக்காக நூறிற்கும் மேற்பட்ட நாடகப் பிரதிகளை எழுதியவர். திரைப்படத்துறையில் ஆர்வமுடையவராக இருந்த போதிலும் குறும் படங்களிலேயே அதிகளவில் செயற்பட்டவர். அந்த வகையில் இவரால் எழுதி நெறிப்படுத்தப்பட்ட முழுவதும் என்ற குறும்படம் குறிப்பிடத்தக்கது. அனல்பறக்க கவிபாடும் வல்லமை பெற்ற

இவர் பல்வேறு கவி அரங்குகளில் தலைமைக் கவிஞ்ஞனாக அமர்ந்து தனது சிம்மக்குரலால் கவி அரங்குகளை சிறப்படையச் செய்யும் ஆற்றலு டையவர். பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும், கவியரங்குகளிலும் பாடிய கவிதைகளைத் தொகுத்து பல்வேறு நூல் வடிவங்களில் வெளியிட்டுள்ள பெருமைக்குரியவர். அந்தவகையில் எழுக, எடுக்கவோ தொடுக்கவோ, துளித்துளி வைரங்கள், விடுதலைக்காவியம் போன்ற கவிதை நூல்களை எடுத்துக் கூறலாம். வலிகாமம்வடக்கு கலாசாரப் பேரவையின் கலாசார விழாக்களில் நடத்தப்பட்ட பல கவியரங்குகளிலும், பட்டிமன்றங்களிலும் தலைமையாசானாய் அமர்ந்து விழாச்சிறப்பின் பங்காளனாய் நின்றவர். ஈழத்துநாவலிலக்கியத்துறையில் இவருக்கும் முக்கிய இடமுண்டு. இவரால் எழுதப்பெற்ற தூரம்தொடுவானம், துளித் துளியாய், இலங்கை மண் போன்ற நாவல்கள் குறிப்பிடத்தக்கனவாகும். இவையாவும் நூல்வடிவில் வெளியிடப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத் தக்கது. இவருடைய தனி முயற்சியாக 1970 ஆம் ஆண்டிலிருந்து வெளிவந்த குமுறல் என்ற பத்திரிகையும் ஈழத்துப் பத்திரிகைத் துறையில் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.தமிழ் அபிமானியாக வாழ்ந்த இவர் தனது புதல்வர்களினது திருமணச்சடங்குகளை தமிழ்முறைப்படி நடத்தி தமிழைப்பேணிய அறிஞர். 2006.08.04 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

### வி.எம். குகராஜா



1951.02.17 ஆம் நாள் திடற்புலம் வசாவிளானில் பிறந்தவர். நாடகக்கலையில் நாடக அரங்கக்கல்லூ ரியுடன் இணைந்து செயற்பட்ட நாடகக் கலைஞன். நாடக ஆசிரியனாக, நடிகனாக, தயாரிப்பாளனாக, நெறி யாளனாக எனப்பல வகிபாகங்களை உடையவர். மேடை, வீதி, வானொலி, குறுந்திரைப்படம் ஆகியவற்றிற்கான பிரதி களை எழுதுவதிலும் ஆற்றலுடையவர். நவீன நாடக எண்ணக்கரு வினடிப்படையில் பல நாடகங்களை அரங்கேற்றியவர். அந்தவகையில் குமணன், படலைதிறக்கிறார்கள், விலைபோகாதகலை, அவளேன் கலங்குகிறாள், பொழுதொன்று புலராதோ, புதியசுவர்கள், பங்காளிகள்,

மனிதனும் மிருகமும் போன்ற நாடகங்களை அரங்கேற்றியவர் இவற்றில் மனிதனும் மிருகமும், அவளேன்கலங்குகிறாள் ஆகிய நாடகங்கள் வானொலியில் தொடர் நாடகங்களாக ஒலிபரப்பப்பட்டமையும், புதியசுவர்கள் என்ற நாடகம் 1980 களில் இலங்கை ரூபவாஹினி தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. யாழ்ப் பாணத்தில் முதன் முதலாக வீதி நாடகத்தினை அறிமுகம் செய்தவராகவும் அந்தவகையில் மக்களின் எதிரி, பாராயோபாரதமே, கசிப்பு ஆகிய வீதி நாடகங்களையும் தயாரித்தளித்தவர். இணுவிலில் அமைந்திருந்த காலிங்கன் திரை அரங்கினில் மக்கள் கலையரங்கம் என்ற நிறுவனத்தினூடாக நாடகக்களப்பயிற்சிகளையும், அரங்கியல் சார்ந்த அறிமுறை அறிவுகளையும் நாடக ஆர்வலர்களுக்கு பயிற்சியளித்தவர். இவரால் தயாரிக்கப்பெற்ற சிலந்திவலை, கதையிதுதான், தியாகங்கள் ஆகிய வீடியோத்திரைப்படங்களும் குறிப்பிடத்தக்கன. அத்துடன் பாடல்கள், கவிதைகள், கதைகள் எழுதுவதிலும் புலமை மிக்கவர். இவர் எழுதிய தென்றல் வீசும் மாலை நேரம், தேனாய் இனிக்கு தம்மா என்ற மெல்லிசைப் பாடல் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. நாடக அரங்கக்கல்லூரியின் வெளியீடான அரங்கம் என்ற நாடக சஞ்சிகையின் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். கவிஞர். இ.முருகையனின் வெறியாட்டு என்ற நாடகத்தினை நெறியாள்கை செய்தவர்.

" உழைப்போம் எங்கள் வாழ்க்கைக்காக
வாழ்க்கை என்பது சமூகத்திற்காக
நடப்போம் நாங்கள் நேரிய வழியில்
நாளைய உலகம் எங்களுக்காக "

என்ற சிந்தனையோட்டத்தினூடான மானிடநேயத்தை தன் அரங்கில் பேசியவர். மனிதனின் உண்மையான வாழ்வின் இருப்பை அரங்கினூடேதேடியவர். குழந்தை. ம.சண்முகலிங்கம், அ.தார்சீசியஸ், பேராசிரியர் சி.மௌனகுரு, கலாநிதி. க.சிதம்பரநாதன், போன்றவர்களது நாடகத்தயாரிப்புகளில் நடித்தது மட்டுமல்லாது அவர்களுடன் இணைந்து செயற்பட்டவருமாவார்.1987.10.13 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

## கே.கே..வி. செல்லையா



குரும்பசிட்டியை சேர்ந்த இவர் இசைநாடகங்களிலும் வரலாற்று நாடகங்களிலும் தீவிரமாக ஈடுபட்டவர். இவரது படைப்புகள் மூலம் ஆற்றல் உள்ள பல கலை ஞர்கள் உருவாக்கப்பட்டனர். திரைப்படத்துறையில் ஈடுபாடுடையவர். சித்திர. ஓவிய. நிழற்படக்கலைஞரா கவும் வாழ்ந்தவர். தமிழ்ப்பாட விதானத்தில் இவர் வரைந்த ஓவியங்கள் வட இலங்கை தமிழ் நூற்பதிப்பக வெளியீடான பாலபோதினி நூல்களில் K.K.V என்னும் பெயர்களில் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வல்லுநர்களே காமுறும் அளவுக்குத் தனித்துவத்துடன் திகழ்ந்த கே.கே.வி. செல்லையாவை பல்கலை வல்லுநர் எனப் பாராட்டி நின்றது கலையுலகம். 1900 இல் குரும்பசிட்டிக் கிராமத்தை வழிநடத்திய "பெரிய வாத்தியார்" என அழைக்கப்பட்ட பொன்பரமானந்தர் ஒரு கலைஞர். வருடா வருடம் கதாப்பிரசங்கம், நாடகம் என்பன பாடசாலையில் நடத்தப்பட்டு கலை வளர்ச்சிக்குரிய சூழலை உருவாக்கினார். அதில் தோய்ந்த பலர் கல்வியுடன் கலையிலும் பெருவிருப்புக்காட்டினர். இச்சூழல் கே.கே.வி.யையும் பாதித்தது உண்மை. இசைவல்லுநர் செல்லத்துரை, வேலையா போன்றவர்கள் வாழ்ந்த காரணத்தால் குப்பிளான் கிராமத்தில் தமிழிசை மேம்பட்டிருந்தது. கிருஷ்ணலீலா, திருநீலகண்டர் போன்ற இசை நாடகங்கள் அல்லி, அருச்சுனா, பவளக்கொடி, கோவலன், பூதத்தம்பி, கண்டிராசன் என்ற "ஸ்பெசல்" நாடகங்கள் தொடர்ந்து மேடையேறின. சித்திரக் கண்ணோட்டத்தில் கருமங்கள் ஆற்றும் பண்புகளும் குரும்பசிட்டியிலும், அயலூர்களிலும் வளர்ந்திருந்தன. ஆக, சிறுபராயத்தில் "பெரிய வாத்தியார்", கதாப்பிரசங்கி க.கணபதிப்பிள்ளை போன்ற கலை பேணிய ஆசிரியர்களிடம் கல்வி கற்றமை, அயற்கிராமங்களில் ஊடாடிப் பலவற்றையும் அறியாமலேயே உள்வாங்கியதை கே.கே.வி.யின் வல்லமையை வளர்த்திருக்கின்றன பாடவல்ல குரல் வளம் உள்ளவர்கள் தான் இசை நாடகத்தில் பங்கு பற்ற வேண்டிய நிலை. கே.கே.வி. இதனைப் பெரிதும் முக்கியத்துவப்படுத்தி

நடிகர் தேர்வு செய்தார். ஆயினும் "ஸ்பெசல்" நாடகம் போலன்றி அள வாகவே பாடல்களைப் புகுத்தினார். "இசையில் துறைபோகியவனல்ல" என்பதை உணர்ந்த கே.கே.வி. திரு.க.பொன்னம்பலம் ஆசிரியரை இசைப் பயிற்சிக்கு அமர்த்திக் கொண்டார்.இவர் துணையுடன் "அல்லிய ருச்சுனா" நாடகத்தைப் புதுமை புகுத்தி நெறியாள்கை செய்ததுடன் சீன்களைத் தவிர்த்தும் இலகு உத்தியில் களங்களைக் காட்டியும், இசையாளர்களை மேடையில் இருந்தாளும் வீரிய முறைகளைக் கையாண்டமை குறிப்பிடத்தக்கது.

## நிருத்தியக் கலைஞர்கள்

### திருமதி.தமிழ்ச்செல்வி விஜயகுமாரன்



மகாதனை தெல்லிப்பளையில் 1967-05-05 ஆம் நாள் பிறந்தவர். யூனியன் கல்லூரியில் கல்விகற்று நிருத்திய ஆசிரியையாக நியமனம் பெற்று கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நிருத்தியத் துறையில் பயிற்சி பெற்ற ஆசிரியையாக வெளியேறி யா/கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நிருத்திய ஆசிரியையாக கடமையாற்றி வருகின்றார். சிறந்த நிருத்திய நாடகங்களைத் தயாரித்த பெருமைக் குரியவர். பாடசாலை மாணவர்களின் நிருத்தியக்கலை வளர்ச்சியில் அதிக கவனத்துடனும், ஈடுபாட்டுடனும் தன்னை அர்ப்பணித்து வருபவர். துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளுக்கான நிருத்திய வகுப்புகளை நடத்தி வருவதுடன் அவர்களைக்கொண்டு குழு நடனம்,தனி நடனம், நாட்டிய நாடகம் என்பனவற்றைத் தயாரித்தமை மட்டுமல்லாது வள்ளி திருமணம், வன்தொண்டர், பீஸ்மர் போன்ற நாட்டிய நாடகங்களையும் தயாரித்தளித்தவர். மேலும் புராண, இதிகாசக் கதைகளைக் கொண்டு புத்தாக்க முறைமையில் பல நாட்டிய நாடகங்களையும், குழுநடனங் களையும், தனி நடனங்களையும் தயாரித்தவர். இவரால் தயாரிக்கப்பட்ட பல நாட்டியநாடகங்கள் மற்றும் குழு,தனி நடனங்கள் யாவும் போட்டி களில் பல பரிசில்களை வென்றமை குறிப்பிடத்தக்கது.

## செல்வி வனிதா வைரமுத்து



காங்கேசன்துறையில் 1951-21-12 ஆம் ஆண்டு பிறந்தவர். நடேஸ்வராக் கல்லூரியல் கல்வி பயின்ற இவர் இளமைக்காலங்களில் பாடல்கள் பாடுவதை ஒரு கலையாகக் கொண்டிருந்தவர். பாடசாலை கலைநிகழ்ச்சிகளிலும் தமிழ், ஆங்கில நடன நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றியதோடு, குழுப்பாடல்களிலும் பங்கேற்றவர். தற்போது ஆலயங்களில் பஜனைக்குழுக்களுடன் இணைந்து திருவிழாக்காலங்கள் என்றில்லாது நாளும் பொழுதும் பஜனை நிகழ்வில் ஈடுபட்டு வருவதில் முனைப்பானவர். நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்களின் மூன்றாவது புதல்வி என்பது குறிப்பிடத்தக்கது.

## திருமதி மலர்விழி பிரேம்குமார்



1970-11-06 ஆம் நாள் வருத்தலைவிளானில் பிறந்த இவர் யாழ்பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் பரதநாட்டியத்தைக் கற்று நாட்டியக் கலை மாணிப்பட்டம் பெற்றவர் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் நிருத்திய ஆசிரியராகக் கடமையாற்றும் இவர் மாணவர்களை கோட்ட, வலய, மாவட்ட, மாகாண, தேசிய நிலைகளில் பங்குபெறச் செய்ததுடன் பல வெற்றிகளையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### அமரர்கள்.

## பொன் பரமானந்தர்.



1879-12-09 ஆம் நாள் தெல்லிப்பளை குரும்பசிட்டி என்ற கிராமத்தில் பிறந்தவர். தனது கிராமத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைத்தவர். குரும்பசிட்டி பொன்பரமானந்தர் வித்தியாலயத்தின் ஸ்தாபகராவார். இக்கிராமத்தில் கயிற்றுக்கோலாட்டம் என்ற நுட்பமான கலையை அறிமுகப்படுத்தியவர். அண்ணாவி கந்தைப்பிள்ளை என்பவரின் துணையோடு பன்னிரண்டு ஆண் பிள்ளைகளைத் தெரிவு செய்து பழக்கி இக்கயிற்றுக் கோலாட்டத்தினை மேடையேற்றியவர். அதற்கேற்ற


பாடல்களையும் இவரே இயற்றியுள்ளார். இக்கலையானது மிகநுட்பமும், கடினமுமான கோலாட்டம். இக்கோலாட்டத்தில் உறி, கூடை, சங்கிலி, அரைஞான்கயிறு போன்ற பொருட்களை கோலாட்டம் அடித்துப் பின்னு வது ஆகும். பன்னிரண்டு மாணவர்களில் ஒருவர் தவறு செய்தாலும் கயிறுகள் எல்லாம் குழம்பி சின்னாபின்னமாகிவிடும். இவ் வாறான தவறு கள் ஏற்படாத வண்ணம் ஆசிரியரவர்கள் நெறிப்படுத்தியமை குறிப்பிடத் தக்கது. மகாத்மாகாந்தி யாழ்ப்பாணம் வருகைதந்த போதும், வேறு பல நிகழ்ச்சிகளிலும் பல வருடங்களாக இக்கலை வடிவத்தை நிகழ்த்தி வந்தவர். இவரது வழியைப்பின் பற்றியே தாளக்காவடி என்னும் ஆட்டக்கலை குரும்பசிட்டியில் வளர்ந்ததென்பர். கலைப் பேரரசு ஏ.ரீ.பொன்னுத்துரை அவர்கள் தாளக்காவடிக் கலையில் சிறந்து விளங்கியதற்குக் காரணம் இவரிடம் கயிற்றுக்காவடிக் கலையினை பயின்றமையே என்பது குறிப்பிடத்தக்கது. குரும்பசிட்டி அம்பாள் ஆலயத்தில் ஆசிரியர் வருடாவருடம் திருவாதவூரடிகள் புராணத்திற்கு பயன்சொல்லி வந்தவர். கவிதை இயற்றும் ஆற்றல் வாய்ந்த இவர் அக்கால வழக்கப்படி பல சரமகவிகளைப் பாடினார். கதிர்காமவேலவர் மீது ஒரு பதிகம்பாடியவர். மகாதேவவித்தியாலயத்தில் வருடந்தோறும் நடைபெற்று வந்தசங்கவிழாக்களில் தருமிக்குப் பொற்கிழி அளித்தமை, குமணன், பிரகலாதன் முதலிய புராண,இலக்கிய நாடகங்களையும் மேடை ஏற்றியவர். குரும்பசிட்டியில் இந்துவாலிபர் சங்கமொன்றை சன்மார்க்க சபை தோன்றமுன் நிறுவி பலவருடங்களாக தாமே தலைமை தாங்கி நடத்தியவர். மாதந்தோறும் வரும் பூரணை நாட்களில் சங்கர சுப்பையர் போன்ற பெரியவர்களை அழைத்து சைவப்பிரசங்கங்களை செய்வித்து சைவஆசாரம் வளர்வதற்கு முன்னின்று உழைத்தவர். இவருடைய இத்தகைய சேவைகளைக் கௌரவிக்கு முகமாக குரும்ப சிட்டி வாழ்மக்களால் தமது பாடசாலைக்கு பொன்பரமானந்தர் வித்தி யாலயம் என்றும், கிராம சங்கத்தினர் ஒரு வீதிக்கு இவரது பெயரை சூட்டி நன்றிக்கடன் செலுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### முத்தையா ஜயாத்துரை



1903-11-16 ஆம் நாள் சாவகச்சேரி மட்டுவிலில் பிறந் தவர். பின்பு அளவெட்டியில் குடியமர்ந்து நிரந்தரமாய் வாழ்ந்தவர். கவிதை, நாடகம், காவடி, கரகாட்டம் ஆகிய கலைகளில் ஈடுபாடுடையவராயினும் கரகாட்டக்கலையி லேயே மிகவும் பெயர்பெற்றவர். அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன் மீது மிகுந்த பற்றுக்கொண்டவர்.இதனால் அம்மனின் அருளாசியினையும் பெற்றவர். மாவைக்கந்தனுடைய ஆலயத்திலும் காவடி,கரகம் ஆகிய கலைகளை நேர்த்திக்கடன் நிறை வேற்றுவோருக்காகப் பழக்குவதும், ஆடவைப்பதற்குமான அண்ணா வியாராகவும் செயற்பட்டவர். இத்தகைய செயற்பாடுகளை தழிழருவி சண்முகசுந்தரம் அவர்கள் விதந்து பாராட்டி விமர்சனக் குறிப்புகளையும் எழுதியுள்ளார். ஏணியில் நின்று கரகம் ஆடுவதும், கயிற்றினில் நின்று காவடி ஆடுவதும், தோளில் இருக்கும் காவடியினை கை விட்டு ஆடுவதும் இவருக்குக் கைவந்த கலை. கூர்முனைக் கத்தியாட்டத்திலகம், கரகாட் டத்திலகம் போன்ற விருதுகளைப் பெற்றவர். இவர் 1979-12-24 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

### கந்தையா பாலசுப்பிரமணியம்



1926-09-28 ஆம் நாள் அளவெட்டி ஐயனார் கோயிலடியில் பிறந்தவர். சிற்பம், ஓவியம், இசை, நடனம், விசகடி வைத்தியம் போன்ற துறைகளில் ஆற்றலுடையவர் நடனக்கலையில் அதிக நாட்டம் கொண்ட இவர் தான் கற்பித்த பாடசாலையில் மாணவர் களைக் கொண்டு பல நாட்டிய நாடகங்களைத் தயாரித்தளித்துள்ளார். பாம்பு மற்றும் விஷயந்துக்களால் கடியுற்றோருக்கு வைத்தியம்செய்து அவர்களைக் குணப்படுத்துவதில் நிபுணத்துவமுடையவர். இத்தகைய இவரது பணிகளால் அருட்கலைமணி என அன்பாக அழைக்கப்பட்டவர். 1989-09-29 ஆம் நாள் வாழ்வுலகை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

## வெங்கடாசலம் இராஜரத்தினம்



1931-04-13 ஆம் நாள் மல்லாகத்தில் பிறந்தவர். தனது ஆரம்பக்கல்வியை சுன்னாகம் மயிலணிப் பாடசாலையிலும் மேல் வகுப்புகளை தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியிலும் பயின்றவர். கல்வி பயிலும்காலத்திலேயே நாட்டியத்தில் ஆர்வம் கொண்டு இந்தியாவிற்குச் சென்று கேரளா மாநிலத்தில் கதகளிநாட்டியத்தை கோபிநாத் அவர்களிடமும், பரதக்கலையை தமிழ்நாட்டில் இராமசாமி என்பவரிடமும் கற்றுக்கொண்டார். 1960 ஆம் ஆண்டு தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் நடன ஆசிரியராக நியமனம் பெற்றார். இச் சந்தர்ப்பத்தில் கல்லூரி மாணவர்களின் தேவைகளுக்கேற்ப நடன, இசைக்கலையை பயிற்றி வந்தார். மேலும் இவரது காலத்தில் நிலவிய நடன ஆசிரியரின் பற்றாக் குறையை நீக்குவதற்காக அயற்பாடசாலைகளான அளவெட்டி அருணோதயக்கல்லூரி, ஏழாலை மகாவித்தியாலயம், கீரிமலை நகுலேஸ்வராக் கல்லூரி ஆகிய பாடசாலைகளிலும் பகுதிநேர நடனஆசிரியராக இக்கலையைப் பயிற்றி வந்தவர். இது மட்டுமன்றி கல்லூரி மாணவர்களை நடன, இசை நிகழ்சிகளிலும், போட்டிகளிலும் கலந்து கொள்ளவைத்து பரிசில்களைப் பெற்றுச்செல்ல வழிகாட்டியவர். இவரிடம் தனிப்பட்ட முறையில் நாட்டியம் பயின்றவர்கள் பலர் மேலைத்தேச நாடுகளில் இக்கலையை தொடர்ந்த வண்ணமுள்ளனர். இவரது மாணவர் பரம்பரையில் திருமதி தயாளினி கிறிஸ்ரிதேவா, திருமதி. ஜெயாளினி பாஸ்கரன், திருமதி. ராஜினி போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவரது புதல்விகளில் இருவர் இவரிடமே நடனக்கலையை பயின்று நடன ஆசிரியர்களாக மிளிர்ந்தவர்கள். இவருடையகலைச் சேவையைப் பாராட்டி அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தினர் நாட்டியகேசரி என்ற பட்டமும், ஈழத்தின் கலாரசிகர்களால் நாட்டியக் கலாரத்னா என்றபட்டமும் வழங்கிக் கௌரவிக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. 1990-12-26ஆம் நாள் கலையுலக வாழ்வை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

## திருமதி ரேலங்கி செல்வராஜா




குரும்பசிட்டியைச்சேர்ந்த இவர் கே.கே.வீ.செல்லையாவின் புதல்வியாவார்.சிறுவயதிலேயே நிருத்தியக் கலையில் ஈடுபாடுடையவராகத் திகழ்ந்தவர். இலங்கையின் தமிழ்த்திரைப்படமான வாடைக்காற்றில் நடித்தவர். தொலைக்காட்சி மற்றும் வானொலிக் கலைஞராகவும் மிளிர்ந்தவர்.

## திருமதி நளினி சிவகுமார்



1968-01-14 ஆம் நாள் மல்லாகத்தில் பிறந்தவர். நடன ஆசிரியர்,நடன விற்பன்னர் வெங்கடாசலம் இராஜரத்தினம் அவர்களின் புதல்வியாவார்.தனது தந்தையாரிடம் நடனக்கலையினை முறையாகப் பயின்று அரங்கேற்றம் செய்தவர். வட இலங்கை சங்கீதசபையின் நடனப் பாடத்திட்டத்தில் ஆசிரியர்தராதரம் வரை பயின்றவர். நீலியம்பனை மல்லாகம் என்னும் இடத்தில் கலாலயம் என்ற பெயரில் நடனக் கல்லூரி ஒன்றினை நடத்தி வந்தவர். 1991-05-16ஆம் நாள் வாழ்வுலகை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

## ஐயாத்துரை விநாயகலிங்கம்



1935-01-31 ஆம் நாள் அளவெட்டியில் பிறந்தவர். மிகச் சிறந்த கரகாட்டக்கலைஞன். இத்துறையில் கொடி கட்டிப் பறந்தவர். அத்துடன் காவடி,நாடகம் போன்றவற்றிலும் ஆற்றலுடையவராகத் திகழ்ந்தவர். கரகாட்டக் கலைஞர் ஐயாத்துரை அவர்களின் புதல்வனாவார் என்பதும் குறிப்பிடத்தக்கது. 2003-09-18 ஆம் நாள் வாழ்வுலகை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

## பழம்பொருள் சேகரிப்பாளர்

### ஆவணஞானி இரா.கனகரத்தினம்



உலகளாவியரீதியில் தமிழர்களது கலைகள், பண்பாட்டு விழுமியங்கள் பேணப்பட வேண்டும்.அவர்கள் தமது வரலாற்றுச் செய்திகளைப் பாதுகாக்கவேண்டும் என்ற பெருநோக்கோடு செயற்பட்டு வருபவர் குரும்பசிட்டியைச் சேர்ந்த ஆவணஞானி இரா.கனகரத்தினம் அவர்கள் ஆவார். தனது மனதில் ஆழமாகப்பதிந்த நிகழ்காலச் செய்திகளையாவது செவ்வனே பதிவு செய்து எதிர்காலச் சந்ததிக்கு தன்னாலானதைச்செய்ய வேண்டுமென்ற சிந்னையை மக்களிடம் ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கில் செயற்பட்டு வரும் இவர் பல வேறுவகையான ஆவணங்களை சேகரித்து தம்வசம் வைத்திருக்கின்றார். 1956 இல் இருந்து பத்திரிகைச் செய்திகளை வெட்டுத்துண்டங்களாக ஒட்டுப்புத்தகங்களில் சேகரிக்கத் தொடங்கினார். நாற்பத்தைந்து வருடங்களாக சேகரித்த செய்திகளை, சேமிப்புக்களை நுண்படமாக்கும் நோக்கத்திற்காக நேட்டோ அமைப்பு இவருக்கு ரூபா பதினைந்துலட்சம் செலவில் பிரதியாக்கும் கருவிகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

அமரர்

### கலைஞானி.அ.செல்வரத்தினம்



குரும்பசிட்டி தெல்லிப்பளையில் 1933-07-28 ஆம் நாள் பிறந்தவர். மிகச்சிறந்த புகைப்படக் கலைஞன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொன்மையான கலைப் பொக்கிசங்களையும், வாழ்வியற்பொருட்களை யும் சேகரித்த மாபெரும் சாதனையாளன். ஈழத்தவர் களின் வரலாற்றுச் சுவடுகளை தேடிப்பெற்று பாதுகாக்க வேண்டுமென்று தன் வாழ்நாளையே அதற்காக அர்ப்பணித்தவர். அவர் தனது வாழ்க் கையில் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக காடுகரம்பையெல்லாம் அலை ந்து திரிந்து பலஅரும்பொருட்களைக் கண்டெடுத்துப் பாதுகாத்தவர். இப்

பணிக்காக பிரமச்சரிய வாழ்க்கையை மேற்கொண்டு தனது சொத்துக் களையெல்லாம் முழுமையாக அர்ப்பணித்தவர். வேறு எந்த நிறுவன மோ, தனிமனிதனோ செய்யாத, செய்யத்துணியாத வேலையை தமிழ ரின் வரலாற்றுப் பொக்கிஷங்களை தேடிப்பாதுகாக்கும் பணியை தனது தள்ளாத வயதிலும் தனியே நின்று செய்த பெருமைக்குரியவர். பல நூற் றாண்டு காலவரலாற்றை எடுத்தியம்பும் நாணயங்கள், தொல்லியற் சான்றுகள், வாழ்வாதாரப் பொருட்கள், பண்டைத்தமிழ் வரலாறு கூறும் ஏட்டுச்சுவடிகள், கலைப்பொருட்கள், கையெழுத்துப்படிகள், இன்னும் எத்தனையோ விடயங்களை அரும்பாடுபட்டு தனது ஆற்றலுக்குமப்பால் சேகரித்து பேணிப்பாதுகாத்து வந்த பெருமைக்குரியவர். 1974 களில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத்தமிழாராய்ச்சி மாநாட் டின்போது சுண்டிக்குளிமகளிர் கல்லூரியில் நடைபெற்ற கண்காட்சியில் கலைஞானியின் அரும்பொருட் கண்காட்சி அனைவரையும் வியக்க வைத்ததாக அறிஞர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் வேறு எந்த நூதனசாலையிலும் இல்லாத பொருட்கள் இவரால் பேணப்பட்டு வந்தது உண்மையே. 1975 இல் குரும்பசிட்டி பொன்மரமானந்தர் வித் தியாலயத்திலும், 1991 இல் யாழ் பல்கலைக்கழகத்திலும், 1992 இல் நாவலர் கலாசாரமண்டபத்திலும், 1993 இல் நல்லூர் மங்கயற்கரசி வித்தி யாலயத்திலும், 1994 இல் சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் இவரது கண்காட்சிகள் நடத்தப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவரால் சேகரிக் கப்பட்ட வரலாற்றுப் பொக்கிஷங்கள் அனைத்தையும் பாதுகாப்பதற்கென காலத்திற்குக்காலம் பல பெரியோர்களைக் கொண்ட சபைகள் அமைக் கப்பட்டன. ஆனால் துரதிஸ்டவசமாக அச்சபைகள் தமது செயற்பாடுகளை முழுமையாக மேற்கொள்ள முடியாமற் போய்விட்டமையும், நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளும் இப்பொக்கிஷங்களைப் பேணிப் பாதுகாத்து அடுத்த சந்ததியினரிடம் கையளிக்க முடியாமற் போனமைக் குரிய காரணங்கள் எனலாம். 2001-12-26 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

## பொம்மலாட்டக்கலைஞர்கள்

### சின்னக்கம்பி நாகராசா



அளவெட்டி மத்தியில் பிறந்த இவர் தற்பொழுது மட்டுவில் தெற்கு சாவகச்சேரி என்னும் முகவரியில் தற்காலிகமாக வாழ்ந்து வருகின்றார். யாழ்ப்பாணத்தில் பொம்மலாட்ட அரங்கில் நீண்ட காலமாக ஈடுபட்டுவரும் இவர் ஓய்வு பெற்ற கல்வியதிகாரியும் பல்தொழிற் கலைஞருமாவார். அறிவிப்பாளர், வானொலிநாடகம், ஓவியம் என ஆற்றலுடையவர். பொம்மலாட்ட அரங்கிற்குத் தேவையான எழுத்துருவை எழுதுவதிலும் அவற்றிக்கான பொம்மைகளையும், அரங்குகளையும் உருவாக்குவது இவருக்கு கைவந்தகலை தனது குரல் வளத்தால் தானே ஓர் ஆற்றுகை யாளராக இருந்து பொம்மைகளை அசைவிப்பதோடு பாத்திரங்களுக் கேற்ற உரையாடல்களையும் வெளிப்படுத்தும் ஆற்றலுள்ளவர்.

### நல்லசேகரம் கஜேந்திரன்



1983-01.17 ஆம் நாள் சாத்தா கலட்டி அளவெட்டி வடக்கு என்னும் முகவரியில் பிறந்தவர் 1994 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து இணுவிலில் வாழ்ந்தபொழுது அங்கு பொம்மைகள் உருவாக்குவதைப் பார்த்த அனுபவத்தை வைத்துக்கொண்டு பொம்மைகள் உருவாக்கும் கலை யில் ஈடுபட்டு வருகின்றார். குதிரைகள், மன்னர், மயில்கள், அனுமார் போன்ற முகங்களையுடைய பொம்மைகள் செய்து ஆலயங்களுக்கு வழ ங்கியிருக்கின்றார். தற்பொழுது வலிகாமம் வடக்கில் பொம்மைகளை உருவாக்கும் கலைஞர்களில் வளர்ந்து வரும் ஒருவராகக்காணப்படு கின்றார்.

## போர்த்தேங்காய் உடைத்தல்


### கந்தையா கணேசு



1934-12-25 ஆம் நாள் அளவெட்டி கிழக்கு வெள்ளி யம்பதி என்னும் கிராமத்தில் பிறந்தவர். போர்த் தேங்காய் உடைத்தல் போட்டியில் பல்வேறு சாதனை கள் ஏற்படுத்தியவர். இப்போட்டியில் மிகுந்த பலமும், கைநுணுக்கமும் உடையவர்களாலேயே இலகுவில் வெற்றிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அந்த வகையில் கணேசு அவர் கள் இத்தகைய திறண்களை தன்னகத்தே கொண்ட மைந்தன் ஒருவரா வார். இவர் இலங்கையின் பலபாகங்களிலும் நடைபெற்ற இத்தகைய போட்டிகளில் பங்குகொண்டு முதலாம் இடத்தினைப் பெற்று வெற்றி வாகை சூடுவது வழக்கம். 1967 ஆம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு வருடமும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு தினகரன் பத்திரிகை நிறு வனம் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது வழக்கம். அந்தவகையில் போர்த்தேங்காய் உடைத்தல் போட்டிகளில் திருவாளர் கணேசு அவர்கள் கலந்து கொண்டு தனது முழுத்திறமைகளையும் பயன் படுத்தி வெற்றியினைத் தனதாக்கிக் கொள்வார். ஒவ்வொரு வருடப் போட்டிகளிலும் கணேசு அவர்களே முதலாமிடத்தினைப் பெற்றுக் கொள் வது வரலாறு. தினகரன் போட்டிகள், கூட்டுறவுத் துறையினர் நடத்திய போட்டிகள் மற்றும் வலிகாமம் வடக்கு பிரதேச செயலக கலாசாரப் பிரி வினர் வருடந்தோறும் நடத்தி வருகின்ற வசந்தவிழாவில் நடைபெறு கின்ற போட்டிகளிலும் திருவாளர் கணேசு அவர்களே முதலாமிடத்தி னைப் பெற்றுக் கொள்வது வழக்கம் என்று குறிப்பிடுவது சாலப் பொருந்தும்.

## மிருதங்கக்கலைஞர்கள்

### பண்டாரம் சின்னராசா



1934-07-18 ஆம் நாள் சங்குவத்தை மயிலிட்டி வடக்கு என்னும்முகவரியில் பிறந்தவர்.தற்பொழுது மருதனார் மடத்தில் வசித்து வருகின்றார்.1971 ஆம் ஆண்டு வட இலங்கை சங்கீத சபையின் மிருதங்க ஆசிரியர்

தராதரம் பெற்ற முதலாவது மாணவனாக விளங்கும் இவர் மிருதங்கக் கலையில் பல்வேறு சாதனைகளை நிலை நாட்டியுள்ளமை குறிப்பிடத் தக்கது. 1971 ஆம் ஆண்டு இராமநாதன் அக்கடமியில் சங்கீதரத்தினம் டிப்ளோமா பட்டம் பெற்றவர். 1969 இல் பலாலி ஆசிரியர் கலாசாலை யிலும், 1972 இல் கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையிலும், 1996 இல் யாழ்பல்கலைக் கழக நுண்கலைப் பீடத்திலும் மிருதங்க விரிவுரை யாளராகவும் பணியாற்றியவர். மேலும் இராமநாதன் நுண்கலைப்பீடம், வட இலங்கை சங்கீதசபையின் பரீட்சகராகவும், ஆலோசகராகவும் பணிபுரியும் இவர் உயர்திரு ஏ.எஸ்.இராமநாதன் ஆசிரியரவர்களைக் குருவாகக்கொண்டு கம்பன் கழக ஆதரவில் அமரர் ஐயாக்கண்ணு தேசிகர் தலைமையில் என்.ஆர்.சின்னராசா முன்னிலையில் நடேஸ் வராக் கல்லூரியில் 1964 ஆம் ஆண்டு அரங்கேற்றம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. தெல்லிப்பளை பாலர் ஞானோதயசபை, பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்றம், யாழ்ப்பாணம் இரசிகரஞ் சனசபா, இணுவில் நடனக்கிராமிய கலைக்கல்லூரி, மாவிட்டபுரம் முத்தமிழ் கலை மன்றம், அளவெட்டி தொண்டர்சபை, இணுவில் இளந்தொண்டர் சபை, உரும்பிராய் சாயிசபா போன்ற பல்வேறு கலை நிறுவனங்கள் இவரது கலைச் சேவையினைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஒலி நாடா உட்பட விநாயகர் மகத்துவம் என்னும் சமய நூலையும், மேடை யில் கொலுப்பிக்கப்பட்ட பல வித இசைப்பாடல்கள் மற்றும் நாட்டியாஞ்சலி என்னும் தாளத்தின் உற்பத்தி ஆகிய கைப்பிரதி நூல்களையும் எழுதியவர்.இவரிடம் பயின்ற மாணவர்களில் முப்பத்தொன்பதிற்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆசிரியர் தராதரம் பெற்றவர்களாகவும், இருபத்தேழு மாணவர்கள் அரங்கேற்றம் செய்து கலைஞர்களாகத் திகழ்ந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. இவரிடம் பயின்ற மாணவர்கள் பலர் உள்நாட்டிலும்,வெளிநாட்டிலும் கலைச் சேவையாற்றி வருவது இவ் வாசிரியருக்கு பெருமைசேர்ப்பதாகும். குறிப்பாக வை.வேனிலான், அ.ரகு நாதன் போன்றவர்கள் கொழும்பிலும், சு.வரதராஜசர்மா, சி.செந்தூரன், கி.ஆனந்தகோபன், க.கஜன், எஸ்.சிவசுந்தர் போன்ற பல மாணவர்கள் யாழ்ப்பாணத்திலும் இன்னும் கனடா, லண்டன், அமெரிக்கா போன்ற

மேற்குலக நாடுகளிலும் கலைப்பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. இவரது இத்தகைய சேவைகளுக்காக 1998இல் இலங்கை அரசால் "கலாபூஷணம்" 1969 இல் கொழும்பு பண்டிதர் கழகத்தால் மத்தளக் கலைச்சுடர், 1998 இல் இணுவில் இளந்தொண்டர் சபையால் "லயஞானசுரபி" 1998 இல் தெல்லிப்பளை பாலர்ஞானோதய சபையால் "லயஞானபானு" 2001 இல் இந்துசமய அலுவல்கள் திணைக் களத்தினால் "கலைஞானகேசரி"2002இல் சர்வதேச இந்துமதகுரு பீடத்தால் "லயஞானகலாபமணி" வலிகாமம் வடக்கு கலாசாரப்பேர வையால் "கலைச்சுடர்" போன்ற பல்வேறு விருதுகள் வழங்கிக் கௌரவிக் கப்பெற்றவர்.

## பிள்ளைநாயகம் திருநாவுக்கரசு



யாழ் காங்கேசன்துறையில் பாரம்பரிய கலைக்குடும் பத்தில் 27.01.1940 இல் பிறந்தவர். இவரது தந்தை அமரர் வைரவிபிள்ளை நாயகம் ஒரு சிறந்த அண்ணாவியார் நாடக வரலாற்றினில் சரித்திரம் படைத்த அமரர் கலாநிதி நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்களை உருவாக்கிய பெருமைக்குரியவராவர். இவரது 12 வயது தொடக்கம் மேடை நிகழ்ச்சிகளில் பக்கவாத்தியமாக மிருதங்கம் வாசிக்கத் தொடங்கினார். குறிப்பாக நடிகமணியின் நாடகங்களுக்கு பெரும்பாலும் இவரது பங்கு நிறைய உண்டு. அவர்களது நாடகங்களில் சிலவற்றில் நடித்தும், பாடியுமுள்ளார். குறிப்பாக இவரது 12வது வயதில் மானிப்பாயில் நடந்த புல்லாங்குழல் வித்துவான் அமரர் வர்ணகுலசிங்கத்தின் புல்லாங்குழல் கச்சேரிக்கு மிருதங்க இசை வழங்கிய போது இவரது வாசிப்பினை லயித்து அம்மேடையில் வைத்து பாராட்டியமை குறிப்பிடத்தக்கது பின்னர் தந்தையாரின் ஒருங்கிணைப்பில் அக்கால கட்டத்தில் அமரர் C.D.D. மணிபாகவதர் (ஸ்ரீலஸ்ரீ பிராமாச்சாரிய சுவாமிகள்) அவர்களினது மிருதங்கக் கலைஞரான பாலகாட் அமரர் மு.கிருஷ்ணையர் அவர்களிடம் முறையாக மிருதங்கம் கற்றார். இதன் பின் உத்தியோகத்தின் நிமித்தம் 1958 மே மாதம் நாவலப்பிட்டியில் வாழ


நேரிட்டது. அதன்பின் மிருதங்கவித்துவான் அமரர் A.கணேசசர்மாவிடம் மேலதிகமாகக் கற்றுத் தேர்ந்து அரங்கேற்றம் செய்ததின் பின் அன்றைய காலம் தொட்டு இதுவரை காலமும் மலையகம் முழுவதிலும் மிருதங்க கலைஞராக கடந்த ஐம்பது ஆண்டுகளாக கடமையாற்றுகின்றார். குறிப்பிட்ட கால கட்டத்தில் மலையகத்தின் நாலா பக்கங்களிலும் குறிப்பாக பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள பட்டிதொட்டிகளிளெல்லாம் சென்று முத்தமிழின் மூலம் கலை வளர்த்ததில் இவரது பங்கு அதிகம் 2003 ஆம் ஆண்டில் மத்திய மாகாண சபையின் சாகித்திய விழாவில் கலைஞர் விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டவர்.

### முருகன் இராசன்



1934-01-30 ஆம் நாள் மயிலிட்டி வடக்கு காங்கேசன்துறை என்னும் முகவரியில் பிறந்தவர். மிருதங்கக் கலையில் ஆற்றலுடையவர். நாடகங்களுக்கான மிருதங்க பக்கவாத்தியக் கலைஞனாகப் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### சுந்தரமூர்த்தி ஐயர் வரதராஜசர்மா



1955-05-02ஆம் நாள் தெல்லிப்பளையில் பிறந்தவர். பாரம்பரியமாக இசைக்கலையைப் பேணிவந்த கலைக் குடும்பத்தில் பிறந்தவர்.இதன் காரணமாக இவர் சிறுவயதிலிருந்து கலையார்வமுடையவராக விளங்கினார். ஆரம்பக் குருவாக தனது பேரனாரையும், பின்னர் கலாபூஷணம் க.ப.சின்னராசா அவர்களிடமும் மிருதங்கக் கலையைப் பயின்றவர். அத்துடன் இந்தியாவின் மிருதங்கப்பேராசான் டி.எஸ்.இராமநாதன் அவர்களிடமும் கற்றவர். தனது ஆரம்பக்கல்வியை தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் தொடர்ந்து தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியிலும் கல்வி பயின்றவர். 1980 ஆம் ஆண்டு ஏ.திலகேஸ்வரன் அவர்களின் இசைக்கச்சேரிக்கு பக்கவாத்தியம் வாசித்தவர்.இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் தாளவாத்தியக் கலை

குராகத்திகழ்ந்தவர்.1984 இல் சங்கீதஆசிரியராக நியமனம் பெற்றவர். தெல்லிப்பளை பாலர்ஞானோதயசபை இசைக்கல்லூரியின் அதிபராகவும் மிருதங்க ஆசிரியராகவும் தலைவராகவும் கலைச் சேவையாற்றி வருகின்றார். மிருதங்கவித்துவான் க.ப.சின்னராசா அவர்களின "விநாயகர்மகத்துவம்" இறுவட்டிற்கு பக்கவாத்தியம் வாசித்தவர். வட இலங்கை சங்கீதசபையின் மிருதங்க ஆசிரியர் தராதரப் பரீட்சையில் சித்திபெற்று கலாவித்தகர் என்றபட்டத்தைப் பெற்றுக் கொண்டவர். யாழ் பல்கலைக கழக இராமநாதன் அக்கடமியில் பயின்று இசைக்கலாமணி பட்டம் பெற்றவர். இவரதுகலைச் சேவைகளைப் பாராட்டி வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவை "கலைச்சுடர்" என்ற விருதினையும், முள்ளியவளை சாஜிஆச்சிரமத்தினால் "மிருதங்கலயஞானவித்தகர்" என்ற விருதினையும் வழங்கப் பெற்றவர்.

**கதிரன் இராஜதுரை**



1957-03-04 ஆம் நாள் காங்கேசன்துறை என்னும் முகவரியில் பிறந்தவர்.மிருதங்கக்கலையில் இருபத்தைந்து வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவங்களையுடயவர்.கலை நிகழ்வுகளுக்கும், நாடகங்களுக்கும்பக்க வாத்தியம் வாசிக்கும் பக்கவாத்தியக் கலைஞனாக இன்று வரை வாழ்ந்து வருகின்றார்.

**ஐயாத்துரை சிவபாதம்**



கரகாட்டத்திலகம் அமரர் முத்தையா ஐயாத்துரை அவர்களின் புதல்வனாவார் இவர் மிகச்சிறந்த மிருதங்க வித்துவானாவார் என்பதுடன் பல்வேறு கலை நிகழ்ச்சிகளுக்கும், பாடல்கள் உருவாக்கத்திற்கும் தனது இசைப் பணியை வழங்கியமாபெரும் கலைஞன். மிருதங்கம் மட்டுமல்லாது பாடுவதிலும் வல்லவர்.தமிழகத்தின் பாலக்காட்டு குஞ்சுமணி, மதராஸ் கண்ணன் போன்ற பிரபல மிருதங்க வித்துவான்களுக்கு ஈடிணையாக ஈழத்தில் மிருதங்கம் வாசிக்கும் திறண்கொண்ட வித்துவானாவார்.

## விஸ்வநாதையர் ஜம்பு நாதன்



1958.12.20 இல் தெல்லிப்பளையில் ஆரம்பக் கல்வியை சைவப்பிரகாச வித்தியாசாலையில் தரம் 1 இல் இருந்து 4 வரையும், பின்னர் தரம் 5 இல் இருந்து உயர்கல்வி வரை தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியிலும் பயின்றார். 1968 இல் தனது தந்தையின் விருப்பப்படி மிருதங்கம் பயில ஆரம்பித்தார். ஆரம்ப குருவாக திரு.க.ப.சின்னராசா, காலம் சென்ற திரு.வே.அம்பலவாணர் அவர்களிடமும், யாழ் ரசிகரஞ்சன சபாவில் 3 ஆண்டுகள் வரை பயின்று, பின்னர் தனிப்பட்ட முறையில் கலாபூஷணம் திரு.க.ப.சின்னராசா அவர்களிடம் கற்று 1974 இல் அரங்கேற்றம் கண்டார்.இதன் பின்னர் பட்டப்படிப்பினை யாழ் பல்கலைக்கழக நுண் கலைப் பீடத்தில் மிருதங்கம் பிரதான பாடமாகவும், வாய்ப்பாட்டு துணைப்பாடமாகவும் 1977 1981 வரை 4 ஆண்டுகள் கற்று 1981 இல் இசைக்கலைமணி (Diploma in Miruthangam) இறுதிப் பரீட்சையில் சித்தி அடைந்தார். முன்னாள் மிருதங்க பேராசிரியர் A.S.இராமநாதனிடம் அவரின் வழிகாட்டலுடன் பயின்றவர். இவர் பல நடன அரங்கேற்றம், நாட்டிய நாடகம், சங்கீத, வாத்திய நிகழ்ச்சிகளுக்கு வாசித்து சிறப்பித்துள்ளார். உள்நாட்டு கலைஞர்கள், இந்திய கலைஞர்கள் எல்லோரினதும் நிகழ்சசிகளுக்கு வாசித்து நன்மதிப்பை பெற்றுள்ளார். 1977 இல் வட இலங்கை சங்கீத சபையினால் நடத்தப்படும் பரீட்சையில் ஆசிரியர் தரத்தில் சித்தியடைந்து மிருதங்க கலாவித்தகர் என்னும் பட்டம் பெற்றார்.இவரின் கலைச் சேவையை பாராட்டி அகில உலக சாஸ்தா பீடத்தினால் 2005ம் ஆண்டு "லய ஞான கலாநிதி" என்னும் பட்டம் வழங்கப்பெற்றார். தற்பொழுது கொழும்பு கட்புல அற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தில் நிரந்தர போதனாசிரியராக கடமைபுரிகின்றார். (UNIVERSITY OF VOSUAL & PERFORMING ARTS)

### மாணிக்கம் ஜெயராசா



காங்கேசன்துறையில் பிறந்த இவர் மிருதங்கக் கலைஞ னாக வாழ்ந்தாலும் நாடக கலையில் அதிக நாட்ட முடையவர். பாடசாலையில் படிக்கும் பொழுது துடிப்பு என்ற நாடகத்தில் ஜமீன்தார் பாத்திரமேற்று நடித்ததுடன் இவரது கலை வாழ்க்கை ஆரம்பமானது. கைம்மாறு நாடகத்தில் அரசனாகவும் பொலிடோல் பொன்னுச்சாமி நாடகத்தில் சுகாதார இன்ஸ்பெக்டராகவும் பாரதியார் நாடகத்தில் பாரதியாராகவும் வீரத்தமிழன் நாடகத்தில் புலவராகவும் நடித்துப்புகழ் பெற்றவர். 1970 ஆம் ஆண்டு கலைஞர் குண்டுமணி, யோஏன் கபாஸ், பிலிப்பையா அவர்களுடன் இணைந்து இன்னிசைக் குழுவாக இயங்கியமையும் குறிப்பிடத்தக்கது. சத்தியவான் சாவித்திரி நாடகத்தில் சத்தியவானாகவும் அகத்தியர் நாடகத்தில் இராவணனாகவும் பாத்திரமேற்று நடித்தவர். பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தினால் யாழ்ப்பாணம் O.L.R பாடசாலையில் யாழ் சேவை ஒலிபரப்புக்கென நடைபெற்ற நாடக மேடைப்பாடல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்.

### குணபாலசிங்கம் ஞானசுதன்



1969-08-04 ஆம் நாள் அளவெட்டி மேற்கு தம்மனை என்னும் முகவரியில் பிறந்தவர். மிருதங்கக் கலையில் ஆசிரியர்தராதரம் பெற்ற இவர்அளவெட்டிநாகேஸ்வரம் விநாசித்தம்பிப் புலவரவர்களின் பேரனாவார்.

### திரு.சிவபாதரத்தினம் சிவசிவா (மிருதங்கம்)



கலைவளம் மிகுந்த அளவெட்டிக் கிராமத்தில் 03.01.1972 ஆம் ஆண்டு பிறந்தவர். ஆரம்பக் கல்வியை யா/அளவெட்டி சீனன்கலட்டி ஞானோதயா வித்தியாலயத்திலும் பின்பு க.பொ.த உயர்தரம் வரை யா/தெல்லிப்பளை மகாஜனாக்கல்லூரியிலும் கற்றார். யாழ் பல்கலைக்கழகத்தில் இசைக்கலைமணி விருதினை 1997 ஆம் ஆண்டு பெற்ற இவர் 2000 ஆம் ஆண்டு நுண்கலைமானி (B.F.A)

பட்டத்தினையும் பெற்றார். இசையாசிரியராகக் கடமை புரியும் இவர் 2001 ஆம் ஆண்டு பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டத்தினையும் பெற்றார். மிருதங்கக் கலையை ஆரம்பத்தில் அளவெட்டி ஐ.சிவபாதம் அவர்களிடமும், பின்பு ப.சின்னராசா அவர்களிடமும், க.கண்ணதாசன் அவர்களிடமும் பயின்றார். வாய்ப்பாட்டிசையை சங்கீத பூஷணம் V.K.நடராஜா அவர்களிடம் பயின்றார். வட இலங்கைச் சங்கீத சபையால் வழங்கப்படும் கௌரவ விருதான "கலாவித்தகர்" விருதினை 1999 ஆம் ஆண்டு பெற்றார்.சங்கீத பூஷணம் V.K.நடராஜா, சங்கீத வித்வான் பொன் ஸ்ரீ வாமதேவன், இசைக்கலைமாணி பரமேஸ்வரி கணேசன் ஆகியோரின் இசைக்கச்சேரிகளில் மிருதங்கம் வாசித்து புகழடைந்தவர். நாதஸ்வரம் வாசிக்கும் திறனுடைய இவர் நாதஸ்வரக் கலையை நல்லூர் எஸ்.சிவசாமி அவர்களிடமும் நெல்லியடி எஸ்.கோபாலகிருஷ்ணன் அவர்களிடமும் பயின்றவர்.

**திருச்செகநாதன் வரோதயன்**



1979-01-28 ஆம் நாள் அளவெட்டி மேற்கு என்னும் முகவரியில் பிறந்தவர்.வடஇலங்கை சங்கீதசபையில் மிருதங்கப் பரீட்சையில் ஆசிரியர் தராதரம்சித்தியெய்தி திருதங்கக் கலாவித்தகர் பட்டம் பெற்றவர். கச்சேரிகளிலும், கலைநிகழ்வுகளிலும் பக்கவாத்தியமாக மிருதங்கத்தினைவாசித்து வருவது குறிப்பிடத்தக்கது.

**சிங்கராசா செந்தூரன்**



1980-03-06 ஆம் நாள் ஏழாலையில் பிறந்தவர். தற்பொழுது அளவெட்டி கிழக்கு கணேஸ்வரம் என்ற முகவரியில் நிரந்தரமாக வாழ்ந்து வருகின்றார். யாழ் பரியோவான் கல்லூரியில் சித்திர ஆசிரியராகப் பணியாற்றிவரும் இவர் யாழ் பல்கலைக்கழக நுண் கலைத்துறையில் சித்திரமும் வடிவமைப்பும் துறையில் பட்டம்பெற்றவர். ஆயினும் மிருதங்கம், முகர்சிங் வாசிப்பதிலும், நாடகம் எழுதுதல், நடித்தல், நெறியாளுகை செய்தல் ஆகிய துறைகளிலும் ஆற்றலுடையவர்.

மிருதங்கக் கலையை மயிலிட்டியைச்சேர்ந்த கலாபூஷணம் க.ப.சின்ன ராசா அவர்களிடம் முறையாகப்பயின்று அரங்கேற்றம் செய்தவர். வட இலங்கை சங்கீத சபையில் ஆசிரியர் தராதரப் பரீட்சையில் சித்தி பெற்று மிருதங்கக் கலாவித்தகர் என்ற பட்டத்தினைப் பெற்றுக்கொண்டவர். முகர்சிங் வாசிப்பதில் மிகவும் விருப்புடையவர். மிருதங்க ஆசிரியராக இருந்து பலமாணவர்களுக்கு பயிற்சியளித்து வருகின்றார். யாழ்ப் பாணத்து முன்னணி இசையாளர்களது கச்சேரிகளில் மிருதங்கம், முகர்சிங்கருவிகளை இசைப்பவர். இவரது கலைச்சேவைகளுக்காக வலி காமம் வடக்கு கலாசாரப்பேரவை கலைச்சுடர் என்ற விருதினையும், அருட்கவி. சி.விநாசித்தம்பிப் புலவரவர்களால் முகர்சிங் வாசிப்பிற்காக கலைஞானசுரபி என்ற விருதும் வழங்கிக் கௌரவிக்கப் பெற்றவர்.

### அமரத்துவமடைந்தவர்கள்

### கதிர்ப்பிள்ளை முருகேசு



1898 இல் தென்மயிலையில் பிறந்த இவர் ஆதிகாலம் தொட்டேதென்மயிலைகட்டுவனின் கிராமியக் கலைக ளான வசந்தனாட்டம், ஒயிலாட்டம் போன்றவற்றிற்கு மிருதங்க வித்துவானாகவும், பின்னணிப் பாடகராகவும் பணியாற்றி கலையை வழிநடத்தி வந்தவர். இவரது மிருதங்க வாசிப்புத்திறமையால் மத்தளமுருகேசு எனஅழைக்கப்பட்டார். 1953 இல் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் ஆதரவுடன் கொழும் பில் இடம்பெற்ற வசந்தனாட்டத்திற்கு பின்னணிப் பாடகராகவும் மிருதங்க வித்துவானாகவும் கலையின் பெருமையை வெளிப்படுத்தியிருந்தவர். இவரது சொந்த ஊரான கட்டுவனில் அமைந்துள்ள வீரபத்திரர் கோயில் பாரம்பரியச் சொத்தாகக் காணப்பட்டதுடன் இங்கு வருடந்தோறும் நடை பெறுகின்ற திருவிழாக்களின் போது தனது கலையை நெறிப்படுத்திய துடன் பல்வேறுபட்ட கிராமியக்கலைகளிற்கும் தனது மிருதங்கத் திறமையை வெளிப்படுத்தியவர். அத்துடன் 1956 ஆம் ஆண்டு பிரதமராக இருந்த சேர்ஜோன்கொத்தலாவ அவர்களின் யாழ்ப்பாண வருகையின்


போது வசந்தனாட்ட வரவேற்புக் குழுவினரில் ஒருவராக பங்கேற்றுக் கொண்டவர். கலையின் மீது இவர் கொண்ட திறமையை கௌரவிக்கு முகமாக 1982 இல் குரும்பசிட்டி பொன்பரமானந்த வித்தியாசாலையில் வலிகாமம் வடக்கு கிராம முன்னேற்றச்சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப் பட்ட நிகழ்வில் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவரான அமரர் அமிர்த லிங்கம் அவர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப் பெற்றவர். கிராமியக் கலைகளிற்கு தொடர்ந்து தனது பங்களிப்பினை வழங்கிய முருகேசு அவர்கள் 1984-04-26 ஆம் நாள் வாழ்வுலகை நீத்து இறை வனடி சேர்ந்தார்.

## வயிரவப்பிள்ளை பிள்ளைநாயகம்



1904.02.05 நாள் காங்கேசன்துறையில் பிறந்தவர் நாடகம் இசைக்கருவிகளான மிருதங்கம், தபேலா ஹார்மோனியம் புல்லாங்குழல், வயலின், மோர்சிங் போன்றவற்றினை வாசிப்பதிலும் திருத்துவதிலும் ஆற்றலுடையவர். செட்டிவர்த்தனன், வள்ளிதிருமணம், அல்லிஅர்ச்சுனா, நல்லதங்காள், அரிச்சந்திரா, நந்தனார் முதலான நாடகங்களை மேடையேற்றிவர். ஸ்திரிபாட் (பெண்) நடிகன். மதுரை இரத்தினம் என்பவவரிடமிருந்து மிருதங்கத்தொழில் நுட்பங்களைக் கற்றுக்கொண்டவர். திருப்பாப்புரம் சுவாந்தன் அவர்களினால் ஞானஸ் தன் எனப்பாராட்டப் பெற்றவர். 1977.08.02 ஆம் நாள் வாழ்வுலகை நீத்து நிலையுலகம் சென்றார்.

## வேலப்பா காசிநாதன்



1916 .12.01 ஆம் நாள் காங்கேசன்துறையில் பிறந்தவர் இசைநாடகங்களினதும், பல்வேறு கலைநிகழ்வு களிலும்மிருதங்க அணிசெய் கலைஞராகத்திகழ்ந்தவர். 1987.05.11 ஆம் நாள் வாழ்வுலகை நீத்து நிலையுலகம் சென்றார்.

## முருகேசு சிவப்பிரகாசம்



1941-10-27 ஆம் நாள் மயிலிட்டி தெற்கு கட்டுவன் என்னும் இடத்தில் பிறந்தவர். தற்பொழுது தற்காலிகமாக 66, புது வீதி, கொக்குவில், மேற்கு என்னும் முகவரியில் வசித்து வருகின்றார். அண்ணாவியார் வல்லிபுரம் குருசாமி அவர்களிடம் ஒயிலாட்டம், வசந்தனாட்டம் ஆகிய கலைகளுக்கான பாடல்களையும் ஆட்ட நுணுக்கங்களையும் பயின்றதோடு இன்று வரை இக்கலையின் வளர்ச்சிக்காக அயராது உழைத்தும் வருகின்றார். இவர் யாழ்ப்பாணத்தின் பிரபல பாடசாலைகளில் தமிழ்த்தினப் போட்டிகளுக்காகவும், பாடசாலை விழாக்கள் கொண்டாட்டங்கள், வைபவங்களுக்காகவும் ஒயிலாட்டம் மற்றும் வசந்தன் ஆட்டக்கலைகளை பழக்கிய பெருமைக்குரியவர். சேர் ஜோன் கொத்தலாவல பிரதமராக இருந்த காலத்தில் முதன் முதலில் யாழ்ப்பாணம் வருகை தந்த பொழுது மருதனார்மடம் புகையிரத நிலையத்திலிருந்து மருதனார்மடம் வரை கட்டுவன் வசந்தனாட்டக் குழுவினரின் வரவேற்புக் குழுவில் கலந்து கொண்டவர். 1956 ஆம் ஆண்டிலிருந்து 1994 வரை கிராமப்புறங்களில் இக்கலை வடிவத்தினை நடைமுறைப் படுத்தி வந்தமையும், 1996 ஆம் ஆண்டு முதல் பாரம்பரிய மேம்பாட்டுக் கழகம், திருமறைக்கலாமன்றம் போன்ற கலை நிறுவனங்களுக்கூடாக இக்கலை வடிவத்தின் வளர்ச்சிக்கும் தொடர்ச்சிக்கும் பாடுபட்டு வந்துள்ளார். இவரது இத்தகைய சேவைகளைப்பாராட்டி பாரம் பரியகலைகள் மேம்பாட்டுக்கழகம், திருமறைக் கலாமன்றம் போன்ற நிறுவனங்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தமையும், வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையினர் கலைச்சுடர் விருதினை வழங்கிக் கௌரவித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## குருசாமி ஸ்ரீதர்



1956-02-17 ஆம் நாள் மயிலிட்டி தெற்கில் பிறந்தவர். இடம்பெயர்ந்த சூழ்நிலையில் நீலியம்பனை விநாயகர் கோயிலடி மல்லாகம் என்ற முகவரியில் வசித்து வருகின் றார். கிராமியக் கலைவடிவமான வசந்தனாட்டம், ஒயிலாட்டம் ஆகியவற்றில் தேர்ச்சியுடைய இவர் தனது தந்தையாரைக் குருவாகக்கொண்டு இக்கலையைப் பயின்றவர். தென்மயிலைக் கிராமத்தில் வீரபத்திரர் ஆலய முன்றலில் ஆடப்பட்டு வரும் வசந்தன்கூத்து மற்றும் ஒயிலாட்டம் என்பவற்றிற்கு மத்தளம் வாசித்து வந்ததுடன் ஆடற்கலைஞனாகவும் பங்கேற்றவர். மத்தளம் வாசித்தல் மற்றும் ஆடல் ஆகியவற்றில் திறமை கொண்டிருந்த போதிலும் இக்கலை வடிவத்திற்கான விசேட நிபுணத்துவம் பெற்ற மத்தள வாசிப்புக் கலைஞன் என்பதே இவரது சிறப்பாகும். குரும்பசிட்டி கலைக்காவிரி மன்றத்தின் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும் ஒயிலாட்ட நிகழ்வுகளுக்கும் டொல்கி மற்றும் மத்தளம் போன்ற இசைக்கருவிகள் மூலம் இசை வழங் கிய பணிக்காக சங்கமம் என்ற ஒளிப்பேழை வெளியீட்டு விழாவின் போது பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்களினால் பொன்னாடை போர்த் திக் கௌரவிக்கப் பெற்றவர்.

## கனகசபாபதி கனகநாயகம்



1950-01-03 ஆம் நாள் அம்பலவாணர் வீதி கட்டுவன் தெல்லிப்பளை என்னும் முகவரியில் பிறந்தவர். வலிகாமம் வடக்கு பிரதேசசெயலகத்தில் கட்டுவன் தெற்கு, வருத்தலைவிளான் போன்ற கிராம அலுவலர் பிரிவுகளுக்கு கிராம அலுவலராகக் கடமையாற்றியவர். தென்மயிலைக் கிராமத்தில் வழக்கத்திலிருக்கும் ஒயிலாட்டம், வசந்தன் கூத்து ஆகிய கலைகளின் பிற்பாட்டுக் கலைஞராகத் திகழ்ந்து வரும் இவர் வல்லிபுரம் குருசாமி அவர்களது கலைக்குழுவில் அங்கத்தவராகவும் கடமையாற்றி வருகின்றார்

### குருசாமி சுகுமார்



1967-06-27 ஆம் நாள் சாயுடை மாவிட்டபுரம் தெல்லிப் பளை என்னும் முகவரியில் பிறந்தவர். கிராமியக் கலைவடிவமான வசந்தனாட்டம், ஒயிலாட்டம் ஆகிய வற்றில் தேர்ச்சியுடைய இவர் தனது தந்தையாரைக் குருவாகக்கொண்டு இக்கலையைப் பயின்றவர். தென் மயிலைக் கிராமத்தில் வீரபத்திரர் ஆலய முன்றலில் ஆடப்பட்டுவரும் வசந்தன்கூத்து மற்றும் ஒயிலாட்டம் ஆகிய கலை வடிவங்களின் முழுமையையும் கற்றுத்தேர்ந்தவர். பாடசாலைகளில் நடத்தப்படுகின்ற தமிழ்த்தினப் போட்டிகளில் இக்கலை வடிவமும் ஒன்றாக நிகழ்த்தப் படுவதனால் இக்கலையினை பல பாடசாலைகளுக்கும் பயிற்று வித்த பெருமைக்குரியவர். அத்துடன் தனது கலைக் குழுவினரை மாவட்டத்தில் நடைபெறுகின்ற பல்வேறு கலை நிகழ்வுகளிலும் பங்கு பெறச்செய்து இக் கலையின் தொடர்ச்சியையும், வளர்ச்சியையும் இன்று வரை பேணி வருவது குறிப்பிடத்தக்கது. குரும்பசிட்டி கலைக்காவிரி மன்றத்தின் ஒயிலாட்டம், வசந்தனாட்ட நிகழ்வுகளுக்கு வழிகாட்டியாக இருந்து நெறிப் படுத்திய திரு.சுகுமார் அவர்களை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்த பெருமைக்குரியவர். கலைக்காவிரி மன்றத்தின் உறுப்பினராகவும், வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையின் உறுப்பினராகவும் அங்கத்துவம் வகித்து வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அமரர்கள்

### வல்லிபுரம் குருசாமி



1922-12-16 ஆம் நாள் வீமன்காமத்தில் பிறந்தவர். வசந்தன் கூத்திலும், ஒயிலாட்டக் கலையிலும் ஈடுபட்டு வந்தது மட்டுமல்லாது இளந்தலை முறையினர் பலரை யும் இக்கலையிலீடுபட வைத்தவர். தென்னிந்தியாவில் இருந்து தொழில் நிமித்தமாக காங்கேசன்துறைக்கு

வருகைதந்த கேசவன் என்னும் மரபுவழி ஆட்டக் கலைஞனிடமிருந்து வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும், பிறவிக் கலைஞனுமாகிய வல்லி புரம் குருசாமி என அழைக்கப்படும் அண்ணாவியார் ஒயிலாட்டக் கலை வடிவத்தை கற்றுக்கொண்டதாக குறிப்பிடப்படுகின்றது. 1945 ஆம் ஆண்டு முதல் வீமன்காமம் கேணியடிவைரவர் ஆலய முன்றலில் அரங் கேற்றி வந்துள்ளார். இக்கலை வடிவத்திற்கான பாடல்களை இயற்றிய வரான விசுவப்புலவர்மரபில்வந்த முருகேசு என்பவரது மகளை திரு மணம் செய்தமையால் மயிலிட்டி தெற்கு கட்டுவன் கிராமத்தவராக மாறியது மட்டுமல்லாது இவ்வூரவர்களையும் இக்கலை வடிவத்தில் இணைத்து மேலும் பலருக்கும் பழக்கி வந்தார். இவருடன் திரு.சோம நாதன், திரு.நடேசன், திரு.இராசையா, திரு.சின்னப்பு, திரு.நவரத்தினம் போன்ற பல கலைஞர்கள் இணைந்து ஆடி வந்துள்ளனர். ஓரளவு ஆர்வ முள்ள இளைஞர்களைத்திரட்டி ஒயிலாட்டம், வசந்தனாட்டம் ஆகிய கலை களைப் பழக்கி 1960 ஆம் ஆண்டிலிருந்து மயிலிட்டி தெற்கு வீரபத்திரர் ஆலயத்தில் அரங்கேற்றி ஆடிவந்துள்ளார். இக்கலை வடிவத்தை இவரிடம் பயின்றவர்களாக திரு.த.பாலகிருஸ்ணன்,திரு.த.கண்ணபி ரான், திரு.து.கிருஸ்ணமூர்த்தி, திரு.த. வேலாயுதம், திரு.த.கேதீஸ் வரன், திரு.க.வ.கனேந்திரன், ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இடப் பெயர்வுக்குப் பின்னுள்ள காலப்பகுதியில் புதிய இளந்தலை முறையினர் பலருக்கும் இக்கலை வடிவத்தை பயிற்றுவித்தார். அந்த வகையில் திரு.சி.ஜெயகரன், திரு.இ.சோதிகுமார், திரு.த.தவராசா, திரு.ப.சுரேஸ் குமார், திரு.த.சிவா, என்பவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுடன் தனது மகனான திரு.சுகுமாருக்கு ஒயிலாட்டம், வசந்தனாட்ட முறை களையும், பாடலையும் பயிற்று வித்ததுடன், தனது மூத்த மகனான ஸ்ரீதர னுக்கு மத்தளவாசிப்பையும், தனது மைத்துனன் திரு.மு.சிவப்பிர காசத்திற்கு பாடலையும் பயிற்றுவித்து இவ் இடைக்காலப் பகுதியில் இக்

கலைவடிவம் நிலைத்து நிற்க கலைச் சேவை புரிந்துள்ளார். இவரது இத்தகைய சேவைகளைப் பாராட்டி பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகச் செயலாளர் திரு.செ.மெற்றாஸ்மயில் அவர்களால் பொன்னாடை போர்த்தி தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பெற்றவர். வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையால் கலைச்சுடர் விருது வழங்கிக் கௌரவிக் கப் பெற்றவர். பிரான்ஸ், நோர்வே போன்ற நாடுகளிலும் இக்கலை வடிவத்தினை ஆற்றுகை செய்த பெருமைக்குரியவர். வலிகாமம் வடக்கு கலாசாரப்பேரவையின் கலை விழாக்களிலும், யாழ்ப்பாணத்தில் நடை பெறுகின்ற பல்வேறு விழாக்கள் கொண்டாட்டங்கள் போன்ற வற்றிலும், இலங்கையின் பல்வேறு பாகங்களிலும், பாடசாலைகளிலும் இக்கலை வடிவத்தினை அரங்கேற்றிக் கலைத்தொண்டாற்றியவர். 2004.11.27 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

## விளையாட்டுத்துறை - அமரர்கள்

### T. பத்மநாதன்



தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் உதைபந்தாட்டப் பயிற்சியாளராகவும், நூலகப் பொறுப்பாளராகவும் பணியாற்றிய இவர் 10.02.1934 ஆம் ஆண்டு கட்டு டையில் பிறந்தவர். திருமணத்தின் பின்னர் தெல்லிப் பளையை வாழ்விடமாகக் கொண்டு வாழ்ந்த உதைபந் தாட்ட சாதனையாளர். கிராமத்துப் பாடசாலையை உதைபந்தாட்ட வெற்றி களின் மூலம் அகில இலங்கையிலும் புகழ்பரவச் செய்தவர். திரு. T.பத்ம நாதன் அவர்கள் 1960 ஆம் ஆண்டிலிருந்து மகாஜனாவில் நூலகப் பொறுப்பாளராகவும் உதைபந்தாட்ட கொக்கி பயிற்சியாளராகவும் சேவை யாற்றி ஓய்வு பெற்றவர். 06.11.1992 ஆம் நாள் வாழ்வுலகை நீத்து இறை வனடி சேர்ந்தார்.

## இராஜநாயகம் றொகான் இராஜசிங்கம்



1958-03-18 ஆம் நாள் அக்கரைப்பற்றில் பிறந்தவர். தெல்லிப்பளை கிழக்கு இவரது பூர்வீகமாகும். தெல்லிப் பளை மகாஜனக் கல்லூரியின் புகழ்பூத்த மாணவ னாக விளங்கிய இவர் விளையாட்டுத்துறையில் அளப் பரியசாதனைகள் செய்தவர். உதைபந்தாட்டம், துடுப் பாட்டம், ஹொக்கி, தடகளம் என எல்லாவற்றிலும் தேசிய அளவிலும், மாவட்ட அளவிலும் பிரகாசித்தவர். தமிழ் மக்கள் மத்தியில் விளை யாட்டுத் துறையை உலகத்தரத்திற்கு உயர்த்த முயற்சி எடுத்தவர். விளை யாட்டுத்துறையில் இந்திய,பிறேசில், ஜெர்மன் நாட்டுப் பயிற்சியாளர்களால் பயிற்றப்பட்ட பெருமைக்குரியவர். அமரரான திரு.T.பத்மநாதன், உடற் கல்வி ஆசிரியர் திரு.A.யோகரட்ணம், மருத்துவர் J.C.துரைசிங்கம் ஆகியோரைக் குருவாகக் கொண்டு விளையாட்டுத்துறையில் மிளிர் ந்தவர். வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தில் செயற்திட்ட அலுவலராகவும், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட் டங்களின் மாவட்ட விளையாட்டு அலுவலராகவும் பணியாற்றியவர். கிராமமட்டத்தில் பெண்களை விளையாட்டுத்துறையில் அக்கறை கொள்ளவைத்தவர். பெண்களை ஒருங்கிணைத்து வலைப்பந்தாட்டக் குழுவை உருவாக்கி அக்குழுவை யாழ்மாவட்டத்தின் சிறந்த அணி யாக்கியபெருமை இவரையே சாரும். 2008-02-08 ஆம் நாள் வாழ்வு லகை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

### வில்லுப்பாட்டு ~ அமரர்

## நாகலிங்கம் வடிவேலு



1950-10-10ஆம் நாள் அளவெட்டியில் பிறந்தவர். வில்லுப்பாட்டு நாடகம் இலக்கியத்துறைகளில் ஈடுபாடு உடையவராயினும் நாடகத்தையும் வில்லுப்பாட்டையும் பிரதான கலைத்துறைகளாகக் கொண்டவர். அளவை யூர் பாலமுருகன் வில்லிசைக்குழு மற்றும் கலையகம் என்ற நாடகக்குழுவையும் இயக்கியவர். 1987-09.10 ஆம் நாள் வாழ்வை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

## மூத்த படப்பிடிப்பாளர்

### சங்கரகம்பர் கதிரவேலு



19933.08.16 ஆம் நாள் அலுக்கை அளவெட்டி என்னும் இடத்தில் பிறந்தவர். மிக நுணுக்கமான கலையான புகைப்படத்துறையில் பொன்விழாக்காணும் இவர் குடாநாட்டின் பல்வகை, பல்துறைசார் படிமங் களை பதிவு செய்த பெருமைக்குரியவர். ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவராக நுட்பமாகவும், நுணுக்கமாகவும் அர்ப்பணிப் புடனும் பணியாற்றியவர். சிறப்புக்காட்சிகளை வெறும் விம்பங்களாக அன்றி அற்புதப்பதிவுகளாக்குவதில் மிகவும் வல்லர்.

## அலுவலகத்தில் கடமையாற்றிய கலைஞர்கள்

### திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல்



வடமராட்சி கரவெட்டியில் சிதம்பரப்பிள்ளை (தம்பிரான்) பார்வதிப்பிள்ளை தம்பதியரின் இளைய புதல்வியாக 1944.05.09 இல் பிறந்த திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் கரவெட்டி ஞானாசாரியார்,யாழ் இந்து மகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தி யாலயம், பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் கல்வி பயின்ற சிறப்புப் பட்டதாரியாவார். மேலும் பாலபண்டிதர், சைவப்புலவர் பரீட்சை களில் தேர்ச்சி பெற்றவர். 1970 ஆம் ஆண்டு ஜனவரியில் இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாக இணைந்தார். முதலில் புத்தளத்திலும் பின் வவுனியாக் கச்சேரியிலும் தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபராக விளங்கினார். வவுனியாவில் இருந்த பொழுது கிராமிய அபிவிருத்தி, கைத்தொழில், கலாசாரம் ஆகியன இவரின் பொறுப்பில் இருந்த மையினால் அங்கே கலாமன்றம் ஒன்றினை உருவாக்கி கலைஞர்களை ஊக்குவித்து தலைமை தாங்கி கலைவிழாவை நடத்தியதுடன் பல்லாண்டுகட்குப் பின்னர் பண்டாரவன்னியன் நாடகத்தினையும் அரங்

கேற்றினார். பின்னர் மட்டக்களப்பில் சமூக சேவைப்பணிப்பாளராக இருந்தபோது அங்கும் கலைவிழாக்கள், கவியரங்குகளையும் நடத்தி னார். 1979 இல் வடமாகாணம் முழுவதற்கும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு ஆணையாளராக விளங்கியதுடன் அனைத்து சிறுவர் இல்லங் களையும் இணைத்து யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபத்தில் பிரமாண்ட மான ஒரு சிறுவர் கலை விழாவை நடத்தினார். 1992 இல் வடக்குகிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளராகப் பணியாற்றியவர். 1992 ஒக்டோபர் மாதத்தில் யாழ் மாவட்டத்தின் மேலதிக அரச அதிபராகப் பதவியேற்றார். 1994 ஒக்டோபர் 31 இல் அரசஅதிபராக இருந்த திரு.மாணிக்கவாசகர் அவர்கள் ஓய்வு பெற்றபொழுது பொது நிர்வாக அமைச்சினால் மேலதிக அரச அதிபர் பதவியுடன் 1994 நவம்பர் 1 ஆம் திகதியிலிருந்து யாழ் அரச அதிபராக நியமிக்கப்பட்டார். ஆனால் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திரு பொன்னம்பலம் அவர்கள் யாழ்ப்பாணம் மாறி வரவிரும்பியதனால் இவரை கிளிநொச்சி அரச அதிபராகச் செல்லும்படி அமைச்சு பணித்தது. இவர் அங்கு செல்ல விரும் பாது 18 ஆம் திகதியில் இருந்து மீண்டும் யாழ் மேலதிக அரச அதிபராகவே இருக்க விரும்பினார். 18 நாட்கள் மட்டும் யாழ் அரச அதிபராக இவரால் கடமையாற்ற முடிந்தது குறிப்பிடத்தக்கது. 1995 இல் ஏற்பட்ட மாபெரும் இடப்பெயர்வின் பின்னர் 1996 இல் மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பிய போது தனக்குரிய பதவி கிடைக்காததால் 1987 - 1990 களில் இருந்து இடம்பெயர்ந்து சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாமல் இருக்கும் வலிகாமம் வடக்கு மக்களை மீள்குடியமரவைக்கும் நல்நோக்குடன் தானாகவே விரும்பி வலிகாமம் வடக்கின் பிரதேச செயலர் பதவியை ஏற்றார். அங்கு சொல்லொனாத் துயரடைந்திருந்த மக்களின் கஷ்டங்களை சிறிது சிறிதாக நீக்கி சிறிது சிறிதாகக் குடியேற்றி வாழும் வழிசெய்ததுடன் பலவருடங் களுக்குப் பின்னர் ஒரு கலை விழாவை மக்கள் உத்தியோகத்தர் ஆதரவுடன் நடத்தினார். வலிகாமம் வடக்கு மீண்டும் புத்துயிர்பெற வேண்டும் என்ற நோக்குடன் வலிகாமம்

வடக்கு பிரதேச மலரையும் வெளியிட்டார். இளமையிலிருந்தே கதை, கவிதை, கட்டுரை, நாடகம், பேச்சு ஆகிய துறைகளில் மிகுந்த ஈடு பாடுடையவர். கவிதைகள், குழந்தைக் கவிதைகள், இசைக்கவிதைகள், பக்திக்கவிதைகள், சமத்துவக்கவிதைகள் எனப்பலவற்றை எழுதியுள் ளார். இவரின் குழந்தைக் கவிதைகள் உட்பட பல கவிதைகள் பத்திரிகை களில் வெளிவந்துள்ளன. இசைக்கவிதைகள் இலங்கை வானொலியில் ஈழத்துப் பாடல்களில் இசைக்கப்பட்டன. இலங்கை வானொலியில் "கங்கையாளே" இசைத் தட்டில் இவரின் கவிதையும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இப் பாடலை இவரின் கணவர் அமரர்எஸ்.திலகநாயகம் போல் அவர்கள் பாடியுள்ளார். பல்கலைக் கழகத்தில் கற்ற காலத்திலும் இலங்கை வானொலியிலும் வெளியரங்குகளிலும் பல கவியரங்கு களிலும் பங்குபற்றி தலைமையும் வகித்தவர். சிதம்பரபத்தினி, சித்தி, பிரக்ஞா என இவரின் புனைபெயர்களும் இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் பொதுமக்களுறவும், பேச்சு வன்மையும், துணிவும், தமிழிலக்கிய அறிவும், நவீன இலக்கியத் திறனும், வடமொழிப்புலமையும், தீர்க்க சிந்தனையுமுடையவர். நிஜத்தின் நிழல் என்ற சிறுகதைத் தொகுப் பினையும், தேன்வதை, மழலை அமுதம் ஆகிய இரு கவிதைத் தொகுப்பு நூல்களையும் இசையின் இமையம் திலகநாயம் என்ற இசை இலக்கியத் தையும் வெளியிட்டவர். நேர்மைத் திறனும்,நேர்கொண்ட சிந்தனையு முடைய இவரது வழிகாட்டலால் வலிகாமம் வடக்கு அடைந்த அபிவிருத் திகள் யாவரும் அறிந்த உண்மை ஆகும். 2003 இல் மீண்டும் யாழ்ப்பாண மேலதிக அரச அதிபராகிய இவர் கலை பண்பாட்டு வளர்ச்சியில் மூச்சாகச் செயற்பட்டார். இதற்காக யாழ்மாவட்ட கலாசார உத்யோகத்தர் கலையகம் என்ற ஓர் அமைப்பை உருவாக்கி மாவட்ட கலைவிழாவை நடத்தியவர். சிறந்த நிர்வாகத்திறனும் பொது மக்கள் உறவும் பேச்சு வன்மையும் பழந்தமிழ் இலக்கியத்திறனும் வட மொழிப்புலமையும் தீர்க்க சிந்தனையும் உடையவர்.

## கார்த்திகேசு பீதாம்பரம்



1943.04.24 ஆம் நாள் இலக்கம் 4 கலைமகள் வீதி அரியாலை என்னும் இடத்தில் பிறந்தவர். வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றி உதவிப்பிரதேச செயலராக பதவி உயர்வு பெற்றவர். சிறந்த பரம்பரை நாட்டுக் கூத்துக்கலைஞனான இவர் சிந்துநடைக்கூத்து மற்றும் சமூக நாடகங்களிலும் தமது முத்திரையைப் பதித்தவர். புராண, சரித்திர, இதிகாச, சமூகசீர்திருத்த, நகைச்சுவை நாடகங்களில் நடித்தவர். இவரது கலைச்சேவையைப் பாராட்டி பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம் மரபுக்கலைச்சுடர் என்னும் விருது வழங்கி பாராட்டியமை குறிப்பிடத்தக்கது.

## மாரிமுத்து சீவரத்தினம்



1943-04-19 ஆம் நாள் கோண்டாவிலில் பிறந்தவர். தற்பொழுது சத்தியவாசம், மயிலங்காடு, சுன்னாகம் என்னும் முகவரியில் வசித்துவருகின்றார். தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் காரியாலய உதவியாளராகக் கடமையாற்றிய இவர் இசைநாடகம் மற்றும் வசனநடை, வரலாறு, சமூக நாடகங்களில் மிகுந்த ஈடுபாடுடையவர். நாடகம் தயாரித்தல், எழுதுதல், நடித்தல், நெறிப்படுத்துதல் ஆகிய துறைகளில் நாற்பத்து மூன்றுவருட அனுபவமுடையவர். வடக்குக் கிழக்கு மாகாணங்களின் சகல இடங்களிலும் தனது கலைப்படைப்பை வெளிப்படுத்தியவர். இவரால் எழுதி நெறிப்படுத்தப்பட்ட அலாவுதீன் என்ற நாடகம் வடக்கு கிழக்கு மாகாணங்களின் பட்டிதொட்டிகளிலெல்லாம் அரங்கேற்றப்பட்டதுடன் இந்நாடகம் தொலைக் காட்சித் திரைப்படமாகவும் தயாரிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இவரால் பணம், தியாகத் தீ, நச்சுக்கோப்பை, மனோகரா ,அலாவுதீன், காசியப்பன்,சுமைதாங்கி, விதியின் பயணம்,அன்னையின் ஆணை, குமணன்,பாதைமாறிய


பயணம்,பூதத்தம்பி,புதியதொருவீடு, பாஞ்சாலிசபதம், காதலேநீவாழ்க போன்ற நாடகங்கள் நெறிப்படுத்தப்பட்டதுடன் அவற்றில் முக்கிய பாத்திரங்களேற்று நடித்துமுள்ளார். பிரதேச செயலக நிகழ்வுகளில் இவரது கலைச்செயற்பாடுகள் முக்கிய இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இலங்கை அரசின் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கலாபூஷ ணம் விருதும், கலையரசன் விருதும், இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கலைஞானகேசரி விருதும், பாரம்பரிய கலைச்சுடர் விருதும்வழங்கப்பெற்றவர்

## இராமலிங்கம் சிவக்கொழுந்து தெட்சணாமூர்த்தி



1947-07-23 ஆம் நாள் குப்பிளான் தெற்கு ஏழாலை என்னும் முகவரியில் பிறந்தவர். வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் பளை வீமன்காமம், தந்தை செல்வாபுரம் போன்ற கிராம அலுவலர் பிரிவுகளின் கிராம அலுவல ராகக் கடமையாற்றியவர். பின்னர் வலிகாமம் தெற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்கு இடமாற்றம் பெற்றுச்சென்றவர். கவிதைத் துறையில் ஆற்றலுடைய இவர் யாழ்ப்பாணத்துப் பத்திரிகைகளில் கவிதைகளை எழுதியவர். பிரதேச செயலக நிகழ்வுகளிலும், வேறு பல கலை நிகழ்வு களிலும் நடைபெறுகின்ற கவியரங்குகளில் கவியரங்கக் கவிஞனாகப் பங்கேற்றவர். ஓய்வு பெற்ற நிலையிலும் கவிதை பாடுவதனை நிறுத்தாது செயற்பட்டு வருபவராக விளங்குகின்றார்.

## மா.அருள்சந்திரன்



1969-03-31 ஆம் நாள் பிறந்தவர்.பாடசாலை வீதி கோண்டாவில் மேற்கு என்னும் முகவரியில் வசித்து வருகின்றார். தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் கலாசார உத்தியோகத்தராகக் கடமையாற்றி வரும் இவர் எழுத்தாளராகவும், நடிகராகவும், தயாரிப்பாள ராகவும் நெறியாளராகவும், கட்டுரையாளராகவும் கலையுலகில் ஈடுபட்டு

வருகின்றார். ஆறுமுகம் கல்யாணசுந்தரேசன் ஆசிரியரவர்களை முதற்குருவாகக் கொண்டு நாடகத்துறையில் ஈடுபட்டவர். பின்னர் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் கற்பித்தலினாலும், வழிப் படுத்தலினாலும் நாடகத்துறையில் மேலும் மெருகூட்டப்பெற்றவர். கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் ஞாபகார்த்தமாக கலையரசு கலைக் கழகநாடகப் பயிற்சிக்கல்லூரி ஒன்றினை நிறுவி அதனூடாக ஷேக்ஸ்பியரின் ஜூலியஸ்சீசர் என்ற நாடகத்தினை நெறிப்படுத்தியதுடன் காஸ்சியஸ் என்ற பாத்திரத்தினையுமேற்று நடித்தவர். சிறுவர் நாடகத் துறையில் குழந்தை ம.சண்முகலிங்கமவர்கள் எழுதிய கூடி விளையாடு பாப்பா, ஒற்றுமையேபலம், குரங்கும் தொப்பிவியாபாரியும் போன்ற பல நாடகங்களை பல பாடசாலைச் சிறுவர்களைக் கொண்டு தயாரித்து நெறியாள்கை செய்தவர். யாழ்வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை தமிழ்மாணவர் மன்றத்திற்காக தொடர்ந்து ஐந்து வருடங்கள் நாடகத் தயாரிப்பில் ஈடுபட்டவர். அந்தவகையில் ஆராய்ந்துபார், கறைகள், சகுந்தலை, சுவர்கள் ஆகிய நாடகங்களை எழுதியதுடன் சி.செந்தூரனால் எழுதப்பெற்ற கலியுகம் என்ற நாடகத்தினையும் நெறியாளுகை செய்து வழங்கியவர். தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் நாடகஆசிரியராகக் கடமை ஆற்றியபோது பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன் ஆசிரியரவர்களால் எழுதப் பெற்ற நாடகங்களை தமிழ்த்தினப் போட்டிகளுக்காக தயாரித்தவர். பொறுப்பனோயான் (நெய்தல் நிலக்காட்சி), பாவலரும் காவலரும் (முல்லை நிலக்காட்சி) வாழ்க்கைப் பயணங்கள் (பாலைநிலக்காட்சி) ஆகிய நாடகங்களைத் தயாரித்து வழங்கியதுடன் பல மாணவர்களை நாடகக்கலையில் ஈடுபடுவதற்கு ஆர்வத்தை ஏற்படுத்தியவர். மேலும் திருமறைக் கலாமன்றத்தின் நாடகப் பயிலகத்திற்கான நாடக விரிவுரை யாளராகவும் 1990-1995 காலப்பகுதிகளில் கடமையாற்றியவர். சுன்னாகம் அவைக் காற்றுகைக் குழுவின் மூலம் ஷேக்ஸ்பியரினுடைய

ஆங்கில மொழியிலமைந்த மேச்சன்ற் ஒவ்வெனிஸ்(**Merchant of venish**)ஒதெல்லோ (**Othello**) ஹம்லெட் (**Hemlet**) போன்ற நாடகங்களை தயாரித்து நெறியாளுகை செய்து அரங்கேற்றியவர். வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவைக்கூடாக யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழ்ந்து மறைந்த கலைஞர்கள், அறிஞர்கள் போன்றவர்களுடைய விபரங்களையும், யாழ்ப்பாணத்தின் வரலாற்றிடங்கள் மற்றும் பண்டைய வாழ்வியற் பொருட்கள் போன்றவற்றினையும் தொகுத்து யாழ்ப்பாணப் பெட்டகம்-1 என்ற பெயரில் ஆவணப்படுத்தியவர்.மேலும் 2008 இல் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட நிஷா வெள்ளப் பெருக்கனர்த் தத்தின் அழிவுகளையும் இறுவட்டு வடிவில் ஆவணப்படுத்தியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தேவராசா விக்கினேஸ்வரன்



1973-01-03 ஆம் நாள் மயிலிட்டி வடக்கு காங்கேசன் துறை என்னும் இடத்தில் பிறந்தவர். சமுர்த்தி அலுவலராகக் கடமையாற்றி, சமுர்த்தி முகாமையாள ராக பதவியுயர்வு பெற்று மூதூர் பிரதேச செயலக த்தில் கடமையாற்றி வருகின்றார். கவிதை, கட்டுரை, நாடகத் துறைகளில் ஈடுபாடுடைய இவர் கவிதைத்துறையில் அதிகளவில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்துப் பத்திரிகைகளில் இவரது ஆக்கங்கள் அவ்வப்போது பிரசுரிக்கப்பட்டமையும், வலிகாமம் வடக்கு பிரதேச செயலக கலாசாரப்பிரினரால் மாதந்தோறும் வெளியிடப் பட்டு வரும் வசந்தம் கையெழுத்துச் சஞ்சிகையில் பல கவிதைகளை எழுதியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அலுவலக கலை நிகழ்வுகளிலும், பிரதேச கலாசார விழாவிலும் நடைபெறுகின்ற கவியரங்குகளில் பங்கு கொண்டு தனது காத்திரமான கவிதைவரிகள் மூலம் கவிதைத்துறையில் தடம் பதித்தவர்.

# வலிகாமம் வடக்கின் கலை இலக்கிய நாடகமன்றங்கள்

1. கண்ணன்நாடக மன்றம்-சாந்திபுரம்.அளவெட்டிமேற்கு-வகிமா/கஅ/பண்/அள/162/2002

2. பாரதி கலைஞர் நாடக மன்றம்-அளவெட்டி கிழக்கு - வகிமா/கஅ/பண்/அள/ 163/ 2002

3. கலாசாரப்பேரவை-பிரதேச செயலகம் தெல்லிப்பளை - வகிமா/கஅ/பண்/தெ/ 165/ 2001

4. கலை இலக்கியக்களம் - விழிசிட்டி தெல்லிப்பளை- வகிமா/கஅ/பண்/யாழ்/ 43/ 2000

5. முத்தமிழ் கலை மன்றம்-மாவிட்டபுரம் தெல்லிப்பளை - வகிமா/கஅ/யாழ்/32/ 2000

6. சோலைக்குயில் அவைக்காற்றுக்களம்-விழிசிட்டி பன்னாலை

7. ஐக்கிய கலாமன்றம்-பன்னாலை தெல்லிப்பளை-வகிமா/கஅ/யாழ்/33/ 2000-

8. செங்கதிர் நாடகமன்றம்-அளவெட்டி மேற்கு அளவெட்டி

9. வசந்தகான சபா-பிரதான வீதி காங்கேசன்துறை

10. நடிகமணி வீ.வீ.வைரமுத்து வசந்தகான சபா-சாரங்கா பிரதான வீதி காங்கேசன்துறை

11. பாலர்ஞானோதய கலை உடல் வளர்ச்சிக்கழகம்-கட்டுவன்மேற்கு

12. பாலர் ஞானோதய சபை - பிரதான வீதி தெல்லிப்பளை

13. நவரச நாடக மன்றம்-மாவை கலட்டி தெல்லிப்பளை

14. கலைக்கல்லூரி-பாடசாலை வீதி மல்லாகம்

15. கலைக்காவிரி மன்றம்-குரும்பசிட்டி தெல்லிப்பளை

16. இளங்குமரன் நாடக மன்றம்-பத்தாவத்தை இளவாலை

17. சிவசக்தி நாடக மன்றம்-மயிலிட்டி

18. திரைக்கலைச் சங்கம் - தெல்லிப்பளை

19. கணேசா கலாசார மன்றம் - பன்னாலை தெல்டி தெல்லிப்பளை

20. உதயசூரியன் நாடகமன்றம் குரும்பசிட்டி

21. கலைமகள் நாடகமன்றம் வசாவிளான்

## வலிகாமம் வடக்கிலுள்ள அறநெறிப்பாடசாலைகள்

1. துர்க்காதேவி அறநெறிப்பாடசாலை துர்க்காபுரம் தெல்லிப்பளை

2. தோதரவை அம்மன் அறநெறிப்பாடசாலை மாதனை தெல்லிப்பளை

3. அண்ணமார் அறநெறிப்பாடசாலை சித்தியம்புளியடி தெல்லிப்பளை

4. ஒல்லுடை வைரவர் அறநெறிப்பாடசாலை இளவாலை

5. காமாட்சியம்பாள் அறநெறிப்பாடசாலை கணேஸ்வரம் அளவெட்டி

6. பழம்பதி தேவஸ்தான அறநெறிப்பாடசாலை மல்லாகம்

7. நீலியம்பனை விநாயகர் அறநெறிப்பாடசாலை மல்லாகம்

8. தொந்தனை வைரவர் அறநெறிப்பாடசாலை கட்டுவன்

9. கணேசா அறநெறிப்பாடசாலை பன்னாலை

## வலிகாமம் வடக்கிலுள்ள சுற்றுலா மையங்கள்

### கீரிமலைக்கேணி

புனித சிவபூமியாகிய கீரிமலை மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் தன்னகத்தே கொண்ட சிவ பூமியாகும். இப்புண்ணிய பூமி "காந்தருவநகர்", "வீணாகானபுரம்", "நகுலேஸ்வரம்" என்றும் குறிப்பிடப்படுகின்றது. இரண்டாம் உலகத்திலே இராவணண் தன்னைத் தவிர வேறெவரும் தனது வீணையை தொடவும், வாசிக்கவும் கூடாதெனக் கட்டளையிட்டிருந்தான். தசரதராமனால் இராவணனது இருபது கைகளும் அறுந்து விழுந்த சமயத்தில், அவ்வீணையைக் கவர்ந்து கீரிமலையில் வந்திறங்கிய அக்கந்தருவன் அவ்வீணையைப் பிரபல்யப்படுத்தினான். இதனாலேயே "காந்தருவநகர்","வீணா கானபுரம்" என்ற பெயர்கள் உண்டாயிற்று என்று "யாழ்ப்பாண

வைபவமாலையின்" மூன்றாம் பதிப்பின் 17 ஆம் பக்க அடிக்குறிப்பில் தரப்பட்டுள்ளது. இவ்விடயம் இராமாயணக் காலமாகக் கொள்ளப்பட்ட, மகாபாரத்தில் கூட கீரிமலை சிறப்பித்துக் கூறப்பட்டிருக்கின்றது. அதாவது அருச்சுணன் தீர்த்த யாத்திரைப் படலத்தில் "கண்டகி தீத்தம்" எனக் குறிப்பிட்டுள்ளார். இக்கால இறைவனுடைய திருநாமமாக திருத்தம்ப லேச்சுரர், திருத்தம்பலேசுவரி என அழைக்கபட்டிருக்கின்றது. இவ்வாறு சிறப்புப் பெற்ற தீர்த்தத்தில் முசுகுந்தச் சக்கரவர்த்தி தீர்த்தமாடியதாகவும், கீரிமுகமுடைய முனிவர் ஒருவர் வாழ்ந்து தவமிருந்து இத்தீர்த்தத்தில் தீர்த்தமாடித் தனது கீரிமுகம் நீங்கப் பெற்றார் என்பதும் வரலாற்றுச் செய்திகளாகும். இவ்வாறு கீரிமுகம் நீங்கப் பெற்றமையினால் இப்பதி "நகுலேஸ்வரம்" எனவும் பெயர் பெறலாயிற்று. இப்புண்ணிய தீர்த்தத்தில் குதிரைமுகமுடைய பாண்டிய இளவரசியான மாருதப்புரவீகவல்லி தீர்த்தமாடி குதிரைமுகம் நீங்கியதாகவும் வரலாற்றுக் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன. இப்புண்ணிய தீர்த்தம் தெற்கே நிலத்தின் கீழிருந்து சுரந்து வரும் பாதாளகங்கை ஆகிய ஊற்று நீரும், கடல் நீரும் சங்கம மாகும் "சங்கமதீர்த்தம்" என்ற சிறப்புடையதாகும். ஆடி அமாவாசை நாளில் இச்சமுத்திரக் கரையில் "பிதிர்க்கடன்" செய்து புண்ணிய தீர்த்த மாடிக் தமக்கும் தம்முன்னோர்க்கும் பாவம் போக்கிப் புண்ணியம் தேடும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கூடுவது நாடறிந்த செய்தியாகும். அறிவியல் ரீதியாகவும், மெய்யியல் ரீதியாகவும், அனுபவ ரீதியாகவும், உடல் உள நோய்களைப்போக்கி, மன அமைதியையும், ஆனந்தத் தையும் தரவல்லது இப்புண்ணிய தீர்த்தமாகும்.

## மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் வரலாறு

சிவாகம சிற்ப முறைப்படி அமைக்கப்பட்ட ஈழத்து ஆலயங்களில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் முதன்மை பெற்ற திருத்தலமாகும். கீரிமலைத் தீர்த்த மகிமையினை ஒட்டி முகிழ்த்த திருத்தலமே மேற்படி ஆலயம். மாவிட்டபுரம் என்ற பெயர் ஏற்பட்டமைக்கு மூன்று ஐதீகக் கதை

கள் கூறப்படுகின்றன. அதன் அடிப்படையில் காரணப்பெயராக அமைந்ததே மாவிட்டபுரம். கி.பி. 7ம் (789) நூற்றாண்டில் வாழ்ந்த திசை உக்கிர சோழன் என்ற சோழ மன்னனின் மகளாகிய மாருதப்புரவீகவல்லி குதிரை முகமும் மானிட உடலும் கொண்டவளாக இருந்தாள். இவள் சாந்தலிங்க முனிவரின் கூற்றுப்படி கீரிமலையில் தவசிரேஸ்டராக விளங்கிய நகுல முனிவரிடம் உபதேசம் பெற்று கீரிமலைக்குன்றருகே விளங்கிய உவர் நீர் மத்தியில் நன்னீரும், அருவி நீரும் கலந்த இடமொன்றில் ஒவ்வொரு நாளும் சிவசிந்தனையுடன் நீராடி வந்தாள். நாளடைவில் அவளது குதிரைமுகம் நீங்கி அழகிய முகத்தினைப் பெற்றாள். அவள் நீராடி வழிபட்ட இடம் குதிரைமுகம் நீங்க அருள்பாலித்த இறைவன் பதியாக விளங்கியதனால் மாவிட்டபுரம் என அழைக்கப் படலாயிற்று.ஆனால் மாருதப்புரவீகவல்லி தன் தோழிகளுடன் நீராடி வழிபட்ட இடம் குமாரத்தி பள்ளம் என்றழைக்கப்பட்ட இடமாகும். நீராடிய பின்னர் வழிபாடாற்றிய கோயில் கதிரையாண்டவர் கோயில் என்பதாகும். அக்கோயில் இப்போது வளவுடை என வழங்கப்படும் கோயிற்கடவை என்ற இடத்தில் இருந்ததென்பர். கோயிற் கடவையே பின் நாளில் மாவிட்டபுரம் என அழைக்கப்படலாயிற்று. மாவிட்டபுரம் என்ற பெயர் குதிரை முகம் நீங்கியதனால், (மா-குதிரை) (விட்ட-நீங்கிய) (புரம்-இடம்) உண்டாகியது என்றும், மாருதப்புரவீக வல்லியுடன் வந்த தளபதி பெயர் மகாவிட்டன் என்றும் அவன் தங்கி இருந்து கோயிலில் ஆட்சிப் பொறுப்பை ஏற்று கோயில் நிர்வகித்து வந்ததனால் மகாவிட்டம் வசித்த இடம் மருவி (மாவிட்டபுரம்) ஆயிற்று என்றும் சங்காரத்தின் பின் முருகன் கதிரமலைக்கு எழுந்தருளிச் செல்லும் போது இங்கு தங்கிச் சென்றார் என்ற ஐதீகத்திற்கமைய மா என்றால் மாமர வடிவான சூரன் என்றும், விட்ட என்றால் அவ்வடிவினை விட்டதென்றும், புரம் என்றால் இடம் என்றும் கூறி மாமர வடிவாகிய சூரன் அவ்வடிவினை விட்டேகிய இடமே மாவிட்டபுரம் என்றும் கூறுவர்.

இவ்வாலயம் கருவறை, அர்த்தமண்டபம், மகா மண்டபம், தம்பமண்டபம், நிருத்தமண்டபம், வசந்தமண்டபம், தட்டி மண்டபம், வில்லுமண்டபம், வேட்டைமண்டபம், யாகசாலை, பாக சாலை, களஞ்சியஅறை என்பன முறையாகக் கட்டப்பட்ட ஒரு பெரும் கோயிலாகும். முருகன், விநாயகர், நடேசர், சந்திரசேகரர், ஆறுமுக சுவாமி, சுப்பிரமணியர், சந்தான கோபாலர் மகாலட்சுமி, வைரவர், தண்டாயுதபாணி, நவக்கிரகங்கள், சண்டேசுவரர் ஆகிய பிரதிஸ்டை செய்யப்பட்ட மூர்த்திகளாவர். வருடாந்த மகோற்சவம் பூர்வபக்க சஷ்டித் திதியோடு கூடிய ஆனி உத்தர நாளன்று கொடியேற்றம் நடைபெறுவது வழக்கம். இக்காலத்தில் ஆறுமுகசுவாமி திருநடனத் திருவிழா, கார்த்தி கைக் திருவிழா, வேட்டைத்திருவிழா, பட்டுக்குடைத் திருவிழா, சப்பறத் திருவிழா போன்றவை மிகவும் சிறப்பாக திருவிழாக்களாகும். இதைத் தவிர தைப்பூச நாளன்று ஆறுமுகசுவாமி தேரில் திருவீதியுலா வருதல், ஆருத்திரா தரிசனம், கந்தபுராணப்படிப்பு, சூரன்போர், விஜயதசமி நாளன்று தெல்லியூர் துர்க்காதேவி ஆலயத்தை நோக்கி இறைவன் எழுந்தருழுவதும், ஆடி அமாவாசைத் தினத்தை முன்னிட்டு கீரிமலைக் குத் தீர்த்தமாட எழுந்தருழுவதும் குறிப்பிடற்குரிய திருவிழாக்களாகும். ஈழத்தில் ஐந்து தேர்த்திருவீதியுலா வரும் சிறப்பினையும், தனக்கென்றே முருகவடிவச்சாலையினையும் கொண்டமைந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயமாக இவ்வாலயம் விளங்கியமை நமக்கெல்லாம் பெருமை தருவதாகும்.

## கீரிமலை நகுலேஸ்வரர் கோயில் வரலாறு

மூர்த்தி, தலம், தீர்த்தம் மூவகைச் சிறப்பும் பெற்ற திருத் தலங்களில் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயமும் ஒன்றாகும். கீரிமலை யில் புரதான பெயர் திருத்தம்பலை. இத்திருத்தம்பலையில் திருத்தம் பலேசுவரர் என்ற ஒருவர் திருத்தம்பலைத் தீர்த்தத்தில் நீராடி திருத்தம்ப லேசுவரை வழிபட்டு கீரிமுகம் நீங்கப் பெற்றார். இதன் காரணமாகத

திருத்தம்பலை கீரிமலை எனப் பெயர் பெறலாயிற்று. கீரிமலையினை வடமொழியில் நகுலகிரி என்பர். இதனாலேயே கீரிமலையிலுள்ள சிவன் ஆலயம் நகுலேஸ்வரம் எனப்பெயர் பெற்று விளங்கத்தொடங்கியது. ஆதிச்சோழ மன்னராகிய முசுகுந்தன், நளன், அருச்சுணன் முதலியோரால் வழிபடப்பெற்றதெனவும், தீர்த்த தலயாத்திரைகளுக்குரிய புராதன புண்ணிய இடங்களில் ஒன்றாகவும் வரலாற்றில் குறிப்பிடப் பட்டுள்ளது. நகுலேஸ்வரப் பெருமானின் வருடாந்த மகோற்சவம் தைப்பூசத்தின் அடுத்த நாளாகிய அமரபஷ்சப் பிரதமத்திதியில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மகாசிவராத்திரி அன்று தீர்த்தோற்ஷவம் பங்குனி மாத பூரணைக்கு முதல் நாள் பங்குனி உத்தரமும் பூர்வபக்ஷ சதுர்த்தசித்தியில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சித்திரை வருடப்பிறப்பன்று தேர்த் திருவிழாவும் அடுத்த நாள் தீர்த்த உற்ஷவமும் உட்பட 10 நாட்கள் நடைபெறும். அநுபூதிமான்களது சமாதிகள் பலவற்றையும் யாத்திரிகர்களது வசதிக்கும் ஏற்ப அமைக்கப்பட்ட திரு மடங்களையும் கொண்டு விளங்கும் இவ்வாலயம் மேல்நாட்டு அன்னியரது ஆட்சிக்காலத்தில் அழிக்கப்பட்டு, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் பெரு முயற்சியால் மீண்டும் புத்துயிர் பெற்று எழுந்தமை குறிப்பிடத்தக்கது.

## காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை

வலிகாமம் வடக்கில் காங்கேசன்துறை என்னுமிடத்தில் எழில் கொஞ்சும் கடற்கரைச்சுழலில் அமைந்திருக்கும் இத்தொழிற்சாலையானது இலங்கையின் சீமெந்துத் தேவைகளை பூர்த்தி செய்ததோடல்லாது உலகின் முதற் தரம் வாய்ந்த உற்பத்திப்பொருளாகவும் விளங்கு கின்றமை குறிப்பிடத்தக்கது.1950 ஆம் ஆண்டு தனியொரு உலர் முறைப்படுத்தற் பொறித்தொகுதியுடன தனியோரிடத்தில் அமைந்திருந்த இத் தொழிற்சாலை பின்னர் பாரிய வளர்ச்சியுடன் அமையப்பெற்று

பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களுக்கு வாழ்வளித்து வந்தமையும் குறிப்பிடத்தக்கது.நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளால் தன் பொலிவிழந்து காணப்படுகின்றமை மனவருத்தத்திற்குரியதே.1963-06-21 ஆம் நாளில் குடிசார் பொறியியல் வேலைகளை பூர்த்தியாக்குவதற்கான ஒப்பந்தமொன்று மெஸர்ஸ் எட் ஸபிளின் ஏ.ஜி தாபனத்தாருடன் கைச்சாத்திடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டமையும் ,1966-05-23 ஆம் நாள் புதிய கற்சூளை கொளுத்தப்பட்டமையும் வரலாற்றுப் பதிவுகளாகும்.

## வித்துவசிரோன்மணி கணேசையரின் நினைவாலயம்

இலங்கைத் தமிழ்ப்பாரம்பரியத்தின் கொடுமுடி உலகம் உவப்பகத் தொல்காப்பியத் தெளிவுரை தந்த வருத்தலைவிளானில் கொட்டில் அமைத்து தமிழ் இலக்கண இலக்கியங்களை வளர்த்த வித்துவ சிரோன்மணி கணேசையரவர்கள் வாழ்ந்த இல்லம் மற்றும் அவரது நினைவாக அமைக்கப்பெற்ற சமாதிக்கோயில் என்பன இன்று உயர்பாது காப்பு வலயத்தினுள் அமைந்திருப்பது மிகவும் மனவருத்தத்திற்குரியது.

## மாருதப்புரவீகவல்லியால் அமைக்கப்பெற்ற வலிகாமம் வடக்கிலுள்ள பிரசித்தி பெற்ற விநாயகராலயங்கள்

வீரகத்தி விநாயகராலயம்-கொல்லங்கலட்டி

கற்பகவிநாயகராலயம்-வருத்தலம் பன்னாலை

அளவோலை விநாயகராலயம்-அளவெட்டி மத்தி

கும்பழாவளை விநாயகராலயம்-அளவெட்டி மத்தி

குருக்கள் கிணற்றடிவிநாயகராலயம்-கணேஸ்வரம்அளவெட்டி

பெருமாக்கடவை விநாயகராலயம்-அளவெட்டி தெற்கு

## உசாத்துணைகள்

| | |
|---|---|
| பூச்சொரியும்பொன்னொச்சிமரம் | - அளவெட்டி அருணோதயக்கல்லூரி பழைய மாணவர் மன்றம் கனடா |
| பிரதேசமலர் | - பிரதேசசெயலகம் வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை |
| அரங்கக்கலைஞர்ஐவர் | - ஏ.ரி.பொன்னுத்துரை,சைவப்புலவர் செல்லத்துரை அவர்களின் மணிவிழா வெளியீடு |
| விநாசித்தம்பிப்புலவர் ஓர் ஆய்வு | - நடராசா யசோதரா |
| ஈழத்து இசைக்கலைஞர்கள் ஓர் ஆய்வு | - செல்வி விவேகாநந்தன் சுகன்யா |
| ஈழகேசரி வெள்ளி விழா மலர் | - திருமகள் அழுத்தகம் சுன்னாகம் |


பொன்பரமானந்தர் நூற்றாண்டு விழா மலர்

கிராம அலுவலர்களால் சமர்ப்பிக்கப்பட்ட கலைஞர்களது விபரங்கள்

உறவினர்களால் சமர்ப்பிக்கப்பட்ட கலைஞர்களது விபரங்கள்

கலைஞர்களால் சமர்ப்பிக்கப்பட்ட விபரங்கள்

இறந்தவர்களின் நினைவுமலர் வெளியீடுகள்




வலிகாமம் வடக்கு பிரதேசத்திற்குட்பட்ட
கலைஞர்களது விபரங்களடங்கிய நூல்